ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி

~~[illegible]~~

அப். ௪௨. 1937

JL
Q22 m211, N35SL
N39.2
218935

L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது

மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.

பெருங்காயம்.

எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:

பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,

8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக்கூடும். அக்காலத்தில் அம்ருதாஞ்சனம் கைவசமிருக்குமேயாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ லிமிடெ

பம்பாய். மதராஸ் கல்கத்தா

சலோனுடவர் பிராண்ட்

போர்ட்லாண்ட் சிமெண்ட்

காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட்
ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர்வேலைகளுக்கும் ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்

சோல் ஏஜெண்ட்

M. குப்புசாமி நாயக்கர்

83, செம்புதாஸ் தெரு,

மதராஸ், ஜி. டி.

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை.

தொகுதி 2.	பத்ராதிபர் வடகரை. ராமாநுஜாசாரியார்.	பகுதி 9.

ஸ்ரீரஸ்து.

ஶ்ரிய꞉காந்தாய நம꞉.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம꞉.

தஸ்மை ராமாநுஜார்யாய நம꞉ பரமயோகிநே |
யஶ்ஶ்ருதி ஸ்ம்ருதி ஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||
வேதவேதாந்த வேதாங்க ஸர்வஶாஸ்த்ரார்த்த வர்ஷிணீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

ஆடி மாதத்தின் பெருமை.

[பத்ராதிபர்]

இந்த மாதத்தை கேஶவாதி வ்யூஹத்தில் 8-ஆவதான வாமநனுடைய அம்ஶமென்பார்கள்.

வாமநன், ப்ரளயம் கொண்ட உலகை உண்டுபண்ணி அவற்றைப் பரிபாலிப்பதற்குப் பாங்காக நிறுத்தின இந்திரன், ஒரு ஆஸுர ப்ரக்ருதியான மஹாபலியின் கையில் ராஜ்யத்தைப் பறிகொடுத்துப் பரிதபியா நிற்க, அவற்றை மீளவும் வாங்கி இந்திரனுக்குக் கொடுக்கக் கருதி பிறப்பிலியான பரம புருஷன் சீரால் பிறந்து சிறப்பால் வளராது, த்ரஷ்ட்ரூந் ஸ்வகாந்த்யா வாமாநி ஸ்வகாநி நயதி என்கிற நிருக்தியின்படி வைத்த கண் வாங்கவொண்ணாத அழகு பொருந்திய ஓர் குறளுருவாய் மாவலியின் வேள்வியிற் சென்று மூவடி மண் தாராய் என்று யாசித்த உத்தமனே ஆவான்.

அவனுடைய அம்ஸமான இந்த ஆடி மாதத்தில் வரும் ஏகாதஸியன்று உபவஸித்து த்வாதஸியில் வாமநனை உபாஸிக்குமவன் நரமேத யாகத்தைச் செய்ததனால் அடையக்கூடிய பலனை யடைவான். இவ்விஷயத்தை, பாரதம் ஆஸ்வமேதிக பர்வம் 114வது அத்யாயம் 24-வது ஸ்லோக மறுதியிடா நிற்கும். அது வருமாறு:—

ஆஷாடே வாமநாக்யம் மாம் த்வாத்ஸ்யாம் ஸமுபோஷ்ய யஃ
நரமேத்ஸ்ய ஸ பலம் ப்ராப்நோதி பரதர்ஷப

இன்னமும் இம்மாதம் குன்றுதவாழ்வான வைகுந்த வான் போகந்தன்னை யிகழ்ந்து ஆழ்வார் திருமகளாரா யவதரித்த ஆண்டாளுடைய அவதாரத்தாலும், ஆசார்ய சிகாமணியாகிய ஆளவந்தாரின் அவதாரத்தாலும் போற்றற்குரியதாகும். சென்ற வருஷத்துத் திருவாடிப் பூரத்தில் வெளிவந்த வைஜயந்தீ ஆண்டாளின் அவதாரத்தைப் பற்றிச் சிறிது பேசி யனுபவித்திருக்கின்றது.

இவ்வருஷத்து ஆடிமாத வைஜயந்தீ ஆளவந்தாரின் பெருமையை யதாமதி பேசி யனுபவித்துத் தன்னை யொரு பொருளாக்கிக் கொள்ளக் கருதா நிற்கின்றது.

[illegible]
[illegible]

யத்பதாம் போருஹத்யாந வித்வஸ்தாஸேஷகல்மஷ꞉
வஸ்து தாமுபயா தோஹம் யாமுநேயம் நமாமி தம்

அவஸ்துக்களில் அக்ரகண்யனை வடியேன் யாவரொரு ஆளவந்தாரின் தாமரை யன்ன பொன்னடியை மனத்தினால் சிந்திக்க, அகில பாபங்களு மறவே யொழிய, ஒரு பொருளாக ஆனேனோ? அவ்வாளவந்தாரை யடிபணியாநிற்கின்றேன், என்கிற உடையவர் ஸ்லோகமே ஆளவந்தாரின் பெருமையை அறுதியிடாநிற்கும்.

நம்முடைய ஸித்தாந்தத்தில் ஆளவந்தார் ஒப்புயர்வற்ற மஹா வித்வானாகிய ஆசார்ய ஸார்வ பௌமர். இவர் எம்பெருமானார்க்கு ஸகலார்த்தங்களையும் நேரே உபதேஸித்தருளத் திரு[illegible] விதி வாய்க்கவில்லை. இவர் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளி யிருந்த காலத்தில் உடையவர் யாதவப்ரகாஸரிடம் அதிகரித்துக் கொண்டிருக்கையில் திருக்கச்சி நம்பிகளால் அவரை இன்னாரென் றுணர்ந்து தூரத்திலிருந்தே "ஆம் முதல்வன்" என்று குளிரக் கடாக்ஷித்தருளி நம் பெருமாள் ஸந்நிதியேற எழுந்தருளிவிட்டார்.

218935
சென்னை-600

பிறகு ஒருகால் இவரைத் திருவடி தொழுது அர்த்த விஸேஷங்கள் கேட்கவேணு மென்னும் ஆவலுடனே எம்பெருமானார் கோயிலுக்கு எழுந்தருளியும் இவருடைய சரம திருமேனியையே ஸேவிக்கப் பெறலாயிற்று. ஆனாலும் அவருடைய திருவருள் நோக்கம் தம்மீது நிரம்பவும் குடியிருக்கப் பெற்றிருந்ததனாலும், தாமும் அவருடைய திருவடித் தாமரைகளைப் பரம பக்தியுடன் தியானித்துக் கொண்டிருந்ததனாலும் உபய வேதாந்த ரஹஸ்யார்த்தங்கள் யாவும் தமக்கு உள்ளபடியே ஸ்புரிக்கும் பாக்கியத்தை எம்பெருமானார் பெற்றார். ஆயினும் "[illegible]" என்று கீதையிலே நியமித்த கணக்கிலே ஸ்ரீ ராமபிரான் வஸிஷ்டாதிகள் பக்கலிலும் கண்ணபிரான் ஸாந்தீபிநி போல்வார் பக்கலிலும் கேட்டது போல ஸ்வாமியும் ஆளவந்தாரது திருவடிகளான பலர் பக்கலிலே ஓரோ அர்த்த விசேஷங்கள் கேட்கப் பெற்றார். திருமாலை யாண்டான் பக்கலில் திருவாய் மொழிப் பொருள் கேட்டு வாரா நிற்கையில் "அறியாக் காலத்துள்ளே" என்கிற பாசுரம் முதலான விடங்களில் எம்பெருமானார் பணிக்கும் பொருளை ஆண்டான் கேட்டு 'இது விஸ்வாமித்ர ஸ்ருஷ்டியாயிருக்கும்' என்றாராம். பிறகு திருக்கோட்டியூர் நம்பி யெழுந்தருளி 'த்ரோணாசார்யர்க்கு ஏகலவ்யன் போலே ஆளவந்தார்க்கு உடையவரை நினைத்திரும்' என்று ஸாதித் தெழுந்தருளினார் என்பது ப்ரஸித்தம். இந்த ஐதிஹ்யத்திற்கும் ஸ்மாரகமாகவே இந்த [illegible] ஸ்லோகம் அமைந்திருக்கின்றது.

"[illegible] |
[illegible]" என்பது ஒரு உபநிஷத்து. இது இந்த இதிஹாஸத்திற்கு மிகவும் பொருத்தமானது. எம்பெருமானிடத்திற் போல ஆசார்யனிடத்தில் சிறந்த பக்தியை யுடையவனுக்கு ஸகலார்த்தங்களும் ஸ்புரிக்கும் என்பது இதன் கருத்து. இதில் ஒரு விசேஷார்த்தமுமுண்டு. '[illegible]' என்ற விடத்து '[illegible]' என்றும் பதவிபாகம் பெரியோர் செய்வதுண்டு. அவ்

JL
Q22M2H,N35SK A57.2.9

வாறு பதவிபாகம் செய்வதால் ஆசார்யன் அனைவர்க்கு மருளிச் செய்ய இஷ்டப்படாமல் பரம ரஹஸ்யமாக ரக்ஷித்துப் போந்த அர்த்த விசேஷங்களும் சிறந்த பக்தியை யுடையவனுக்கு பிரகாசிக்கும் என்று தாத்பரியம். ஏகலவ்ய னென்கிற வேடன் த்ரோணாசார்யரிடத்தில் பரம பக்தியைச் செய்து அதன் பயனாக, அவர் அனைவர்க்கும் உபதேசிக்க இச்சியாத வொரு ப்ரயோக முறைமையையும் தெரிந்துகொண்டா னென்பது மஹா பாரதப் ரஸித்தம். அப்படியே எம்பெருமானாரும்.

ஆளவந்தாருடைய கல்வித் திறமையைப் பற்றியும் சிறிது அநுபவிப்போம். இவருடைய காலத்தில் ஒப்புயர்வற்ற வித்வானாக விளங்கின வொருவர்க்கு ஸகல பண்டிதர்களும, கப்பம் கட்டுவதாக வழக்க மிருந்து வந்தது. இவருடைய சாஸ்த்ரோபாத்யாயரும் அங்ஙனம் கப்பம் செலுத்திக்கொண்டு வருகையை அறிந்த இவர் வாதப் போரில் தம்மை வெல்லும்படிக்கு ஒரு சிறு முறி விடுத்தார். அதில் அருளிய இரண்டு ஶ்லோகங்களும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் எப்போதும் சிந்திக்க வுரியவை.

[illegible] ।
[illegible] ॥
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥''

என்பவை அந்த இரண்டு ச்லோகங்கள். இவ்வளவு கம்பீரமான ஸ்ரீ ஸூக்தி இவ்வுலகில் முன்னு மவதரித்ததில்லை பின்னு மவதரித்ததில்லை.

இதிற் காணும் தற்புகழ்ச்சி கூடுமோ என்று சங்கிப்பர் சிலர். திருவடி கடல் கடக்கும் காலத்தில் '[illegible] । [illegible] ॥'' என்று மார்பு தட்டிச் சொன்ன சொல்லை இதற்கு த்ருஷ்டாந்தமாகக் கூறி ஸமாதானப் படுத்துவார்கள். அது தான் கூடுமோவென்னில், நன்னூலில் இதைப்பற்றிக் கூறியுள்ளதை நினைப்பூட்டுவோம்;—"தோன்றா தோற்றி...

னும், தான் தற்புகழ்தல் தகுதியன்றே'' என்ற சூத்திரத்திற்கு அடுத்தபடியாக "மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும், மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும், தன்னை மறுதலை பழித்தகாலையும், தன்னுடை யாற்றலுணரா ரிடையினும், தன்னைப் புகழ்தலும் தகும் புலவோற்கே.'' எனப்பட்டது. திருவடியின் தற்புகழ்ச்சி, தன்னுடை யாற்றலுணராரிடையே போந்தது. ஆளவந்தாருடைய தற்புகழ்ச்சி மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதிற் போந்தது. ஆகவே இவை தற்புகழ்ச்சிக் குற்றத்தின் பாற்படா.

இங்ஙனே ஆளவந்தாருடைய குணாநுபவத்தை இன்று சிறிது செய்யப் பெற்றோம்.

அருளிச்செயலாழ் பொருள்கள்.

(ஸ்ரீகாஞ்சீ ப்ர. ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியர்.)

ஆசார்ய ஹ்ருதயத்தில் "குரு சிஷ்ய க்ரந்த விரோதங்களைப் பரமதாதிகளாலே பரிஹரியாமல் செஞ்சொற் செந்தமிழின்கவி பரவி யழைக்குமென்று அந்யோந்யம் கொண்டாடி'' என்கிற சூர்ணிகையில் நம் ஆழ்வார்களுக்கு ஒரு சிறப்பு அருளிச் செய்யப் படுகிறது; அதாவது திவ்ய ப்ரபந்தங்களில் ஆழ்வார்கள் பரஸ்பரம் கொண்டாடப் பட்டிருக்கிறார்களென்பதாம்.

திருமங்கை யாழ்வார் திவ்ய தேசங்களை அநுபவித்து வரு கையில் ஆங்காங்கு ஈடுபட்ட அடியவர்களைப் பற்றி அருளிச் செய்து வருகிறார். "தென்னன் தொண்டையர்கோன் செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணி'' "மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும் நீண்முடி மாலை வயிரமேகன் தன் வலி தன் புகழ் சூழ்ந்த கச்சி யட்ட புயகரம்'' "பல்லவன் வில்லவனென்று லகிற் பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழற் பல்லவன் மல்லையர் கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம்'' "நந்தி பணி செய்த நகர் நந்திபுர விண்ணகரம்'' "செம்பியன் கோச்செங்கணான் சேர்ந்த கோயில் திருநறையூர்'' என்றிங்ஙனே பல பாசுரங்களினால் ஓரோ திவ்ய தேசங்களில் தொண்டு செய்தவர்களைப் பற்றி அருளிச் செய்திருக்கக் காண்கிறோம்.

நம் ஸம்ப்ரதாயத்தில் முதலாழ்வார்களென்று கொண்டாடப்படுகின்ற பொய்கையார் பூதத்தார் பேயார் என்னும் மூவர் ஓடித் திரியும் யோகிகளாய், தம்மில் ஒருவரை யொருவர் அறியாமல் தனித்தனியே ஸஞ்சரித்துக் கொண்டிருந்ததாகவும், இம்மூவரையும் ஓரிடத்திலே சேர்த்து ஆட்கொள்ள எம்பெருமான் குதூஹலங் கொண்டிருந்ததாகவும், ஒருநாள் ஸூர்யன் அஸ்தமித்த பின்பு பொய்கை யாழ்வார் திருக்கோவலூரை யடைந்து அங்கு ம்ருகண்டு மஹர்ஷியின் திரு மாளிகையிற் சென்று அதன் இடைகழியிற் பள்ளிகொண்டிருக்க, பூதத்தாழ்வாரும் பிறகு பேயாழ்வாரும் அவ்விடத்திற்கே வந்து சேர்ந்ததாகவும் அங்கு மூவரும் அளவளாவி நிற்கையில் இவர்களை எம்பெருமான் நெருக்கிக் கலந்து பரிமாறினதாகவும் சரித்திரம் கூறப்பட்டு வருகின்றது. இதனால் முதலாழ்வார்கட்குத் திருக்கோவலூரில் மிக்க ஈடுபாடென்பது விளங்குகின்றது. ‘அந்யோந்யம் கொண்டாடுகிற’வர்களாகச் சொல்லப்பட்ட ஆழ்வார்களுள் ஸர்வ கநிஷ்டரான திருமங்கைமன்னன் திருக்கோவலூர்க்குப் பதிகம் பாடுமிடத்து இவ்வரலாற்றினை அநுஸந்தித்திருக்கவேண்டுமே. அப்படி அநுஸந்தித்திருப்பதாகக் காணவில்லையே.

‘அத்தலத்தில் இவ்வாழ்வார்கள் திருப்பணி யாதும் செய்திலாமையால் இவர்களைப்பற்றி அநுஸந்திக்க ப்ரஸக்தியில்லையாயிற்று’ என்று சில மகான்கள் ஸமாதானம் கூறுவதுண்டு. ஆனால் கலியன் அங்ஙனே ஒரு நியதி வைத்துக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. திருநெடுந் தாண்டகத்தில் திருக்கோவலூரைப்பற்றிப் பேசுமிடத்து “விந்தை மேய கற்புடைய மடக்கன்னி காவல்பூண்ட........பூங்கோவலூர்” என்றும், பெரிய திருமொழியிலும் “வியன்கலை யெண்தோளினள் விளங்கு........திருக்கோவலூர்” என்றும் துர்க்கை இத்தலத்தைக் காவல் செய்து கொண்டிருக்கு மிருப்பையும் பாடியுள்ளார்.

அன்றியும், திருநாங்கூரைப்பாடுமிடத்து “ஒண்டிறல்தென்னனோட வடவரசோட்டங்கண்டதிண்டிறலாளர் நாங்கூர்”என்கிறார். பண்டொருகால் தென்திசைத் தலைவனை பாண்டியராஜன் படையெடுத்துவந்து அவ்வூரை [திருநாங்கூரை] ஆக்ரமிப்பதாகப் புகுகையில் அவ்வூரிலுள்ள அந்தணர்கள் அவனை வெருட்டி யோட்டிவிட்ட வரலாற்றை இதனால் பாடினர்.

“மாவளருந் திண்படை மன்னை வென்றி கொள்வார் மன்னு நாங்கை” என்றும் ஒரு பாசுரமுள்ளது. இப் பாசுரத்தின் வியாக்கியானத்தில் பெரிய வாச்சான்பிள்ளை ஒரு ஐதிஹ்ய விசேஷம் காட்டுகிறார். அதாவது,

“உடைய பிள்ளை யென்கிறவன் அங்குத்தை யாலயத்தைக் கவிபாட வென்றுவர, அவனை எதிரே சென்றடித்தோட்ட, பின்னை பாடப்பெறாதே போனான் என்றொரு ப்ரஸித்தியு முண்டிறே”. என்பது அவ்விடத்து வியாக்கியான ஸ்ரீஸூக்தி. உடையபிள்ளை யென்பது சைவசமயக் குரவர்களுள் ஒருவரான ஞானசம்பந்தருடைய மறுபெயர் என்று கேள்வி.

இத்தகைய கதைகளையும் ஆங்காங்கு அருளிச்செய்து வருகின்ற திருமங்கையாழ்வார், திருக்கோவலூரில் முக்கியமாகச் சொல்லப்படுகிற முதலாழ்வார்களின் வ்ருத்தாந்தத்தைப் பாசுரத்தில் அநுஸந்திக்கவில்லையென்றால் இஃதொரு பெருங்குறை யாகுமன்றோ. அந்த வ்ருத்தாந்தம் பிற்காலத்தவர்களால் கல்பிக்கப்பட்டதென்றாவது, அது கலியன்காலத்தில் அப்ரஸித்தமாக இருந்ததென்றாவது இசையவேண்டியதாகுமே! என்று சிலர் கூறுவதுண்டு. முதலாழ்வார்களைப்பற்றித் திருமங்கையாழ்வார் வெகு அழகாகப் பாசுரமிட்டிருக்கிறபடியை நம் பூருவாசாரியர்கள் நுட்பமாகக் காட்டியருளியே போந்தார்கள் என்பதை ஈண்டு வெளியிட விரும்புகிறேன்.

பெரிய திருமொழியில் திருக்கோவலூர்ப் பதிகத்தில் நான்காவது பாசுரத்தில் “ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூருமடியவர்கட்கு ஆரமுதமானான்றன்னை” என்றவிடத்திற்கு ஆசார்யஹ்ருதயத்தில் காட்டி யருளப்பட்ட பரமரஹஸ்யார்த்தம் இங்கு விவரிக்கலாகிறது. அதில் மூன்றும் ப்ரகரணத்தில் மேகத்திற்கு ஸ்வாபதேசமருளிச்செய்கிற “பூண்டநாள் சீர்க்கடலை யுட்கொண்டு” இத்தியாதி சூர்ணையில் “அன்புகூரு மடியவர்” என்றுள்ளதை வியாக்கியானித்தருளாநின்ற மணவாள மாமுனிகள் “ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூரு மடியவரான முதலாழ்வார்கள்” என்றருளிச் செய்திருப்பது குறிக் கொள்ளத்தக்கது. “ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூருமடியவர்” என்கிறசந்தை திருமங்கை யாழ்வாருடைய திருக்கோவலூர்ப் பதிகத்திலுள்ள தென்னுமிடம் மறக்கத் தக்கதன்று. அப்படிப்பட்ட அடி

யவர்கட்கு ஆரமுதமாக இருப்பவன் திருக்கோவலூ ரெம்பெருமான் என்று துதியுள்ளது. அங்கு அடியவர்கள் என்றது முதலாழ்வார்களை யென்று நம் பூருவாசாரியர்கள் ஒருமிடறாகத் திருவுள்ளம் பற்றி யிருந்தார்களென்னுமிடம் மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்தினால் தெற்றென விளங்குகின்றது.

இந்த நிர்வாஹம் மிகுந்த உபபத்தியோடு கூடிய தென்பதை ஸம்ப்ரதாயம் வல்லபெரியோர்கள் விவரித்துப் பரம்பரையாக உபதேசித்து வருகிறார்கள்.

அடியவர் — அன்பு கூருமடியவர் — ஆங்கரும்பிக்கண்ணீர் சோர்ந்தன்பு கூருமடியவர் என்று வகுத்துக் கொள்ளவேணும். முந்துற 'அடியவர்' என்பது பேயாழ்வாரைக் குறிப்பதாம். எங்ஙனே யென்னில், இவ்வாழ்வார் "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்ற முதற்பாசுரத்தில் எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைத் தாம் காணப்பெற்றதாகப் பேசி, அந்த திவ்யமங்கள விக்ரஹத்துள் திருவடியொன்றே தமக்கு உத்தேச்யம் என்பதைத் தமது திருவந்தாதியில் ஆதி மத்ய அவஸாநங்களில் வெகு அழகாகக் காட்டினர். '‚இன்றே கழல் கண்டேன்" என்றார் ஆதியில். "பைம்பொன் முடியா னடியிணைக்கே பூரித் தென்னெஞ்சேபுரி" "முயன்று தொழுநெஞ்சே! தண்ணலங்கல் மாலையான் தாள்" "கரியான்கழலே தெருள்தன்மேல் கண்டாய் தெளி" வாழும் வகையறிந்தேன்—எங்கள் பெருமானடி சேரப் பெற்று" என்று [நாற்பது முதலாக அறுபதாறான பாசுரங்களுள்ள]மத்யத்தில் பேசினமை காண்க. "குட்டத்துக்கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான் தாள் முதலே நங்கட்குச் சார்வு" என்று அவஸாநத்திலும் தாளையே பேசித் தலைக்கட்டினார். ஆக இங்ஙனம் எம்பெருமானது அடியையே சிக்கனப் பற்றினவர் என்ற காரணத்தினால் பேயாழ்வார் அடியவராகக் கூறப்பட்டார்.

'அன்பு கூருமடியவர்' என்றது பூதத்தாழ்வாரை. எங்ஙனே யென்னில், (அன்பு கூரும் என்றது அன்புமிகுந்தவர் என்றபடி.) இவ்வாழ்வார் "அன்பேதகளியா" என்று தொடங்கி "விளவின் காய் கன்றினால் வீழ்த்தவனே! என்றனளவென்றால் யானுடைய அன்பு" என்று முடிவுபாசுரத்தில தமது அன்பு மிகுதியை வாய் விட்டுரைத்தவராதலால் அன்பு கூருமடியவராக இவரே கருதத் தகுதியுடையவராவர்.

என்ன தாமதம்

:: :: **நேரம் ஆகிறது**



ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு விநாடியும் விலை மதிக்கத் தக்கது. நீங்கள் ஒரு நாழிகை நேரமும் தாமதம் போக்காமலிருக்க இந்த கடியாரம் உடனே வாங்க வேண்டும். - - -

★

செக்யூரிடா

உயர் ரக மூவ்மெண்டுடன் கூடியது 4" டயல் 5½" உயரம் பின்புரம் அலாரம் பெல்லுடன் அமைக்கப்பட்டது 30 மணிக்கு ஒரு தடவை சாவிகொடுக்கலாம்.

2 வருஷ உத்தரவாதம்

நிக்கல் கேஸ் ரூ. 5-15-0

பாக்கிங் தபால் சிலவு வேறு

ஆர்டர் உடன் ரூ. 2 மணியார்டர் அனுப்பவேண்டும்

சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷனை குறிப்பிடவும்

ஜலால் அண்டு சன்ஸ்,

கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்.

ஹெட் ஆபீஸ் :— 46, ரட்டன் பஜார், சென்னை.

பிராஞ்சு ஆபீஸ் :— 190, B. மௌண்ட்ரோட், சென்னை.

,, 1242-1, ஆபிட்ரோட், ஹைதராபாத் (டெக்கான்.)

மதிப்புரை

குடும்ப ராசிப்பலன்

நான்கு மாதத்திற் கொருமுறை வெளிவரும்

இப்பெயர் பூண்ட அருமருந்தன்ன புத்தகம் 16—8—37 ஈச்வர வருஷம் ஆவணி மாதம் 1உ ஆவிர்ப்பவித்து, அகில ஆஸ்திக குடும்பங்களுக்கும் வரவிருக்கும் கெடுதிகளை விலக்கிக் கொள்ள வேண்டிய ஸதுபாயங்களையும், ஹித சுக லாப க்ஷேமங்களையுமறிவித்து அகில ஜநங்களையும் ஆனந்திப்பியா நிற்கின்றது. இதில் பஞ்சாங்கம், ஜனனம், வியாபாரம், முகூர்த்தம், 12 இராசிப்பலன் என 5 விஷயங்கள் அடங்கியுள்ளன. கிம் பஹுனா இது ஒவ்வொரு குடும்பத்திற்கு மின்றியமையாததாயிருக்கு மென்பதி லையமில்லை.

அடுத்த புஸ்தகம் மார்கழி மாதம் 1-தேதியிலும் அதற்கடுத்த புத்தகம் சித்திரை மாதம் 1-தேதியிலுமாக ஆவிர்ப்பவிக்கும்.

இதன் வருட சந்தா 2—8—0 தனிப்ரதி 1—2—0

வேண்டுமவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு மணியார்டர் செய்து தங்கள் விலாசத்தை அறிவித்தால் புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்— S. R. S. வைஜய்ந்தீ ஆபீஸ்,

24. சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

வடகரை இராமாயணம்: கோ. கி. அ கிருஷ்ணய்யங்கார்

ஸ்ரீ கிருஷ்ண ஜோதிஷாலயம் வடக்கு ரதவீதி ஸ்ரீ வில்லிபுத்தூர்.

“டாக்டர் எம். எஸ். கினி”

(பல் வைத்தியர்) 288, சைனுபஜார் ரோட் மதராஸ்.

(புது கார்ப்பொரேஷன் புரூட்மார்க்கெட்டிற் கெதிரில்)

பற்களை நோயில்லாமல் எடுக்கவும், சுத்தப் படுத்தவும், புதியதாய் வைக்கவும், மற்றும் பல் வியாதிகள் அனைத்தையும் நீக்குவதில், கியாதி பெற்றவர்



டாக்டர் கினி என்பவர் தான் திறமையுடன் விளங்குகிறார். ஒரு தரம் பரீக்ஷித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

பயோரியா பற்பொடியை உபயோகியுங்கள்.

குறைந்த சார்ஜ் பூர்ண திருப்திக்கு உத்திரவாதம்

பிரதி தினமும் காலை 9 மணி முதல் 12 மணிவரையிலும்

மாலை 3 மணி முதல் 5 30 மணி வரையிலும்

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் 12 மணி வரையில்

வைத்தியசாலை திரந்து வைக்கப்படும்

ஏழைகளுக்கு இனமாய் வைத்தியம் செய்யப்படும்.

இனி, அரும்பிக் கண்ணீர் சோருமடியவர் பொய்கையாழ்வார். எங்ஙனே யென்னில், இவ்வாழ்வார் "பழுதே பலபகலும் போயின வென்று அஞ்சியழுதேன்" என்று தம்வாக்கினாலே பேசியருளின்படி அரும்பிக் கண்ணீர் சோர்ந்திருப்பவராதலால்.

ஆக இங்ஙனம் முதலாழ்வார்கள் மூவரையும் அழகாகக் குறிப்பிட்டு இவர்கட்கு அமுதமாயிருந்தவன் அத்தலத்து நாதன் என்று கலியன் அருளிச் செய்தார்.

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனும் "அடியவர்கட்கு ஆரமுதமானான்" என்ற பாசுரத்திலேயே நோக்காக தேஹளீசஸ்துதியில் (7) "காஸாரயோகி கவிகைரவவிதௌ ஜநா வணாடவே க்ஷோணீஹரிஸ்ய ரஸோ பஹுதா" என்றருளிச் செய்தார். அமுதமென்று ஆழ்வாரருளிச் செய்ததைக் கரும்பு என்றார் தேசிகன். பரம போக்யதையைப் பேசினபடி.

'அடியவர்கட்கு' என்ற ஸ்ரீஸூக்தியை ஊன்றிநோக்கினால், கலியன் இங்கு மூன்று திருநாமங்களை விவக்ஷித்திருக்கிறார் என்று நன்கு விளங்கும் அடியவன், அடியவர், அடியவர்கள் என முப்புரியூட்டினமை காண்க

முதலாழ்வார்களின் திருநாமங்களை ஸ்பஷ்டமாகப் பேசிப் பாசுரம் பாடியிருக்கலாகாதோ வென்று சிலர் சங்கிப்பர்கள். வெளிப்படையாகக் கூறுவதிற் காட்டிலும் இவ்வகையாகக் கூறுவதே ரஸவத்தரம். ஆளவந்தார் நம்மாழ்வாரைத் துதிக்கப் புகுந்த "மாதா பிதா யுவதய:" என்கிற ஸ்லோகத்தில் நம்மாழ்வாரது திருநாமத்தைக் கூறிற்றிலர்; அந்த ச்லோகம் எம்பெருமான் விஷயமாகவே யிருக்கலாம் என்று கூட நினைக்கத்தக்க நிலைமையிலுள்ளது. ஆயினும் வகுளாபிராமம் என்ற ஒரு விசேஷண ஸ்வாரஸ்யத்தினால் மாத்திரம் 'அந்த ச்லோகம் நம்மாழ்வார் விஷயமே' என்று நிர்ணயிக்கலாகிறது. இங்ஙனே நுட்பமாகக் கண்டறிய வேண்டும்படி பேசுவது வக்தாக்களின் ஆழ்ந்த அறிவையும் பக்தியின் கனத்தையும் காட்டுமென்ப. விந்தை மேய கற்புடைய மடக்கன்னியையும், பல்லவன் வில்லவன், வயிரமேகன், செங்கணான் கோச்சோழன் முதலானவர்களையும் வாய்விட்டுப் பேசினது அந்த வ்யக்திகள் திறத்தில் விசேஷ ப்ரதிபத்தியில்லாமை பற்றியே.

எம்பெருமானார் "பஞ்சாசார்யபதாஶ்ரித:" என்று போற்றப்படுகிறார். அந்த ஐந்து ஆசாரியர்களுள் ஒருவரைப்பற்றியும் தமது திருவாக்கினால் பேசியருளவில்லையே என்று சிலர் விசாரமுறுவதுண்டு. இவ்விஷயத்திலும் மஹான்கள் நுட்பமாகக் கண்டறிந்து கூறுவதொன்றுண்டு. எம்பெருமானாருடைய ஆசாரியர்கள் ஐவரும் ஆளவந்தாருடைய திருவடிகள். ஆளவந்தாரிடத்தில் நேரே ஒரு அர்த்தமும் ஸ்வாமி கேட்கப் பெற்றிலர். ஆளவந்தாருடைய திருவடிகள் பக்கலிலேயாயிற்று ஒரோ அர்த்த விசேஷங்கள் கேட்டது. ஆனாலும் ஆளவந்தார் கச்சிக்கு எழுந்தருளியிருந்த காலத்தில் அவரால் "ஆமுதல்வனிவன்" என்று தாம் கடாக்ஷிக்கப் பெற்றமையால் அவரையே ப்ரதாநாசார்யராகக் கொண்டு "யத்பதாம்போருஹத்யாந வித்வஸ்தாஶேஷ கல்மஷ: ॥ வஸ்துதாமுபயாதோऽஹம் யாமுநேயம் நமாமி தம் ॥" என்று அவர் விஷயமான துதி யொன்றையே கீதா பாஷ்யத்தின் உபக்ரமத்தில் அருளிச் செய்தார். இதில் ஆளவந்தாருடைய துதி ஸ்பஷ்டமாயும், தமக்கு நேரே ஆசார்யர்களான ஐவருடைய துதி நுண்ணிதாகவுமுள்ளது. ஆளவந்தாரை த்யானிப்பதாகக் கூறாமல் அவருடைய திருவடிகளை த்யானிப்பதாகக் கூறினர். அதை "பதாம்போருஹ" என்று ஐந்து எழுத்துள்ள சொல்லால் கூறினர். ஆளவந்தாருடைய ஐந்து திருவடிகளை த்யானிப்பதாக இதில் வ்யஞ்ஜனை. ஐவருள் பெரிய நம்பிகள் ப்ரதாந ஆசார்யராதலாலும், வாக்ய குரு பரம்பரையில் 'பராங்குஶதாஸர்' என்று அவருடைய திருநாமம் ப்ரஸித்தமா யிருப்பதாலும் பகாரத்தை முன்னிட்டுப் பதாம்போருஹ....என்றார். இங்ஙனே நுட்பமான அர்த்த விசேஷங்களை ஸம்ப்ரதாயம் வல்ல பெரியார் பகரக் கேட்டிருக்கை. ஸுவ்யக்தமாகச் சொல்லி விடுவதிற் காட்டிலும் இங்ஙனே ஆழ்பொருளாகச் சொல்வது ரஸவத்தர மென்று இவ்வழி பெரியோர்களால் கைப்பற்றப்பட்டிருப்பதால், திருமங்கையாழ்வாரும் முதலாழ்வார்களை "ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூரு மடியவர்கள்" என்று ஆழ்பொருளுடைய அருளிச் செயலால் குறித்தனர். இச்சொல் திருக்கோவலூர்ப்பதிகத்திலேயே அமைந்திருத்தலால் கலியனுடைய விவக்ஷிதம் நிஸ்ஸந்தேஹமாக அறியக் கிடக்கிறது.

ப்ரஸங்கமாக இங்கு ஒரு சிறு விஷயம் விமர்சிக்கப்பெறுகின்றது. முதலாழ்வார்களின் திருவவதார ஸ்தலங்களைப்பற்றி இன்றளவும் ஆர்க்கும் ஒரு விப்ரதிபத்தி யிருப்பதாகத் தெரியவில்லை, உடையவர்காலத்தில் திருவவதரித்த திவ்யஸூரி சரிதத்திலும். அப்போதே திருவவதரித்த திருவந்தாதித் தனியன்களிலும் குரு பரம்பராப்ரபாவத்திலும் தேசிகனுடைய பிரபந்த சாரத்திலும் மணவாள மாமுனிகளின் உபதேச ரத்தினமாலையிலும், அப்பிள்ளை யருளிய வாழித்திருநாமங்களிலும் ஆக இவ்வளவு நிர்விவாதப்ரமாணங்களில், பொய்கையார் கச்சியிலும், பூதத்தார் திருக்கடன் மல்லையிலும், பேயார் மயிலையிலும் திருவவதரித்ததாகப் பேசப்பட்டுள்ளது.

இது இங்ஙனமிருக்க, முதல் திருவந்தாதியின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத் தொடக்கத்தில்—"ஆழ்வார்களிற் காட்டில் பகவத் விஷயத்திலுண்டான அவகாஹநத்தாலே முதலாழ்வார்கள் மூவரையும் நித்யஸூரியோபாதியாக நினைத்திருப்பர்கள். 'இன்கவிபாடும் பரம கவிகள்' என்றும் 'செந்தமிழ் பாடுவார்' என்றும் இவர்கள் அவதரித்தது ஒரோ தேசங்களிலேயாகிலும் காலப்பழமையாலே இன்ன விடமென்று நிச்சயிக்கப்போகாது." என்று (அச்சுப்பிரதிகளிற்) காண்கிறது. இதன் அரும்பதவுரையில் "இவை யிரண்டு சங்கதியும் ஸ்வரஸமன்று ; பிழையும் தெரியாது ; வந்த விடங்களிலே கண்டுகொள்வது" என்றிருக்கக் காண்கிறது. மேற்குறித்த வியாக்கியான ஸ்ரீ ஸூக்தியில் ஏதோ பிழை யிருப்பதாக இரண்டு மூன்று நூற்றாண்டுகட்கு முன்பிருந்த அரும்பதவுரைகாரர்களும் ப்ரஸ்தாவித்து விட்டார்கள். ஆனால், அதில் யாதொரு பிழையுமில்லை யென்றும், முதலாழ்வார்கள் இக்கலியுகத்திலன்றிக்கே யுகாந்தரத்தில் அவதரித்தவர்களாதலால் அவர்களது அவதார ஸ்தலம் நிச்சயிக்கவொண்ணாதென்று பெரிய வாச்சான்பிள்ளை அருளிச் செய்தது பொருத்தமுடைத்தே யென்றும் சில பெரியார் பகர்கின்றனர்.

இங்ஙனே கொள்ளுமிடத்து, "கச்சிநகர் வந்துதித்த பொய்கைப்பிரான்" "கடன்மல்லைப் பூதத்தார் பொன்னங்கழல்" இத்யாதிகளான திருவந்தாதித் தனியன்களைப் பெரியவாச்சான்பிள்ளை ஆதரிக்கவில்லை யென்றும், திவ்யஸூரி சரிதமும் உடைய

வர்காலத்தில் திருவவதரித்ததன்று என்றும் சொல்ல நேர்கின்றது. "பொய்யிலாத மணவாளமாமுனி புந்திவாழி" என்று வாழ்த்தப்படுகிற மணவாள மாமுனிகள் உபதேச மார்க்கத்தைச் சிந்தைசெய்து பின்னவருங் கற்கப்பேசின ரத்தினமாலையில் "எண்ணருஞ் சீர்ப்பொய்கை முன்னோர் இவ்வுலகில் தோன்றியவூர், வண்மைமிகு கச்சி மல்லை மாமயிலை" என்று அருளிச்செய்திருப்பதிலும் அதிசங்கைகொள்ள நேர்கின்றது அவதரித்தவிடம் நிச்சயிக்கப்போகாதென்று பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்தது அங்ஙனமே யிருந்தால் அக்காலத்திலுள்ள ஆசாரியர்களெல்லாருமே முதலாழ்வார்களின் அவதார ஸ்தலங்களை நிச்சயிக்கப் பெறாமலிருந்தனர் என்றே கொள்ளவேணும். அப்படியாகில் மணவாளமாமுனிகள் நிச்சயித்தருளிச் செய்ய ப்ரஸக்தியிருக்குமோ?

நிச்சயிக்க முடியாமைக்குக் காரணம் காலப்பழமை என்று காண்கிறது. அந்தக் காரணத்தினால் இன்னமும் பல விஷயங்களும் நிச்சயிக்க முடியாமற்போக நேரும். இன்ன திருவந்தாதி இன்ன ஆழ்வார் அருளிச் செய்தது என்பதும் காலப்பழமையாலே நிச்சயிக்கமுடியாமற்போகவேண்டும். இன்னமாதத்தில் இன்ன திருநக்ஷத்திரங்களில் அவதரித்தார்களென்பதும் காலப்பழமையாலே நிச்சயிக்கமுடியாமற் போகவேண்டும். முதலாழ்வார்களது காலத்திலேயே வாழ்ந்தவரான ஸ்ரீ பக்திஸாரருடைய ஸகல விஷயங்களும் நிச்சயிக்கமுடியாமற் போகவேண்டிவரும்.

வஸ்துஸ்திதி, ஸப்ரமாணத்தையே முக்கியமாகக் கொண்டு ஐதிஹ்ய ஸம்ப்ரதாயங்களையும் நிஷ்கர்ஷிப்பவர்கள் நம் பெரியார். முதலாழ்வார்கள் ஓடித்திரியும் யோகிகளாயிருந்தனரென்றும், திருக்கோவலூரில் இவர்கள் சந்தித்தனர் என்றும் சொல்லிவருகிற வரலாறுகளெல்லாம் எந்த ப்ரமாணத்தினால் நிச்சயிக்கப்பட்டனவோ அந்தப்ரமாணமே அவதார ஸ்தலங்களுக்கும் நிர்ணாயகமாகக் குறையில்லை. அவ்வரலாறுகளையெல்லாம் தெரிவிக்கிற ப்ரமாணம் திருவவதார ஸ்தலங்களை மாத்திரம் தெரிவியாதொழிந்தது என்றால் இது யுக்தமாகுமோ?

அன்றியும், வியாக்கியான க்ரந்தங்களில் ஆழ்வார்களின் அவதாரஸ்தலத்தைப்பற்றிப் பெரியவாச்சான் பிள்ளை விமர்சிக்கிற வழக்கமுண்டோ? என்றும் பார்க்கவேணும். ஒவ்வொரு ஆழ்வாருடையவும் அவதார ஸ்தலங்களைப்பற்றி அவர் ஸ்ரீ வ்யாக்யாநத்திலே அருளிச் செய்பவராயிருந்தால் ப்ரக்ருதத்திலும் இந்த வார்த்தையை யெடுத்துக்கொண்டு 'இவர்களின் அவதாரஸ்தலம் காலப்பழமையாலே நிச்சயிக்கப் போகாது' என்றெழுத ப்ராப்தமாகும். வேறு திவ்யப்ரபந்தங்களின் வியாக்கியானங்களில் இந்த ப்ரஸ்தாவம் எடுத்ததுமில்லை. நம்மாழ்வார், பட்டர்பிரான், கோதை, கலியன் ஆகிய இவர்களின் அவதார ஸ்தலங்கள் அவரவர்களது பாசுரங்களிலேயே வ்யக்தமாகத் தெரிகிறது என்றாலும், பக்திஸாரர், குலசேகரப்பெருமாள், தொண்டரடிப்பொடிகள், பாண்பெருமாள், மதுரகவிகள் ஆகிய இவர்களின் அவதாரஸ்தலங்கள் பாசுரங்களில் தெரியாமையால் அவற்றைப் பெரியவாச்சான் பிள்ளை தாம் தெரிவித்தருளப் புகுந்திருக்கவேணுமே. எங்கும் அஃது இல்லை. அப்படியிருக்க முதலாழ்வார்களைப் பற்றிமாத்திரம் அவதாரஸ்தலவிசாரம் செய்தருளப்புகுந்து "காலப்பழமையாலே நிச்சயிக்கமுடியவில்லை' என்றெழுதியிருப்பரா? என்றும் விமர்சிக்கவேண்டும்.

'பொய்கையாழ்வார் கச்சியில் அவதரித்திருந்தாராகில் கச்சியிலுள்ள பல திருப்பதிகளையும் பாடியேயிருப்பர்; அங்ஙனம் பாடியிருக்கக் காணாமையாலும் இவர் கச்சியில் அவதரித்திருக்க மாட்டார்' என்று சிலர் சொல்லுவதும் உசிதமாகத் தோன்றவில்லை: தாம் அவதரித்தவூரிலுள்ள தலங்களையெல்லாம் பாடியே தீரவேணுமென்று ஒரு நியதியுண்டோ? உறையூரில் அவதரித்த திருப்பாணாழ்வார் அவ்வூர் திவ்ய தேசமாக இருந்தும் அதனைப் பாடவில்லை. திருமண்டங்குடியில் அவதரித்த தொண்டரடிப்பொடிகள் தத்ஸமீபத்திலுள்ள பலபலதிருப்பதிகளுள் ஒன்றையும் பாடவில்லை. திருப்பதிகளைப் பாடும் முறைமை தனிப்பட்டது. பக்திபரவசரான ஆழ்வார்கள் ஸ்வயத்நபூர்வகமாகப் பிரபந்தங்கள் பாடினார்களுமல்லர்.

தவிர, முதலாழ்வார்கள் அயோநிஜர்கள் என்கிற ப்ரஸித்தியிலும் சில மஹான்கள் விப்ரதிபத்தி காட்டுகிறார்கள்; "அன்று கருவரங்கத்துள் கிடந்து கைதொழுதேன் கண்டேன் திருவரங்கமேயான்திசை" என்று பொய்கையாரும், "அன்று கருக்கோட்டியுள் கிடந்து கைதொழுதேன் கண்டேன் திருக்கோட்டியெந்தை திறம்" என்று பூதத்தாழ்வாரும் அருளிச் செய்துள்ள

பாசுரங்களில் தங்களுடைய கர்ப்பவாஸம் கூறப்பட்டுள தென்று பிரமாணமும் காட்டுகின்றார்கள். அப்பாசுரங்களின் திவ்யார்த்த தீபிகையில் அடியேன் எழுதியுள்ளதை மாத்திரம் இங்கு எடுத்துக் காட்டுகின்றேன்;—(அதாவது)—"இதில் மூன்றாமடியில் ஒரு ஸங்கை பிறக்கும்; பொய்கையிலே ஒரு செங்கமலப் பூவிலே திருவவதரித்ததனால் அயோநிஜராகிய இவ் வாழ்வார்க்கு, கர்ப்பவாஸமென்பது கிடையாதே; அப்படி யிருக்க, "கருவரங்கத்துட் கிடந்து" என்று இவர் தாம் எங்ஙனே யருளிச்செய்கிறாரென்று—இதற்கு உத்தரமாவது—கருவரங்கத்துள் கிடந்து என்றவிதனால் * தீண்டாவழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறிதசையுமாய் வேண்டா நாற்றம் மிக்கிருக்கிற கர்ப்பத் தும்பையில் நின்றும் ஆழ்வார் பிறந்தாரென்று கொள்ளவேண்டிய அவசியம் யாதுமில்லை. எவ்விடத்தில் நின்று அவதரித்தாரோ அவ்விடமே கர்ப்பஸ்தானமாகும். இவ்வாழ்வாருடைய வாழித் திருநாமத்தில் "வனசமலர்க் கருவதனில் வந்தமைந்தான் வாழியே" என்றிருப்பதும் இவ்வர்த்தத்தை வற்புறுத்தும். 'நான் இவ்விருள் தருமா ஞாலத்தில் வந்து தோன்றுவதற்கு முன்னமே எம்பெருமானுடைய கடாக்ஷம் பெற்றவன் என்று சொல்லுவதே இங்கு விவக்ஷிதம்."

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

"காணாய்ப் பாயுங் கருத்துடையேன்."

[ஆ. திருவேங்கடத்தய்யங்கார்]

பெருமாள் திருமொழியில் "ஊனேறு செல்வம்" என்னும் பதிகத்தில் குலசேகரப் பெருமாள் ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரு விதமான பிறவியைக் கோருகின்றார். அதில் ஆறாவது பாசுரத்தில் "அன்னனைய பொற்குவடா மருந்தவத்தனாவேனே" என்று திருமலையில் சிகரமாக இருக்கப் பெறவேணுமென்று பாரித்தார். அதற்கு மேற்பாசுரததில் "திருவேங்கடமலைமேல் கானாறாய்ப்பாயும் கருத்துடையேனாவேனே" என்றார். இப் பாசுரத்திற்கு அவதாரிகை யிடுகின்ற பெரியவாச்சான் பிள்ளை திருமலையில் சிகரமானால் ஏறவல்லார் அநுபவித்து, மாட்டாதார் இழக்குமதாயிருக்குமிறே; அப்படியன்றியே எல்லார்க்கும் அநுபவ யோக்யமாயிருக்கும் கானாறாக வேணும் நானென்கிறார் என்றருளிச் செய்துள்ளார். இதற்கு மேல் "அன்றிக்கே" என்று தொடங்கி மற்றொரு அவதாரிகையும் அருளிச் செய்துள்ளார். ஆனால் அந்த த்விதீய அவதாரிகா ஸ்ரீ ஸூக்திகள் அச்சுப்பிரதிகளில் காணப்படவில்லை. ப்ரக்ஷேப உத்க்ஷேபங்கள் ஆங்காங்கு விசேஷமாகக் காணப்படுவதால் இது வியப்பன்று. ஆழ்வார் திருநகரியில், நம் பிள்ளையின் அபராவதாரமோ வென்று எண்ணும்படி யெழுந்தருளி யிருந்து உபய வேதாந்த ப்ரவசநம் செய்தருளின ஸ்ரீமத் பரமஹம்ஸ அப்பன் ஜீயர் ஸ்வாமி காலக்ஷேபம் ஸாதிக்கும்போது அவர் தம்முடைய ஓலை ஸ்ரீ கோஶத்திலிருந்து எடுத்தருளிச் செய்தவையும் பல சிஷ்யர்களால் குறித்துக் கொள்ளப் பட்டவையுமான ஸ்ரீ ஸூக்திகள் வருமாறு:— "அன்றிக்கே திருமலையில் வாழ்ச்சியையே பேறாகக் கொண்டிருக்குமிவர்க்கு அதின் ஏகதேசமாயிருக்கை தேட்டமல்லாமையாலும், அயோகவ்யவச்சேதத்திலும் அந்யயோகவ்யவச்சேதம் அர்த்தஸித்த மாகையாலும் அதற் குறுப்பாகக் கானாறாக வமையு மென்கிறார்" என்பனவாம். இந்த இரண்டாவது அவதாரிகையே பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை முதலான ஆசாரியர்களுக்கு அபிமதம் என்பதைப் பெரியவாச்சான் பிள்ளை இப்பாசுரத்தின் வியாக்கியானத்தில் ஸ்பஷ்டமாகக் காட்டியருளியுள்ளார்.

இந்த இரண்டாவது அவதாரிகை இல்லையென்று வைத்துக் கொண்டு, அதாவது—அச்சுப்பிரதிகளில் காண்கிற அவதாரிகையை மாத்திரமே உள்ளதாகக் கொண்டு வியாக்கியானத்தை ஸேவிக்குமளவில், அவதாரிகையோடு வியாக்கியானம் பொருந்துகிறதா என்று வித்வான்கள் விமர்சிக்கவேணும். கீழ்ப் பாட்டில் பாரித்தபடி திருமலையில் ஒரு சிகரமானால் அது ஏறவல்லார்க்கு மாத்திரம் பயன் பட்டு மற்றையோர்க்குப் பயன்படாததாம்; அங்ஙனமன்றி எல்லார்க்கும் பயன்படத் தக்கதான ஒரு காட்டாறாகக் கடவேன்—என்று அச்சுப் பிரதிகளிற் காணும் அவதாரிகையின் கருத்து. திருமலையில் தாம் ஒரு சிகரமாக இருந்தால் அவ்வளவுதூரம் ஏறக்கூடியவர்களுக்கு மாத்திரம் அது பயன்படுமே தவிர, ஏறமாட்டாதவர்களுக்குப் பயன்படாததாலால், ஏறமாட்டாதவர்கட்கும் பயன்படக் கூடியதான பிறவியை

[கானாறாக ஆவதை] இப்பாட்டில் விரும்புகிறார் என்கிற இந்த தாற்பரியமே ஸ்பஷ்டமாகக் கிடைக்கிறது. கானாறாக ஜனித்தால் அது திருமலையில் நின்றும் கீழிலும் பெருகி, திருமலை ஏறமாட்டாதவர்களுக்கும் குடைந்தாடலாம்படி உதவுமாதலால் கீழிலுள்ளார்க்கும் உதவும்படியான கானாறும் பிறப்பைக் காதலிக்கிறார் என்று பொருத்தமாகவே நிர்வஹித்துவிடலாம். பெரிய வாச்சான் பிள்ளையின் திருவுள்ளம் இந்த நிர்வாஹத்தை ஸஹிக்கின்றதா என்று பார்க்கவேணும். "கானாறாய்" இத்தியாதியான நான்காமடிக்கு வியாக்கியான ஸ்ரீஸூக்தி—"ஸஹ்யம் பற்றினதாகில் கீழேபோமிறே; அங்கே சுவறிப்போம் காட்டாறாகு மபிஸந்தியை யுடையேனாகவேணும்" என்றுள்ளது. கீழே காட்டின அவதாரிகைக்கு இணங்க இந்த வாக்கியங்கள் அந்வயிக்குமோ? திருமலையில் ஏறமுடியாதவர்களுக்கும் பயன்படுவதற்காகவன்றோ கானாறாய் ஜனிக்கவேணுமென்று பாரித்தார். திருமலையில் நின்றும் கீழிலும் பெருகும்படியான ஶக்தி கானாற்றுக்கு உண்டு. "கானாறாய்ப் பாயும்" என்கிற ஶப்த ஸ்வாரஸ்யத்தினால் அந்த ஶக்தி நன்றாகக் காட்டப்பட்டு மிருக்கிறது. "திருமலையில் ஏறமாட்டாதவர்களும் எளிதில் குடைந்தாடுதற்குப் பாங்காகப் பெருகிச் செல்லும் கானாறு" என்று வியாக்கியானம் செய்வதற்கு, மூலம் மிக இணங்கி யிருக்கின்றது இட்ட அவதாரிகைக்கும் இணங்கி யிருக்கின்ற பொருள் இது. இப்படிப்பட்ட பொருளைப் பெரிய வாச்சான் பிள்ளை அருளிச்செய்யப் ப்ராப்தமாயிருந்தும் அருளிச் செய்யவில்லை. "அங்கே சுவறிப்போம் காட்டாறாக" என்று பெரியவாச்சான் பிள்ளை யருளிச் செய்திருப்பதைக் கவனிக்கவேணும். திருமலையிலேயே சுவறிப்போகிற காட்டாறு திருமலையில் ஏறக்கூடியவர்களுக்கல்லது மற்றையோர்க்குப் பயன்படுமோ? ஏற முடியாதவர்களுக்கும் பயன்படவல்ல பிறவியை விரும்புவதாக அவதாரிகையிட்டு, மேலே இப்படி வியாக்கியானம் செய்வரோ? பெரியவாச்சான் பிள்ளை.

நக—ூ, "ஏறவல்லார்" என்றும் "மாட்டாதார்" என்று அவதாரிகையிலுள்ள வார்த்தைகளுக்கு அர்த்தம் என்ன வென்றால், திருமலையில் திருவேங்கட முடையான் ஸந்நிதியிலிருந்து (அதற்கும் மேலே) மலையுச்சியிலே ஏறக்கூடியவர்கள்—என்றும், அப்படி ஏற ஶக்தியற்றவர்கள் என்றும் பொருள் கொள்ள

அசல் பவுனில் கட்டின ரங்கோன் வைர
நகைகளும் சுத்தமான வெள்ளிப் பாத்திரங்
களும் காரண்டியுடன் கொடுக்கும் ஷாப்பு

இதுதான்

[illegible] கிருஷ்ணா ஜுவெல்லரி எம்போரியம்,

10, கோவிந்தப்ப நாயக்கன் தெருவு, சென்னை.

பகவத் விஷயம்

ஆழ்வாரருளிச்செய்த திருவாய்மொழிக்கு திருக்குருகைப்பிரான் பிள்ளான், முதலான திருநாமங்கள் அருளிச் செய்த ஆறாயிரப்படி, ஒன்பதிநாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, ஈடு முப்பத்தாறாயிரப்படி ஆகிய ஐந்து வியாக்யானங்களும், அடைய வளைந்தான் அரும்பதமும், ஜீயர் அரும்பதமும் அச்சிடப்பட்டு ஒவ்வொருபத்தும் ஒரு புஸ்தகமாக பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. 5 ரூபாய் மணியார்டர் செய்தால் மீதி வி. பி. மூலம் அனுப்பப்படும். விலை ரூ. 50—0—0 மற்றும் ஸம்ப்ரதாயப் புஸ்தகங்களும் நம்மிடம் கிடைக்கும்.

S. R. S. வைஜயந்தீ ஆபீஸ்,

24, சந்திரப்ப முதலி தெரு ஜி. டி. மதராஸ்.

P. KOTHANDARAM PILLAI

SON OF LATE

P. S. PONNUSAWMY PILLAI,

HIGH CLASS CABINET MAKER AND UPHOLSTERER,

Established in 1854.

Ponnusawmy Pillai's Buildings

99 & 44, Esplanade West :: (Rattan Bazaar) :: P. T., MADRAS

For Genuine GOLD & SILVER ART WARES
K. RAMACHANDRA IYER & Co.
JEWELLERS
237, GOVINDAPPANAICK ST. MADRAS.
BRANCH: MAMBALAM.

உயர்தரமான வைரங்களுக்கு
K. ராமசந்திர அய்யர் & Co.
நகைவியாபாரிகள்
237 கோவிந்தப்பநாய்கன் தெரு,
மதராஸ்
பிராஞ்சு: மாம்பலம்.

பாரிசவாயுவுக்கு பயப்பட வேண்டாம்!

க்ஷீர பலா

(101 தடவை பாகம் செய்தது.)

பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி. எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. இதை எங்களுடைய "அயவீரஸிந்தூர"த்துடன் கலந்து உட்கொண்டால் இன்னும் அமோகமான பலன் அதிசீக்கிரத்தில் கிடைக்கும்.

க்ஷீர பலா:—அவுன்ஸ் 1-க்கு 3-8-0. ½-அவுன்ஸ் 1-12-0.
அயவீரம்:—ஒருவாரத்திற்கு போதுமான மருந்து 1-0-0.

மலபார் ஆயுர்வேதிக் ஷ்டோர்ஸ்
107, பிராட்வே, சென்னை

வேணும் என்னில்; அப்படியே கொள்வோம். "அங்கே சுவறிப் போம்" என்கிற ஸ்ரீஸூக்திக்குப் ப்ரயோஜனம் சொல்லவேணுமே. ஏட்டுப் ப்ரதிகளிற் காண்கிற அவதாரிகை கொள்ளப் படாவிடில் "அங்கே சுவறிப்போம்" என்கிற வியாக்கியாந ஸ்ரீஸூக்தி எப்படி அந்வயிக்கும். ஒருக்காலும் அந்வயிக்க மாட்டாது.

த்விதீய அவதாரிகா ஸ்ரீஸூக்தியின் ஸ்வாரஸ்யாதிஶயத்தை இப்போது நிரூபிப்போம். [திருமலையில் வாழ்ச்சியையே பேறாகக் கொண்டிருக்குமிவர்க்கு அதின் ஏகதேசமாயிருக்கை தேட்டமல்லாமையாலும்] திருமலையில் ஶேஷபூதத்வேநவாஸம் ஆழ்வார்க்கு உத்தேஶ்யமேயல்லது, திருமலையாகவே தாம் ஆய்விடுவது இவர்க்கு உத்தேஶ்யமன்று; குவடு என்பது சிகரம்; அது திருமலையிற் காட்டிலும் வேறு பட்டதன்று. ஆகவே சிகரமாயிருக்குமிருப்பு இவர்க்கு உத்தேஶ்யமன்று என்று காட்டப் பட்டது.

[அயோகவ்யவச்சேதத்திலும் அந்யயோகவ்யவச்சேதம் அதி ஹ்ருத்யதமாகையாலும்] "மறந்தும் புறந்தொழா மாந்தர். என்றும், "கண்ணாளன் கண்ண மங்கை நகராளன் கழல்சூடி அவனை யுள்ளத்து, எண்ணாத மானிடத்தை யெண்ணாத போதெல்லாம் இனியவாறே" என்றும் சொல்லுகிற கணக்கிலே திருமலையில் வாழ்வதிற் காட்டிலும் வேறிடத்தில் வாழப் பெறாமையே முக்கியமான உத்தேஶ்யமாதலால் என்றபடி. இப்படிப்பட்ட உத்தேஶத்திற்கு உசிதமாகக் காணாறாக ஜனிக்கவேணுமென்றார். அது திருமலையில் நின்றும் பெருகிக் கீழேயும் பாயுமானால் அந்யயோகவ்யவச்சேதம் ஸித்திக்க மாட்டாது—அது ஸித்திப்பதற்காகவே "அங்கே சுவறிப்போம்" என்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்தார். ஆகவே த்விதீய அவதாரிகா ஸ்ரீஸூக்தி இருந்தாலொழிய வியாக்கியாநம் பொருந்த மாட்டாதென்று தெளிவாயிற்று.

ஆழ்வார், பாகவதரனைவர்க்கும் அநுபவயோக்யமாம்படியைத் தாம் விரும்புகிறாரென்னில் பெருக்காறாய்ப் பாயும் கருத்துடையராக வன்றோ ஆகவேணும். உவர்க் கடலில் விழாமைக்காகக் காணாறாகவேணுமென்றாரென்பது பொருந்துமோ? தான் கெட்டாகிலும் பிறர்க்கு உறுப்பாக வேணுமென்று பாரிப்பதல்லவோ உத்தம குணம். ஆழ்வார் திருவுள்ளம் இங்ஙனேயுள்ள

3

தென்பதை அவதாரிகையில் காட்டின பெரிய வாச்சான் பிள்ளை, மேலே வியாக்யானத்தில் காட்டியருளவில்லையே அந்யசேஷத்வம் கழிவதிலேயே ஆழ்வார்க்கு நோக்கு என்று காட்டும் ஸ்ரீஸூக்தியையல்லவோ அருளிச் செய்துள்ளார். அன்றிக்கே என்கிற த்விதீய அவதாரிகையில்லாமல் முதலவதாரிகையோடு நிற்குமாகில் அந்த அவதாரிகையோடு மேல் வியாக்யாநம் சிறிதாவது பொருந்துமாவென்று அறிஞர்கள் ஆராய வேண்டுகின்றேன். திருமலையில் சிகரமானால் எவரேனும் பெயர்த்துக்கொண்டு செல்ல நேரும்; அதனால் அயோகமும் அந்யயோகமும் ஸம்பவிக்கும்; கானாறாகப் பாய்ந்தால் அக்குறைகள் நேரா—என்கிற கொள்கையும் மிகவும் பொருந்தும். ஆறாம்பாட்டின் அவதாரிகையில்—"ஸ்தாணுவானால் ஒரு நாள் உண்டாய் ஒரு நாள் இன்றியே போமிறே; அங்ஙனன்றியே என்று மொக்க வுண்டாயிருந்த திருமலையில் ஏக தேசமாக வேணும் நான் என்கிறார்" என்கிற ஸ்ரீஸூக்திகள் மேற்குறித்த கொள்கைக்கு ப்ரதிபந்தகமென்று சிலர் கருதுவது பொருந்தாது. ஐந்தாம் பாசுரத்தில் விரும்பியபடி, தம்பகமாக ஜனித்தால் விரைவில் தீர்ந்துபோக நேரும். அங்ஙனல்லாமல் சிகரமானால் தீர்ந்து போக ப்ரஸக்தியில்லை—என்கிற மாத்திரமே அங்கு விவக்ஷிதம். பெயர்த்துக் கொண்டு போக முடியுமா முடியாதா என்கிற விசாரம் அங்குக் கொள்ளப் படவில்லை. உத்தரோத்தர யுக்திகளின் ஸ்வாரஸ்யம் நோக்கத்தக்கது.

ஸதாசார்ய ஸந்நிதியில் அடிபணிந்து க்ரந்த காலக்ஷேபம் செய்ய பாக்யமில்லாமல் ஏடு பார்த்து ஸ்வேச்சையாக ப்ரஸங்கம் செய்யுமவர்கள் ப்ராசீந தாள கோசங்களிலிருந்து அழகிய பாடங்களை உணர்த்தும் மஹான்கள் திறத்து க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்ய ப்ராப்தமாயிருக்க, வேறுவிதமாக நடந்து கொள்வதும் காலகதிக்கு ஏற்றதே.

வர்த்தமானங்கள்

மணவாள மாமுநிகளின் அஷ்டதிக்கஜாசார்யர்களில் அக்ரகண்யராகிய ஸ்ரீவானமாமலை ராமாநுஜஜீயர் ஸ்வாமிகளில் 26-வது பட்டம் (வர்த்தமான சின்ன மதுரகவி ராமாநுஜஜீயர் ஸ்வாமி

ஸ்ரீமுக வருஷம் ஆவணி மீத்தில் 26வது பட்டம்
ஸ்ரீவானமாமலை சின்ன மதுரகவிராமாநுஜஸ்வாமிகள்.

இவரது தனியன்,

ஸ்ரீவாநாத்ரி யதீந்த்ரபாதஜலஜத்வந்த்வாநுராகோஜ்வலம்
ஸ்ரீரங்கேச்வரபாதபத்ம விலஸத் ஸேவாநிபத்தாதரம்
ஆம்நாயத்வய சேகரார்த்தவிசதீகாரப்ரவீணம் ஸதா
ஸ்ரீராமாநுஜயோகிராஜமதுலம் ஸேவே தயாம்போநிதிம்

இந்த ஸ்வாமியின் திருநக்ஷத்திரம் ஆடி ஹஸ்தம். அத்திநத்தன்று "தெருள் கொள் நான்மறை வல்லவர்பலர்வாழ்ச்சீவர மங்

கல நகர்'' என்று ஆழ்வாரால் கொண்டாடப்பட்ட வானமாமலையில் விசேஷமாக ததீயாராதநமும் டோலோத்ஸவமும் பட்டண ப்ரவேஶமும் நடைபெற்றன. அது நிற்க, திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் அத்திரு நக்ஷத்திரத்தன்று நடை பெற்ற ததீயாராதநமும் டோலோத்ஸவமும் போற்றுதற்குரியன. அதற்கு திரவிய சகாயம் செய்தது நூஜ்விட் மிர்ஜாபுரம் ஜமீந்தாரவர்கள். அவ்வுத்ஸவத்தைப் பரிமளிக்கச் செய்தவர் ஷை மடத்து ஸ்ரீகார்யம் ஆழ்வாரய்யங்கார்.

ஆவணி மாதம் க்ருஷ்ணபக்ஷ ஷஷ்டி 12உ (27-8-37) (பெரிய ஸ்வாமி) சின்ன கலியன் ராமாநுஜ ஸ்வாமி தீர்த்தம்.

கோயில்களில் கொடித் தகராறு

தேவஸ்தான மஹோத்ஸவங்களில் நடைபெறும் ரதோத்ஸவ தினம் தேர்மீது தேசீய (காங்கிரஸ்) கொடி யேற்றுவது சம்பந்தமாய் சிலகாலமாக பிரமாதமான தகராறு ஏற்பட்டு வருகிறது. சமீபத்தில் நடைபெற்ற ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆடித் திருநாளில் காங்கிரஸ் வாதிகள் கொடி வைக்கக் கிளர்ச்சி செய்ததாயும் கோயில் டிரஸ்டி மறுத்து விட்டதாயும் அது சம்பந்தமாய் தகராறு உண்டானதாயும் பத்திரிகைகளில் செய்தி வெளியாயிருக்கிறது. சென்ற மாதம் நீடா மங்கலம் உத்ஸவத்தில் கொடித் தகராறுண்டாய் ஷை யூர் யூனியன் பிரஸிடெண்ட் முதலியவர்கள் சக்கரத்தடியில் படுத்துக் கொண்டதும், அது விஷயமாய் கேஸ் நடை பெறுவதும் பிரஸித்தமாகும். முன் ஒரு தடவை குண்டூரில் கொடித் தகராறு விஷயமாய் அடிதடி கொலை முதல் நடை பெற்றதும் கோயில்களிலும் தேர்களிலும் தேசீயக் கொடியேற்றம் செய்வது கூடாதென காந்தி ஜீயால் மறுக்கப்பட்டதும் யாவரும் அறிந்ததாகும். சகல ஜாதியினர்க்கும் பொதுவெனச் சொல்லப்படும் தேசீயக் கொடியை ஒரு மதத்துக்கு பாத்யமான கோயில்களில் காங்கிரஸ் வாதிகள் கொடியை வைக்க முயற்சிப்பதும், அதனால் தகராறு ஏற்படுவதும் உண்டாகாமலிருக்கும்படி காங்கிரஸ் தலைவர்களும் பிரதம மந்திரி ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியாரும் வேண்டியதைச் செய்வது நலமாகும்.

—நியாயவாதி.

ஸ்ரீ. உ. வே. தேசிக வரதாசாரியார்

இந்த ஸ்வாமி பதரிகாஶ்ரம யாத்ரை எழுந்தருளியிருக்கிறார் என்றும் 2, 3 மாதங்களில் மறுபடியும் மதராஸிற்கு எழுந்தருளுவர் என்றும் ஆனிமாத ஸஞ்சிகையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே பதரிக்கெழுந்தருளி பதரீ நாராயணனை மங்களாசாஸநம் செய்து அயோத்யை ப்ரயாகை ஸ்ரீ கூர்மம் முதலான க்ஷேத்ர மார்கமாகச் சென்னைமா நகருக்கு 1½ மாதத்திற்குள்ளா

கவே எழுந்தருளினார். இவ்வளவு சீக்கிரமாக எழுந்தருளியது சென்னைமாநகரவாஸிகளான மஹா ஜநங்களின் பாக்ய மென்றே சொல்லலாம். சென்னையிற் சிலகால மெழுந்தருளி யிருந்து உபந்யாஸங்கள் செய்யவேண்டுமென்று ப்ரார்த்தியா நின்ற மஹா ஜனங்களின் ப்ரார்த்தனையை அங்கீகரித்து திருமந்த்ரமவதரித்த திவ்ய தேசமாகிய பதரிக் கெழுந்தருளி வந்த காரணத்தை உத்தேசித்து திருமந்த்ரார்த்த ப்ரகாசகமாக பட்டாருளிச்செய்த அஷ்ட ச்லோகீ வ்யாக்கியாநத்தையும், ஆழ்வார் திரு நகரியில் பகவத் விஷயம் நடந்த காலத்தில் ஆழ்வாருக்கு,

ஸ்ரீமாந்பராங்குசமுநிர்ஜீயாத் யத்ஞ்ஜாநமுத்ரயா
நேத்ரியாச்வயுஜோ ந்ருணம் நித்யம் விஷய வீதய:

என்று அழகிய மணவாளப் பெருமாள் நயினார் என்கிற மணவாளமாமுநிகளின் திருப் பேரனாரால் கொண்டாடப்பட்ட ஜ்ஞாந முத்ரையை வஜ்ர ரத்தினத்தில் செய்து ஸமர்ப்பிக்க வேண்டுமென்று ஸங்கல்பித்தகைங்கர்யத்தை நிறைவேற்றுவதற்காகவும் சிலகாலம் சென்னையில் வாஸம் செய்யக் கருதி யிருப்பதாதலால் அக் கைங்கர்யம் நிறைவேறுமளவும் ஆழ்வார் எம்பெருமானுடைய சுபாச்ரயமான திவ்ய மங்கள விக்ரஹ வடிவழகி லீடுபட்டநுபவித்து, அவ்வநுபவ பரீவாஹ ரூபமாக அநுக்ரஹித்த திருவாசிரியவ்யாக்கியாநத்தையும் ஆவணி 14௳ (29—8—37)ல் உபக்ரமித்து புரட்டாசி 17 (3—10—37) வரை உபந்யஸிப்பதாக அநுக்ரஹித்திருக்கிறார். பட்டண வாஸத்தில் பற்றற்று காரப்பங் காட்டிற்குச் சென்ற அந்த ஸ்வாமி இவ்வாறு அங்கீகரித்தது நமது பாக்ய விசேஷமே. அக் கைங்கர்யம் நிறைவேறின பின் ஊருக்கு எழுந்தருளும்படி, ஏற்படுமாதலால், இவ்வாறு நமக்குக் கிடைத்திருக்கு மிவ்வரிய ஸந்தர்ப்பத்தில் ஷை ஸ்வாமியினது அமுத மொழிகளை செவியாரப்பருகி ஆநந்திப்போமாக. —பத்ராதிபர்

திருவாடி ஸ்வாதி உத்ஸவ ஸம்பூர்ணம்

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆழ்வார் தேவஸ்தான மதிள்மீது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பக்ஷிராஜர் சன்னிதி உத்ஸவம் பிரதி ஆடி ஸ்வாதியிலும் சிறப்பாக நடைபெறும். அன்று காலை ஏழு மணி முதல் இரவு 7-மணி வரை பால், பஞ்சாமிர்தம், பன்னீர் வகையரு திருமஞ்சநம் நடைபெற்று அன்று பக்த ஜனங்களால் கொட்டு மேளங்களுடன் கூட்டங் கூட்டமாய் அத்யாதரத்துடன் திருமஞ்சன சாமான்கள் சமர்ப்பிக்கும் காக்ஷி கண்டு களிக்க வுரியது. மேற்படி உத்ஸவம் சென்ற ஆடி ஸ்வாதியிலும் அதி விமர்சையாய் நடைபெற்றது. —யதார்த்தவாதி.

ஹநுமான்

இப்பெயர் பூண்டதோர் பத்திரிகை ஆதிவாரந்தோறும் ஆவிர்ப்பவித்து, அகில ஜனங்களையும் ஆநந்திக்கச் செய்யா நிற்கின்றது. இப்பத்திரிகை கேஸரீ அச்சாபிஸில் V. சுந்தரமய்யரவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. இதற்கு மானேஜிங் எடிட்டர் L. ரகுராஜ பாரதி C. E.

அநேக விதமான அபிப்ராயங்களையுடைய ஆத்மாக்களனைவரும் ஆதரிக்கத்தகுந்த விஷயங்களொருங்கே யமையப்பெற்ற இவ்வநுமான் எனும் பத்திரிகையைப் படித்த பொழுது அநுமானின் பெருமையை ஸ்ரீ ராமன் வாயிலாக வைத்துப் பேசிய கம்பர் பாசுரமொன்று நினைவுக்கு வந்தது. அப்பாசுரம் வருமாறு.

இல்லாத உலகத்தெங்கு மிங்கிவனிசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்கடலுமே யென்னுங் காட்சி [வன்
சொல்லாலே தோன்றிற்றன்றே யார்கொலிச் சொல்லின் செல்
வில்லார் தோளிளையவீர! விரிஞ்சனோ? விடைவலானோ?

இவ்வநுமான், புகழ் மிக ஸகல கலைகளையும் கற்றவன். இவன் கல்லாத கலைகளும் வேதக்கடலும் உலகத்திலெங்குமில்லாதவை; என்பது இவன் பேசும் பேச்சுக்களில் நன்கு புலப்படா நிற்கின்றது. இங்ஙனே சொற்செல்வம் பெற்றுள்ளவிவன் நான்முகக் கடவுளோ? அன்றி ஸர்வஜ்ஞரான பரமசிவனோ? என்று சங்கியா நிற்கின்றேன் என்பது, இப்பாசுரத்தின் பொருளாகும். இவ்வாறு இராமன் சங்கிப்பதற்குக் காரணம் அநுமானின் வாயிலாக வந்த மஞ்சேனத்திரண்ட கோலமேனிய என்கிற பாசுரமேயாகும். அநுஸந்திக்குமவர்களை ஆழங்காற் படுத்தும் அப்பாசுரம் விரிவிற்கஞ்சி விடப்பட்டது. இவ்வாறு அநுமானின் பெருமையை நினைவூட்டா நின்ற இப்பத்திரிகை அவ்வநுமானைப்போல ஆசந்த்ரார்க்கம் சிரஞ்சீவியாய் இந்நிலவுலகின்கண் இசையுடன் இனிது வர்த்ததாமபி வர்த்ததாம் என்று நாள்தோறும் வ்ருத்தியடையும்படி எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் புரிய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம்: பத்ராதிபர்,
ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

பஞ்சாங்கம்—செப்டம்பர்மீ

இங்கிலீஷ் (செப்டம்பர்மீ)	தமிழ்	வாரம்	திதி நா.வி.	நட்சத்திரம் நா.வி.	யோகம் நா.வி.	கரணம் நா.வி.
*1	௧௭	புதன்	ஏகா 10-20	புனர் 37-14	விஷ 28-35	பால 10-20
2	௧௮	வியா	துவா 5-41	பூச 34-50	வரி 22-18	தை 5-41
3	௧௯	வெள்	திர 1-45	ஆயி 33-15	பரி 16-38	வணி 1-45
4	௨௦	சனி	அ ● 56-58	மக 32-43	சிவ 11-46	சது 27-59
5	௨௧	ஞா	பிர 56-25	பூர 33-23	ஸித் 7-50	சிம் 26-41
6	௨௨	திங்	துதி 57-3	உத் 35-15	ஸாத் 4-55	பால 26-43
7	௨௩	செவ்	திரு 58-59	அஸ் 38-20	சுப 2-56	தை 28-45
8	௨௪	புதன்	சது 60-0	சித் 42-38	சுப 1-59	வணி 30-40
9	௨௫	வியா	சது 2-0	சுவா 47-55	பிரா 1-59	பத் 2-10
10	௨௬	வெள்	பஞ் 6-0	விசா 53-55	மா 2-40	பால 6-17
11	௨௭	சனி	சஷ் 10-57	அனு 60-0	வை 3-47	தை 10-57
12	௨௮	ஞா	சப் 16-14	அனு 0-26	விஷ் 5-26	வணி 16-14
13	௨௯	திங்	அஷ் 21-9	கேட் 6-48	பிரி 6-49	பவ 21-9
14	௩௦	செவ்	நவ 25-36	மூல 12-47	ஆயு 7-56	கௌ 25-36
†15	௩௧	புதன்	தச 29-15	பூரா 18-3	சௌ 8-29	கர 29-15
*16	௩௨	வியா	ஏகா 31-51	உத் 22-21	சோ 8-19	வணி 0-7
17	௧	வெள்	துவா 33-10	சிர 25-25	அதி 7-11	பவ 2-21
18	௨	சனி	திர 33-13	அவி 27-16	சுக 5-2	கௌ 8-11
19	௩	ஞா	சது 31-59	சத 27-50	சூல 55-55	கர 2-36
‡20	௪	திங்	○ 29-38	பூரட் 27-18	கண் 52-42	பவ 29-38
21	(புரட்டாசிமீ) ௫	செவ்	பிர 26-14	உத் 25-43	விர் 46-58	கௌ 26-14
22	௬	புதன்	துதி 22-1	ரேவ 23-18	துரு 40-26	கர 22-1
28	௭	வியா	திரு 17-6	அசு 20-13	வியா 33-28	பத் 17-6
§24	௮	வெள்	சது 11-31	பர 16-29	ஹர் 26-1	பால 11-81
25	௯	சனி	பஞ் 5-37	கி ❋ 12-27	வஜ் 18-24	கர 26-58
26	௧௦	ஞா	சப் 35-40	ரோ 8-21	சித் 10-42	பத் 23-49
27	௧௧	திங்	அஷ் 48-1	மிரு 4-18	வரி 52-39	பால 20-50
$28	௧௨	செவ்	நவ 42-44	புன 56-40	பரி 48-41	தை 15-27
29	௧௩	புதன்	தச 38-3	பூச 54-38	சிவ 42-10	வணி 10-28
*30	௧௪	வியா	ஏகா 31-4	ஆயி 52-48	சித் 36-17	பவ 6-7

* இவ்வடையாளம் வைஷ்ணவ ஏகாதசியைக் காட்டும்.

† ஸ்ரீரங்கம் பவித்ரோத்ஸவம்.

‡ கோ. க. வாதுல வரத நாராயண அண்ணன் ஸ்வாமி திரு நக்ஷத்திரம்.

§ பவித்ரோற்சவ சாற்றுமுறை.

$ ஒன்ருன வானமாமலை ராமாநுஜஜீயர் ஸ்வாமி திரு நக்ஷத்திரம்.

அழகும் அமைப்பும் பொருந்திய கடியாரங்கள்
எது ?

"ரன்வெல்"

இன்பகரமான மணி ஓசை

இந்தியாவில் எல்லா பாகங்களிலும், எங்கு கண்டாலும் "ரன்வெல்" கெடியாரத்தையே வைத்து வருகிறார்கள். காரணம் அதன் உழைப்பும் ரமணீயகரமும் தான் காரணம்.



சரியான காலத்தைக் காட்டும், நீண்ட நாள் உழைக்கும், பார்வைக்கு மனோகரமாயிருக்கும். இப்பொழுது எல்லோரும் இதையே விரும்பி தங்கள் இல்லத்தில் அமைக்கிறார்கள். அதிகமாகச் சொன்னால் உங்கள் ஜீவிய காலம் வரையில் உழைக்கக் கூடியது என்று உத்திரவாதம் தருகிறோம்.

*

மணி, அரைமணி அடிக்கும்

இன்றே ஆர்டர் கொடுங்கள் "ரன்வெல்"
கடியாரத்தை அடையுங்கள்

ஆர்டருடன் 5 ரூபாய் முன் பணத்துடன் உங்கள் ஊருக்கருகிலுள்ள ரெயில்வே ஸ்டேஷனின் பெயரையும் குறிப்பிடுங்கள்

சிறிய அளவு ரூ. 16—0—0
நடுத்தர ,, ,, 19—0—0
பெரிய அளவு ,, 25—0—0

நாமத்வாச் கம்பெனி,

கவர்மெண்டு ரெயில்வே சப்ளையர்,

ரட்டன் பஜார் : : மதராஸ்.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி
(லிமிடெட்)

தலைமை ஆபீஸ்: மதராஸ். ஸ்தாபிதம்: 1906

டிரஸ்டி: மதராஸ் அபீஷியல் டிரஸ்டி.

பாலிஸிதாரர்களின் நன்மையையே கோரி பணி செய்யப்படுகிறது.

க்ளெய்ம்கள் தாமதமின்றி தீர்க்கப் படுகின்றன. நல்ல சேமிப்பு, திறமை யான நிர்வாகம், லாபகரமான பாலிஸி நிபந்தனைகள், குறைந்த ப்ரீமியம், நிறைந்த போனஸ், இவை

யுனைடெட் இந்தியாவை'

ஒரு சிறந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி யாக்குகின்றன.

பூரா விவரங்களுக்கும் தலைமை ஆபீஸ்:

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,

செம்புதாஸ் தெரு, மதராஸுக்கும்

அல்லது

கீழ்க்கண்ட இடங்களிலுள்ள ஆபீஸுகளுக்காவது எழுதவும்

ஆலான்ஸல்	டாக்கா	லாகூர்	ராஜமகேந்திர புரம்
பெங்களூர்	டில்லி	பாட்ணா	ரங்கூன்
பெஜவாடா	கௌஹத்தி	மதுரை	ஸில்கார்
பம்பாய்	கூட்டி	மங்களூர்	தஞ்சாவூர்
கல்கத்தா	ஹௌரா	நாகப்பூர்	திருவனந்தபுரம்
கள்ளிக்கோட்	சிட்டகாங்	ஹைதராபாத்	உடுப்பி
சித்தூர்	ஜல்பெய்குரி		

பாதா³ங்கு³ஷ்டே²ந க்ஷிப்யதே. வாலிநா து த⁴நுஶ்ஶதே ராமேண த³ஶயோஜநமிதி விஶேஷ꞉.

அர்—அளவிட்டுச் சொல்லவொண்ணுத பலத்தையுடையவனு யும் அந்த பலத்திற்கு அநுகுணமான காரியங்களைச் செய்யவல்ல கைகளையுடைய இராமன் (துந்துபியினுடைய) காயத்தை கண்டு இதெவ்வளவென்று அநாதரம் தோற்றப் புன் முறுவல் செய்து பாதாங் குஷ்டத்தால் பத்து யோஜனை தூரத்திற்குக் குறையாமல் எற்றினன். இவ்விடத்தில் வாலியினுல் காலால் எற்றப்பட்டது. ராமனுல் பாதாங்குஷ்டத்தாலெற்றப்பட்டது. வாலி இறுநூறு வில் தூரம் எற்றினன். ராமன் பத்து யோஜனை தூரம் எற்றினன் என்பது கவனிக்கத் தகுந்தது.

பி³பே⁴த³ ச புநஸ்ஸாலாந் ஸப்தைகேந மஹேஷுணா
56. கி³ரிம் ரஸாதலம் சைவ ஜநயந் ப்ரத்யயம் ததா³

பிபேதச புநஸ்ஸாலாங் ஸப்தைகேந மஹேஷுணா
கிரிம் ரஸாதலம் சைவ ஜநயங் ப்ரத்யயம் ததா

அவதாரிகா—பூர்வம் யுத்³த⁴பரிஶ்ராந்தேந வாலிநா ஶுஷ்கம் ஶரீரம் ப்ரக்ஷிப்தம். அயாதம், ஸ்வேந ஶாக்ஷிப்த்ய நாஶ்வஸந்தம் ஸுக்³ரீவம்ப்ரதி ப்ரத்யாயயிதுமாஹ பி³பே⁴தே³தி.

அந்வய꞉—ததா³—(ராம꞉) புநஶ்ச ஸப்தஸாலாந் (தத்³தீ³வஸ்த²ம்) கி³ரிம் ரஸாதலஞ்ச ப்ரத்யயம் ஜநயந் ஏகேந மஹேஷுணா பி³பே⁴த³.

வ்யாக்²யா—அத்ர ராம இத்யநுஷஜ்யதே. ததா³—தத³நந்தரமேவ புநஶ்ச ஸப்தஸாலாந்—ஸப்த ஸங்க்²யாகாந் ஸாலாந் கி³ரிம்—தத்³தீ³வஸ்த²ம் வ்ருத்தம். ரஸாதலம்—ச—அதோ⁴லோகேஷு ஷஷ்ட²லோகம் ச ப்ரத்யயம் ஜநயந்—விஶ்வாஸம் ஜநயந். (ப்ரத்யயஜநநாயேத்யர்த²꞉) ஏகேந மஹேஷுணா பி³பே⁴த³. மஹேஷுணா இத்யநேந ஸுக்³ரீவ காருண்ய ஸாத⁴நாய ராமேண தத³ம் பரஶ்ராயாரணம் க்ருதமிதி த்³யோத்யதே . . . . அத்ர ஏகஸாலபே⁴த³நே ஸுக்³ரீவஸ்ய வாலிநா ஸாம்யஶங்கா ஜாயேத. தந்நாஸ்தீதி

[illegible]

அவ—வாலி துந்துபியோடு நெடுங்காலம் யுத்தம் பண்ணின தால் ஶ்ரமத்தையடைந்திருந்த நிலைமையில் (ரக்தமாம்ஸங்களால்) ஈரமான ஶரீரத்தைத் தள்ளினான். "தேவரீரோ (யாதொரு ஶ்ரம மன்றியில்) நல்ல நிலைமையிலிருந்து கொண்டு உலர்ந்த ஶரீரத்தை உதைத்து தள்ளினீர்." என்று அவ நம்பிக்கைப் படாநின்ற ஸுக்ரீவனை உத்தேசித்து நம்பத் தகுந்த மற்றொரு கார்யத்தையும் செய்தான் என்கிறார் பிபேத என்று.

அர்—இவ்விடத்தில் ராமன் என்கிற பதம் கூட்டப் படுகிறது. இவ்வாறு ஸுக்ரீவனுக்கு அவநம்பிக்கையுண்டான பொழுது ராமன், மறுபடியும் ஏழு மராமரங்களையும் அதன் ஸமீபத்திலிரா நின்ற பர்வதத்தையும், கீழேயிரா நின்ற ஆறு லோகங்களையும், (ஸுக்ரீவனுக்கு) நம்பிக்கையை உண்டு பண்ணா நின்று கொண்டு (நம்பிக்கையுண்டு பண்ணுவதன் பொருட்டு) ஒரே பாணத்தால், பிளந்தான். மஹேஷுணா என்றதால் ஸுக்ரீவனுடைய கார்யத்தைச் செய்வதற்கனுகூலமாக அதி தீக்ஷ்ண்யமான பாணங்களைத் தரித்துக்கொண்டிருந்தான் இராமன் என்று தோற்றுகிறது.

இவ்விடத்தில் ஒரு மராமரம் துளைபட எய்ததால் ஸுக்ரீவனுக்கு வாலியோடு ஸாம்ய புத்தியே உண்டாகும். அது கூடாதென்று கருதி, அந்த ஸாம்யபுத்தியைப் போக்குவதன்பொருட்டு ஸுக்ரீவனால் சொல்லப்படாத மற்ற ஸாலவ்ருக்ஷ, பர்வதாதிகளையும் பேதித்தான் என்பதும் ஊஹிக்கத் தகுந்தது.

விசேஷார்த்த:—மஹாராஜர் தனியருமாய் வெருவியருமாய் மநுஷ்ய ஸஞ்சாரமில்லாத காட்டிலே வர்த்தியா நிற்க, பெருமாளையும் இளைய பெருமாளையும் தூரத்திலே கண்டு இவர்கள் வாலிவரவிட்டவர்களென்றஞ்சியோடியபொழுது நாமும் உம்முடைய காரியம் செய்ய வந்தோமென்று திருவடியை விட்டறிவித்தும் அதற்குமேல் உம்முடைய காரியம் செய்யவல்லோம்" என்று மழுவேந்திக் கொடுத்தும் காரியம் செய்தார்.

ஏகேந மஹேஷுணா, கைக்கெட்டிய தோரம்பாலே.

[illegible]
57. [illegible]

தத: ப்ரீதமநாஸ்தேந விஶ்வஸ்தஸ் ஸ மஹாகபி:
கிஷ்கிந்தாம் ராமஸஹிதோ ஜகாமச குஹாம் ததா

[illegible]

[illegible]

அர்—ஸால வ்ருக்ஷம் முதலானவற்றைப் பிளந்த பின், அந்த அதிமாநுஷ சரிதத்தினால் இந்த ராமன் நிச்சயமாய் வாலியை வெல்லும் வல்லமையுடையவன் என்று விஶ்வாஸம் அடைந்தவனையும் "கூடிய சீக்கிரம் ராஜ்யத்தை அடைவேன்" என்று ஸந்துஷ்டமான ஹ்ருதயத்தையுடையவனையும், தன்னைக் குரக்கரசனாகக் கருதியவனையுமிருக்கிற அந்த ஸுக்ரீவன், ராமனோடு கூடினவனைக் கொண்டு அப்போதே, குஹையைப்போல் பர்வதங்களின் மத்தியிலிராநின்ற கிஷ்கிந்தை என்கிற பட்டணத்தையடைந்தான். ச்காரத்தால் மறுபடியும் சென்றமை அறியவரும்.

[illegible]

ததோ கர்ஜத்தரிவரஸ்ஸுக்ரீவோ ஹேமபிங்கள:

[illegible]

[illegible]

அர்—கிஷ்கிந்தையை யடைந்த பின், (ராமனையடைந்த ராஜ குல மாஹாத்ம்யத்தால்) தன்னைக் கபிகளுக்குள் சிறந்தவனாகக் கருதியவனாயும் சந்தோஷாதிஶயத்தாலுண்டான வைவர்ண்யத்தை யுடையவனாயுமிருக்கிற ஸுக்ரீவன் கர்ச்சனையைச் செய்தான்.

விசேஷார்த்த—ததோ கர்ஜத்தரிவர: வாலியினால் திரஸ்கரிக்கப்பட்டு அஸ்தகல்பனாய்க் கிடந்த ஸுக்ரீவன் பெருமாளை அண்டைகொண்டு, புலிகிடந்த தூற்றிற்குப் போவாரைப் போலே கிஷ்கிந்தைக்குப் போனபின் ஹரிவரனானபடி.

ஸுக்ரீவோ அகர்ஜ்ஜத் அறை கூவும்போது கண்டத்வநி அழகியதாயிருந்தது.

ஹேமபிங்கள: வாலி பயத்தால் வந்த வைவர்ண்யம் போய் எழிலும் மிகுந்தபடி.

58. தேந நாதேந மஹதா நிர்ஜகாம ஹரீஶ்வர:

தேந நாதேந மஹதா நிர்ஜகாம ஹரீச்வர:

அந்வய:-மஹதா-பூர்வஸ்மாத் விலக்ஷணேந தேந நாதேந ஹேதுநா ஹரீஶ்வர: வாலீ, நிர்ஜகாம-(க்ருஹாத்) நிஷ்க்ராந்தவாந்.

அர்—அந்த நாதம், முன்னே பண்ணிய கர்ச்சனையைக் காட்டிலும் விலக்ஷணமாயிருக்கும் காரணத்தால் ஹரிஶ்ரேஷ்டனான வாலி க்ருஹத்தில் நின்றும் வெளிக் கிளம்பினான்.

விசேஷார்த்த: தேந நாதேந மஹதா முன்பு பலகால் நம் வாசலிலே வந்தறை கூவக்கேட்டிருந்தோம். இப்போது அங்ஙனன்றிக்கே இவன் மிடற்றோசை விசேஷித்திருக்கின்றமையால் இதற்கோரடி யுண்டாகவேண்டும். அதாவது ப்ரபலனாயிருப்பானொருவனைப்பற்றி வந்தானாக வேண்டும்.

நிர்ஜகாம முன்புபோலே புறப்பட்டுத் தரையில் கையை மோதிப் போகவிடாதே இவனும் இவனடியாகப் போந்தவனும் இலக்குப் போருமாகில் பார்ப்போமென்று புறப்பட்டான்.

ஹரீஶ்வர: பிறரும் தன்னைப்போலே பெருமையோடு ஜீவிக்கத் தானும் ஜிவிக்க விருந்தவனல்லாமையாலே.

அநுமாந்ய ததா தாராம் ஸுக்ரீவேண ஸமாகத:

அநுமாந்ய ததா தாராம் ஸுக்ரீவேண ஸமாகத:

அந்வய:-ததா தாராம் அநுமாந்ய ஸுக்ரீவேண ஸமாகத:

அர்த்த:-(வாலீ) ததா-நிஷ்க்ரமணகாலே. தாராம்-(அங்கத வாக்யாத் ஜ்ஞாதேந ராமேண ஸுக்ரீவ: ஸஹாயவாநிதி கதிதம். தஸ்மாதேவ அத்ய பராஜிதோபி நிஷ்க்ராந்த: புநராகத: அத: யுத்தே உத்யுக்தாஸி இதி வாரயந்தீம்) தாராம், அநுமாந்ய-(தார்மிகத்வாத் ராம: கதம் மாம் நிரபராதிநம் ஹந்யாத், இதி) பரிஸாந்த்வ்ய, ஸுக்ரீவேண ஸமாகத:, அயுத்யத-இத்யந்வய:.

அர்—வாலி, வெளிக்கிளம்பா நின்ற காலத்தில் "இப்போது, வநத்தில் நின்றும் வாரா நின்ற அங்கதன்" ஸுக்ரீவன் ராமனைச் சரணமாகக் கொண்டிருக்கிறான் என்று சொன்னான். அந்தக் காரணத்தாலேயே இப்போது பராஜிதனாய்ச் சென்றவன் மறுபடியும் வந்திருக்கிறான். ஆதலால் (அவனோடு யுத்தத்திற்கு) நீ செல்வது உசிதமன்றென்று தடுக்கா நின்ற தாரையை, "தார்மிகர்களில் தலைவரான இராமன், நிரபராதியான என்னை எப்படிக் கொல்வான்" என்று ஸமாதாநம் சொல்லி ஸுக்ரீவனோடு யுத்தத்தைச் செய்தான்.

விசேஷார்த்த ;—அநுமாந்ய ததா தாராம் மஹாராஜர் வந்தறைகூவ பூர்வக்ஷணத்திலே வந்து பரிபவப் பட்டுப்போனவன் மறுபடியும் இப்போது வந்து அறைகூவுவது வெறுமனல்ல. போதல்லாப் போதிலே நீ புறப்படக் கடவையல்லை என்று தாரை கால்கட்டச் செய்தேயும், க்ஷத்ரியனாகையாலே பரிபவம் பொறுக்மாட்டாதே புறப்பட்டு, மிடற்றோசை யிருந்தபடியென்? பழைய கோழைத்தனமற்றுத் தெளிந்து முழங்கியிரா நின்றது. இதற்கு ஓரடியுண்டாகவேண்டும். உண்டாகிற்றாகில் நமக்கிரை போருகிறதென்றான்.

ததா ஸர்வஸ்வாபஹாரம் பண்ணினாலும் புறப்படவொண்ணாதவஸ்தை.

தாராம் ஸர்வாதிஶாயிநீ.

59. நிஜகாந ச தத்ரைநம் ஶரேணைகேந ராகவ:

நிஜகாநச தத்ரைநம் ஶரேணைகேந ராகவ:

[illegible]

[illegible]

அர்—ரகு குலத்திற் பிறந்தமையால் தர்ம ஸூக்ஷ்மத்தை யறிந்தவனான இராமன், அந்த யுத்த பூமியிலே அந்யனேடு யுத்தம் பண்ணு நின்றவனுயிருந்தாலும் வாலியை ஒரே பாணத்தால் அடித்தான்.

இரண்டாவது பாணப்ரயோகம் செய்யுமளவில் அவனுடைய ஆபிமுக்யத்தால் வாலியினுடைய வதம் துர்லபமென்று கருத்து. யுத்தத்தில், முன்னே நிற்குமவனுடைய பலம் வாலியையே அடையுமென்கிற வரப்ரஸித்தியுண்டாகையால்.

[illegible]

60. [illegible]

ததஸ்ஸுக்ரீவசநாத்தத்வா வாலிநமாஹவே
ஸுக்ரீவமேவ தத்ராஜ்யே ராகவ: ப்ரத்யபாதயத்

[illegible]

[illegible]

அர்—ராகவன், "காகுத்ஸ்த நான் அஞ்சலியைப் பண்ணுகிறேன். வாலியைக் கொல்லவேண்டும்" என்ற ஸுக்ரீவனுடைய ப்ரார்த்தநாவாக்யத்தால் (வாலி சுக்ரீவர்களின்) யுத்தத்தில் வாலியைக்கொன்று, அப்பால் (வாலியினுலாளப்பட்டுவந்த) அந்த ராஜ்யத்திலே ஸுக்ரீவனையே (அரசனுக) ஸ்தாபித்தான் ஸுக்ரீவமேவ தத்ராஜ்யே ராகவ: ப்ரத்யபாதயத் என்றதால், ராகவனுடைய அகடித கடநா ஸாமர்த்யம் தோற்று நிற்கின்றது.

[illegible]

61. [illegible]

ஸச ஸர்வாந் ஸமாநீய வாநராந் வாநரர்ஷப:
திச: ப்ரஸ்தாபயாமாஸ தித்ருக்ஷுர்ஜநகாத்மஜாம்

[illegible]

[illegible]

[illegible]

அர்—வாநர ராஜ்யத்தில் அபிஷிக்தனுன ஸுக்ரீவனும், ஜாநகியைத் தேடுவதற்கு இச்சித்தவனுய்க்கொண்டு நாநாதேசங்களில் வஸியா நின்ற வாநரர்களை வரவழைத்து "சீக்ரமாக ஸீதையைத் தேடிப் பார்த்து வாருங்கள்" என்று நான்கு திக்குகளையும் குறித்துச் செல்லும்படி ஆஜ்ஞாபித்தான்.

[illegible]

அப்பால் ஸுந்தரகாண்டக் கதையை சுருக்கி உரைக்கிறுர்.

[illegible]

62. [illegible]

ததோ க்ருத்ரஸ்ய வசநாத் ஸம்பாதேர் ஹநுமாந் பலீ
சததயோஜந விஸ்தீர்ணம் புப்லுவே லவணார்ணவம்

[illegible]

[illegible]

அர்—அனுப்பப்பட்ட பிறகு, அளவிடவரிய பலத்தை யுடையவனும், "என் வஜ்ராயுதத்தாலடிக்கப்பட்ட ஹநுவை யுடைய கபிஸ்ரேஷ்டனான இவன், ஹநுமான் என்று ப்ரஸித் தியை யடைவான்" என்று இந்த்ரனால் கொண்டாடப்பட்ட) ஹநுமான், ஸம்பாதி என்கிற ஜடாயுவிற்கு மூத்த கழுகரச னுடைய ("இதில் நின்று நூறு யோசனைக்கப்பால் ஸமுத் ரத்தின் நடுவிலிராநின்ற லங்கையில் ஸீதை யிருக்கின்றாள். ஸமுத்ரத்தைத் தாண்டு. ஸீதையைப் பார்ப்பாய்" என்கிற) வார்த்தையினால் நூறு யோஜனை தூரமுள்ள உவர்க்கடலைத் தாண்டினான்.

[illegible]

63. [illegible]

தத்ர லங்காம் ஸமாஸாத்ய புரீம் ராவணபாலிதாம்
ததர்ஶ ஸீதாம் த்யாயந்தீம் அஶோகவநிகாம்கதாம்

[illegible]

அனைவரும் நோக்குவது?

சீக்கிரம் வருகிருள்?

தமிழ்

பேசும்

சமூகப் படம்

*

ஸரோஜா

*

ரம்பா பிலிம்ஸ்

லிமிடெட்,

6, வுட்ஸ் ரோட்

மதராஸ்.

ஸ்டூடியோ

கல்கத்தாவிலுள்ள சிறந்த ஸ்டூடியோவில் ஏராளமான பொருட் செலவில் தயாரிக்கப் படுகிறது.

டைரக்டர்

தமிழ் படங்களை தயார் செய்வதில் ஊக்கம் கொண்டவரும், ஸ்டூடியோ அனுபவம் அடைந்தவருமான -

மிஸ்டர்.

P. S. V. ஐயர்

ஆனந்தம் அளிப்பாள்?

ஆவலுடன் காணுங்கள்?

பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின் இரண்டு
ஔஷத ரத்னங்கள்

ஜீவாம்ருதம்

(தேகாரோக்யத்திற்கும் பல விருத்திக்கும்)

ரத்தமிழந்து, ஜீவனற்று, பலஹீனத்துடன் வாழ்க்கையை வெறுக்கும் வாலிபர்களுக்கு இவ்வௌஷதம் ஓர் வரத்தைப் போன்றதே. இதை உபயோகிக்க ஆரம்பிக்கும் பொழுதே அளவற்ற சுக உணர்ச்சியை யூட்டி, மிகுந்த ரத்த புஷ்டியை உண்டாக்கி, புத்துயிரைக் கொடுத்து, வாழ்க்கைக்கே இன்பத்தை விளைவிக்கின்றது. அளவற்ற தேகபலம் குறைவற்ற ஆரோக்கியம் முதலியவற்றை மேன்மேலும் செழிக்கச் செய்கின்றது.

விலை பெரிய புட்டி ரூ. 3-4-0
சிறியது 1-12-0

பாலபாஸ்கர

(குழந்தை ஈரல் குலேக்கட்டி வியாதிகளுக்கு அற்புத நிவாரணி.)

குழந்தைகளின் ஈரல் (Liver) குலை (Spleen) பெருக்கங்களை அதி விரைவில் கரைத்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கும் அரிய சஞ்சீவி. இதர மருந்துகளால் பயனற்றுப் போன இடங்களில் ஆச்சரியத்துடன் பலன் தந்துள்ளன. தவறுதலின்றி குணங் கொடுப்பதென்று பிரக்யாதியுடைந்தது. ஆரம்ப நிலைமைக் கென்றும், முதிர்ந்த நிலைமைக் கென்றும் இருதிறத்துள்ளது.

ஆரம்ப நிலைமை மருந்து 1 மாதம் 4-0-0
முதிர்ந்த நிலைமை 8-0-0

விபரங்களுக்கு எழுதவும்.

தயாரிப்பவர்கள் :— **ஆயுர்வேதாஸ்ரமம்**
தபால் பெட்டி 287.
151, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

Edited & Published by Vadakarai, Ramanujachariar, 24, Chandrappa Mudali St. and Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty St. Madras

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ராமாநுஜ

ஸித்தாந்த வைஜயந்தீ

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசந பத்ரிகை

தொகுதி 2	ஈச்வர௵ ஆவணி௴	பகுதி 10

பத்ராதிபர் :
வடகரை ராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

1937௵ ஆகஸ்டு௴

வருஷச் சந்தா ரூ 1—12—0] [தனிப்ரதி விலை ரூ. 0—3—0

விஷய ஸூசிகை

விஷயங்கள் — பக்கம்

1. ஆவணி மாதம் 225
—பத்திராதிபர்
2. ஸ்ரீ க்ருஷ்ணாவதார கதா ரஹஸ்யம் ... 226
—ஸ்ரீ காஞ்சி ப்ர. ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்
3. பூர்வாசார்ய வ்யாக்யானங்களில் பக்தி விஸ்வாஸாவச்யகத்வம் ... 236
—ஸ்ரீ. உ. வே. திருமழிசை கோ. க. அப்பனய்யன் ராமாநுஜாசாரியார்.
4. திருவிருத்தமும் திவ்ய தேசங்களும் 239
C. நரஸிம்ஹாசாரியார், அட்வகேட்.
5. ஸத் ஸம்ப்ரதாய பரிசுத்தி 241
—ஸ்ரீ. காஞ்சி. ப்ர. ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்.
6. வர்த்தமானங்கள் 245
7. பஞ்சாங்கம் 248
8. கோதாஸ்துதி ....
—ஸ்ரீ. காஞ்சி. ப்ர. ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்.

4 5 6 7 8 9 10

ரங்கூன்
வைரங்கள்
கல் 1க்கு
0-2-6 0-3-3
பி.கோபாலசுவாமி
நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O. ✻ சென்னை

ரங்கூன்
வைரங்கள்
நகைகள்
கேட்லாக்இனம்
பி.கோபாலசுவாமி
நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O.
சென்னை

L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது

மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.

பெருங்காயம்.

எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:

பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான

வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக்கூடும். அக்காலத்தில் அமிருதாஞ்சனம் கைவசமிருக்குமேயாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டாமென்பதை அனைவரும் அறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ லிமிடெட்.

பம்பாய். மதராஸ் கல்கத்தா

சலோணாடவர் பிராண்ட்

போர்ட்லாண்ட் சிமெண்ட்

கா ர ண் டீ ட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட்
ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர்வேலைகளுக்கும் ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்

சோல் ஏஜெண்ட்

M. குப்புசாமி நாய்க்கர்
83, செம்புதாஸ் தெரு,
மதராஸ், ஜி. டி.

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶந பத்ரிகை.

தொகுதி 2.	பத்ராதிபர் வடகரை. ராமாநுஜாசாரியார்.	பகுதி 10.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁.

𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌯 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃.

𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑍇 ।
𑌯𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌵𑌰𑌮𑌶𑍀𑌶𑌮𑌤𑍍 ॥
𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 𑌵𑍇𑌦𑌾𑌂𑌗 𑌸𑍂𑌕𑍍𑌤𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑍀 ।
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀 𑌵𑌿𑌜𑍃𑌮𑍍𑌭𑌤𑌾𑌮𑍍 ॥

ஆவணி மாதம்

பத்ராதிபர்

இந்த ஆவணி மாதம் ஸ்ரீ தரனுடைய அம்சமாயிருக்கும். ஆகலின் இம்மாதத்தில் வரும் த்வாதசி யன்று ஸ்ரீ தரன் என்கிற பெயரையுடைய ஸர்வேஶ்வரனை உபவஸித்துப் பூஜிக்குமவன் பஞ்சயஜ்ஞ பலத்தை யடைகிறான்.

த்வாதஶ்யாம் ஶ்ராவணே மாஸி ஸ்ரீ தராக்யமுபோஷ்ய மாம்
பூஜயேத் யஸ்ஸமாப்நோதி பஞ்சயஜ்ஞபலம் ந்ருப

பாரதம் ஆஶ்வமேதிக பர்வம் 114 வது அத்யாயம் 25 வது ஶ்லோகம்.

ஸர்வலோக ஶரண்யனை ஸர்வேஶ்வரன் ராகவனாயவதரித்து ஶரணாகதனான விபீஷணனைச் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் தன்னுடைய அபிப்ராயத்தை மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதம் சந—தோஷோயத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதா மேத தகர்ஹிதம் என்றறிவித்து அவ்வர்த்தத்தை ஸக்ருதேவ ப்ரபந்நாய

தவாஸ்மீதிச யாசதே — அபயம் ஸர்வபூதேப்யோ ததாம் யேதத் வ்ரதம் மம என்று சொல்லிப்போந்தான்.

பின்னும் ஸர்வோபநிஷத் ஸாரபூதமான இவ்வர்த்தத்தை யனைவருமறிந்து உஜ்ஜீவிக்கும்படி யுபதேசித்து ஆசார்யத்வத்தை யடைய வேண்டுமென்று திருவுள்ளம்பற்றி, ப்ரஹ்மாதி தேவர்களுக்கும் த்யாநாராதநாதிகளாலுமறிய வரிதாய் ஶுபாஶ்ரயமான தனது அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தை ஸகல மநுஜநயநவிஷயமாக்கி வஸுதேவ புத்ரனாய் வந்தவதரித்து, பூதநா ஶகடாதிவிரோதி நிரஸநத்தைப்பண்ணி, நிரவதிக பரம தயா ஸௌஹார்தாநுராக கர்ப்பாவலோகநத்தால் அக்ரூராதிகளை பரமபாகவதர்களாக்கி பாண்டுதநய யுத்தப்ரோத்ஸாஹந வ்யாஜத்தால் ஸகல ஶாஸ்த்ர தாத்பர்யபூதமான ஶரணாகதியை உபதேசித்து கீதாசார்யன் என்னும் பெருமையைப் பெற்றான்.

மக்நாநுத்த்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணிநா— என்கிறபடி கீதாசார்யனான ஸர்வேஶ்வரனுடையவும் ஆசார்யர்களுடையவும் அவதாரத்தின் ஒற்றுமைநயத்தை விளக்கிக் காட்டா நின்ற ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியரின் ஸ்ரீ க்ருஷ்ணாவதார கதா ரஹஸ்யம் என்கிற வ்யாஸத்தை வாசித்தின்புறுவோமாக.

ஸ்ரீ க்ருஷ்ணாவதார கதா ரஹஸ்யம்.

(ஸ்ரீ காஞ்சீ. ப்ர. ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியர்)

நிகழும் ஆவணித்திங்களில் ஸ்ரீ க்ருஷ்ண ஜயந்தீ மஹோத்ஸவாநுபவம் நமக்கு ப்ராப்தமானபடியால் ஸ்ரீ க்ருஷ்ணாவதார சரிதைகளைப் பற்றிய ஸ்வாபதேஶார்த்தம் போன்ற சில ரஹஸ்ய தத்துவங்களை ஈண்டநுபவிக்க விரும்புகின்றோம்.

பிறப்பிலியான எம்பெருமான் "எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" "𑌅𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍋 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌜𑌾𑌯𑌤𑍇" என்கிறபடியே அனேகமான திருவவதாரங்களைச் செய்தருளி அற்புதமான திவ்ய சேஷ்டிதங்களையும் அனுட்டித்துக் காட்டியருளும் முகத்தால் அரிய பெரிய சாஸ்த்ரார்த்தங்களையே நமக்கு ஊட்டுகின்றதாகப் பெரியோர்கள் பகர்கின்றார்கள்.

ஸ்ரீராம திவ்ய சரிதைக்கு ஸ்வாபதேஶார்த்த ப்ரணாளியிலே ஸ்ரீமந் நிகமாந்த தேசிகன் அருளிய "[illegible]" என்கிற ஶ்லோகரத்நம் ப்ரஸித்தமானதே. அவ்வகையிலே ஸ்ரீ க்ருஷ்ண திவ்ய சரிதைக்கு ஸ்வாபதேஶோபதேஶமாக ஒரு ஸ்ரீ ஸூக்தியும் அவதரித்திருக்கவில்லை யென்று அல்பஜ்ஞனை அடியேன் எண்ணுகிறேன். ஆயினும் பெரியார் பாடே கேட்ட அர்த்த விஶேஷங்களை ஸம்க்ஷிப்தமாக விஜ்ஞாபிக்கப் புகுகின்றேன்.

கண்ணபிரான் கீதா சார்யன் என்று ப்ரஸித்திபெற்றிருத்தலால் அப்பெருமானை ஒரு ஆசார்யனாக வைத்துப் பேசியநுபவிப்போம். கலி புருஷனால் நேரும் துன்பங்களைத் தொலைத்து க்ருதயுக தருமங்களை வளரச் செய்வதற்கே ஆசாரியர்களின் திருவவதாரம் நிகழ்வது. "𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌂 । 𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇." என்றும் "சாதுசனத்தை நலியுங்கஞ்சனைச் சாதிப்பதற்கு ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்திங்குப் பிறந்த" என்றும் சொல்லுகிறபடியே கண்ணபிரானும் பிறந்து கம்ஸ ஶிஶுபாலாதிகளைக் களைந்து, அக்ரூரமாலாகாரவிதுரர்களான மஹாபாகவதர்களை வாழ்வித்தருளினனென்பது கலி கல்மஷங்களைக் கழித்து க்ருதயுக தர்மப்ரசாரம் செய்த படியைத் தெரிவிக்கும்.

கண்ணபிரான் திருவவதரித்தவிடம் பகைவனுடைய சிறைக்கூடம். ஆசாரியர்கள் திருவவதரிக்குமிடமும் சிறைக் கூடமே. "அமரரோடுயர்விற் சென்று அறுவர்தம் பிறவியஞ்சிறையே" என்ற திருவாய் மொழியின்படியும், "[illegible]" என்கிற தேசிக ஸூக்தியின்படியும் இந்த ஸம்ஸார மண்டலமே ஒரு சிறைக்கூடம். இஃது இருள் தருமா ஞாலமாதலால் இருள் மலிந்த விடத்தே ஆசார்யன் வந்து பிறக்கின்றான். கண்ணபிரானும் "இருள் நாள் பிறந்த வம்மான்" என்ற கலியன் பாசுரத் தின்படியும் "வேண்டித் தேவரிரக்க—விங்கிருள்வாய்-வந்து பிறந்ததும்" என்ற திருவாய்மொழியின்படியும் இருள் மலிந்த போழ்தாயிற்றுப் பிறந்தருளிற்று.

ஆசாரியன் திருவவதரிக்கு மிந்நிலத்தில் மற்றும் பல பேர்களும் ஒக்கப் பிறக்கின்றார்களெனினும் அவர்களால் உலகுக்கொரு நன்மையில்லையாயிற்று; அவர்களின் பிறப்பும் இறப்புமே தான் நமக்குத் தெரியவருகின்றது. அதுபோலவே கண்ணபிரானும் "மக்களறுவரைக் கல்லிடை மோத இழந்தவள் தன் வயிற்றில், சிக்கென வந்து பிறந்து நின்றாய்" என்கிறபடியே பழுதே பிறந்து இறந்தாரிடையே தான் பிறந்து வீறு பெற்றானாயிற்று.

ஆசாரியர்கள் அவதரிக்கும்போது நம்போலியரைப் போலே அழுதல் அரற்றுதல் செய்யாதே மிக்க ஞான வெள்ளச் சுடர் விளக்கத்தையே காட்டிக்கொண்டு அனைவரும் வியப்புறுமாறு அவதரிப்பர்கள். கண்ணபிரானும் "ஜாதோஸி தேவதேவேஶ ஶங்கசக்ரகதாதர!" என்கிறபடியே * சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையனாகவே சுடர் விளக்கத்தோடு திருவவதரித்தபடி. ஆசாரியர்கள் பிறக்குமிடம் ஒன்றாய் வளருமிடம் வேறொன்றாயிருக்கும்; அதாவது "திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து" என்கிற முதுமொழியின்படியே திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்தினால் ஸ்வரூப வுணர்ச்சி பெறுதலாகிற பிறவியைப் பெற்று "ஐயயோதாநாஸம்யாநேநஸஹ ஸதேவம் வக்தா" "ஶ்ருத்யந்தாநாஸ்ஸாந ஸஹ தஸ்யபரிதாயாம்" என்கிறபடியே மந்த்ரரத்நமாகிய த்வயத்தின் அநுஸந்தானத்தையும் ததநுஷ்டாநத்தையுமே செல்வ வாழ்ச்சியாகக் கொண்டிருப்பர்களென்றவாறு. அது போலவே கண்ணபிரானும் "பிறந்தவாறும் வளர்ந்தவாறும்" என்று பேரறிவுடையார் அறிவு கலங்கும்படி வட மதுரையிலே பிறந்து ஆயர்பாடியிலே வளர்ந்தானாயிற்று.

மதுரையில் நின்றும் திருவாய்ப்பாடிக்கு எழுந்தருளும் போது "வஸுதேவோ வஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோதகோ யயௌ." என்னும்படி பேராழமான பெரு வெள்ளமும் முழந்தாளளவாயிற்றென்றவிது—ஆசாரியர்கள் சிறிது ஸஞ்சரிக்கத்தொடங்கும்போதே "பிறவியென்னுங் கடலும் வற்றிப் பெரும்பதமாகின்றதால்" என்ற பெரியாழ்வாரருளிச் செயலின்படியே அநந்த க்லேஶாகரமான ஸம்ஸார ஸாகரமும் வற்றத் தொடங்குமாற்றைத் தெரிவித்தவாறு. "வைகுந்தமாகுந் தம்மூரெல்லாம்."

பராத்பரனான பெருமான் தனது பெருமைகளை யெல்லாம் அடக்கிக் கொண்டு நீறுபூத்த நெருப்புப் போலேயாகி, இடக்கை வலக்கையறியாத ஆயர்களோடே கலந்து வாழ்ந்தான்; ஆசாரியனும் மிகுஞானச் சிறு குழவியாய் ஞான சக்திப் பெருமைகளை யெல்லாம் அடக்கிக்கொண்டு "பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத்" என்ற உபநிஷதுபதேஶத்தின்படியே சிறு மனிசராய், அறிவிலா மனிசரோடே கலந்து பழகுவது ப்ரத்யக்ஷம்.

வளர்ந்தருளுமிடத்தில் தீய புந்திக்கஞ்சனால் ஏவப்பட்ட பூதனை யென்பவள் தாய் வேஷம் பூண்டு நஞ்சு தீற்றிய முலையை உண்ணக் கொடுத்துக் கண்ணனைக் கொல்ல முயன்று, தானே முடிந்தமை ப்ரஸித்தம். தேசிகன் யாதவாப்யுதயத்தில் இந்த வரலாற்றைப்பற்றிப் பேசுமிடத்து "கம்ஸப்ரயுக்தாகில காஸி மாயா" என்று மாயாஶப்தத்தினால் பூதனையைப் பேசினர். "மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத்" என்றபடியே மூலப்ரக்ருதியாகிய மாயையானது "ஸ்வவிஷயாயாஶ்ச போக்யத்வபுத்தேர் ஜநநீம்" (சரணாகதி கத்யம்) என்கிற படியே விஷப்ராயமான ஶப்தாதி விஷயங்களைக் காட்டி மோஹிப்பித்து முடிக்கவருமளவிலே "விஷயேஷ்வபி த்ருஷ்டேஷு ஹேயோபஹித விஷயாத்மகா:" என்று ரஹஸ்யத்ரயஸாரத்திலுரைத்தருளினபடியே விடங்கலந்த ஸ்தந்யம் போன்ற ஆபாத மதுரங்களான துர்விஷயங்களை "கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலுமைங் கருவி கண்டவின்பம்—ஒழிந்தேன்" என்கிறபடியே வேரற வரிந்து தனக்கு அபாய லேஶமுமின்றியே ஆசார்யன் விளங்கும்படியை நினைப்பது.

நந்தகோப க்ருஹத்திலே ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே கண்ணபிரானைத் தொட்டிலிலிட்டுக் கண்வளர்த்தி யசோதை யமுனை நீராடப் போகையில், கம்ஸனாலேவப்பட்ட அசுரனொருவன் அச்சகடத்தில் வந்து ஆவேஶித்து ஸ்ரீ க்ருஷ்ண சிசுவின் மேலே விழுந்து கொல்ல முயன்றதை அறிந்த அப்பகவான் பாலுக்கு அழுகிற பாவனையிலே தன் சிறிய திருவடிகளை மேலே தூக்கி யுதைத்தருள அவ்வுதை பட்ட மாத்திரத்தில் அச்சகடம் கட்டுக் குலைந்து உருமாய்ந் தொழிந்ததென்பது சகடாஸுர பங்க வ்ருத்தாந்தம். இதனை ஆண்டாள் "கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி" என்று பேசியனுபவித்தாள். 'கள்ளச் சகடம்

என்கையாலே நல்ல சகடமும் ஒன்று உண்டென்று தொனிக்கின்றது. ஓரிடத்தில் நின்றும் மற்றோரிடத்தில் கொண்டு சேர்க்கும் ஸாதனவஸ்து சகடமெனப்படும். அது கெட்டதென்றும் நல்லதென்றும் இரண்டு வகையாகவுள்ளது. பகவத் கீதையில் "ஶுக்லக்ருஷ்ணே கதீ ஹ்யேதே ஜகத: ஶாஶ்வதே மதே। ஏகயா யாத்யநாவ்ருத்திமந்யயாவர்ததே புந:." (8-26) என்று சொல்லப்பட்டுள்ளது. சுக்லகதி யென்கிற அர்ச்சிராதி மார்க்கமும், க்ருஷ்ணகதி யென்கிற தூமாதி மார்க்கமும் உலகத்திற்கு நித்தியமாக ஏற்பட்டவைகள். இவற்றுள் சுக்லகதியாற் சென்றவன் திரும்புவதில்லை! க்ருஷ்ண கதியாற் செல்பவன் திரும்பி விடுகிறான்-என்பது மேற்குறித்த சுலோகத்தின் பொருள். அந்த க்ருஷ்ண கதியே கள்ளச் சகடமாகும் அதை ஆசார்யன் தனது திருவடி ஸ்பர்ஶத்தினால் தொலைத்தருள்பவன். "வாம்பிஷ்ட: க்ஷுத்ரவ்ருந்தஸ்ய ஸாம்ஸாரிகஸ்ய ஸாண்யக்ருத:। ஆசார்யபாதக்ருதயா தஸ்மாத், ஆசார்யபாத ஸேவ்ய:" என்கிறபடியே ஆசாரியன் திருவடி ஸம்பந்தம் பெற்றவர்களுக்கு க்ருஷ்ண கதித்வம்ஸம் [அதாவது—மீட்சியோடு கூடிய அநித்யலோக ப்ராப்தியின் அபாவம்] உண்டாகியே தீருமென்று காட்டினபடி. உபமர்த்திதஸம்ஸாரஶகட: ஸத்கதிப்ராவணம் பண்ணிவைப்பவன் ஆசார்யன் என்று காட்டுதல் ஶகடாஸுரபங்க ஸ்வாபதேஶமென்றுணர்க.

குழந்தைப் பருவமுள்ள கண்ணன் துன்பப்படுத்துகின்ற பல விளையாடல்களைச் செய்யக் கண்டு கோபித்த யசோதை க்ருஷ்ணனைத் திருவயிற்றில் கயிற்றினால் கட்டி ஓருரலிலே பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலை யிழுத்துக்கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருதமர [யமளார்ஜுன]த்தின் நடுவே எழுந்தருளிய பொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்ட படியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தனவாக யமளார்ஜுந பங்க வ்ருத்தாந்த முள்ளது. இணைபிரியாதே நின்ற இரட்டை மருத மரங்கள்போல இணைபிரியாது நின்று நம்மை நலியுமவை பல வுண்டு. பகவத் கீதையில் (15-5.) நிர்மாநமோஹா ஜிதஸங்கதோஷா அத்யாத்மநித்யா விநிவ்ருத்தகாமா:। த்வந்த்வைர்விமுக்தா: ஸுகது:கஸம்ஜ்ஞைர் கச்சந்த்யமூடா: பதமவ்யயம்

தத்." என்ற ச்லோகத்தில் ஸுகதுக்கங்கள் த்வந்த்வம் [இரட்டை] எனப்பட்டது. நான்காமத்யாயத்திலும் "யத்ருச்சாலாபஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ விமத்ஸர:." என்ற ச்லோகத்தின் பாஷ்யத்தில் சீதோஷ்ணம் முதலியவைகள் த்வந்த்வ மெனப்பட்டது. ஏழாவது அத்யாயத்திலும் (27) "இச்சாத்வேஷஸமுத்தேந த்வந்த்வமோஹேந பாரத." எனப்பட்டது. இன்பு துன்பு, அஹங்கார மமகாரம், காமக்ரோதம், புண்ய பாபம் முதலியன இரட்டைகளாம். அவை யெல்லாம் ஆசார்யன் திருவடி ஸம்பந்தம் பெற்றவாறே இற்றொழியும் என்பது யமளார்ஜுநபங்க ஸ்வாபதேஶமாம்.

குபேர புத்திரர்களான நளகூபரன் மணிக்ரீவன் என்பவர்களே நாரத மஹர்ஷியின் ஶாபத்தினால் இரட்டை மருதுகளாக வந்து பிறந்தனர் என்பது இதிஹாஸமாதலால் நல்ல நிலைமையில் இருந்தவர்கட்கே உபாதிவஶத்தினால் தீய நிலைமை உண்டாயிற்றென்று விளங்குகின்றது. காமக்ரோதங்களைப்பற்றியும் ஆராய்ந்தால் அவற்றுக்கே உத்தேஶ்யத்வாகாரம் உண்டென்றும் உபாதிவஶத்தால் அவற்றிற்கு ஹேயத்வாகாரம் விளைந்ததென்றும் அறியலாம். எங்ஙனே யென்னில்; காமமும் குரோதமும் ஒரு வகையிலே உத்தேஶ்யமாய் மற்றொரு வகையிலே ஹேயமாயிருக்கும். "சேமநல் வீடும் பொருளுந் தருமமும் சீரிய நற்காமமு மென்றிவை நான் கென்பர், நான்கினுங் **கண்ணனுக்கே யாமது காமம்**" (இராமானுச நூற்றந்தாதி) என்கிறபடியே பகவத் விஷயமான காமம் உத்தேஶ்யமாய் ஸ்வரூப நாஶக விஷயங்களிற் காமம் ஹேயமாயிருக்கும். க்ரோதமுமப்படியே. இராமபிரானைப்பற்றி வான்மீகி முனிவர் நாரத மஹர்ஷியிடம் கேட்குங்கால் "ஆத்மவாந் கோ ஜிதக்ரோத:?" கோபத்தை வென்றவன் யாவன்? என்று கேட்டு "கஸ்ய பிப்யதி தேவாஶ்ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே" என்றும் கேட்கிறார். இதனால் ஜித க்ரோதனாகவுமிருக்க வேணும், போர்க்களத்தில் ஜாத க்ரோதனாகவு மிருக்க வேணுமென்பது காட்டப்பட்டது. விஷயபேதத்தாலே கோபமும் ஹேயமாயும் உபாதேயமாயும் ஆகின்றமை தெரிவிக்கப்பட்டது. ஸுகதுக்கங்களென்கிற இரட்டையை எடுத்துக் கொண்டாலும் வைஷயிகஸுகம் (சிற்றின்பம்) ஹேயமாய், அந்தமில் பேரின்பம் உபாதேயமாகாநின்றது; துக்கமும் ஸாம்ஸாரிகமாமளவில்

ஹேயமாய், "சாயலொடு மணி மாமை தளர்ந்தேன் நான்" "ஆடியாடி யகங் கரைந்து" "நோயும் பயலைமையும் மீதூர" இத்யாதிப்படியே பகவத் விஸ்லேஷத்தாலே துக்கிக்குமது உபாதேயமாயிருக்கும். இங்ஙனே மற்றுங் கண்டு கொள்வது.

யமுநாநதியில் ஓர்மடுவில் இருந்துகொண்டு அம்மடுமுழுவதையும் தன் விஷாக்நியினுற் கொதிப்படைந்த நீருள்ளதாக்கிப் பெருங்கேடு விளைத்த காளியனென்னுங் கொடிய நாகத்தைக் கண்ணபிரான் கொழுப்படக்கின வரலாறு ப்ரஸித்தம். இதனை யாதவாப்யுதய காவ்யத்தில் வேதாந்ததேசிகன் கூறுமிடத்து இதன் ஸ்வாபதேசத்தை நுட்பமாகவும் அழகியதாகவும் காட்டியுள்ளார்; அதில் நான்காவது ஸர்க்கத்தில் 125-ஆம் சுலோகம்—"விவிய ஃᵘநிமணொவஜீவ₂தீய₂ா விஶதிதவஸ்வ₂மணா வமுண வ[illegible]ஸா—ஸஹஜத யஃᵘநா விஶᵘஷிஃமᶻா₀ ஶதிதவஷிஃ₂தஸ₀ஜூவா த₂யீவ." என்பது. இதில் "ஶதித வஷிஃ₂த ஸ₀ஜூவா த₂யீவ" என்கிற நான்காவது பாதத்தினுல் ஸ்வாபதேசப் பொருள் ஸூசிதமாயிற்று. ஐந்தலைவாய் நாகமாகிய காளியன் யமுனையாற்றைக் கலக்கிக் கெடுத்தது—விஷவாக்குக்களான புறமதத்தவர்கள் அபார்த்தங்களாலே வேதங்களைக் கெடுத்தபடியாம். அந்தக் கெடுதியைக் கண்ணபிரான் நீக்கி யமுனையை ஸர்வோப ஜீவ்யமாக ஆக்கினது—ஆசார்யர்கள் ஸ்வாய₂ ஶிரவஸநவ₂வ₂க ஸஃய₂ஸாய₂ ஸஃய₂நங்களாலே வேதத்தை ஸாதுக்களுக்கு உபஜீவ்யமாக ஆக்கினபடியாம். யமுனையின் ஸ்தானத்திலே வேதம் கொள்ளப்படவேண்டும். "தூயபெருநீர் யமுனைத் துறைவனை" என்னும்படியே யமுனை இடையறுத பகவத்ஸம்பந்தத்தை யுடைத்தாயிருந்ததுபோல, வேதமும் "ஸவெ₂வெஃாய₂த்ரஃ ஃா₈நதி" என்றும் "மறைநான்கினுளாயோ?" என்றும் சொல்லுகிறபடியே பகவத் ப்ரதிபாதநமாகிற தத்ஸம்பந்தத்தை நியதமாகவுடைத்தாயிருக்கும். காளியனுடைய ஸ்தானத்தில் மதாந்தரஸ்தர்கள் கொள்ளப்படவேண்டும். காளியன் ஐந்துதலைகளாலும் நஞ்சையுமிழ்ந்து நாசம் விளைத்ததுபோல, மதாந்தரஸ்தர்கள் ஐந்துவிதமான துர்வாதங்களாலே நாசம் விளைவிக்கின்றனர். 1. ஈச்வரனை இல்லையென்னுதல்; 2. ஈச்வரன் உண்டெனினும்

என்ன தாமதம் :: :: :: நேரம் ஆகிறது

ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு விநாடியும் விலை மதிக்கத் தக்கது. நீங்கள் ஒரு நாழிகை நேரமும் தாமதம் போக்காமலிருக்க இந்த கடியாரம் உடனே வாங்க வேண்டும்.

★

செக்யூரிடா

உயர் ரக மூவ்மெண்டுடன் கூடியது. 4" டயல் 5½" உயரம் பின்புரம் அலாரம், பெல்லுடன் அமைக்கப்பட்டது 30 மணிக்கு ஒரு தடவை சாவிகொடுக்கலாம்.

2 வருஷ உத்தரவாதம்

நிக்கல் கேஸ் ரூ. 5-15-0

பாக்கிங் தபால் சிலவு வேறு

ஆர்டர் உடன் ரூ. 2 மணியார்டர் அனுப்பவேண்டும் சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷனை குறிப்பிடவும்

ஜலால் அண்டு சன்ஸ்,

கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்.

ஹெட் ஆபீஸ் :— 46, ரட்டன் பஜார், சென்னை.
பிராஞ்சு ஆபீஸ் :— 190, B. மௌண்ட்ரோட், சென்னை.
,, 1242-1, ஆபிட்ரோட், ஹைதராபாத் (டெக்கான்.)

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி
(லிமிடெட்)

தலைமை ஆபீஸ்: மதராஸ். ஸ்தாபிதம்: 1906

டிரஸ்டி: மதராஸ் அபீஷ்யல் டிரஸ்டி.

பாலிஸிதாரர்களின் நன்மையையே கோரி பணி செய்யப்படுகிறது.

க்ளெய்ம்கள் தாமதமின்றி தீர்க்கப் படுகின்றன. நல்ல சேமிப்பு, திறமை யான நிர்வாகம், லாபகரமான பாலிஸி நிபந்தனைகள், குறைந்த ப்ரீமியம், நிறைந்த போனஸ், இவை

யுனைடெட் இந்தியாவை

ஒரு சிறந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி யாக்குகின்றன.

பூரா விவரங்களுக்கும் தலைமை ஆபீஸ்:

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,

சேம்புதாஸ் தெரு, மதராஸ்-க்கும்

அல்லது

கீழ்க்கண்ட இடங்களிலுள்ள ஆபீஸுகளுக்காவது எழுதவும்.

ஆஸான்ஸல்	டாக்கா	லாகூர்	ராஜமகேந்திர புரம்
பெங்களூர்	டில்லி	பாட்ன	ரங்கூன்
பெஜவாடா	கௌஹாத்தி	மதுரை	விலிகார்
பம்பாய்	கூட்டி	மங்களூர்	தஞ்சாவூர்
கல்கத்தா	ஹௌரா	நாகப்பூர்	திருவனந்தபு
கள்ளிக்கோட்	சிட்டகாங்	ஹைதராபாத்	உடுப்பி (ரம்
சித்தூர்	ஜல்பெய்குரி		

அவன் ஆநுமாநிகனேயன்றி ஶாஸ்த்ரஸித்தனல்லன் என்னுதல்' 3. ஶாஸ்த்ரஸித்தனாகவே ஈச்வரனை அங்கீகரித்தும் அவனுக்கு குணவிக்ரஹாதிகள் இல்லையென்னுதல்; 4. ஈச்வரன் ஒருவனே யென்பதில்லை; பல ஈச்வரர்களுண்டென்னுதல்; 5. பிரபஞ்ச மெல்லாம் மாயைத்தோற்றமே யென்னுதல். ஆக இப்படிப்பட்ட முக்கியமான ஐவகை அபார்த்தங்களினால் புறமதத்தவர்கள் வேதங் களைக் கெடுக்கின்றனர். இப்படிப்பட்டவர்களின் தலையில் காளியன் தலையிலே கண்ணபிரான் அடியிட்டு நடம்புரிந்தாப்போலவே "நாவ லிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள்மீதே" என்ற கணக்கிலே "ததர்க்க த்யர்தவிஜ்ஞான தவேதஸாம் வாதிநாம் ஶிரஸ்ஸு நிஹி தம் யோ வதேக்ஷிணம் க்ஷ்யோதாம்" என்று யதிராஜஸப்ததியில் அருளிச் செய்யப்பட்டது.

"வையமேழுங்கண்டாள் பிள்ளை வாயுளே" என்றும் "வாயுள் வையகங்கண்ட மடநல்லார்" என்றும் சொல்லுகிற படியே கண்ணபிரான் தனது திருவாயில் ஏழுலகங் களையும் அன்பர்கட்குக் காட்டினன். அதுபோல ஆசாரியர்க ளும் தமது திருவாக்கில் 1. ச்ருதிகள், 2. ஸ்மிருதிகள், 3. இதி ஹாஸங்கள், 4. புராணங்கள், 5. பஞ்சராத்ரங்கள், 6. ஆழ்வா ரருளிச்செயல்கள், 7. ஆசார்ய திவ்யஸூக்திகள் ஆகிய ஏழையும் அன்பர்கட்குக் காட்டியருள்வர்கள்.

குதிரைவடிவங்கொண்டு மஹா பயங்கரனாகவந்த கேசி யென்னுமஸுரனைக் கண்ணபிரான் தொலைத்தருளினதுபோல, ஆசாரியர்களும் "இந்த்ரியாணி ஹயாநாஹு:" என்ற உபநிஷத் தின்படியே இந்திரியங்களாகிற குதிரையின் வலியை யடக்கி [ஜிதேந்த்ரியர்களாய்] வாழ்வார்கள்.

கம்சனால் ஏவப்பட்ட அசுரர்களில் ஓரசுரன் விளாமரத்தின் வடிவமாய், தன் கீழே கண்ணன் வரும்போது மேல்விழுந்து கொல்வதாக எண்ணிவந்து நிற்கவும், மற்றோரசுரன், கண்ணனை முட்டிக்கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு நிற்க வும் இவற்றையறிந்த பெருமான் "விளவின்காய் கன்றினால் வீழ்த் தவனே!" என்கிறபடியே கன்றைச் சுழற்றி விளவின் மீதெறிந்து இரண்டையும் ஒரு சேர முடித்தருளினன் என்ற வரலாறு, முள் ளைக்கொண்டே முள்ளைக் களைகின்ற படியைக் காட்டுகின்றது. இது போலவே ஆசாரியர்களும் புறமதங்களைக் கண்டிக்குமிடத்து

2

அவை பரஸ்பர விருத்தங்களாயிருக்கும் படியை நன்கு நிரூபித்துக் காட்டி அவைகளைக்கொண்டே அவற்றை மறுத்தொழிப்பார்கள். இதற்கு ஒரு சிறிய உதாஹரணம் காட்டுவோம். "सर्वं मिथ्या" என்றவர்களை நோக்கி ஸ்ரீ பாஷ்யத்தில் எம்பெருமானார் ஒரு சிறு கேள்வி கேட்கிறார்; எல்லாம் பொய் என்று சொல்லுகிற நீங்கள் பிரயோகிக்கின்ற "सर्वं मिथ्या" என்கிற இந்த ப்ரதிஜ்ஞா வாக்யம் மெய்யா பொய்யா? என்கிறார். மெய் என்னில், இஃதொன்று மெய்யாகத் தேறிவிட்டபடியால் सर्वं मिथ्या என்றது அஸங்கதமேயாகும். இந்த வாக்யமும் பொய் என்னில்; உங்களுடைய ப்ரதிஜ்ஞையே பொய்யென்று தேறிவிட்டபடியால் सर्वं सत्यम् என்றே தேறி நிற்கும் என்று நிரூபித்ததனால் எதிரியைக்கொண்டே எதிரியை முடித்தமை அறியத்தக்கது.

இடையர்கள் வழக்கப்படி இந்திரனுக்குப் பூஜை செய்யப் பற்பல வண்டிகளில் சோறும் தயிரும் நெய்யும் காய்கறிகளும் சேகரிப்பதைக்கண்டு கண்ணன் அப்பூசனையனைத்தையும் கோவர்த்தன மலைக்கே இடும்படி கட்டளையிட்டுத் தானே ஒரு தேவதா ரூபங்கொண்டு அவற்றை முற்றும் அமுது செய்தருள, இந்திரன் பசிக்கோபத்தினால் மேகங்களை ஏவிக் கடுரமான கல்மழையை ஏழு நாள் பெய்விக்க, அதனால் யார்க்கும் தீங்கு நேரிடாதபடி கண்ணன் அம்மலையையே குடையாக வெடுத்துப் பிடித்து நின்றனன் என்பது ஒரு கதை. தேவதாந்தரத்திற்குப் பூஜை செய்வதைப் பொறாத தன்மையும், அந்தப் பூஜையை யெல்லாம் தானே ஏற்றுக்கொள்ளுந் தன்மையும், அதனால் எதிரி என்ன தீங்குசெய்ய நினைத்தாலும் அதற்குப் பிரதியாகத் தீங்கிழைக்க நினையாதிருந்தகவும், தன்னை அடுத்தவர்களை தான் ரக்ஷித்துக்கொண்டு நிற்றலுமாகிய விஷயங்கள் இவ்விதிஹாஸத்திற் கிடைக்கின்றன. "மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்றிருக்கும் ஆசாரியர்கள் தேவதாந்தர பஜனத்தைச் சிறிதும் ஸஹியார்கள்: "திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு" என்று துணிந்து உபதேசிப்பர்கள். "साक्षान्नारायणो देवः कृत्वा मर्त्यमयीं तनुम् । मग्नानुद्धरते लोकान् कारुण्याच्छास्त्रपाणिना ॥" என்றும், "பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகிவந்து" என்

றுஞ் சொல்லுகிறபடியே எம்பெருமானே ஆசார்யனாக வந்து பிறப்பதனால் ஆராதனைகளெல்லாம் ஆசார்யனுக்கே சேரும். "குற்றஞ்செய்தவர்கள் பக்கல் க்ருபையும் பொறையும் உகப்பும் சிரிப்பும் க்ருதஜ்ஞதாநுஸந்தானமும் நடக்கவேணும்" என்றிருப்பார் ஆசார்யராகையாலே தீங்கிழைப்பார் திறத்திலும் பதில் தீங்கிழைக்க நினையார். பெருமழையில் நின்றும் கண்ணன் காத்தருளினதுபோல "[illegible]" (ஸ்தோத்ர ரத்நம்) என்னப்பட்ட பெருமழையில் நின்றும் ஆசாரியர்கள் காத்தருள்வார்கள். கண்ணன் ஏழுநாள் காத்தனன்; இவர்கள் ஏழேழ்பிறவியுங் காப்பர்.

கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்துகொள்ளுதற்காக அவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி அஸாதாரவேஷம்பெற்ற ஏழு எருதுகளை வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்து கொண்டனன் என்று ப்ரஸித்தம். ஆசார்யர்களும் "எட்டிறையாய் மூன்று சரடா யிருப்பதொரு மங்களஸூத்ரம் போலே திருமந்த்ரம்" (முமுக்ஷுப்படி) என்கிறபடியே திருமந்திரமாகிற தாலியை சேதநர்களுக்குக் கட்டி விவாஹம்நடத்துகைக்காக, காமம் க்ரோதம் லோபம் மோஹம் மதம் மாத்ஸர்யம் அஸூயை என்கிற ஏழுவிரோதிகளையும் தொலைத்தருள்வர்கள்.

கண்ணன் இரண்டு மல்லர்களை மடித்ததுபோல ஆசார்யர்கள் "நீர் நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து" என்கிறபடியே அஹங்கார மமகாரங்களை அடியறுப்பார்கள். அவன் குவலயாபீடமென்கிற மதயானையை முடித்தாப்போலே "மதக்களிற்றைந்தினையும் சேரிதிரியாமல் செந்நிறீஇ" என்கிற பொய்கையார் பாசுரத்தின்படியே மதகளிறாகிய இந்திரியத்தின் துஷ்டத்தன்மையைத் தொலைப்பார்கள்.

கண்ணன் மாலாகாரர் திருமாளிகைக் கெழுந்தருளி அவர் தந்த பூவைப்பெற்று உகந்ததுபோல, ஆசாரியர்கள் "अहिंसा प्रथमं पुष्पं पुष्पमिन्द्रियनिग्रहः । सर्वभूतदया पुष्पं क्षमा पुष्पं विशेषतः ॥ ज्ञानं पुष्पं तपः पुष्पं ध्यानं पुष्पं तथैव च । सत्यमष्टविधं पुष्पं विष्णोः प्रीतिकरं भवेत् ॥" என்னப்பட்ட எண்பகர் பூவையும் சிஷ்யர்கள்பக்கலிலே கண்டு பெற்றுக் களிப்பர்கள்.

கண்ணபிரான் கம்ஸ சிசுபால கௌரவ ப்ரப்ருதிகளை முடித்துப் பாண்டவாதிகளை வாழ்வித்ததுபோல ஆசார்யர்கள் தர்க்கச்சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையும் நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனரென்னும்படியாக நாட்டிய நீசச்சமயங்களை மாள்வித்து அர்த்தபஞ்சகம் முதலிய விசேஷார்த்தங்களை எங்கும் விளங்கச் செய்தருள்வர்கள். இங்ஙனே மற்றும் கண்டு கொள்க.

க்ருஷ்ணாவதார ஸமயே யது ஸ்ரீமதே க்ருத்ஸ்னமேவாயம்
ஶாக்யாத்யைஸ் தத்த்வம் ஶாஸ்த்ரா ஸஹஸ்ரஶ꞉ |
க்ஷுண்ணாராயைர் ஜகத்ஸ்ரஷ்டுர் வஸ்துநீய
க்ருஷ்ணாவதாரஸதவஶே ப்ருகடீக்ருதார꞉ ||

பூர்வாசார்யவ்யாக்யானங்களில் பக்தி விச்வாஸாவச்யகத்வம்.

[ஸ்ரீ. உ. வே. திருமழிசை, கோ. க. அப்பனய்யன், ராமாநுஜாசார்யார்.]

வேத ததங்கோபாங்கங்கள் என வழங்கப்படுகிற திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களுக்குப் பிள்ளான் முதலான பூர்வாசார்யர்கள், ரஸபரிதங்களாயும், ஸர்வலக்ஷணங்களோடு கூடியவையாயுமுள்ள வ்யாக்யானங்களை அருளிச் செய்துள்ளார்கள். இவ்வாறு, பூர்வாசார்யர்கள் ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகளாகிற தேனின் பெருக்கைத் தமது வ்யாக்யானங்களாகிற வாய்க்கால்களின் வாயிலாக இவ்வுலகினில் ப்ரவ்ருத்திப்பித்து தாபத்ரயாதுரர்களுடைய ஆர்த்திகளை, நிஶ்ஶேஷமாகப் போக்கி ஆநந்திப்பிக்கும்படியை நாம் எங்ஙனே கூறுவது! இப்படிப்பட்ட பூர்வர்களின் வ்யாக்யானங்களின்றி திவ்யப்ரபந்தார்த்தங்களை ஸம்ஶய விபர்யயமற, தேர்ந்துரைக்க வல்லார் எவர்! இவ்விஷயத்தை ஸ்ரீ மணவாளமாமுனிகள் உபதேஶ ரத்தினமாலையில் "முந்துறவே பிள்ளான் முதலானோர் செய்தருளும், அந்த வியாக்கியைகளன்றாகில்—அந்தோ! திருவாய் மொழிப்பொருளைத் தேர்ந்துரைக்க

வல்ல குருவார், இக்காலம் நெஞ்சே கூறு." என்கிற பாசுரத்தினால் தெளிவாக அருளிச்செய்துள்ளார். திருவாய்மொழி வ்யாக்யானங்களுக் கருளிச்செய்தது மற்ற திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களுக்கும் பொருந்துமிறே! திவ்யப்ரபந்தார்த்தங்களை யறிய ஆசைப்படுமவர் இவ்வியாக்யானங்களில் பக்தி விஶ்வாஸங்களைப் பண்ணுவது ஆவஶ்யகம்.

மேலும், பூர்வர்கள் வ்யாக்யானங்களில், மூலத்திலுள்ள பதங்களைப் பிரித்துக் காட்டுகிறபடியும், அவற்றின் ஸாமாந்ய விஶேஷார்த்தங்களை யுள்ளபடி அருளிச் செய்யுமழகும், மேற்பாசுரங்கட்கும், மேல் வாக்யங்களுக்கும் அவதாரிகையிடும் ரீதிகளும், முன்பின் பதிகங்களுக்கு ஸங்கதி யருளிச்செய்கிற ஹ்ருத்யதையும், ஜிஜ்ஞாஸுக்கள், விஜிகீஷுக்கள் இவர்களுக்கு முறையே உத்தரங்களருளிச் செய்யும் நைபுண்யமும், ஆழ்வார்களுக்கு நாயிகாவஸ்தை ஏற்படுவதற்குரிய ஹேதுக்களை விஶதமாகக் காட்டுகிற ஸாமர்த்யமும் இன்னுமிவைபோன்ற, பூர்வாசார்ய வ்யாக்யானங்களின் அநேக சீர்மைகளை ஆயிரவாய் நாகமான திருவநந்தாழ்வானும் சொல்லுவதற்கு ஶக்யமன்றுகிடீர்!

இவையன்றி, பூர்வாசார்ய வ்யாக்யானங்கள் தெய்விகத் தன்மை பொருந்தியவை என்பதற்கு சில ஐதிஹ்யங்கள் உள்ளன. கோயிலில், ஜயவிஜயர்களுக்கருகிலுள்ள பலகணிக்கதவில் தான் பாலனாய் நின்று, நம்பிள்ளை யருளிச்செய்கிற ஈடு முப்பத்தாறாயிரப்படி உபந்யாஸத்தை ஆதரத்தோடு திருச்செவி சாற்றி யருளிய நம்பெருமாளை, விளக்குப்பிச்சன் கண்ணுற்ற வைதிஹ்யமும், ஸ்ரீ மணவாளமாமுனியிடம் நம்பெருமாள் 'ரங்கீ வத்ஸரமேகமேவமஶ்ருணோத் வ்யக்தம் யதோக்தம் க்ரமாத்' என்கிறபடி, ஒரு ஸம்வத்ஸரம் திவ்யப்ரபந்தார்த்தங்களைக் கேட்டருளினர் என்று பூர்வர்கள் எழுதி வைத்திருக்கிற இவ் வைதிஹ்யமும், இன்னும் பல ஐதிஹ்யங்களும் ஸம்ப்ரதாயஸ்தர்கள் யாவராலும் அறியப்பட்டவையே. இவ்வாறு, அவ்வியாக்யானங்கள் தெய்விகத் தன்மை பொருந்தியவையாதலால், இவற்றில் பக்தி விஶ்வாஸங்களைப் பண்ணுவது உஜ்ஜீவன ஹேதுவாகும்! மேலும், எதிராசன் பேரருளால் திருக்குருகைப் பிரான் பிள்ளானும், பட்டர் நல்லருளால் நஞ்சீயரும், நஞ்சீயர்; நம்பெருமாள் இவர்கள் கடாக்ஷத்தால் நம் பிள்ளைகளும், நம் பிள்ளை தம்முடைய நல்லருளால்

ஏவியிடப் பெரியவாச்சான் பிள்ளையும், திருவாய்மொழி வ்யாக்யானங்களைச் செய்தருளினார்கள். அவ் வியாக்யானங்களில் நாம் பக்தி விஸ்வாஸங்களைப் பண்ணினாலன்றோ! எதிராசர், பட்டர் முதலிய ஆசார்யர்களிடத்தில் பக்தி விஸ்வாஸங்களைச் செய்தவர்களாக ஆகி உஜ்ஜீவிக்கலாகும்!

மேற்கூறப்பட்ட பூர்வசார்ய வியாக்யானங்களில் இலக்கணத்திற்குப் பொருந்தாது யாதுமில்லை யென்றே, ஸம்ப்ரதாய தத்வஜ்ஞரான தமிழ் வித்வான்களின் ஸித்தாந்தம். ஆகிலும், நம் பூர்வாசார்ய திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களில் சில அம்சங்கள் தற்கால விலக்கணத்திற்குப் பொருந்தாதவை போல் தோன்றினாலும், அவ்வியாக்யானங்கள் எம்பெருமான் கடாக்ஷம் பெற்றவையாகையால் நம்மால் அறியமுடியாத வேறு இலக்கணங்களுக்குப் பொருந்தியவையாகவே கொள்ளவேண்டும். இதிஹாஸ புராணங்களில் பாணினி வ்யாக்யானத்திற்குப் பொருந்தாத அம்சங்களை 'ஆர்ஷம்' என்று சொல்லி அந்தந்த ரிஷிகளை அந்தந்த அம்சங்களுக்குரிய வ்யாகரண கர்த்தாக்களாகவோ அல்லது, அவர்கள் பிரயோகித்திருப்பதே ஸாதுத்வநியாமகமாகவோ வன்றோ கொள்ளுகிறார்கள். பூர்வாசார்யர்கள் விஷயத்திலும் அவ்வாறே என்று கொள்மின்.

பின்னும், திவ்ய ப்ரபந்த வ்யாக்யானங்களிலே, இறே, கிடீர், இடையாட்டம், பிறக்கை சுட்டி, ஓட்டை ஸைவாஸம், போருகை, உடலாமித்தனை, கட்டடங்க, இலையகலப் படுத்துகை இவை போன்ற பதங்கள் அந்தந்த இடங்களில், ரஸபரிதமான இம்மாதிரி பதங்களை இதர தமிழ் நடைகளிலும், தற்கால நிகண்டுகளிலும் காணோம். ஆகிலும், தெய்வாநுக்ரஹம் பெற்றுள்ள திவ்யப்ரபந்த வியாக்யானங்களில் இப்பதங்கள் ஸர்வஜ்ஞரான ஆசார்யர்களால் பிரயோகிக்கப் பட்டிருப்பதால், இவற்றிற்குரிய நிகண்டுகள் உள்ளனவாகவே கொள்ளவேண்டும். அவ்வாறு தமிழ் நடைகளில் இப்பதங்களின் பிரயோகங்களும் இவைகட்கு நிகண்டுகளும் இருந்தால், அவைகளை யெடுத்துக் காட்டுபவருக்கு, ஜிக்ஞாஸுவான அடியேன் க்ருதஜ்ஞனாய்ப் போருவேன்.

இங்ஙனம், பூர்வாசார்யர்களுடைய வியாக்யானங்களின் பெருமையை எழுதியது அவைகளில், பக்தி விஸ்வாஸங்கள் அவஶ்யம் உண்டாவதற்காகவும், விருத்தியடைவதற்காகவுமாகும்.

திருவிருத்தமும் திவ்யதேசங்களும்.

[C. நரஸிம்ஹாசாரியார், அட்வகேட்.]

பல வருஷங்களுக்குமுன் "பேராளன் பேர் ஓதும் பெருந்தவத்தன்" என ப்ரஸித்திபெற்ற ஓர் பெருந்துறவி காஞ்சீபுரத்திலிருந்துவந்து சிலநாள் திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருந்தார். அவ்வூரில் உள்ள சில உத்தமிகள் அவரைத் தண்டன் ஸமர்ப்பித்து ஓர் பாசுரத்தின் அர்த்தம் ஸாதிக்கவேணும் என்று பிரார்த்தித்தார்கள். முக்கோல் பிடித்த முனிவனும் அதற்கு இணங்கி "நைவளம் ஒன்று ஆராயா நம்மை நோக்கா" என்கிற திருமங்கைமன்னன் பாசுரத்துக்கு அர்த்தம் சொல்வதாக ஆரம்பித்தார். பாசுரத்தை சந்தையிட்டவாறே விம்மி விம்மி அழுது கொண்டு கண்ணீர் வெள்ளமிட்டது. இம்மாதிரி ஓர் நாழிகை கழிந்தது. மற்றைப்போதும் "வயலாலி மணவாளா" வகையறியேன் வகையறியேன்" என்று சொல்லிக்கொண்டே கழித்து உபந்யாஸத்தை முடித்தார். நம் பூர்வாசாரியர்கள் பகவத் விஷயாநுபவமும் இப்படியே இருக்கும். எம்பெருமானார் பகல் எல்லாம் ஸ்ரீ பாஷ்யத்தில் அந்யபரராய் இருப்பர். இரவு அமுதுசெய்து பள்ளிக்கட்டிலில் எழுந்தருளினவாறே "சந்தை சொல்ல வாராயோ" என்று வடுகநம்பியை அழைப்பர். முதல் சந்தைக்கு புளகாங்கிதராய், இரண்டாம் சந்தைக்குச் சிதிலராய் மூன்றாம் சந்தைக்கு "நாலிரண்டு ஒலியல்கொண்டு பரிமாறவேண்டும்படியாயிற்று கண்ணநீர் வெள்ளமிடும்படி" என்று எட்டு மேல் வேஷ்டி எடுத்துத் துடைத்தாலும் போகாத பெருநீர் பெருகுமாம். கிடாம்பியாச்சான் ஆழ்வான்பக்கல் பாசுரம் கேட்கிறநாளிலே ஒருநாள் எம்பெருமானார் அவரை "இன்று என்ன பாசுரம்" என்று கேட்டார். "பிறந்தவாறும் வளர்ந்தவாறும்" என்று சொன்னார். அதில் சொன்னவார்த்தைகள் தான் என்ன என்று மறுபடியும் கேட்க "ஒன்றும் இல்லையே. இயல்சொல்லுவதாக ஆரம்பித்து ஆழ்வாருடைய பாரவச்யத்தை அநுஸந்தித்து நெடும்போது கண்ணும் கண்ணீருமாய் இருந்தார்" என்ன, "என்ன பரம சேதநனோ" என்று எம்பெருமானார் ஆழ்வான்பால் மோஹித்துக் கிடந்தார். இம்மாதிரியான ஐதிஹ்யங்கள்

ஆயிரக்கணக்காய்க் காணலாம். இதுதான், திருவிருத்தத்தில் ஆழ்வார் அநுபவம். "பொய்ந்நின்ற ஞானமும், பொல்லா ஒழுக்கும் அழுக்கு உடம்பும்" வேண்டாம் என்று ஆரம்பித்து அவனுடைய பரமக்ருபையை அநுஸந்தித்து "அழுநீர் ததும்ப அலமருகின்றன" என்று கண்ணும் கண்ணீருமாய் நின்றார். (தொடரும்)

வர்த்தமானங்கள்

ஸ்ரீ காஞ்சி வேத வேதாந்த வைஜயந்தீ பாடசாலா

ஷை பாடசாலையை ஸ்தாபித்து வ்ருத்திக்குக் கொண்டு வந்தவர் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியர். ஸ்ரீ வைஷ்ணவ உலகில் இம்மஹாநுபாவரை யறியாதாரொருவருமிருக்கமாட்டார். இவர் தம்முடைய க்ருஹக்ருத்யத்தைக் கூடச் சிறிதும் கவனியாமல் தம்மாலார்ஜிக்கப்படுமர்த்தமனைத்தையும் பாடசாலைக்கே விநியோகப்படுத்தி தேஹச்ரமத்தையும் கணிசியாமல் வித்தியார்த்திகளுக்கு வித்யாப்யாஸம் பண்ணிவைக்கும் பெருமை பாராட்டற்பாலது. ஷை பாடசாலையிலத்யயநம் பண்ணுமந்தேவாஸிகளுக்கு அன்னமும் ஆடையும் அளிப்பதுடன் பேரருளாளனை மங்களாசாஸநம் பண்ண எழுந்தருளும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ததீயாராதநமும் நடைபெறுகிறது. ஷை பாடசாலையில் வித்வான்களும் வித்யார்த்திகளுமாக ஏறக்குறைய 50-60 திருநாமங்களிருக்கலாமெனத் தெரியவருகிறது. இந்த ஐம்பது அறுபது திருநாமங்களுடன் ஷை அண்ணங்கராசாரியர் ப்ரதிதிநம் காலை 4-மணிக்கு பாடசாலைக்கெழுந்தருளி வேதபாராயணம் ப்ராரம்பித்துப் பெருங்கோஷ்டியாக வீதியார வலம்வரும் வைபவம் கண்ணாரக்கண்டு செவியாற் பருகிக்களிக்கவுரியது.

அநத்யயநதிநங்களில் பூர்வாசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகளை வாயாரப் பெருமிடறு செய்து ஸேவித்துக் கொண்டு வீதி வலம்வருமழகை கண்டும் கேட்டு மனுபவிக்கவேண்டுமே யல்லாமல் வர்ணித்து வரைய முடியாது. பெருமாள் புறப்பாடுகளில் முன் கோஷ்டியையும் பின் கோஷ்டியையும் இவர் நிர்வஹிக்கும் பெருமை அதிதர ஸாதாரணம். இவ்வாறு தமது வாழ்நாளைக் கழித்து வரும் இம்மஹாநுபாவர் அரோகத்ருடகாத்ரராய் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து பேரருளாளனுக்கு மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டிருக்கும்படி எல்லாம் வல்ல இறைவனை பேரருளாளன் இன்னருள் புரிய வேண்டுமென்றடி பணிந்து வேண்டிக் கொள்கிறேன். இங்ஙனம் : **யதார்த்தவாதி.**

ஶ்ரீரஸ்து.

ஶ்ரீ ஹஸ்திஶைல ஶிகரோஜ்ஜ்வல பாரிஜாதாய நம: |

ஶ்ரீமத்வரவரமுநயே நம: |

ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்

இயற்றிய

ஸத்ஸம்ப்ரதாய பரிசுத்தி.

ஶ்ரீலோக தேஶிகவரம் நிகமாந்தஸூரிம்
வாசாஞ்ச ஸம்ப்ரதிபதார்த்தக கௌதுகஜ்ஞ: |
ஶ்ரீஸூக்திபி: ப்ரதயிதும் ஶுபதாம் நிதேஶாத்
ஸத்ஸம்ப்ரதாய பரிஶுத்திரஸாவுபைதி ||

யத்ஸம்ப்ரதாயபரிஶுத்திரஹஸ்ய டீகா
லேவஜ்ஞலேந, நிரவத்ய மஹாமதீநாம் |
ஶ்ரீஸூக்திரத்ந நிகராந் நிகமாந்தஸூரி
ஸோமாத்ரு ப்ரதர்ஶயத தத்ர ரத்நா: ||

ஸமவதி நிரபேக்ஷாவாப்யஸாவம் ப்ரமாணை:
பஹுமதிமிஹ ஸந்தோ தேஶிகா: பாவநீயா: |
மணிதிமிரதிதா: ப்ராபயந்தீஸ்வ, தேஷாம்
ஶரணமதிமதீநாம் மாநஸே தாஸதாஸ: ||

அவதாரணிகை

வேதாந்த தீபிகையின் விமர்சம் :—வேதாந்த தீபிகை யென்னும் பத்திரிகை நெடுநாளாகவே மாதந்தோறும் வெளி வந்து கொண்டிருப்பது நாடு நகரமும் நன்கறிந்ததே. இப்பத்திரிகை விஷய கௌரவம் முதலியவற்றால் மிகவுஞ் சிறந்து விளங்குகின்றதென்பது புநருக்தம். லௌகிக வைதிகங்களில் மிகவும் தேர்ந்த மஹநீயர்களான ஸ்ரீ. உ. வே. வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியையும், வித்வான். வி. அனந்தாசார்ய ஸ்வாமியையும் ஆசிரியராகக் கொண்டு வெளிவருகின்ற இப்பத்திரிகையின் சிறப்பை வாக்குத் தூய்மையிலாத யானோ எடுத்துரைக்க வல்லேன். ஒரு ஆசார்யரைப் பற்றியும் ஒரு ஸம்ப்ரதாயத்தைப் பற்றியும் குறைவாகப் பேசாமல் அனைவரும் அகமகிழும்படியான முறையில்

வெளிவரும் பத்திரிகை இதுவேயென்று விவேகிகளால் கொண்டாடப்பட்டு வரும் இப்பத்திரிகையில் சில மாதங்களாக ஜமஹாசார்ய ஶிவாணிகளின் தூஷணங்கள் அவகாஶம்பெற ஆரம்பித்தது ஸஹ்ருதயர்களின் துர்ப்பாக்யமே போலும். மிக விசாலமான திருவுள்ளங் கொண்டு ராகத்வேஷங்களை அறவேயொழித்து நடுநிலையில் விளங்கும் பத்திரிகாசிரியர்கள் ஶோசநீயமான இவ்விஷயத்தில் திருக்கண் செலுத்தியிரார்கள் என்றே எண்ணினேன். ஆசார்ய தூஷணம் மலிந்த வியாஸங்களுக்கு அந்த மஹான்கள் புத்தி பூர்வமாக ஒருகாலும் அவகாஶம் அளித்தருள மாட்டார்கள் என்னும் நம்பிக்கை அடியேனுக்கு உறுதியாகவேயுளதாதலால், அந்த மஹான்களுக்கு இனியாகிலும் இதில் ஜாகரூகதை யுண்டாக வேணுமென்கிற ப்ரார்த்தனையை முந்துற முன்னம் செய்துகொண்டு, மேலே ப்ரகிருத விஷயத்தைப் பற்றி விரிவாக விஜ்ஞாபித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் திருவாய் மலர்ந்தருளிய **ஸம்ப்ரதாயபரிசுத்தி** எனனும ரஹஸ்யத்திற்கு வியாக்கியானமென்று ஒன்று சில மாதங்களாக வேதாந்ததீபிகையில் சிறிது சிறிதாக வெளிவந்து கொண்டிரா நின்றது. பிள்ளை லோகாசார்யர் முதலான மஹாசார்யர்களை நிஸ்ஸங்கோசமாக தூஷிப்பதிலேயே இந்த வியாக்கியானம் நோக்குடையதென்பது பெரும்பாலும் பங்க்தி தோறும் ஸ்பஷ்டமாகின்றது. ஆழ்ந்ததிருவுள்ளத்துடனும் ஆத்மகுண பரிபூர்த்தியுடனும் வெகு அழகாக ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்யும் ஸ்ரீ ஸூக்திகளுக்கு ஶாஸ்த்ரஸம்ப்ரதாயங்களில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களும் மாத்ஸர்யம் அஸூயை முதலியவற்றை வென்றவர்களுமான மஹான்கள் வியாக்கியானங்கள் எழுத வேணுமேயல்லது மற்றையோர் எழுதப்புகுவது தேசிக திவ்ய ஸூக்திகளின் கௌரவத்தைக் குறைப்பதிலேயே பர்யவஸித்துநிற்குமென்பது நிர்விவாதம். மிகப்புனிதமான தேசிக திவ்ய ஸூக்திகளை மனனகமல முடையோர் தொடும்போதே "பிபேத்யல்பஶ்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி" என்ற கணக்கிலே அவை நடுங்கப்ராப்தமாகும்.

ஸம்ப்ரதாய பரிசுத்தியென்னும் க்ரந்தம் ஸ்ரீதேசிக ரஹஸ்யங்களுள் முதலது. இந்த க்ரந்தம் அமைந்திருக்குமழகை மாத்

ஸர்யமற்ற மஹநீயர்களே அநுபவிக்கவேணும். இதில்—"ஸ்ரீ பாஷ்யகாரருடைய சிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் ஒன்றிலும் அர்த்த விரோதமில்லை; வாக்யயோஜநாபேதமேயுள்ளது. தேசகாலாவஸ்தா விசேஷங்களாலே வரும் அநுஷ்டாநவைஷம்யம் ஶாஸ்த்ராநுமதம்" என்கிற ஸ்ரீஸூக்திகளை ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்திருப்பது ஸுப்ரஸித்தம். ஆகவே, நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர் முதலான ஆசார்யஸார்வபௌமர்களின் திவ்யஸூக்திகளில் தேசிகன் ஆதரமுடையவரேயன்றி மாறுபாடான திருவுள்ளமுடையவரல்லர் என்பது புலனாகிறது.

பரமதபங்கமென்னும் ரஹஸ்யத்தில் சில இடங்களில் பிள்ளை லோகாசார்யருடைய நிர்வாஹங்களை உதாஹரித்து "இப்படி சில ஆசார்யர்கள் நிர்வஹிப்பர்கள்" என்றும், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திலும் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான ஸ்ரீஸூக்தியைக் காட்டியருளி "இப்படி அபியுக்தர்வியாக்கியானம் பண்ணினார்" என்றும் அருளிச்செய்துள்ள தேசிகனுடைய பரம ஸாத்விகத்தில் அதிசங்கையுண்டாகும்படி பின்புள்ளார் செய்து போருவது கலிகோலாஹலக்ரீடையே.

"ஸ்ரீபாஷ்யகாரருடைய ஶிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் ஒன்றிலும் அர்த்தவிரோதமில்லை" என்கிற ஸ்ரீஸூக்தியைக் கொண்டதான ஸம்ப்ரதாய பரிசுத்தி ரஹஸ்யத்திற்கு உரையெழுதப் புகுந்து 'பிள்ளை லோகாசார்யருடைய ரஹஸ்யங்கள் அபார்த்தம் நிரம்பியவை' என்று ஒருவர் எழுதிவைத்தால் இது ஸ்ரீதேசிகன் திருவுள்ளத்திற்கு எங்ஙனேயாகுமென்பதை ப்ராமணிகர்கள் தாமேபரிசீலிக்கவேணும்.

காஞ்சீபுரியிலுள்ள ஸ்ரீ. உ. வே. அய்யாகிருஷ்ண தாதாசாரியரென்பவர் இந்த ஸம்ப்ரதாய பரிசுத்திக்கு எழுதியுள்ள வியாக்கியானம் வேதாந்த தீபிகையில் அச்சாகி வருகிறது. இந்த ஸ்வாமி தேசிக ஸூக்திகளில் கைவைக்கவும் வாய் வைக்கவும் அதிகாரிதானா' என்பதைப் பற்றி மஹாப்ராஜ்ஞர்கள் நிஷ்கர்ஷித்து அறிந்தேயிருப்பார்கள். **ஸதாசார்ய ஸூக்தி ரக்ஷை** முதலியவற்றில் அடியேனும் விவரித்திருக்கின்றேன். (தொடரும்)

வர்த்தமானங்கள்

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌹𑌂𑌸 𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌜𑌕𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑌨𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌾𑌂, 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌪𑌰𑌾𑌵𑌤𑌾𑌰

[25-வது பட்டம் சின்னக்கலியன் ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி.]

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑌰𑌵𑌰𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌷𑍍𑌟𑌦𑌿𑌗𑍍𑌗𑌜 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌪𑌣𑌿𑌤𑌾𑌨𑌾𑌂, 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑍃 𑌯𑌤𑌿𑌵𑌰 𑌕𑍃𑌪𑌾𑌪𑌾𑌤𑍍𑌰 𑌶𑍍𑌰𑍀 𑌵𑌰𑌮𑌙𑍍𑌗𑌾𑌸𑌮𑍇𑌤 𑌶𑍍𑌰𑍀𑌦𑍇𑌵𑌨𑌾𑌯𑌕 [illegible] 𑌕𑍈𑌙𑍍𑌕𑌰𑍍𑌯𑌧𑍁𑌰𑌨𑍍𑌧𑌰𑌾𑌣𑌾𑌂, 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣 [illegible] 𑌕𑍋𑌟𑍀𑌰 𑌕𑍋𑌟𑌿 𑌖𑌚𑌿𑌤 [illegible] 𑌮𑌣𑌿 𑌕𑌿𑌰𑌣 𑌪𑌟𑌲 𑌪𑌾𑌟𑌲𑌿𑌤 𑌪𑌾𑌦𑌪𑍀𑌠 [illegible] 𑌣𑌾𑌂, [illegible] 𑌲𑌕𑍍𑌷𑌣 𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣 [illegible] 𑌶𑍍𑌰𑍀 𑌅𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌦𑌿 𑌰𑌹𑌸𑍍𑌯𑌤𑍍𑌰𑌯 𑌜𑌗𑌦𑍁𑌜𑍍𑌜𑍀𑌵𑌨𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌾𑌂, 𑌸𑌕𑌲 [illegible] 𑌶𑍍𑌰𑍀 𑌰𑌾𑌜𑌹𑌂𑌸𑌾𑌵𑌤𑌾𑌰𑌾𑌣𑌾𑌂, 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑌕𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌾𑌨𑌾𑌂, 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀 𑌤𑍋𑌤𑌾𑌦𑍍𑌰𑌿 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 [illegible] 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌤𑌮𑌾𑌃 𑌪𑍀𑌠𑌾𑌧𑌿𑌪𑌤𑌯𑌃 [illegible] 𑌕𑌲𑌿𑌜𑌿𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜 𑌸𑌂𑌯𑌮𑌿 𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌾𑌃. [illegible] |

தனியன்.

ஸ்ரீமத் யதீந்த்ர வரயோகி பதாப்ஜயுக்ம
ப்ரேமாப்தி வாநகிரியோகி தயைகபாத்ரம்
வேதாந்தயுக்ம விஶதீகரணப்ரவீணம்
ராமாநுஜம் முநிவரம் ஸததம் நமாமி.

இந்த ஸ்வாமியின் தீர்த்தம். ஆவணி மாதம் க்ருஷ்ண பக்ஷ ஷஷ்டி. அது, சென்ற ஆவணி மாதம் 12௳ (27-8-37) ல் நேர்ந்தது. அதை உத்தேசித்துத் திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் முதல் நாள் தொடக்கமும், அன்று சாற்று முறையும் நடந்து ததீயாராதநமும் மிக விமர்சையாய் நடைபெற்றது. இதற்குப் பொருளுதவி புரிந்தவர் ஹாஜ்விட் மிர்ஜாபுரம் ஜமீன்தாரவர்கள். தேஹஶ்ரம மெடுத்துக் கொண்டவர் ஷை மடத்து ஸ்ரீ கார்யம் ஆழ்வாரய்யங்கார்.

ஒரு நிரூபகர்.

திருப்பவித்ரோத்ஸவம்

நிகழும் ஈஶ்வர ௵ ஆவணி௴ 1—(16—8—37) ல் மாம்பலம் கோதண்டராமஸ்வாமி ஸந்நிதியில் பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணமாய் 2௳ முதல், 6௳ வரை ஸம்ஸ்க்ருத த்ராவிட ரூபமான வேதங்களையும், ஸ்ரீ பாஷ்யம், ஸ்ரீ கீதா பாஷ்யம், ஸ்ரீ ராமாயணம் முதலான க்ரந்தங்களையும் பாராயணம்

பண்ணும்படி செய்து 6௳ இரவு திருவீதிப் புறப்பாடும் நடைபெற்று, பூர்ணாஹுதியுமாய் சாற்றுமுறையும் அதிவிமர்சையாய் நடைபெற்றது.

ஷை கோஷ்டியிலன்வயித்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும், கோயில் பரிகரங்களுக்கும் விசேஷமாய் ததீயாராதநமும் நடத்தப்பட்டு யதோசிதம் ஸம்பாவனையும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஷை. உத்ஸவத்தை இவ்வாறு நடத்துவதில் ச்ரமமெடுத்துக் கொண்ட ஸ்ரீமான்கள், களத்தூர் ஸ்ரீநிவாஸராகவாசாரியார். அகரம், கஸ்தூரி பார்த்தசாரதி அய்யங்கார், கல்யாணபுரம் ஸ்ரீநிவாஸ அய்யங்கார். இம்மூன்று திருநாமங்களையும், அவர்களுக்கு ஸஹகரித்த இதர ஆஸ்திகர்களையும் ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி விசேஷகடாக்ஷம் செய்தருளி ப்ரதிஸம்வத்ஸரமும் இவ்வுத்ஸவம் இவ்வாறே நடத்தி வருமாறு அநுக்ரஹிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

க. வ திருமலாசாரி.

மாம்பலம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

ஷை சபையினுதரவில் ஸ்ரீ ஜயந்தி மஹோத்ஸவத்தை உத்தேசித்து 30—8—37. துடங்கி 8—9—37. முடிய, ப்ரஹ்ம ஸ்ரீ உடையாளூர் அப்புஸ்வாமி சாஸ்த்ரிகள், ஸ்ரீ. உ. வே. கொடவாசல் நரஹிம்ஹாசாரியார், ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார் R. கேசவய்யங்கார், C. நரஸிம்ஹாசாரியார், சேட்லூர் சுந்தராசாரியார், காழிச் சீராம விண்ணகரம் ஸந்தானகிருஷ்ணய்யங்கார், கீழச்சேரி பரவஸ்து ஸ்ரீநிவாசாரியார், திருநாராயணபுரம் கோவிந்தப்பங்கார் ஆகிய இப்பதின்மர்களாலும், ஸ்ரீ க்ருஷ்ணாவதாரம், பகவத் கீதையும் பாஷ்யகாரரும், கண்ணனும் காகுத்தனும், ஸ்ரீ க்ருஷ்ண தௌத்யம், கண்ணனும் காரிமாறனும், கோதையும் கோபாலனும், அச்யுதனும் அருளிச் செயல்களும், கண்ணனும் காந்திஜீ சுதனும், கிருஷ்ணனும் கிருஷ்ணையும், கவிதார்க்கிகஸிம்ஹமும் யசோதை இளம் சிங்கமும், ஸ்ரீ ருக்மணிப் பிராட்டி திருக்கல்யாணம். ஆகிய இப்பத்து உபந்யாஸங்களும் அடைவே நடைபெற்றன.

இங்ஙனம்.

மாம்பலம் ஸ்ரீ வைஷ்ண ஸித்தாந்த ஸபையார்.

திருவலிக்கேணித் தமிழ்ச் சங்கம்

ஷை சபையினுதரவில் பெரியாழ்வார் திருநாட் கொண்டாட்டமும், சங்கவித்வானுகத் திகழ்ந்த பண்டித பூஷணம் ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான் தில்லையம்பூர் ஸ்ரீ உ. வே. சக்ரவர்த்தி ஆசார்ய ஸ்ரீ ராம பத்ராசாரியாரின் பிரிவின் அநுதாபக் கூட்டமும். ஸ்ரீ ஆண்டாள் மஹோத்ஸவக் கொண்டாட்டமும் ஸ்ரீ ஜயந்தி மஹோற்சவக் கொண்டாட்டமும் நடைபெற்றன.

சாதுர் மாஸ்ய ஸங்கல்ப மஹோற்சவம்.

ஈச்வர வருஷம் ஆடித்திங்கள் எட்டாந்தேதி (23—7—37) வெள்ளிக்கிழமை ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ஹ ஸ்வாமி ஸந்நிதியில் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருக்கிற ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ம சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடையவும், ஷை ஸ்ரீ அழகிய சிங்கரால் தன் காலத்திற்குப்பின் ஸ்ரீ அஹோபில மடம் 42-வது பட்டத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கிற ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீரங்க சடகோப யதீந்திர மஹாதேசிகனுடையவும் சாதுர் மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம், ஸ்ரீ ஸந்நிதி ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீரங்கம் தசாவதாரப் பெருமாள் ஸந்நிதியில் வெகு சிறப்பாக நடந்து, ததீயாராதனமும், டோலோத்ஸவமும் வெகு விமரிசையாய் நடைபெற்றன. —ப. ரே. திருமலே அய்யங்கார்.

ஸ்ரீகாஞ்சி ஸ்ரீயதோக்தகாரி திருப்பவித் ரோத்ஸவம்

ஷை உத்ஸவம் நாளது ஹு ஆவணி மீ 31௳ (15—9—37) ல் அங்குரார்ப்பணம் ஆரம்பித்து புரட்டாசி 4௳ (20—9—37) ல் பூர்ணாஹுதியாய் சாற்றுமுறையும் நடைபெற்றது.

புரட்டாசி மீ 20௳ (6—10—37) முதல் 14—10—37 வரையில் நவராத்ரி உத்ஸவம் நடைபெறும்.

ஷை உத்ஸவத்தில் ஹரிகதா காலக்ஷேபங்களும் சங்கீதக் கச்சேரிகளும் விசேஷமாக நடைபெறுமெனத் தெரிய வருகிறது.

இங்ஙனம்: தம்பா கோபாலாசாரியர் குமாரர்

நல்லப்பா திருவேங்கடாசாரியர். எக்ஸிச்யூடிங் தர்மகர்த்தா.

பஞ்சாங்கம்—அக்டோபர்மீ

இங். தேதி	தமிழ்	வாரம்	திதி நா.வி.	நட்சத்திரம் நா.வி.	யோகம் நா.வி.	கரணம் நா.வி.
1	௧௫	வெள்	துவா 31-23	மக 52-4	ஸாத் 31-12	தை 26-21
2	௧௬	சனி	திர 29-40	பூர 52-27	சுப 27-1	வணி 29-40
3	௧௭	ஞா	சது 29-8	உத் 54-0	சுப 28-45	சகு 29-8
4	௧௮	திங்	அ ● 29-46	அஸ் 56-43	பிரா 21-24	நாக 26-46
5	௧௯	செவ்	பிர 31-47	சித் 60-0	மா 20-7	கிம் 0-36
6	௨0	புதன்	துதி 34-58	சித் 0-45	வை 19-47	பால 3-22
7	௨௧	வியா	திரு 39-8	சுவா 5-52	விஷ் 20-13	தை 7-3
†8	௨௨	வெள்	சது 43-53	விசா 11-46	பிரி 21-14	வணி 11-30
9	௨௩	சனி	பஞ் 48-54	அனு 17-58	ஆயு 22-27	பவ 16-23
10	௨௪	ஞா	ஷஷ் 53-59	கேட் 24-28	சௌ 23-47	கௌ 21-26
11	௨௫	திங்	சப் 58-39	மூல 30-31	சோ 24-55	கர 25-49
‡12	௨௬	செவ்	அஷ் 60-0	பூரா 36-0	அதி 25-34	பத் 30-29
13	௨௭	புதன்	அஷ் 2-24	உத் 40-31	சுக 25-28	பவ 2-24
§14	௨௮	வியா	நவ 4-58	திரு 24-26	கௌ 4-58	
15	௨௯	வெள்	தச 6-26	அவி 45-46	சூல 22-31	கர 6-58
*16	௩0	சனி	ஏகா 6-35	சத 46-55	கண் 19-35	பத் 6-53
17	௧	ஞா	துவா 5-27	பூர 46-38	விர் 15-41	பால 5-27
18	௨	திங்	திர 3-11	உத் 45-16	துரு 5-58	தை 3-11
19	௩	செவ்	○ 55-38	ரேவ 43-2	வியா 5-15	பத் 26-9
20	௪	புதன்	பிர 50-45	அசு 40-4	வஜ் 52-1	பால 28-11
21	௫	வியா	துதி 45-54	பர 36-27	சித் 44-36	தை 17-59
22	ஐப்பசி ௬	வெள்	திரு 39-27	கி ❋ 32-32	விதி 31-38	வணி 12-10
23	௭	சனி	சது 33-32	ரோ 28-27	வரி 29-14	பால 20-35
24	௮	ஞா	பஞ் 27-40	மிரு 24-23	பரி 21-31	தை 27-40
25	௯	திங்	ஷஷ் 22-4	திரு 20-38	சிவ 13-58	வணி 22-4
26	௧0	செவ்	சப் 16-55	புன 17-11	சித் 6-47	பவ 16-55
27	௧௧	புதன்	அஷ 12-28	பூச 14-28	ஸாத் 0-1	கௌ 21-28
28	௧௨	வியா	நவ 8-25	ஆயி 12-17	சுப் 48-27	கர 8-25
29	௧௩	வெள்	தச 5-35	மக 11-14	பிரா 43-57	பத் 5 35
*30	௧௪	சனி	ஏகா 3-48	பூர 11-19	மா 40-16	பால 3-48

* இவ்வடையாளம் ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசியைக் காட்டும்.

† திருப்பதி கருடஸேவை.

‡ ஷை. திருத்தேர்.

§ ஸ்ரீ வில்லிபுத்தூர் வடபெருங்கோயிலுடையான் திருத்தேர்.

அசல் பவுனில் கட்டின ரங்கோன் வைர
நகைகளும் சுத்தமான வெள்ளிப் பாத்திரங்
களும் காரண்டியுடன் கொடுக்கும் ஷாப்பு.

இதுதான்

ராதாகிருஷ்ணா ஜூவெல்லரி எம்போரியம்,

10, கோவிந்தப்ப நாயக்கன் தெருவு, சென்னை.

பகவத் விஷயம்

ஆழ்வாரருளிச்செய்த திருவாய்மொழிக்கு திருக்குருகைப்பிரான் பிள்ளான், முதலான திருநாமங்கள் அருளிச் செய்த ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, ஈடுமுப்பத்தாறாயிரப்படி ஆகிய ஐந்து வியாக்யானங்களும், அடைய வளைந்தான் அரும்பதமும், ஜீயர் அரும்பதமும் அச்சிடப்பட்டு ஒவ்வொருபத்தும் ஒரு புஸ்தகமாக பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. 5 ரூபாய் மணியார்டர் செய்தால் மீதி வி. பி. மூலம் அனுப்பப்படும். விலை ரூ. 50—0—0 மற்றும் ஸம்ப்ரதாயப் புஸ்தகங்களும் நம்மிடம் கிடைக்கும்.

S. R. S. வைஜயந்தீ ஆபீஸ்,
24, சந்திரப்ப முதலி தெரு ஜி. டி. மதரூஸ்.

P. KOTHANDARAM PILLAI

SON OF LATE

P. S. PONNUSAWMY PILLAI,

HIGH CLASS CABINET MAKER AND UPHOLSTERER.

Established in 1854.

Ponnusawmy Pillai's Buildings

39 & 44, Esplanade West :: (Rattan Bazaar) :: P. T., MADRAS

நிபந்தனைகள்

1. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந சபையின் சார்பாக இப் பத்திரிகை நடைபெறும்.
2. எந்த சம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்காரணத்தை யிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.
3. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷயங்களை சிற்றறிவுடைய என் போல்வார்களுக்கும் சிறிது பயன் படுமாறு வித்வான்கள் எழுதி யநுக்ரஹித்தால் அதை இதில் ப்ரசுரிக்கப்படும்.
4. ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்டமுடையவர்கள் ப்ரவேசக் கட்டணமாக ரூ. 1—0—0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.
5. வருஷத்திற்கு 5 ரூ. 1—0—0 கொடுக்குமவர்கள் போஷகர்களாவார்கள்.

விளம்பரம்

முழுப்பக்கம் ஒரு தடவைக்கு		....	5	0	0
அரைபக்கம்	,,	....	3	0	0
கால்பக்கம்	,,	....	2	0	0

—பத்ராதிபர்.

பாரிசவாயுவுக்கு பயப்படவேண்டாம்!

க்ஷீரபலா

(101 தடவை பாகம் செய்தது.)

பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி. எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. இதை எங்களுடைய "அயவீரஸிந்தூர"த்துடன் கலந்து உட்கொண்டால் இன்னும் அமோகமான பலன் அதிசீக்கிரத்தில் கிடைக்கும்.

க்ஷீர பலா:—அவுன்ஸ் 1-க்கு 3-8-0. ½-அவுன்ஸ் 1-12-0.

அயவீரம்:—ஒருவாரத்திற்கு போதுமான மருந்து 1-0-0.

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்

107, பிராட்வே, சென்னை.

முரல்கின்றன. திருமார்பிலே வநமாலை அணியப்பட்டிருந்தும் அங்கு ஒருவண்டும் மொய்க்காமல் முடியின்மீதே மொய்க்கின்றமைக்கு யாது காரணமிருக்கும் என்று விமர்சிக்குமளவில், ஆண்டாள் சூடிக்களைந்த சிறந்தமாலை இம்முடிமீதே யிருந்ததலால் அதினுடைய போக்யதாதிசயத்திலே யீடுபட்டு அங்கே மொய்க்கின்றனவாகக் கொண்டு அருளிச்செய்கிறார்.

"மிதः ப்ரதிகாத லோலाः" என்றதனால் பல்லாயிரம் வண்டுகள் அங்குச் சென்றதாகவும், முந்துற முன்னம் சில வண்டுகள் திருக்குழல் மாலையில் இடம் பெற்றுவிடவே மற்றவண்டுகள் தகர்ப்புண்டு, அகன்று அப்பால்போய்விடவும் மனமின்றியே மற்றொருகாலாகிலும் நமக்கு இங்கு இடம் கிடைக்குமோ என்னும் நசையினால் அவ்விடத்திலேயே மேலே வட்ட மிட்டுக் கொண்டிருக்கின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குழல்மாலையில் இடம் பெறுதகாலத்திலும் வைஜயந்தியில் வந்து சேர அவ்வண்டினங்களுக்கு மனமில்லாமையைக் காட்டும் முகத்தால் குழல்மாலையின் ஒப்புயர்வற்ற சிறப்பு காட்டப்பட்டதாயிற்று.

"புஜாந்தரகதாம் அபி" என்றதனால் கண்ணுக்கு எளிதாகத் தென்படக்கூடியதான திருமார்பில் வநமாலை விளங்காநிற்கச் செய்தேயும் வண்டுகளின் மனம் அதிற் செல்லவில்லை யென்றும், திருக்குழல் மாலை அங்ஙனன்றிக்கே சிரமப்பட்டுக் காணக்கூடியதான இடத்திலிருக்கச் செய்தேயும் ஆகர்ஷண சக்தி அது தன்னிலே விஞ்சி யிருக்கின்றதென்றும் தெரிவித்தவாறு.

"பர்ஹாதபத்ரருசிம் ஆரசயந்தி"; என்றதனால் ஆண்டாளுடைய கடாக்ஷத்திற்கு இலக்கானவர்கள் "குடை நிழல் பொலிவர்தாமே" என்னலாம்படியான அரசுரிமையைப் பெறுவார்களென்று ஸூசிதமாயிற்று. (14)

आमोदवत्यपि सदा हृदयंगमाऽपि रागान्विताऽपि ललिताऽपि गुणोत्तराऽपि।
मौलिस्रजा तव मुकुन्दकिरीटभाजा गोदे! भवत्यधरिता खलु वैजयन्ती ॥१५

ஆமோதவத்யபி ஸதா ஹ்ருதயங்கமாபி
ராகாந்விதாபி லலிதாபி குணோத்தராபி,
மௌலிஸ்ரஜா தவ முகுந்தகிரீடபாஜா
கோதே பவத்யதரிதா கலு வைஜயந்தீ. 16

हे गोदे ! वैजयन्ती आमोदवती सत्यपि सदा हृदयंगमा सत्यपि रागान्विता सत्यपि ललिता सत्यपि गुणोत्तरा सत्यपि मुकुन्दकिरीटभाजा तव मौलिस्रजा अधरिता खलु भवति।

गोदादेव्युपभुक्तमालिकाया उत्कर्षातिशयः प्रकारान्तरेणात्र वर्ण्यते। वैजयन्त्यास्सकलसद्‌गुणसंपन्नत्वे न कस्यापि कोऽपि विवादः। अथापि सा गोदादेवीमालिकया अधः कृताऽभूदिति अपरोक्षमेतत्। इयं तु मालिका उत्तमाङ्गे विराजते। सा तु वैजयन्ती मध्यमाङ्गे (वक्षसि) वर्तते। एतावतैव उभयोरुत्कर्षापकर्षौ सुखेन ज्ञातुं योग्याविति भावः। अत्युत्कृष्टस्यैव खलु वस्तुन उत्तमाङ्गे धारणम्।

अस्मिन् पद्ये शब्दानां स्वारस्यपरामर्शे प्रायस्तुल्यगुणयोरुभयोर्ललनयोः मिथस्स्पर्धमानयोः एकस्या विजयः अपरस्याः पराजयश्च संजात इति वैनोदिककथाध्वनिर्गम्यते। गोदामौलिमालेति एकस्या ललनाया नाम। अपरस्यास्तु वैजयन्तीति नाम। उभयोश्च कलहो जातः। मालिका तु वैजयन्तीमधो निपात्य उपरिष्टादारुरोह—इत्युक्तिचमत्कारो गम्यः। "आमोदवती" इत्यादि विशेषणानां श्लिष्टत्वमवधेयम्॥

(அ) ஹே ! கோதே ! வைஜயந்தீ ஆமோதவதீ அபி, ஸதா ஹ்ருதயங்கமா அபி, ராகாந்விதா அபி, லலிதா அபி, குணோத்தரா அபி, முகுந்த கிரீட பாஜா தவ மௌலிஸ்ரஜா அதரிதா கலு பவதி.

ஆண்டாளே ! வைஜயந்தி யென்னும் வனமாலை சிறந்த பரிமளத்தோடு கூடியிருந்த போதிலும், எப்போதும் ஹ்ருதயங்கமமாகவே யிருந்த போதிலும், புஷ்பத்திற்கு இயற்கையாக இருக்க வேண்டிய நன்னிறம் குன்றாதிருந்த போதிலும், ஸௌகுமார்யம் குறையற்றிருந்த போதிலும், மற்றும் ஸகல குணஸம்பந்நமாயிருந்த போதிலும், எம்பெருமானது திருமுடியை யடைந்த உமது திருக்குழல் மாலையினால் தாழ்வடைந்ததாகவன்றோ ஆயிற்று.

खलु (கலு) என்கிற அவ்யயம் ப்ரஸித்தம் என்னும் பொருளைச் சொல்வதாதலால், வைஜயந்தியானது கீழ்ஸ்தானத்திலிருப்பது கொண்டும் ஆண்டாளுடைய திருக்குழல்மாலை மேல் ஸ்தானத்திலிருப்பது கொண்டுமே இவற்றின் தாரதம்யம் உலகை மறிந்ததன்றோ ; இதனை நாம் தனிப்பட நிரூபிக்க வேணுமோ? என்னும் திருவுள்ளம் விளங்கும்.

ஆண்டாளுடைய மாலைக்கும் வனமாலைக்கும் துல்யமாக இருக்கக் கூடிய [ஸாதாரணமான] பெருமைகளைப் பூர்வார்த்தத்தில் அருளிச் செய்து, ஆண்டாள் மாலைக்கு மாத்திரம் அஸாதாரணமாக அமைந்த இரண்டு பெருமைகளை மூன்றாவது பாதத்தில் அருளிச் செய்துளர். [ஆமோதவதீ] நறுமண முடைத்தாயிருத்தல் இரண்டுக்கும் துல்யம். [ஹ்ருதயங்கமா] வநமாலை ஹ்ருதய ப்ரதேசத்தை [திருமார்பை] அடைந்திருப்பது ; ஆண்டாள் மாலை எம்பெருமானுக்கு மநோஹரமாயிருப்பது. [ஹ்ருதயங்கமஶப்தம் ஹ்ருதயஹாரி என்னும் அர்த்தத்தில் ப்ரஸித்தம்.) [ராகாந்விதா] வநமாலை சிவப்பு நிறத்தோடு கூடியிருப்பது. ஆண்டாள் மாலை சிவப்பு நிறத்தோடு கூட அநுராகத் தோடும் கூடியது. ஆண்டாளுடைய காதலே மாலையாக வடிவெடுத்ததென்று கருத்து. [லலிதா] ஸௌகுமார்யம் உபய ஸாதாரணம். [குணோத்தரா] குணங்களால் சிறந்திருப்பது என்பது உபயஸாதாரணம். புஷ்பம் தொடுக்கும் நாருக்கு குணமென்று பெயராதலால் ஆண்டாள் மாலையின் பக்ஷத்தில் அவ்வர்த்தமும் அநுஸந்தேயம். உபய ஸாதாரணங்களான அம்ஶங்களை முன்னிரண்டு பாதங்களால் சொல்லிற்றாயிற்று.

இனி மூன்றாவது பாதத்தால் ஆண்டாள் மாலைக்கு அஸாதாரணமாகச் சொல்லப்படுகிற ஏற்றமாவது "முகுந்த கிரீட பாஜா" என்கிற விசேஷணபதத்தினால் எம்பெருமான் முடிமீது ஏறி யிருக்கப் பெறுகையாகிற ஏற்றமும், "தவ மௌலிஸ்ரஜா" என்கிற விசேஷ்யபதத்தினால் ஆண்டாள் சிரஸாவஹிக்கப் பெறுகையாகிற ஏற்றமுமாம்.

நைஷதகாவ்யத்தில் தமயந்தீ கேஶபாஶவர்ணநத்தில் "**चिकुरप्रकरा जयन्ति ते विदुषी मूर्धनि सा बिभर्ति यान्। पशुनाऽप्यपुरस्कृतेन तत्तुलनामिच्छतु चामरेण कः**— சிகுரப்ரகரா ஜயந்தி தே விதுஷீ மூர்த்தநி ஸா பிபர்த்தி யாந், பஶுநாப்யபுரஸ்க்ருதேந தத்துலநாமிச்சது சாமரேண க:" என்றொரு ச்லோகமுள்ளது. தமயந்தியின் கூந்தலுக்கு என்ன ஏற்றமென்றால் அவளுடைய ஶிரஸ்ஸின்மீது ஏறியிருக்கப் பெற்றிருப்பதுவே அதற்கு ஏற்றமன்றோ என்று சமத்காரமாக இதில் சொல்லப்படுகிறது. அதுபோல, ஆண்டாளது திருக்குழலின்மீது ஏறப்பெறுவதே இம்மாலைக்கு ஒரு ஏற்றம் என்கிறது. ஆக, திவ்ய தம்பதிகளின்

சிரோ பூஷணமாயிருத்தலாகிற ஒப்புயர்வற்ற பெருமையைப் பெற்றது ஆண்டாள் கூந்தல் மாலை. வநமாலைக்கு இந்தப் பெருமை சிறிதுமில்லை; ஆமோதவத்த்வம் முதலிய வேறு சில பெருமைகள் இருந்தாலும் இவை ஆண்டாள் மாலைக்கு முள்ளனவேயாதலால் ஸாதாரண தர்மங்களோடு அஸாதாரண தர்மங்களையும் பெற்றிருக்கின்ற ஆண்டாள் மாலையே சிறந்ததாகும்; இந்தச் சிறப்பை நாம் எடுத்துக் காட்ட வேண்டாதபடி இரண்டினுடையவும் இருப்பிடமே ஸ்பஷ்டமாகக் காட்டி விடுகிறது—என்றாராயிற்று.

ஏறக்குறைய ஒத்த தன்மைகளையுடைவர்களான இரண்டு பெண்மணிகளுக்குப் பரஸ்பரம் கலஹமுண்டாகி ஒருத்தியை மற்றொருத்தி கீழே தள்ளித் தோற்கடித்து மேம்பட்டு நின்று வெற்றி பெற்றதாக ஒரு விநோதக் கதை சொல்வதும் இந்த ச்லோகத்தில் தொனிக்கும். "ஆமோதவதீ" இத்யாதியாகச் சொல்லப்பட்ட குணங்கள் பெண்மணிக்கும் இருக்கத்தக்கவைகளே. ஆமோதமென்று (இப்போது) ஸந்தோஷத்தைச் சொல்லுகிறதாகவுங் கொள்ளலாம். [ஹ்ருதயங்கமா] காதலனுடைய நெஞ்சை விட்டுப் பிரியாதவள், [ராகாந்விதா] அநுராகத்தோடு கூடியவள். [லலிதா] ஒரு வகையான ச்ருங்கார சேஷ்டிதத்தை யுடையவள். "भ्रूनेत्रादि क्रियाशालिसुकुमार विधानतः। हस्तपादाङ्ग विन्यासं कुर्वती ललिता मता ॥" ப்ரூநேத்ராதி க்ரியாஶாலிஸுகுமாரவிதாநத:, ஹஸ்த பாதாங்கவிந்யாஸம் குர்வதீ லலிதா மதா என்றதுங் காண்க. (குணோத்தரா) ஸௌந்தர்யம் லாவண்யம் முதலிய குணங்களால் சிறந்தவள்.—இங்ஙனே ஆழ்பொருள்கள் ஆழ்ந்து உணரத்தக்கன.

त्वन्मौलिदामनि विभोश्शिरसा गृहीते स्वच्छन्दकल्पितसपीतिरसप्रमोदाः।
मञ्जुस्वना मधुलिहो विदधुः स्वयं ते स्वायंवरं कमपि मङ्गलतूर्यघोषम् ॥

த்வந்மௌலிதாமநி விபோ: ஶிரஸாக்ருஹீதே
ஸ்வச்சந்தகல்பிதஸபீதிரஸப்ரமோதா:
மஞ்ஜுஸ்வநா மதுலிஹோ விதது: ஸ்வயம் தே
ஸ்வாயம்வரம் கமபி மங்கல தூர்யகோஷம்.

(गोदे!) विभोः शिरसा गृहीते त्वन्मौलिदामनि स्वच्छन्दकल्पित-सपीतिरसप्रमोदाः (अत एव) मञ्जुस्वनाः मधुलिहः ते स्वायंवरं कमपि मङ्गलतूर्यघोषं स्वयं विदधुः ॥

गोदाया अवतंसभूता मालिका श्रीरङ्गपतिना शिरसा गृहीताऽभूत् खलु। तस्यां च मालिकायां मधुकराः संघशो निषण्णास्सन्तः परिपूर्ण-मधुपान प्रमुदिताः कर्णश्राव्यं कलध्वनिं कलयन्ति। स च ध्वनिः श्रीगोदायाः स्वयंवरमहोत्सवमङ्गलवाद्यघोष इव भातिस्मेत्युत्प्रेक्ष्यते।

"सपीतिः स्त्री तुल्यपानम्" इत्यमरः। सहयुक्तैः या पानकेलिः क्रियते सा सपीतिः। अस्मिन् श्लोके उत्प्रेक्षा गम्या। लोके वैवाहिक-प्रकरणेषु पुष्पधारणम्, सजग्धिकेली, संतोषानुभवः, मधुरशब्दविजृम्भणम्, भोग्यवस्तुनिषेवणम्, मङ्गलवाद्यप्रघोषणमित्यादिकं प्रसिद्धम्। एतत्सर्वं प्रकृतपद्ये अतिचारुतया प्रतिपादितमवधेयम्। प्रथमपादे पुष्पधारण-मुक्तम्। सपीतिशब्देन सजग्धिकेलिरुक्ता। प्रमोदशब्देन आनन्दानु-भवोऽभिहितः। मञ्जुस्वना इत्यनेन मधुरशब्द विजृम्भण मुदीरितम्। मधुलिह इत्यनेन स्वादुभक्ष्यवर्गनिषेवणमुक्तम्। चरमचरणेन मङ्गलवाद्य-घोषोक्तिः। एतादृशं शब्दसन्निवेशघटनावैलक्षण्यं रसिकजनास्वाद-योग्यम्।

स्वायंवरमिति तद्धितवृत्तिः। स्वयंवरसमययोग्यमिति भावः॥

(அ.) கோதே! விபோ: ஶிரஸா க்ருஹீதே த்வந்மௌலிதாமநி ஸ்வச்சந்தகல்பிதஸபீதிரஸப்ரமோதா: (அத ஏவ) மஞ்ஜுஸ்வநா: மதுலிஹ: தே ஸ்வாயம்வரம் கமபி மங்கலதூர்யகோஷம் ஸ்வயம் விதது:.

ஆண்டாளே! எம்பெருமானது திருமுடியினால் தாங்கப்பட்ட உமது கூந்தல் மாலையில் யதேஷ்டமாகக் கூடி மதுபானம் பண்ணிக் களித்தவைகளாய், செவிக்கினிய ரீங்காரத்தையுடையவைகளான வண்டுகளானவை உம்முடைய ஸ்வயம்வர மஹோத்ஸவத்திற்கு ஒரு விலக்ஷணமான மங்கள வாத்ய முழக்கத்தைச் செய்தன போலும்.

ஆண்டாளுடைய ஸ்வயம்வர மஹோத்ஸவத்திற்கு "மத்தளங் கொட்ட வரிசங்கம் நின்றூத" என்கிறபடியே லௌகிக வாத்ய கோஷம் தேவையில்லை; இவளது கூந்தல் மாலை எம்பெருமானது திருமுடியில் ஏறியிருக்கும் போது அம்மாலை தன்னில் வண்டினங்கள் வந்து படிந்து குழாங்குழாமாய் மதுவைப் பருகிக் களித்து முரல்கின்ற வொலிதானே மங்கள வாத்ய முழக்கமாக ஆயிற்றென்று உல்லேகித்தபடி.

இந்த ச்லோகத்தில் ஆண்டாளுடைய ஸ்வயம்வரமாகிற திருமணத்தின் ப்ரஸ்தாவம் வந்த போதே இதில் பிரயோகிக்கப் பட்டுள்ள ஶப்தங்கள் யாவும் மங்கல மயமாகவே அமைந்த அழகு நோக்கத் தக்கது. உலகில் விவாஹ காலங்களில், பூச்சூடுதல், குழாங் கூடியுண்ணுதல், ஸந்தோஷ மநுபவித்தல் மங்கல வொலி மல்குதல், இனிய வுணவுகளை உட்கொள்ளுதல், மங்கல வாத்யங்கள் முழங்குதல் முதலியன நிகழ்வது முறைமை; இவை யத்தனையும் இந்த ஶ்லோகத்தில் சொல் தொடை நயத்தில் குறிக்கொள்ளத்தகும். முதல் பாதத்தில் பூச்சூடுதல் பேசப்பட்டது. ஸமீதி என்பதனால் கூடியுண்ணுதல் கூறப்பட்டது. ப்ரமோத ஶப்தத்தினால் ஸந்தோஷ மநுபவித்தல் தெரிவிக்கப் பட்டது. மஞ்ஜுஸ்வநா: என்பதனால் மங்கலவொலி மல்குதல் மொழியப் பட்டது. மதுலிஹ: என்பதனால் இனிய வுணவு அருந்துதல் அறையப் பட்டது. ஈற்றடியினால் மங்கல வாத்ய முழக்கம் தெரிவிக்கப் பட்டது.

இத்தகைய சொற்றொடையழகு கவித்திறமையை நன்கு புலப்படுத்துகின்றது. (௧௬)

विश्वायमानरजसा कमलेन नाभौ वक्षस्स्थले च कमलास्तनचन्दनेन ।
आमोदितोऽपि निगमैर्विभुरंघ्रियुग्मे धत्ते नतेन शिरसा तव मौलिमालाम् ॥

விஶ்வாயமாநரஜஸா கமலேந நாபௌ
வக்ஷஸ்ஸ்த்தலே ச கமலாஸ்தநசந்தநேந,
ஆமோதிதோபி நிகமைர் விபுரங்க்ரியுக்மே
தத்தே நதேந ஶிரஸா தவ மௌலிமாலாம். 17

गोदे! विभुः नाभौ विश्वायमानरजसा कमलेन आमोदितोऽपि, वक्षस्स्थले कमलास्तनचन्दनेन आमोदितोपि, अंघ्रियुग्मे निगमै रामोदितोपि (अतृप्तस्सन्) नतेन शिरसा तव मौलिमालां धत्ते ।

लोके महाधनाढ्या अपि लब्धैर्धनैस्तृप्तिं नाधिगच्छन्तीति प्रसिद्धिः। भगवतोपि रीतिस्तादृशीति विवक्षितमिवात्र । भगवान् स्वयं "सर्वगन्ध" इति श्रुतिप्रसिद्धः । तदुपरि आगन्तुकसौरभसम्पत्समृद्धिरपि तस्य भूयसी। नाभौ कमलसौरभमनिर्वचनीयम्। वक्षसि कमलास्तनचन्दन-परिमलप्राचुर्यमद्भुतम् । चरणद्वितये श्रुतिसौरभमप्रमेयम्। एवं नाम सौरभपरम्पराजुष्टोऽपि विभुः एतावता मनागपि तृप्तिमनुद्वहन् * सर्वस्य

गात्रस्य शिरः प्रधानमित्युक्तरीत्या प्रधानतमस्य शिरसस्सौरभातिशयं संपिपादयिषुः गोदादेवीमौलिमालां प्रणतेन शिरसा परिगृह्णातीति प्रति-पादनमिदं गोदोपभुक्तमालिकायास्सौरभं सर्वातिशायीति प्रतिपादने पर्यवस्यति ।

लौकिकेषु सरसिजेषु यथा सन्ति रजांसि, तथा भगवन्नाभीनलिनेऽपि रजसां स्थितिस्संभविनी ; तेषु च रजस्सु एकैकमपि एकैकजगद्रूपतामश्नुत इवेति चमत्कारातिशयः " विश्वायमानरजसा " इत्यनेनोद्घाटितः ॥

(அ௩) கோதே விபு: நாபௌ விஶ்வாயமாநரஜஸா கமலேந ஆமோதிதோபி, வக்ஷஸ்ஸ்தலே கமலாஸ்தநசந்தநேந ஆமோதிதோபி அங்க்ரியுக்மே நிகமை: ஆமோதிதோபி (அத்ருப்தஸ்ஸந்) நதேந ஶிரஸா தவ மௌலிமாலாம் தத்தே.

கோதாய்! ஒவ்வொரு ரஜஸ்ஸும் ஒவ்வொரு உலகமாகப் பரிணமிக்கும்படியான பல ரஜஸ்ஸுக்கள் பொருந்திய தாமரைப் பூவினால் திருநாபியிலும், பெரிய பிராட்டியாருடைய திருமுலைத் தடத்துக் கலவைச் சாந்தினால் திருமார்பிலும், வேதங்களினால் திருவடியிணையிலும் எம்பெருமான் நறுமணம் கொண்டிருக்கச் செய்தேயும் (இப்பரிமளங்களினால் த்ருப்தி பெறுதவனாய்) உம்முடைய கூந்தல் மாலையை முடிவணங்கி ஏற்றுக் கொள்ளுகிறான்.

எம்பெருமான் உபநிஷத்துக்களில் **'सर्वगन्धः'** என்று ப்ரஸித்தி பெற்றிருக்கின்றான்; அதற்குமேல் "கொப்பூழிலெழுகமலப் பூவழகர்" என்றபடியே திருநாபியில் தாமரைப் பூவினால் பரிமளம்; "**श्रीस्तनकस्तूरीवासनावासितोरसे**" என்றும் "**श्रीस्तनकस्तूरीमकरीमुद्रितोरसः**" என்றும் சொல்லுகிறபடியே பெரிய பிராட்டியாருடைய திருமுலைச் சாந்தினால் திருமார்பில் பரிமளம்; "**यस्य सारस्वत स्रोतो वकुलामोदवासितम्**" என்று யதிராஜ ஸப்ததியில் அருளிச் செய்தபடியே மகிழ் மாலையின் நறுமணம் மிக்க திருவாய்மொழியினால் திருவடியில் பரிமளம்; ஆக இவ்வளவு பரிமள ப்ராசுர்யம் நிரம்பி யிருக்கச் செய்தேயும் எம்பெருமான் இப்பரிமளங்களெல்லாவற்றினும் சிறந்ததோர் விலக்ஷணபரிமளம் பெறத் திருவுள்ளமாய் ஆண்டாளுடைய கூந்தல் மாலையைத் தலையாலிரந்து பெற்றுத் தரித்தருளுகிறான் என்றவிதனால் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் முடிமாலையினது நறுமணம் ஒப்புயர்வற்றது என்பது தெரிவிக்கப்பட்ட தாயிற்று.

மூன்றாவது பாதத்தில் நிகமை: என்றது த்ராவிட வேதத்தையே திருவுள்ளம் பற்றியதாயிருக்கத் தகுதி யுடையது: “திருவடிமேலுரைத்த தமிழ் ஆயிரத்துள்” என்றதைத் திருவுள்ளம் பற்றியே (अंघ्रियुग्मे) என்றார். “यस्य सारस्वत स्रोतो वकुलामोदवासितम्। श्रुतीनां विश्रमायालं शठारिं तमुपास्महे॥” என்ற யதிராஜ ஸப்ததி திவ்ய ஸூக்தியினால் திருவாய்மொழியில் பரிமளப்ராசுர்யம் அருளிச் செய்யப்பட்டிருப்பதனால் “निगमगन्धितः” என்றது அதற்குப் போரப் பொருந்தி யிருக்கும்.

[விஸ்வாயமாநரஜஸா] தாமரைப் பூவில் துகள் இருப்பது ஸஹஜமாதலால் திருநாபிக் கமலத்திலும் துகள் இருப்பதாகப் பேசப் பட்டது. அக்கமலம் ஸகல லோக ஸ்ருஷ்டிக்கும் காரண பூதமாதலால் ஒவ்வொரு துகளும் ஒவ்வொரு உலகமாகப் பரிணமிக்குமென்று சமத்காரமாக அருளிச் செய்தபடி. (17)

चूडापदेन परिगृह्य तवोत्तरीयं मालामपि त्वदलकैरधिवास्य दत्ताम्।
प्रायेण रङ्गपतिरेष बिभर्ति गोदे! सौभाग्य सम्पदभिषेकमहाधिकारम्॥

சூடாபதேந பரிக்ருஹ்ய தவோத்தரீயம்
மாலாமபி த்வதலகைரதிவாஸ்ய தத்தாம்.
ப்ராயேண ரங்கபதிரேஷ பிபர்த்தி கோதே!
ஸௌபாக்யஸம்பதபிஷேகமஹாதிகாரம்.

गोदे! एष रङ्गपतिः तव उत्तरीयम् त्वदलकैरधिवास्य दत्तां मालामपि चूडापदेन परिगृह्य सौभाग्यसंपदभिषेकमहाधिकारं प्रायेण बिभर्ति। भगवतस्सौभाग्यं यद्यपि स्वतस्सिद्धं तथापि, गोदादेव्याः स्तनोत्तरीयस्य अलकमालिकायाश्च शिरसा धारणादेव तस्य तत् संघटितमिति भक्त्यतिशयमूलकोऽयमुल्लेखः।

(அ) கோதே! ஏஷ ரங்கபதி: தவ உத்தரீயம், த்வதலகை: அதிவாஸ்ய தத்தாம் மாலாம்அபி சூடாபதேந பரிக்ருஹ்ய ஸௌபாக்ய ஸம்பதபிஷேக மஹாதிகாரம் ப்ராயேண பிபர்த்தி.

கோதாய்! இந்த அழகிய மணவாளப் பெருமாள் உம்முடைய மேலாடையையும், உமது கூந்தல்களினால் நறுமண மூட்டப்பட்டுப் பிறகு ஸமர்ப்பிக்கப் பட்ட பூமாலையையும் திருமுடியினால் ஏற்றுக்கொண்டு ஸௌபாக்கியமாகிற செல்வத்தில் அபிஷிக்தராகைக்கீடான தகுதியைப் பெறுகின்றார் போலும்.

Note Our
“STEAMER”
TRADE MARK

World's Best *By Every Test*

The Indian Chemical Diamond Works



சீமைக் கமலச் சிறப்பை சிக்கனச் செலவில் அடையலாம்

“கப்பல்” மார்க்கு ரங்கோன் வைரங்கள்

96, Mint Street, MADRAS

கடினம், பூரிப்பு ஒளி, குணங்களில் மிகச் சிறந்தவை.

ஒருமுறை விஜயஞ் செய்யுங்கள்

ஸம்ஸதீன் அன் இஸ்மாயில்
தி இண்டியன் கெமிக்கல் டைமன் ஒர்க்ஸ்.
96, சௌகார் பேட்டை, சென்னை.

மதிப்புரை

குடும்ப ராசிப்பலன்

நான்கு மாதத்திற் கொருமுறை வெளிவரும்

இப்பெயர் பூண்ட அருமருந்தன்ன புத்தகம் 16—8—37 ஈச்வர வருஷம் ஆவணி மாதம் 1வ ஆவிர்ப்பவித்து, அகில ஆஸ்திக குடும்பங்களுக்கும் வரவிருக்கும் கெடுதிகளை விலக்கிக் கொள்ள வேண்டிய ஸதுபாயங்களையும், ஹித சுக லாப க்ஷேமங்களையுமறிவித்து அகில ஜனங்களையும் ஆனந்திப்பியா நிற்கின்றது. இதில் பஞ்சாங்கம், ஜனனம், வியாபாரம், முகூர்த்தம், 12 இராசிப்பலன் என 5 விஷயங்கள் அடங்கியுள்ளன. கிம் பஹுனா இது ஒவ்வொரு குடும்பத்திற்கு மின்றியமையாததாயிருக்கு மென்பதி லையமில்லை.

அடுத்த புஸ்தகம் மார்கழி மாதம் 1-தேதியிலும் அதற்கடுத்த புத்தகம் சித்திரை மாதம் 1-தேதியிலுமாக ஆவிர்ப்பவிக்கும்.

இதன் வருட சந்தா 2—8—0 தனிப்ரதி 1—2—0

வேண்டுமவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு மணியார்டர் செய்து தங்கள் விலாசத்தை அறிவித்தால் புஸ்தகம் புக்போஸ்டில் அனுப்பப்படும்—S. R. S. வைஜயந்தீ ஆபீஸ்,
24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி.; மதராஸ்.

வடகரை இராமாயணம்: கோ. கி. அ. கிருஷ்ணய்யங்கார்
ஸ்ரீ கிருஷ்ண ஜோதிஷாலயம் வடக்கு ரதவீதி ஸ்ரீ வில்லிபுத்தூர்.

அடியில்கண்ட க்ரந்தங்கள் நம்முடைய ஆபீஸில் கிடைக்கும்.

		ரூ.	அ.	பை
1.	ஸ்ரீரங்கராஜஸ்தவம் (எளிய தமிழுரையுடன்)	2	8	0
2.	ஸதாசார்ய ஸூக்தி ரக்ஷா	0	6	0
3.	ப்ரஹ்ம வ்யாப்தி பரிஷ்க்ரியா	0	4	0
4.	தர்க்க ஸர்வஸ்வம்	0	8	0
5.	பாலபோத ரஸாயநம்	0	2	0
6.	உபந்யாஸ ரத்நமாலா	0	4	0
7.	ஸர்வஸ்வ ஸம்ரக்ஷணி	0	8	0
8.	முகுந்தமாலா (உரையுடன்)	0	6	0
9.	ஸ்ரீ வைஷ்ணவம்	1	8	0
10.	நாலாயிர திவ்யப்ரபந்தம்	3	8	0
	ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ (1-வது தொகுதி)	1	12	0

மற்றும் வேண்டுமவைகளை அறிவித்தால்
வாங்கி அனுப்புவிக்கப்படும்.

திவ்யார்த்த தீபிகை என்கிற மாதப்பத்ரிகை
ராமாயண ஸ்லோகார்த்தம்
(கோதாஸ்துதி) நக்ஷத்ரமாலா

இவை அச்சாகின்றன. கூடியசீக்கிரம் வெளிவரும்.

S. R. S. வைஜயந்தீ ஆபீஸ்,
நெ. 24, சந்திரப்ப முதலி தெரு, G.T., மதராஸ்.

Edited & Published by V. Ramanujachariar, 24, Chandrappa Mudali St. & Printed by K. Sadagopachari, at The Liberty Press, 7, Sunkurama Chetty St. Madras.

You have



VALUE -
VARIETY &
CHOICE -

நவீன நாகரீக நகைகள்

சவரன் தங்கத்தில்
கட்டியவை
உத்தரவாதமானவை

முதல்தரமான பச்சை, கெம்பு, புஷ்ப ராகம், முத்துமணிகள் உயர்ந்த எக்ஸ்ட்ரா ரெங்கோன் கமலம் அவைகளில் செய்த நகைகளும் கிடைக்கும்.

ஒரு முறை வாங்கினால் உண்மை விளங்கும்.

Fashion demands at:

JHUNTARAM DURGADASS,
98-A, Sowcarpet, MADRAS.

ஜுந்தாராம் துர்காதாஸ்,
98, சௌகார்பேட்டை :: சென்னை.

Registered No. M. 3401

பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின் இரண்டு
ஔஷத ரத்னங்கள்

ஜீவாம்ருதம்

(தேகாரோக்யத்திற்கும் பல விருத்திக்கும்)

ரத்தமிழந்து, ஜீவனற்று, பலஹீனத்துடன் வாழ்க்கையை வெறுக்கும் வாலிபர்களுக்கு இவ்வௌஷதம் ஓர் வரத்தைப் போன்றதே. இதை உபயோகிக்க ஆரம்பிக்கும் பொழுதே அளவற்ற சுக உணர்ச்சியை யூட்டி, மிகுந்த ரத்த புஷ்டியை உண்டாக்கி, புத்துயிரைக் கொடுத்து, வாழ்க்கைக்கே இன்பத்தை விளைவிக்கின்றது. அளவற்ற தேகபலம் குறைவற்ற ஆரோக்கியம் முதலியவற்றை மேன்மேலும் செழிக்கச் செய்கின்றது.

விலை பெரிய புட்டி ரூ. 3-4-0
சிறியது 1-12-0

பாலபாஸ்கர

(குழந்தை ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு அற்புத நிவாரணி.)

குழந்தைகளின் ஈரல் (Liver) குலை (Spleen) பெருக்கங்களை அதி விரைவில் கரைத்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கும் அரிய சஞ்சீவி. இதர மருந்துகளால் பயனற்றுப் போன விடங்களில் ஆச்சரியத்துடன் பலன் தந்துள்ளன. தவறுதலின்றி குணங் கொடுப்பதென்று பிரக்யாதி யடைந்தது. ஆரம்ப நிலைமைக் கென்றும், முதிர்ந்த நிலைமைக் கென்றும் இருதிறத்திலுள்ளது.

ஆரம்ப நிலைமை மருந்து 1 மாதம் 4-0-0
முதிர்ந்த நிலைமை 8-0-0

விபரங்களுக்கு எழுதவும்.

தயாரிப்பவர்கள் :— **ஆயுர்வேதாஸ்ரமம்**
தபால் பெட்டி 287.
151, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

Printed & Published by Vadakarai, Ramanujacharjar, 24, Chandrappa Mudali St. and Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty St, Madras

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ராமாநுஜ

ஸித்தாந்த வைஜயந்தீ

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசந பத்ரிகை

தொகுதி 2	ஈச்வர௵ புரட்டாசிமீ	பகுதி 11

பத்ராதிபர் :
வடகரை ராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

1937௵ செப்டம்பர்மீ

வருஷச் சந்தா ரூ 1—12—0] [தனிப்ரதி விலை ரூ. 0—3—0

விஷய ஸூசிகை

விஷயங்கள் — பக்கம்

1. புரட்டாசி மாதம் 250
—பத்திராதிபர்

2. புரட்டாசித் திருவோணம் ஸ்ரீமத் ...
வேதாந்த தேசிக குணாநுபவம் 250
—ஸ்ரீ காஞ்சி ப்ர. ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

3. ஸத் ஸம்ப்ரதாய பரிசுத்தி 257
—ஸ்ரீ. காஞ்சி. ப்ர. ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்

4. வர்த்தமானங்கள் 277

5. பஞ்சாங்கம் 280

4 5 6 7 8 9 10

ரங்கூன்
வைரங்கள்
கல் 1க்கு
0-2-6 0-3-3
பி. கோபாலசுவாமி
நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O. ✻ சென்னை

ரங்கூன்
வைரங்கள்
நகைகள்
கேட்லாக் இனாம்
பி. கோபாலசுவாமி
நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O.
சென்னை

L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது -

மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.
பெருங்காயம்.
எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய
வியாபாரிகள்:
பம்பாய், சென்னை,
கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக் கூடும். அக்காலத்தில் அமிருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய். மதராஸ் கல்கத்தா

சலோனுடவர் பிராண்ட்

போர்ட்லாண்ட் சிமெண்ட்,

காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர்வேலைகளுக்கும் ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரப்ல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்

சோல் ஏஜெண்ட்

M. குப்புசாமி நாய்க்கர்

83, செம்புதாஸ் தெரு,

மதறாஸ், ஜி. டி.

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை.

தொகுதி **2.**	பத்ராதிபர் வடகரை. ராமாநுஜாசாரியார்.	பகுதி **11.**

ஶ்ரீரஸ்து.

ஶ்ரிய:காந்தாய நம:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே ।
ய: ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ॥
வேதவேதாந்த வேதார்த்த ஸங்க்ரஹாத்யுபதேஶிநீ ।
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ॥

திருவேங்கடமுடையான்.

ஶ்ரிய:காந்தாய கல்யாணநிதயே நிதயேऽர்த்திநாம் ।
ஸ்ரீவேங்கடநிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம் ॥

புரட்டாசி மாதம்

பத்ராதிபர்

இம்மாதம் ஹ்ருஷீகேஶனென்கிற ஸர்வேஶ்வரனுடைய அம்ஶமாயிருக்கும். ஹ்ருஷீ கேஶ: என்கிற பதம் ஹ்ருஷீகாணாம். ஈஶ:-என்று விரிந்து இந்த்ரியங்களை நியமிக்குமவன் என்னுமர்த்தத்தைத்தரா நிற்கும் ஹ்ருஷீகாணீந்த்ரியாண்யாஹு: தேஷாமீஶோ யதோஹவாந் ஹ்ருஷீகேஶஸ்ததோ விஷ்ணு: வ்யாதோ தேவேஷு கேஶவ: என்றது அதன் நிருக்தியாகும். இவனுடைய அம்ஶமாயிருக்குமித்திங்களில் வரும் ஹரிதிநத்திலுபவஸித்து த்வாதஶியில் ஹ்ருஷீகேஶனைத்தொழுது பாரணை பண்ணுமவர்கள் ஸௌத்ராமணியஜ்ஞத்தின் பலனையடைவார்கள்.

மாஸே ப்ரோஷ்டபதே யோ மாம் ஹ்ருஷீகேஶாவ்யமர்ச்சயேத்
உபோஷ்ய ஸ ஸமாப்நோதி ஸௌத்ராமணிபலம் ந்ருப

என்று பாரதம் ஆஶ்வமேதிக பர்வம் 114-வது அத்யாயம் 26 ச்லோக மறுதியிடா நிற்கின்றது, இது நிற்க,

இம்மாதம் ஆசார்ய சிகாமணியாகிய நம் நிகமாந்ததேசிகனவதாரத்தாலும் புனிதமாயது. அம்மஹாநுபாவரின் பெருமையை ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியரே அறுதியிட வல்லவரென்று கருதி அவரடி பணிந்து பெற்ற புரட்டாசித் திருவோணமென்ற வ்யாஸ மிங்கு அச்சிடப்படுகிறது. வாசகர்கள் வாசித்துக் களிப்பாராக.

புரட்டாசித் திருவோணம்.
ஸ்ரீமத் வேதாந்த தேசிக குணாநுபவம்.

(ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார்)

இன்று, நம் ஸ்ரீ வைஷ்ணவ குலதிலகரான ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனென்னும் பேராசிரியர் இவ்வுலகில் தோன்றிய நன்னாளாகும். மிகப் புனிதமாய இத் திரு நன்னாளில் இவ்வாசார்ய சிகாமணியின் திவ்யகுணங்களில் சிலவற்றை யனுபவித்துப் பேசிக் களிக்கப் பேராவல் எழுகின்றது.

பாராட்டத்தக்க பாண்டித்யமும், அற்புதமான அனுட்டானமும், ஆதரிக்கத்தக்க ஆத்மகுண பூர்த்தியும், விசேஷித்துக் கூறத்தக்க விரக்தியும் ஒருங்கே அமைந்த இவ்வாசிரியர் நமது ஸ்ரீ வைஷ்ணவ குலத்தில் திருவவதரித்ததனாலே நமது [illegible] தம்மிகச் சிறந்ததென்பதை அனைவரும் எளிதிலறியப் [illegible]கும்.

இம் மஹான் அவதரித்தருளியிராவிடில் கலியுலகில், பண்டித வுலகில், ஸ்ரீவைஷ்ணவவுலகில் (கிம் வஹுநா?) இவ்விருள் தரு மாஞாலத்தில் இன்பம் காணமுடியாததே யாகும்.

இவ் வாசிரியர் தோன்றி அருளிய திவ்யஸூக்திகள் அளவிறந்தவை. இவரது சாஸ்திரபாண்டித்யச் சீர்மையை 1. சததூஷணீ, 2. தத்வமுக்தாகலாபம், 3. ஸர்வார்த்தஸித்தி, 4. ந்யாய பரிசுத்தி, 5. ந்யாய ஸித்தாஞ்ஜநம், 6. ஸேச்வரமீமாம்ஸை, 7. மீமாம்ஸா பாதுகை முதலிய அரும்பெரு நூல்கள் அறிவிக்கும்.

அரிய பெரிய வியாக்கியானங்களை அருளிச் செய்வதிலுள்ள அற்புதமான சக்தியை தத்வடீகை, கீதாதாத்பர்ய சந்திரிகை, கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷை, ஸ்தோத்ரபாஷ்யம், சதுச்ச்லோகீ பாஷ்யம், கத்யபாஷ்யம் முதலான திவ்ய க்ரந்தங்கள் தெளிவிக்கும்.

காளிதாஸாதி மஹாகவிகளைப்போலே மிகச் சிறந்த காவ்ய நாடகங்களை இயற்றுவதில் நிகரற்ற நைபுண்யத்தை யாதவாப்யுதயம், ஸங்கல்ப ஸூர்யோதயம், ரகுவீரகத்யம், ஹம்ஸஸந்தேசம், ஸுபாஷிதநீவி முதலியவைகளும், பாதுகா ஸஹஸ்ரம் முதலிய பலபல துதி நூல்களும் புலப்படுத்தும்.

ஆழ்வாரருளிச்செயல்களில் ஆழ்ந்து அகங்குழைந்து உருகி நிற்கும் பெருமை த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி, த்ரமிடோபநிஷத் ஸாரம் முதலியவற்றால் மூதலிக்கப்படும்.

தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் ஆச்சரியமான அறிவு பெற்று அமுதிலுமினிய கவிகளை யியற்றும் பெற்றி தேசிகப் பிரபந்தமென வழங்கப் பெறும் தமிழ் நூல்களினால் தலைமைபெற்று நிற்கும்.

அனுட்டான விஷயங்களில் ஆழ்ந்து ஆராய்ச்சிகளைச்செய்து அழகிய நிர்ணயங்களை வெளியிடும்வல்லமை ஸச்சரித்ரரக்ஷை, ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷை, நிக்ஷேபரக்ஷை முதலியவற்றால் நன்குணர்த்தப்படும்.

218935

சீரிய ரஹஸ்யார்த்தங்களையும் செவ்வனே வெளியிட்டு ஸம்ஸாரிகளை உய்விப்பதில் உண்டாகிய ஒப்பற்ற பரமகருணை ஸம்ப்ரதாய பரிசுத்தி முதலிய ரஹஸ்ய க்ரந்தங்களினால் ஸ்பஷ்டமாக விளங்கும்.

பகவத் பாகவத பக்திப் பெருஞ் செல்வமும் ஐஹிகாமுஷ்மிகங்களில் அதிமாத்ரவிரக்தியும் இவரது நித்ய சரித்திரங்களினால் நிலைநின்று விளங்கும். * * திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்த இப்பேராசிரியர்க்கு இத்தகைய வைபவங்கள் வாய்ந்தது வியப்பன்று. "வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகால் அடியோமுள்ளத் தெழுதியது ஓலையிலிட்டனம்" என்று இவர்தாமே அருளிச்செய்திருக்கிறபடி ஹயக்ரீவனுடைய திருவருளே ஒரு மடை செய்து ப்ரவஹித்த பெருமை பாராட்டற்பாலது. மேலெடுத்துக் காட்டிய "வெள்ளைப் பரிமுகர் தேசிகராய்" என்ற பாசுரத்தின் பொருளைப் பலர் ஸாமாந்யமாக க்ரஹித்துள்ளார்கள். அதாவது,- **வெள்ளைப் பரிமுகர்**—ஹயக்ரீவரானவர், **தேசிகராய்**—எனக்கு ஆசார்யராய்; உள்ளத்து எழுதியதை ஓலையில் இட்டனம்—; என்பதாக இதன் பொருளைக் கருதுகின்றார்கள். இங்ஙனே கொண்டால் ஸ்வாமியின் ஞானமெல்லாம் ஹயக்ரீவோபாஸனையின் வைபவத்தால் விளைந்ததே யென்றும், ஆசார்யர்களை அடிபணிந்து குனிந்து கேட்டு ஞானம் பெற்றிலர் என்றும் சொல்ல இடந்தரும். ஸ்வாமி பலவிடங்களில் "எம்மைக் கிடாம்பியப்புள்ளார் கிளிப்பிள்ளையைப் பழக்கி வைக்குமாபோலே பழக்கி வைத்தார்" என்றாற்போலே அருளிச்செய்திருக்கக்காண்கிறோம். திருக்குமாரரும் "[illegible]" என்று ஸ்ரீ தேசிக மங்களத்தில் அருளியுள்ளார். ஆகவே தேசிகன் [illegible] என்பது தேறி நின்றது. திருவயிந்திர புரத்தில் ஒஷதாத்ரியில் நெடுங்காலம் எழுந்தருளியிருந்து உபாஸித்து ஹயக்ரீவனுடைய திருவருளைப் பெற்றாரென்பதும் உண்மையே. அது கொண்டு, உபாஸநவலத்தினாலேயே ஸ்வாமிக்கு எல்லாவகையான ஞானமும் அமைந்திட்டதென்று சொல்வது பொருந்தாது. **வெள்ளைப் பரிமுகர்**— ஹயக்ரீவரானவர், **தேசிகர் ஆய்**—கிடாம்பியப்புள்ளாரென்கிற ஆசார்யராக வந்து தோன்றி, அடியோமுள்ளத் தெழுதியதை ஓலையிலிட்டனம் — என்பதாக இங்குப் பொருள் கொள்வதே பொருத்தமுடைத்தென்று தோன்றுகின்றது. "காவலனெங்கள் கிடாம்பிக்குலபதியப்புளார்தம் தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்து அவர் தம்மருளால், நாவலருந்தென் வடமொழி நற் பொருள் பெற்ற நம்பிக் காவல தூப்புற் குலத்தரசே!" என்று பிள்ளையந்தாதியில் போற்றியதற்கு மிகப்பொருந்துமிது.

இப்பேராசிரியரை ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாவரும் ஸமரூபமாகவே வழிபடக் கடமைப்பட்டவர்கள் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. ஸ்ரீ வைஷ்ணவர்களுள் தென் கலையார், வட கலையார் என்கிற இரண்டு பாகுபாடு ஏற்பட்டு, காலக் கொடுமையினால் இவர்களுக்குப் பரஸ்பரம் மாத்ஸர்யமும் முற்றியதன் பலனாக இம்மஹாசார்யர் பக்கலிலும் சிலர் வைமுக்கியம் வஹிக்கும்படியாயிருக்கின்றதென்பதை அபலபிக்கப் போகாது. இது விவேகிகளின் பணியாக ஆக மாட்டாது.

இதைப்பற்றி இங்குச் சிறிது விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன். அனைவரும் விமத்ஸரர்களாய் இதைக் கடாக்ஷித்தருள வேணும். தென் கலையார் வட கலையார் என்கிற வ்யவஹார வேற்றுமை எக்காலத்தில் ஏற்பட்டதென்று கண்டறிய முடியவில்லை. கம்பராமாயணத்தில் "வட கலை தென் கலை வடுகு கன்னடம்" என்கிற செய்யுளைக் காணுமிடத்து, வடகலையாகிய ஸம்ஸ்க்ருத வாணியில் விசேஷப் பற்றுள்ளவர்கள் வட கலையார் என்றும், தென் கலையாகிய தமிழ் மொழியில் விசேஷப் பற்றுள்ளவர்கள் தென் கலையார் என்றும் வ்யபதேசம் பெறக் கூடியவர்களாவர். இரு வகுப்பினர்க்கும் இரண்டு பாஷைகளிலும் ப்ரவேசமும் ஆதரமும் இருந்தாலுங்கூட, ‘[illegible]’ ‘[illegible]’ என்கிற கட்டளையிலே ஒவ்வொரு வகுப்பினர் ஒவ்வொரு மொழியில் ப்ராவண்யத்தையே கனக்கக் கொண்டார்களென்பது காரணமாக இந்த வேற்றுமை வ்யபதேசம் ஏற்படலாம். வட கலையார் என்னும் வகுப்பில், பலர்க்கு வடமொழியில் பிரவேசமேயில்லாமலும் தென் மொழியிலேயே அதிகமான பிரவேசமும் இருக்கலாம். அப்படியே, தென் கலையார் என்னும் வகுப்பில், பலர்க்குத் தென்மொழியில் பிரவேசமேயில்லாமலும் வடமொழியிலேயே அதிகமான பிரவேசமும் இருக்கலாம். இருந்தாலும் அவ்வோ பரம்பரையிற் சேர்ந்தவர்களென்னும் காரணத்தினால் வ்யவஹாரம் மாத்திரம் மாறாமல் வரலாம்.

ஆனால், காலகதியில் இந்த வ்யவஹார வேற்றுமை தேஹத்தில்ணியும் திருமண்காப்பு ஸந்நிவேஶத்தின் பேதத்தை அடியொற்றியதாகவே எங்கும் காணப்படுகின்றது. ஸ்ரீ தேசிகனுடைய காலத்தில் திருமண்காப்பு ஸந்நிவேசத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் வேற்றுமையிருந்ததுண்டா என்று ஆராய்ச்சி செய்ய வேணும். தேசிகனே ஊர்த்வபுண்ட்ர விஷயமாகவும் க்ரந்தம் அருளிச்செய்தேயிருக்கின்றார். ஸச்சரித்ர ரக்ஷையில் ஊர்த்வபுண்ட்ர விதி யென்பது ஒரு பரிச்சேதம். அது, பஸ்மதாரணம் திர்யக்புண்ட்ரதாரணம் முதலியவற்றை நிராகரித்து ஊர்த்வபுண்ட்ரதாரணமே சிறந்ததென்று ஸ்தாபிக்க அவதரித்தது. அதில், ஊர்த்வபுண்ட்ரத்தில் பலவகையான ஆகார பேதங்கள் சாஸ்த்ரங்களிற் கூறப்பட்டிருப்பதையும் எடுத்துக்காட்டி ஹரிபாதாகாரமே சிறந்ததென்று ஸித்தாந்தம் செய்தருளியிருக்கின்றார். அக்காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் (இக்காலத்தில் காணப்படுகிறபடி) ஊர்த்வபுண்ட்ர ஸந்நிவேஶ வேற்றுமை இருந்திருக்குமாகில் இதைப்பற்றியும் ஸ்வாமி விமர்ஶிக்க ப்ரவர்த்தித்தே யிருப்பர். வெறுமனே விட்டிருக்கமாட்டார் இந்த அவாந்தரபேத விசாரம் அந்த க்ரந்தத்தில் இல்லாமையாலும் மற்றும் பல ஹேதுக்களாலும் தேசிகன் காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களுள் ஊர்த்வபுண்ட்ர வைஷம்யம் இருந்ததேயில்லை யென்று திண்ணமாகக் கொள்ளலாம்.

ஆனால் எந்தவிதமான திருமண்காப்புக்குறி பூர்வாசார்யர்களின் காலத்தில் இருந்தது? என்று அறிய விருப்பம் பலர்க்கு உண்டாகும். அல்பஜ்ஞனான அடியேன் இதில் என்சொல்வேன். யயாயூவாதீ பஹுஜந ஒவஷீ॥ உண்மையுரைப்போனை உலகம் பகைக்கும். ஆனாலும் உபபத்தி யுள்ளதாக நெஞ்சில் தோன்றுமதை விஜ்ஞாபித்துக் கொள்ளலாமன்றோ. இதைப் பற்றி மற்றொருகால் விரிவாக விஜ்ஞாபிப்பேன். ஆசார்யர்கள்யாவரும் ஒரு மிடறாக ஈடுபட்ட துறையான அர்ச்சாவதாரத்தில் சோழநாடு, பாண்டி நாடு, தொண்டை நாடு இத்யாதிகளான நாடுகளில் விளங்கும் திவ்ய தேஶங்களில் மூன்று நான்கு அல்லது ஐந்தாறு தலங்கள் தவிர மற்ற ஸகல திவ்ய தேசங்களிலும் ஆழ்வார்கள் ஆசார்யர்கள் அனைவருடையவும் திருவவதார ஸ்தலங்களிலும், எம்பெருமானார் நியமித்தருளின எழுபத்திநான்கு

ஸிம்ஹாஸநாதிபதிகளின் வம்ஶ பரம்பரையிலும் தொன்று தொட்டு விளங்கிவரும் ஸந்நிவேஶம் குறிக்கொள்ளத்தக்கது. உண்மையுரையில் உள்ளம் சீறலாகாது.

தென் கலையார் வடகலையார் என்கிற வ்யவஹாரத்திற்கும் ஊர்த்வபுண்ட்ர ஸந்நி வேசத்திற்கும் ஒரு ஸம்பந்தமு மில்லாமையால் ஸூக்ருதத்தில் இதைப் பற்றின விசாரமும் நிர்ணயமும் அநபேக்ஷிதம் என்றே சொல்லலாம். "செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்றும் "சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குரு" என்றும் பேசியுள்ள தேசிகனைத் தென்கலையார்கள் தமக்கே தலைவராகக் கொள்ள ப்ராப்தம். இங்ஙனமே வடகலையார்களும் கொள்ளக் குறையில்லை. இங்ஙனே இரு வகுப்பினரும் கொண்டாடி யநுபவிக்க நேர்த்தியுண்டு.

ஸ்ரீ தேசிகனுடைய ரஹஸ்ய க்ரந்தங்களின் மூலமாக ஸம்ப்ரதாயார்த்த பேதங்கள் பல ஏற்பட்டு விட்டனவென்றும் அதனால் ஸ்ரீமத் வரவர முனி ஸம்ப்ரதாயஸ்தர்கள் தேசிகனிடத்தில் ப்ரதிபத்தியைக் குறைத்துக்கொள்ள நேர்ந்ததென்றும் சிலர் கூறுவதுண்டு. இது தேசிக திவ்ய ஸூக்திகளை ஆழ்ந்து ஆராய்ந்து நோக்காததனாலாம். தேசிக க்ரந்தங்களில் அபிப்ராய பேதங்கள் இல்லை யென்று அடியேன் சொல்ல வரவில்லை. மிக ஸ்வல்பமாக இருந்தவற்றைப் பின்புள்ளார்கள் மிகப் பெரியனவாக்கி விட்டார்களென்பது தத்துவம். திருவாய் மொழி வியாக்கியானம் முதலியவற்றில் திருமாலை யாண்டானுக்கும் எம்பெருமானார்க்கும் அபிப்பிராய பேதம் விளைந்ததென்றும், மற்றும் பல விஷயங்களில் "இது ஆளவந்தா ரருளிச் செய்யும்படி; இது உடையவர் அருளிச் செய்யும்படி: இது பட்டர் அருளிச் செய்யும்படி" என்று நிரூபிக்கும் முகத்தால் அவரவர்களின் அபிப்பிராயங்கள் பேதித்திருக்கின்றன வென்றும் காட்டப் பட்டிருப்பதை நாம் கண்டே வருகிறோம். இந்த நிர்வாஹ பேதங்கள் தத்வ ஹித புருஷார்த்தங்களில் புத்தி பேதத்தை விளைப்பன வல்லாமல் ஸாதாரணமான அர்த்தங்களைப் பற்றினவாதலால் ஸ்வாரஸ்ய விமர்ஶ மாத்திரத்திலே ஊன்றிப் போருகிறோம்.

இங்ஙனமே ஸ்ரீ தேசிக ஸூக்திகளிலும் காணப்படும் நிர்வாஹ பேதங்களினால் தத்வஹித புருஷார்த்தங்களில் எவ்வகை

யான மாறுபாடும் விளைந்திலாமையாலும், அவற்றில் பிள்ளை லோகாசார்யர் முதலான நல்லாசிரியர்களின் தூய தொன்னெறியைத் தழுவியே அழகாக அருளிச்செய்திருக்கக் காண்கையாலும் நிர்வாஹ பேதங்கள் காரணமாக ப்ரதிபத்தி வைகல்யம் உண்டாக ப்ரஸக்தியே யில்லை. நாளைக்கும் பல திவ்ய தேசங்களில் (திருவிந்தளூர், திருவல்லிக்கேணி, ஸ்ரீ பெரும்பூதூர் முதலான விடங்களில்) பிள்ளை லோகாசார்யர் மணவாள மாமுனிகள் முதலிய ஆசார்யர்களைப் போலவே தேசிகனும் அர்ச்சையில் எழுந்தருளி யிருந்து திருவாராதனம் கண்டருளக் காண்கையாலே பண்டைக்காலத்தில் வைஷம்யத்தைச் சிறிதும் பெரியார் பாராட்டவில்லை யென்பது நன்கு தெரியவருகின்றது. கலி கோலாஹலம் ஶாந்தமாக வேணுமென்று எம்பெருமானை யிறைஞ்சி யேத்துவோம்.

ஆரியர்காள்! நமது வைஜயந்தீ பத்ரிகைக்கு ஆஹாயி ஐப்பசி மாதத்தோடு இரண்டு ஸம்வத்ஸரங்கள் பூர்த்தியாய் கார்த்திகை மாதம் மூன்றாவது வயது ஆரம்பிக்கப் போகிறது. இதற்கு சந்தாதார்கள் விசேஷமா யிருந்தாலும் பண உதவி புரியுமவர்கள் மிகவும் குறைவா யிருக்கின்றார்கள். இது விஷயத்தை யறிந்த மஹாநுபாவர்கள் சிலர் மாதம் 1 ரூபாயும், மொத்தமாக நன்கொடைகளாகவும், ஜீவியச் சந்தாவாகவும் மாதம் ஒன்றுக்கு 0-4-0 காலணாவாகவும் உதவிபுரிகிறார்கள். அதில் இவ்வருடத்தில் ஜீவியச் சந்தாவாக ரூ. 25—0—0 (இருபத்தைந்து) உபகரித்தார் M. பாஷ்யமய்யங்கார், 12, மாசிலாமணி முதலி தெரு, த்யாகராஜநகர், மதறாஸ்.

அடியேன் படும் ச்ரமத்தை யறிந்த மஹாநுபாவரான பெருமாள் கோவில் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார் மாதம் ஒன்றுக்கு ரூ. 5 (ஐந்து) வீதம் மூன்று மாதங்களாக உதவி புரிந்து வந்தார். அத்துடன் இம்மாதம் காகிதத்தின் விலையையும் அடியேன் கஷ்ட நிலைமையையும் கருதி 3 ரீம் கடிதம் வாங்கிக்கொள்ளும்படி ரூ. 12 உபகரித்தார். இவ்வாறு நமது ஸம்ப்ரதாய ப்ரவசநத்திற்காக அம்மஹாநுபாவர் தமது சரீரத்தாலும் வாக்காலும் பொருளாலும் செய்யும் பெரு நல்லுதவிக்கு என் தலையல்லால் வேறு கைம்மாறுளதோ?

இதுபோலவே மற்றும் நமது வைஜயந்தீ சந்தாதார்கள் தாங்களனுக்ரஹிக்க வேண்டிய சந்தா பணத்தை அனுப்புவதுடன் தங்களாலியன்றவரை பொருளுதவியும் மற்றும் சில சந்தாதார்களைச் சேர்த்தும் உதவிபுரிய வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். —பத்திராதிபர்.

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி

(லிமிடெட்)

தலைமை ஆபீஸ் : மதராஸ். ஸ்தாபிதம் : 1906

டிரஸ்டி : மதராஸ் அபீஷ்யல் டிரஸ்டி.

பாலிஸிதாரர்களின் நன்மையையே கோரி பணி செய்யப்படுகிறது.

க்ளெய்ம்கள் தாமதமின்றி தீர்க்கப் படுகின்றன. நல்ல சேமிப்பு, திறமை யான நிர்வாகம், லாபகரமான பாலிஸி நிபந்தனைகள், குறைந்த ப்ரீமியம், நிறைந்த போனஸ், இவை

யுனைடெட் இந்தியாவை

ஒரு சிறந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி யாக்குகின்றன.

பூரா விவரங்களுக்கும் தலைமை ஆபீஸ் :

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,

செம்புதாஸ் தெரு, மதராஸுக்கும்

அல்லது

கீழ்க்கண்ட இடங்களிலுள்ள ஆபீஸுகளுக்காவது எழுதவும்

ஆஸான்ஸல்	டாக்கா	லாகூர்	ராஜமகேந்திர
பெங்களூர்	டில்லி	பாட்ணா	புரம்
பெஜவாடா	கௌஹத்தி	மதுரை	ரங்கூன்
பம்பாய்	கூட்டி	மங்களூர்	வில்லார்
கல்கத்தா	ஹௌரா	நாகப்பூர்	தஞ்சாவூர்
கள்ளிக்கோட்	சிட்டகாங்	ஹைதராபாத்	திருவனந்தபு
சித்தூர்	ஜல்பெய்குரி		உடுப்பி ரம்

பூஜைக்கு உசிதமான
:: ரிகார்டுகள் ::

ஸ்ரீரங்கம் K. ராகவ பட்டரால்
சொல்லப்பட்ட
ஸஹஸ்ர நாம அர்ச்சனை
(C. A. 1108 — 1110)

ஒவ்வொருவரும் அவசியம் தினந்தோறும்
கேட்கவேண்டிய ஸெட்.

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்
மதராஸ்.

ஸம்ப்ரதாய பரிசுத்தி

(சென்ற மாதத்தின் 243-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

“[illegible] ||” என்று பேசாதாரில்லை. பிள்ளை லோகாசார்யர் முதலான ஸதாசார்யர்களையும் அவர்களின் அமுத மொழிகளையும் தூஷிக்கவேணுமென்கிற அபிநிவேசம் இந்த ஸ்வாமிக்கு இருப்பது வியப்பன்று. அந்த அபிநிவேசத்தைப் பூர்த்தி செய்து கொள்ள வேணுமாகில் இவர் ப்ரத்யேகமாகச் சில க்ரந்தங்கள் எழுதலாம். ஸ்ரீ தேசிக திவ்ய ஸூக்திகளை வியாக்கியானிப்பதாக இழிந்து அதில் ஜகதாசார்ய தூஷணங்களை நிரப்புவது தேசிகன் திருவுள்ளம் புண்படுவதற்கன்றோ ஹேதுவாகும்.

நிகழும் ஆவணி மாதத்தில் வெளிவந்த தீபிகையில் ப்ரகாசிதமாயுள்ள ஸம்ப்ரதாய பரிசுத்தியில் (பக்கம் 23-ல்) பிள்ளை லோகாசார்யருடைய ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்திகளை யெடுத்து அபார்த்தம் பண்ணி தூஷித்துவிட்டு,

“இவரை ஜ்ஞாநரென்றாவது விஷ்ணுவம்ஶக ரென்றாவது சொல்லக் குறையென் ?”

என்று இவர் எழுதியிருப்பதை யாவரும் காணலாம். இவருடைய கருத்தின்படி பிள்ளை லோகாசார்யரை ஜ்ஞாநரென்றும் விஷ்ணுவம்ஶக ரென்றுமே வைத்துக்கொள்வோம். அந்த லோகாசார்யர் “சீரொன்று தூப்புல் திருவேங்கட முடையான் பாரோன்றச் சொன்ன பழமொழியுள், ஓரொன்று தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு, வானேறப் போமளவும் வாழ்வு” என்று தேசிகனுக்குத் தனியன் இட்டதாக இவர் எழுதியுள்ளார். ஆனி மாதத்தில் வெளிவந்த தீபிகையில் (ஸம்ப்ரதாய பரிசுத்தியின் உபக்ரமத்தில்) அதனைக் காணலாம். ஜ்ஞாநரும் விஷ்ணுவம்ஶகருமான லோகாசார்யருடைய புகழுரையைக்கொண்டு இவர் தேசிகனுக்கு ஒரு பெருமை ஸம்பாதிக்கப் பார்த்தது என்னே ?

ப்ரஸங்காத் அந்தத் தனியனைப்பற்றியும் சிறிது விமர்சிப் போம். இந்தத் தனியன் பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்தது தான் என்று நிர்விவாத நிராபாத ப்ரமாணங்களினால் ஸித்தித்து விடுமாகில் உடனே திண்ணமாய்த் தேற வேண்டிய விஷயம் யாதெனில் ஸ்ரீ தேசிகன் பிள்ளை லோகாசாரியர் திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவர் என்னும் பரமார்த்தமே தேறி நிற்கும். எங்ஙனே யென்னில்; தனியன் இயற்ற வேண்டிய அதிகாரமுடையார் இன்னாரென்பதை நன்னூலில் "தன்னாசிரியன் தன்னொடு கற்றோன், தன் மாணாக்கன் தகுமுரைகாரனென்று, இன்னோர் பாயிரமியம்புதல் கடனே" என்ற சூத்திரத்தினால் அறியலாம். ஆசாரியன், ஸஹபாடி, சிஷ்யன், வ்யாக்யாதா, என்ற நால்வர் தனியனியற்ற அதிகாரமுடையாரென்று இந்த நன்னூற் சூத்திரம் நிர்ணயித்தது. லோக தேசிகனும் தேசிகனும் ஸஹபாடிகளல்லர் என்பதும், தேசிக க்ரந்தத்திற்கு லோகாசார்யர் வ்யாக்யாதா அல்லர் என்பதும் ஸர்வ ஸம்ப்ரதிபந்நம். இனி சிஷ்யாசார்ய ஸம்பந்த மொன்றே சொல்ல வேண்டியதாயிற்று. லோகாசார்யர் தேசிகனுக்கு சிஷ்யராக இருக்கக்கூடுமா, ஆசார்யராக இருக்கக்கூடுமா? என்று ஆராயவேணும். சிஷ்யராகச் சொள்வதே பொருத்தமுடையது என்று இவர் கூறுவர். அங்ஙனே கொண்டால், லோகாசார்யர் தேசிகனை யடிபணிந்து திருந்தி விட்டாரென்றும், அதற்கு முன்னம் தாம் செய்த ஸ்ரீ வசநபூஷணாதி க்ரந்தங்களைப்பற்றி அநுதபித்தாரென்றும் இவர் சொல்லித் தீரவேண்டுமாதலால், அந்த ஸ்ரீ வசந பூஷணாதிகளிலுள்ள அபார்த்தங்களைக் களைவதற்காகவே தேசிகன் ரஹஸ்யங்களை யருளிச் செய்யப் புகுந்தார் என்று இவர் கொண்ட கொள்கை அஸங்கதமே யாகும். லோகாசார்யர் திருநாட்டுக் கெழுந்தருளின பிறகே தேசிகன் ரஹஸ்யக் க்ரந்தங்கள் அருளிச் செய்ததாக ஏதத்ஸஜாதீயர்கள் எழுதிவைத்திருக்கையாலே, லோகாசார்யர் திருந்துவதற்கு முன்னமே தேசிகன் ரஹஸ்யங்களருளிச் செய்து முடித்தாரென்று ஸமாதானம் சொல்லவும் ப்ராப்தியில்லை. ஆகவே, லோகாசார்யர் தேசிகனுக்கு ஆசார்யரான முறைமை கொண்டே அந்தத் தனியனை அருளிச் செய்தார் என்று இவர்தாமே இசைந்து தீரவேண்டியதாயிற்று. தேசிகனும் ஸ்வசிஷ்யரானப்ரஹ்ம தந்திர ஸ்வதந்த்ர ஸ்வாமிக்குத் தனியனிட்டருளினாரென்பது ஸர்வஜந ஸம்மதம். அந்தக் கணக்கில் தானே பிள்ளை லோகாசார்யரும் ஸ்வசிஷ்யரான தேசிகனுக்குச் "சீரொன்று தூப்புல்" இத்யாதியான தனியனை இட்டருளினார் என்று இந்த அய்யா கிருஷ்ண தாதாசார்யருடைய ஸித்தாந்தமாக விளங்குகின்றது. உண்மை இங்ஙனமில்லையென்னில், அந்தத் தனியனைப் பிள்ளை லோகாசார்யர் பணித்தாரென்றது அஸங்கதமாகும். இதைப் ப்ராமாணிகர்கள் எவ்வளவும் பரிசீலிக்கலாம். அந்தத் தனியன் லோகாசார்யர் பணித்ததென்று ப்ரகாசநம் செய்திருக்கின்ற அய்யா கிருஷ்ண தாதாசார்யர்க்கும் வேதாந்த தீபிகைக்கும் "லோகாசார்ய பதாம்போஜ ஸம்ச்ரயம் கருணாம்புதிம் | ஸ்ரீவேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம் ||" என்கிற வொரு தனியன் தஞ்சமாயிற்று என்பது ஸுஸ்பஷ்டமே யாகும்.

ஆகவிப்படி தேசிகனுக்கும் ஆசார்யரான ஸ்ரீலோகாசார்யரை த்ரோஹரென்றும் வித்வேஷகரென்றும் இவர் கூசாது எழுதிவைப்பது ஆசார்யாபசாரத்தில் பர்யவஸித்து நிற்குமத்தனை. இங்ஙனம் அடியேன் தேசிகனை லோகாசார்யருடைய சிஷ்யராகக் கூறினது ஸாஹஸ்யத்தாலன்று. அதீந்த்ரியமானதொரு விஷயத்தில் இங்ஙனே நிர்ணயிக்க அடியேன் அசக்தன். "சீரொன்று தூப்புல்" என்னும் தனியனை ஸ்ரீலோகாசார்யர் பணித்தருளினாரென்று வெளியிட்டுள்ளவர்களின் படியை அடியொற்றியே இந்த நிரூபணம் அடியேன் செய்தது.

இந்த விஷயம் எங்ஙனேயாயினும், அஜ்ஞர்களில் சிரோமணியும் அந்யதாஜ்ஞானிகளில் சிகாமணியுமாக விளங்குகின்ற இந்த கிருஷ்ணதாதாசார்யர், தேசிகனும் உச்சிமேல் வைத்து மெச்சும்படியான திவ்யஸூக்திகளை உபகரித்தருளியுள்ள பிள்ளை லோகாசார்யரை த்ரோஹரென்றும் வித்வேஷகரென்றும் வசை கூறுவது தம் இயல்புக்கேதகுதியாம்.

அவதாரணிகை முற்றிற்று.

சம்ப்ரதாய பரிசுத்தியின் தொடக்கத்தில்—"சாஸ்த்ரமூலமல்லாத ஸம்ப்ரதாயமும் ஸ்ம்ருதிவசன சாஸ்த்ரவிருத்தமான ஸம்ப்ரதாயமும் த்ரைவித்ய விருத்தம் ஸம்பாவமென்ற யுண்டாகையால்

ஸாத்யஸாதந மகையாலே ஸவிஸ்வாஸமீயும்" என்கிற பங்க்திகள் ஸ்ரீதேசிகனருளிச் செய்தவையுண்டு. இவை பிள்ளை லோகாசார்யர் முதலான ஸதாசார்யர்களின் ஸம்ப்ரதாயத்தை யுட்கொண்டே தேசிகனால் பணிக்கப்பட்டவை என்று இந்த க்ருஷ்ண தாதாசார்யர் தம்முடைய ஸ்வஸம்ப்ரதாய ப்ரஜ்ஞாதக: நிர்ணயித்துக்கொண்டு மஹாசார்யர்களை தூஷிக்கவும், இங்ஙனே தாம் தூஷிப்பது தேசிகனுக்கும் உகப்பு என்று காட்டவும்புகுந்துவிட்டார். இவர் எந்த அர்த்தத்தில் லோகாசார்யர்க்கு ஹேது விருத்தங்களைப் பேசுகின்றாரோ அந்த விஷயத்தைப்பற்றி இனி விரிவாக விசாரிப்போம். ப்ரபத்திக்கு உபாயத்வமில்லையென்று பிள்ளை லோகாசார்யர் ஸ்ரீவசநபூஷணஸூக்திகளில் பணித்தாராம். அது ஸகல ஸ்ருதி ஸம்ப்ரதாய விருத்தமாம். ஆனதுபற்றியே லோகாசார்யரை ஹேதுரென்றுவது விப்ரலம்பகரென்றுவது நிர்ணயிக்க வேணுமாம். இவ்விஷயத்தில் இவர்க்கும் இவர் போல்வார்க்கு முண்டான கலக்கங்களை தேசிக திவ்ய ஸூக்திகளைக்கொண்டே பரிஹரிப்போம்.

சாஸ்திரங்களில் ஸமஸ்தபரிகரணோபாயமாகக் கர்மஜ்ஞாந பக்தி ப்ரபத்திகள் கூறப்பட்டிருக்கின்றன வென்பது அபலபிக்க வொண்ணாதது. சேதநர்களை ரக்ஷித்தருள்வதில் இயற்கையாகவே ருசியுடையனான எம்பெருமான் "ஸம்ஸார தந்த்ரவாஹி காநாம் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே." என்கிறபடியே இத்தலையில் சிறிது எதிர்பார்க்கிறானென்று சொல்லி வைத்தது. "நாஸௌ புருஷகாரேண நசாப்யந்யேந ஹேதுநா। கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந ॥" என்றிப்புடைகளிலேயும் வசநங்கள் காணப்படா நின்றன. இத்தலையில் கனக்க வ்யவஸ்தித விசேஷங்கள் பலபலவுண்டாயிருந்தாலும் எம்பெருமானளிக்கும் பேற்றின் கனத்தைப் பார்க்குமிடத்து இத்தலையிலுள்ளவையெல்லாம் அஸத்கல்பமேயாகும். ஆகவே நம்பக்கல் கைம்முதல்கொண்டே எம்பெருமான் நம்மைக் காத்தருள்கின்றானென்று கொள்வது ஹேயமாகும். "மருவித்தொழும் மனமேதந்தாய்" "என்னைத் தீமனங்கெடுத்தாய்" "வெறிதேயருள் செய்வர்" "எங்கன் றி செய்தேனா என்னெஞ்சில் திகழ்வதுவே" என்றிவை முதலான அருளிச்செயல்களைக்கொண்டு அர்த்தபரிக்ஷைபண்ணுமளவில் எம்

பெருமானருள் நிர்ஹேதுகமென்றே நிலையிடவேண்டிற்றுகிறது. இவ்விஷயமாக ஸ்ரீதேசிகன் அருளிச் செய்துள்ள திவ்ய ஸூக்திகளில் மிகவும் ஸாரமாகச் சிலவற்றை இங்கெடுத்துக்காட்டுவோம்.

பரமபத ஸோபாநத்தில் "அஜ்ஞாதயாத்ருச்சிகாநுஷங்கிக ப்ராஸங்கிக ஸாமாந்ய வைசேஷிக ஸுக்ருதவிசேஷங்களை வ்யாஜமாகக்கொண்டு விசேஷகடாக்ஷம்பண்ணி" என்றுள்ள ஸ்ரீஸூக்திகள் ஸ்ரீவசநபூஷணத்திலுள்ள—"த்ரிபாத்விபூதியிலே பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க அது உண்டதுருக்காட்டாதே தேசாந்தர கதனான புத்ரன் பக்கலிலே பித்ருஹ்ருதயம் கிடக்குமா போலே ஸம்ஸாரிகளைப் பிரிந்து ஆற்றமாட்டாதே...................................நன்மை யென்று பேரிடலாவதொரு தீமையுங் காணாதே, நெற்றியைக் கொத்திப் பார்த்தால் ஒரு வழியாலும் பசை காணாதொழிந்தால் அப்ராப்ய மென்று கண்ண நீரோடே மீளுவது? தனக்கேற இடம் பெற்றவளவிலே என்னூரைச் சொன்னாய், என் பேரைச் சொன்னாய், என்னடியாரை நோக்கினாய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக் கொதுங்க நிழலைக் கொடுத்தாய்' என்னுமாபோலே சிலவற்றை யேறிட்டு மடிமாங்காயிட்டு, பொன் வாணியன் பொன்னை உறை கல்லிலே யுறைத்து மெழுகாலே யெடுத்துக் கால் கழஞ் சென்று திரட்டுமா போலே ஜந்ம பரம்பரைகள் தோறும் யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிக மென்கிற ஸுக்ருத விசேஷங்களைக் கற்பித்துக்கொண்டு தானே யவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக் கொண்டு போரும். என்கிற சூர்ணிகையின் ப்ரதிச்சந்த மாமத்தனை. பிள்ளை லோகாசார்யர் திருவுள்ளமும், தேசிகன் திருவுள்ளமும் ஒற்றுமைப் பட்டதே யல்லது சிறிதும் வேறுபட்டதன்று என்பதை நிர்ணயிக்க இவ்வளவே போதும். இன்னமும் விரிவாக நிரூபிப்போம்.

பதிர்ப்ரதாஹகப்ரஸாரணம் என்பது ஶாஸ்த்ரஜ்ஞர்கட்குத் தெரியும். அதன்படி பார்த்தால் ப்ரபத்தியை உபாயமென்று வாய்திறக்கவே வழியில்லை. ப்ரபத்தியாவது என்ன? "த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநா மதி:। ஶரணாகதி:." என்கிறபடியே எம்பெருமானையே உபாயமாக அத்யவஸிக்கு மதுதானே ப்ரபத்தி. இத்தகைய வேஷத்தோடு கூடின ப்ரபத்தியானது தன்னிடத்தில் எங்ஙனே உபாயத்வத்தை

ஸஹிக்கும்? ப்ரபத்தி யென்கிற யதீட்டு ஸித்திக்கும்போதே அதன் அநுபாயத்வமும் ஸித்தித்தே தீருமன்றே! இவ்வர்த்தத்தை ஸ்வாமி தேசிகன், ஸ்ரீந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் ஜீவபரிச்சேதத்தில் "ஊயம கெவஓ ஒக்ஷீமெரா வாயகவஹதியாதீகாஷூஹெ தாகூயியம ரா‌ஒஜு கிஂவாநஷூஹகாரிணாடி," என்று மிக அழகாக விளக்கியருளினர். எம்பெருமானொருவனையே உபாயமாகக் கொள்வதாகிற இந்த ப்ரபத்தியானது தன்னிடத்தில் உபாயத்வ புத்தியைத் தடை செய்கிறது; ப்ரபத்திக்கே உபாயத்வமில்லாதபோது அதன் ஸஹகாரிகளானவற்றுக்கு அது இல்லையென்னுமிடம் சொல்ல வேண்டா—என்பது இந்த காரிகையின் பொருள். இங்கு வியாக்கியானத்தில் ஸ்ரீமத் ரங்கராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகன் "ஸூஹாஷூ நீதுா ஸஹகாய டுஹெ ராணாம ஹெதாகாவெ நஸஹதஜதுயடு:" என்றிவ்வளவே பணித்துப் போந்தார். 'ஷவதுநாவாயகஷுயதிடு ஷூாஹகாடநவிஷு' என்னுமிடத்தை இங்ஙனே தேசிகன் தாமே நிர்ணயித்திருக்க ஸ்ரீ வசந பூஷணுக்களை தூஷிப்பது ஏதுக்கு?

இவ்விஷயத்தை ந்யாஸதிலகத்திலும் தேசிகன் நன்கு விவரித்தருளினர். அதில் "ஹெதாவெபெயெ விஜெஶடு ஹஜநவஷி தாஜ கிஂஷ்நாஷூாநகாவெ வெஷூஷதுவெஹெஷா வியஜஹ ஸதவாயதா ஽ நுாநவெக்ஷா." என்றருளியிருப்பதை நோக்கவேணும். பக்தி போலே ப்ரபத்தியும் விதிவிஷயமாக இருப்பதனுல் [அதாவது, கதடுவுகெவந விதிக்கப்பட்டிருப்பதனுல்] உபாயமென்று சொல்ல வேண்டியிருக்கும்; ஆனுல் ஒவ்வொரு வித்யையிலும் எம்பெருமானுக்கு ஒவ்வொரு ரூபம் வெஷுாகாரமாகத் தேறுகிற கணக்கிலே, இந்த ப்ரபத்தி வித்யையில் ஊதராநவெக்ஷாவாயகவம் எம்பெருமானுக்கு வெஷுாகாரம் என்று இந்த ச்லோகத்தில் அருளிச் செய்யப்பட்டது. இதனுல் சில விடங்களில் ப்ரபத்திக்கு உபாயத்வம் கூறுவதானது "ஜாஜெகம ஶரணம்வ்ரஜ" இத்யாதிகளில் விதிவிஷயத்வம் காண்பது காரணமாகவத்தனை என்று நிர்ணீதமாயிற்று. ஜொகஷெஶிக நிஜாஜஷெஶிகவடுஷுதிகள் யாவரும் சில விடங்களில் ப்ரபத்தியை உபாயமென்றும் பல விடங்களில் உபாயமன்றென்றும்

... அருளிச் செய்வதற்குண்டான உபபத்தி இதனுல் நன்கு காட்டப்பட்டதாயிற்று.

"இத்தை யொழியவும் தானே கார்யம் செய்யுமென்று நினைக்கக் கடவன்" என்கிற (முமுக்ஷுப்படி) ஸ்ரீ லோகாசார்ய திவ்ய ஸூக்தியைத் திருவுள்ளம் பற்றியே தேசிகன் "ஊநுாந வெக்ஷாவாயதாநுாஸவிஷுாயா: வெஷுாகார:" என்றருளிச் செய்தார். "ப்ரபத்தி உபாயமாக இருந்தாலிருக்கட்டும்; அது உபாயமன்றென்றே இவன் நினைக்கவேணும்" என்பதே லோக தேசிகனுக்கும் தேசிகனுக்கும் ஸித்தாந்த மென்பது இதில் தெளிவாயிற்று. உபாயமான ப்ரபத்தியில் அநுபாயத்வஜ்ஞாநம் ஆஹார்யந்தானே யென்று ஶொஷும் வரும்; உவாயஸாவெக்ஷவநியஜ முடையனுன எம்பெருமானை நிரவெக்ஷாவாயமென்று கொள்வது ஆஹார்யந்தானே யென்று ஸமாஹிதராகவடுக்கும்.

அந்த ந்யாஸதிலகத்திலேயே "கூெதடுஷாமஶாஹயா தஷநுவிஷயெவுாஷூஹெஹாஹரா வஹுாஹெரநவெக்ஷணாதூநாஷூதாம ஸதுாஜிவஜ வுாவிடீ | ஸ்ரீரஂஙெஶ்வர யாவஷாதூநியதகவதூாரதஹொஷிதா கவெயுவ கவஷாவா யயீ: ஊவிஹிதஷெலாவாயஹாவா ஽ ஷூாஜெ |" என்பது ஒரு ஶ்லோகரத்நம். இதில் ப்ரபத்திக்கு இட்ட விசேஷணங்கள் அத்தனையும் ஹக்திவெஷவுாவதடுகங்கள். பக்தியானது விளம்பித்து ஹஷவுஷாநம் பண்ணும்; ப்ரபத்தி அங்ஙனன்றிக்கே விரைவில் பலனளிக்கும். பக்தி தேஹாந்தர ஸம்பந்தத்தை அறுத்துத் தருவதில் நியதியுடையதன்று; ப்ரபத்தி நியமேந தேஹாந்தர ஸம்பந்தத்தை அறுத்துத் தரும். பக்தி அதிக்ருதாதிகாரம் ப்ரபத்தி ஸர்வாதிகாரம். பக்தி ஸ்வரூபவிருத்தம்; ப்ரபத்தி ஸ்வரூபாநுரூபம். பக்தி உபாயம்; ப்ரபத்தி அநுபாயம்—என்று இங்ஙனே பக்தி ப்ரபத்திகளின் வேஷத்தை ஸ்வாமி தேசிகனே விளக்கியருளினர். "ஊவிஹிதஷெலாவாயஹாவா" என்றதை நன்கு விமர்சிக்கவேணும். உபாயமாதுக்கே விதிவிஷயத்வம் கூடுறமாதலால் ஶாஸ்த்ரங்களில் கதடுவுகெவந விதிவிஷயமான ப்ரபத்தியை உபாயமென்று எண்ணவேண்டியிருந்தது; அந்த உபாயத்வம் ஹஶவெஷகொவாயகவாயுவஸாயவுதிவஜமாய் விட்ட

படியால் மறைந்தொழிந்தது—என்னுமிடத்தை ஸ்ரீதேசிகன் மிகத்தெளிவாகவன்றோ அருளிச்செய்துள்ளார். இங்கு வியாக்கியானம் செய்தருளாநின்ற திருக்குமாரர் (நயனாசார்யர்) வெகு அற்புதமாகக் கூறியருளினர், காண்க.

ரஹஸ்ய ரத்நாவளீஹ்ருதய மென்பதும் தேசிகனருளிச்செய்தது; அதில்—"ஸாத்யோபாயத்தில் அநுபாயத்வாதிவ்யபதேசம் பரஸங்கல்பஸாபேக்ஷத்வாதிநிபந்தநம்" என்றருளிச் செய்யப்பட்டது. "அநுபாய மென்பார் [illegible], [illegible]" என்றாரில்லை.

இன்னமும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் உபாயவிபாகாதிகாரத்தில்—"[illegible] ॥" என்றருளிய ஶ்லோகம் ஒன்றேபோதும். இதில் நான்காவது பாதம் ஸ்ரீவசநபூஷண திவ்ய ஶாஸ்த்ரத்தின் ஸாரமாகவுள்ளது. "ஸ்வீகாரந்தானும் அவனாலே வந்தது; ஸ்ருஷ்ட்யவதாராதிகளைப்போலே பண்ணின க்ருஷிபலம். 'அதுவுமவனதின்னருளே'. இத்தையொழியவும் தானே கார்யஞ்செய்யுமென்று நினைக்கக்கடவன். அல்லாதபோது உபாயநைரபேக்ஷ்யம் ஜீவியாது." (முமுக்ஷுப்படி) என்கிற ஸ்ரீலோகாசார்ய திவ்ய ஸூக்திகளையே தேசிகன் பல விடங்களிலும் பலபல ச்லோகங்களில் அமைத்துப் பேசியருளினார். நன்கு ஆராய்ந்தால், ப்ரபத்தியின் அநுபாயத்வத்தைப் பிள்ளை லோகாசார்யரைவிட நம்தேசிகனே அதிகமாக ஸ்தாபித்தருளியுள்ளார் என்று புலப்படும். "[illegible]" என்றிதுபோன்ற திவ்ய ஸூக்திகள் தேசிகனுடைய திருவாக்கில் நூற்றுக்கணக்காகவன்றோ அவதரித்துள்ளன.

* உபபத்தேஶ்ச * (3-2-4) என்கிற ப்ரஹ்ம ஸூத்ரத்தின் பாஷ்யத்திலே "[illegible]" என்றும், "[illegible] * இதி [illegible]

P. KOTHANDARAM PILLAI
SON OF LATE
P. S. PONNUSAWMY PILLAI,
HIGH CLASS CABINET MAKER AND UPHOLSTERER,
Established in 1854.
Ponnusawmy Pillai's Buildings
39 & 44, Esplanade West :: (Rattan Bazaar) :: P. T., MADRAS

அசல் பவுனில் கட்டின ரங்கோன் வைர நகைகளும் சுத்தமான வெள்ளிப் பாத்திரங்களும் காரண்டியுடன் கொடுக்கும் ஷாப்பு.



இதுதான்
ராதாகிருஷ்ண ஜுவெல்லரி எம்போரியம்
10, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை.

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷீயூரென்ஸ் ஸொஸைடி லிமிடெட்.,
சுத்த சுதேசி லைப் ஆபீஸ்
குறைந்த சந்தா :: மிகுந்த போனஸ்
: மதருஸ் பிரான்சு :
107, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.

இணையற்ற இரத்தினம்

எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

தேகபலம், ஞாபகசக்தி, தாது புஷ்டி இவைகளைக் கொடுத்துத் தேகத்தை வஜ்ர சரீரமாக்குவதில் இணையற்ற இரத்தினம் போன்றன; சென்ற 56 வருஷங்களாகப் பூவுலகெங்கும் புகழ்பெற்று உலாவி வருகின்றன. ஒருதரம் வாங்கி உபயோகித்தால் குண மகத்துவத்தை யறிவீர்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.

இனம்! இனம்!! இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி என்னும் புஸ்தகத்தைக் கேட்போருக்கு, அப்புத்தகம் இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

மதிப்புரை

ஸ்ரீ ஆண்டாள் திருமணம்

இப் பெயர் பூண்டதோர் ப்ரபந்தத்தை அடியேன் பார்க்கும் பாக்யம் பெற்றேன். இக் க்ரந்தத்தை யியற்றியவர் ஆழ்வார் திருநகரி, சிரோமணி, T. இராமகிருஷ்ண அய்யங்கார்.

இக் க்ரந்தத்திற்கு மனமுவந்து மதிப்புரை எழுதியிருப்பவர்கள், தமிழ்ப் பண்டிதர்களிற் றலைவராய்க் கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜில் தமிழ்ப்பண்டிதராயிருக்கும் A. M. சடகோப ராமாநுஜாசாரியார், ஸ்ரீமதுபய வேதாந்தப்ரவர்த்தகர்களிலக்ரகண்யராயிருக்கும் ஸ்ரீ உ. வே. தேசிக வரதாசாரியார், மற்றும் பல மஹாநுபாவர்கள். இவ்வளவு பெருமை வாய்ந்த இதன் பெருமையை அடியேன்புகழ்வதெங்ஙனே?

தற்காலம் விநோதன், விகடன் முதலான பத்திரிகைகளையும் நாவல்களையும் விரும்பி வாசிக்கு மவர்களும் ஆதரிக்கும்படியான அழகிய எளிய தமிழ்நடையி லமைந்திருப்பதோடு விசேஷமான ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்களை விளக்கா நிற்பது மிகவும் போற்றற்பாலது. சில ப்ரதிகளே உள்ளன. இதன் விலை 0—8—0

பத்திராதிபர் S. R. S. வைஜயந்தீ.

“ஸாத்யஸ்யைவ ப்ராபக இதி வேதாந்தவ்யவஸ்தேயோபாய வஸ்துஸ்வநிஷ்டிதம் ந ப்ரபத்யதே.” என்றும்; *ஃபலமத உபபத்தே:* (3-2-37) என்கிற ஸூத்ரத்தின் பாஷ்யத்திலே ‘ஸ ஏவ ஹி ஸர்வஜ்ஞ: ஸர்வசக்திர் மஹோதாரோ யாகதாந ஹோமாதிபிராராதித: ஐஹிகாமுஷ்மிக போகஜாதம் ஸ்வஸ்வரூபாவாப்திரூபமபவர்கஞ்ச தாதுமீஷ்டே; நஹ்யசேதநம் கர்ம க்ஷணத்வம்ஸி காலாந்தரபாவி ஃபலஸாதநம் பவிதுமர்ஹதி.” என்றும் ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்தார். ஸ்ரீ தேசிகனும் ரீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷையிலே * நிஜகர்மாதிபக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித:| உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத்தேவே து தாமபீ:. என்கிற ச்லோகத்தின் வியாக்கியானத்தில்— “உக்தவ்யாபாரந்யேந? ஸ்வயம் ஸாதநத்வ க்ஷணிகஸ்ய காலாந்தரபாவி ஃபலஸாதநத்வாநுபபத்தேஸ்தாத்ருச ஸ்வவ்யாபாரே ஸோபாயதாபுத்திரபி ஸ்யாதிதி ந்யாயம். அதஸ் தத்ஸேஷிணி தேவே ஸ்வயமேவ ஸர்வத்ராபாயதா.” என்றருளிச்செய்தார்.

“ப்ரபத்தி உபாயம்” என்று வாய்திறக்கவே கூடாதென்று ஒரு ஆசிரியர்க்கும் திருவுள்ளமில்லை. திருக்கச்சிநம்பிகள் மூலமாகப் பேரருளாளன் எம்பெருமானார்க்குப் பணித்த ஆறுவார்த்தைகளில் “மோக்ஷோபாயம் ப்ரபத்தி” என்றுள்ளது. எம்பெருமானாரும் ஸ்ரீ வைகுண்ட கத்யத்தில்— “த்வத்பாதாம்புஜத்வயப்ரபத்தேரந்யந்ந மே கல்பகோடி ஸஹஸ்ரேணாபி ஸாதநமஸ்தீதி மந்வாந:.” என்றருளிச் செய்தார். அந்த கத்யத்திலேயே “அக்ருத ஸாமராதநாநுகூலஸர்வாவயவ ஸுகமாஸீத” என்றவிடத்திற்கு வியாக்கியானமருளிச் செய்யாநின்ற பெரியவாச்சான்பிள்ளை — “ப்ரபத்தியையே உபாயமாகக்கொண்டு ப்ராக்ருதமண்டலத்தை விட்டு” இத்யாதி அருளிச்செய்தார். பிள்ளை லோகாசார்யரும் ஸ்ரீ வசநபூஷணத்தில் “ப்ரபத்த்யுபாயத்துக்கு இக்குற்றங்களொன்றுமில்லை” என்றருளிச்செய்தார். அவ்விடத்திற்கு வியாக்கியாநமருளிச்செய்யாநின்ற மணவாளமாமுனிகள் “இக்குற்றங்களொன்றுமில்லை

யென்கையாலே மற்றொரு குற்றமுண்டென்னுமிடம் தோற்று கிறது; அதாவது-ஆபாத ப்ரதீதியிலே உபாயத்வ ப்ரதிபத்தி ஹேதுமாம்படி யிருக்கை'' என்றருளிச்செய்தார்.

இவ்வோ ஸ்ரீ ஸூக்திகளை ஆராயுமிடத்து, வாணிஜ்யாதி களுக்கு த்ரவ்யார்ஜந ஸாயநத்வவ்யபதேசம் போலே ப்ரபத்திக் கும் மோக்ஷோபாயத்வ வ்யபதேசம் கூடுமென்றும், உட் புகுந்து ஆராய்ந்து பார்த்தால் ''*உன்மனத்தாலென்னினைந்திருந் தாய் என்கிறபடியே ப்ராப்திக்கு உபாயம் அவன்னினைவு'' என்று கொள்வதே பொருந்து மென்றும் ஸகலாசார்ய ஸித்தாந்தமாகத் தேறுகின்றது.

தேசிகனுடைய திருக்குமாரரும்—'' தியா ஸஹாஞாநேந ஜைவஸ்தே வீத: ஜத்ருத்ர வீதக்வாந்யாநாபேக்ஷி ப்ரஸாத தாயகா பத்திரேந ஜைவத்வஸ்ய ராத்ரிஹோஜந விஸிவக ரக்ஷ்யா வேக்ஷாரூபே ப்ரபத்ந ப்ரதீக்ஷ ஸமவாப் திரவே க்ஷஸாயநத்வ, ஜத்ருக்தே திரவேக்ஷஸாயநத்வாந்யாநபே க்ஷி ப்ரஸாத தாயகாபத்திரேந ப்ரபத்நாநபாயத்வ கேஷத ஸிஸிக்ஷ.'' என்று அருளிச்செய்தார். மேற்குறித்த ஸ்ரீ ஸூக்திகள் ஈந்யீய மென்பாருமுண்டு; அங்ஙனமே கொண் டாலும் உபபாதநரீதி கண்ணழிவற்றதென்பதில் வாய்திறக்க வல்லாரில்லையிறே.

தேசிக திவ்ய ஸூக்திகளில் ''வர்ணக்ஷத்ரிய விக்ரஹாஜா தேவாதிந: வாதிந:.'' என்பது ஒரு அற்புதமான ஸ்ரீ ஸூக்தி. ''புழு குறித்தது எழுத்தாமாப்போலே'' என்ற பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீ ஸூக்தியை இங்ஙனே ச்லோக மாக்கியருளினர். வர்ணாக்ஷர ந்யாயத்தாலே யத்ருச்சயா நல் தாக முடிகின்ற நமது செயலை உபாயமென்று ஸாதிக்க வேணு மென்பார் தேசிக ஸூக்தி ஸாகரத்தின் கரையிலே நிற்கக் கட வர்களத்தனை. உட்புக உரியரல்லர்.

ஒரு வஸ்து ஸ்திதியுண்டு; உபாயம் ஸித்தோபாய மென்றும் ஸாத்யோபாய மென்றும் இருவகைப்படும். எம்பெருமானே உபாயமென்ப தெல்லாம் 'ஸித்தோபாயமவனே'' என்றபடியாகு மத்தனை யல்லது ப்ரபத்திக்குள்ளதான ஸாத்யோபாயத்வத்தை ஒரு படியாலும் தவிர்க்க வொண்ணாது என்பதாம். இதில் யார்க் கும் விப்ரதிபத்தியில்லை. ஸ்ரீ லோகாசார்ய ஸூக்திகள் இந்த

நுட்பமறியாதாரல்லர். இது தன்னிலே நுண்ணறிவாளர் ஆராய்ச்சி செலுத்திச் சில பரமார்த்தங்களை யுணரவேணும். ஸாத்யோபாய மென்பதில் ஸாத்யத்வமாவது என்ன? என்று ஆராயவேணும். ஈஸ்வரீயப்ரீதிஸாத்யத்வ மென்று சொல்லக் கூடும். பண்டே நாம் உதாஹரித்துக்காட்டிய ''நிஜாநந்தா விஷயவிஷ நிரூபண நிவாரண:'' என்கிற தேசிக ஸ்ரீ ஸூக்தி யையும், அதற்கும் மூலமான ''என்னுணர்வினுள்ளே யிருத்தி னேன் அதுவுமவனதின்னருளே'' என்கிற அருளிச் செயலையும் நோக்குமிடத்து ஈஸ்வரீயப்ரீதிஸாத்யத்வாபிமாநம் அபஹாஸ்ய மாகும். 'ந்யாஸதசகத்தில் ''ந்யஸ்யாம்யகிஞ்சந ஸ்ரீமந்—அநுகூல ப்ரதிகூலவர்ஜித ரக்ஷாபரம்க்வயி'' என்றுசொல்லி வாய்மூடுவதற்குள்ளே ''ஸ்வாமி ஸ்வசேஷம் ஸ்வவசம் ஸ்வபரத்வேந நிர்பரம், ஸ்வதத்த ஸ்வதியா ஸ்வார்த்தம் ஸ்வஸ்மிந் ந்யஸ்யதி மாம் ஸ்வயம்॥'' என்று அடுத் த ச்லோக மருளிச்செய்தார். இதிலுள்ள ஸ்வபதங்களை எண்ணிப் பார்க்கவேணும். ''ஜீவ்ரக்ஷணஸாரார்பணம் ஈஸீகாரம் ஸ்வயம் ஸ்வஸ்மிந்'' என்றும் தலைக்கட்டினர். ஆக விங்ஙனம் அத்தலையி லருளாலேயே வழித்ததாய் இசைவுமாத்திரமான ஸ்வீகாரத்திலே சேதநன் ஸ்வக்ருதிஸாத்யத்வாபிமாநம்வைப்பது ஸ்வரூபஹாநியே யாகும்.

இப்படியாகில் ''உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே'' என்றும் 'சரணம் ப்ரபத்யே'' என்றும் ''உன்பாதமே பரவி நான் பணிந்து'' என்றும் ஸ்வக்ருதிஸாத்யத்வம் தோற்ற உத்தமனிலே யிட்டுப்பேசுகிறார்களே, இது பொருந்துமோ? என்று சங்கிப் பர்கள். ''எனதாவியார் யானார் தந்த நீ கொண்டாக்கினையே'' என்று தெளிந்தவர்களின் பாசுரமாகையாலே சங்கை உதிக்க அவகாசலேசமுமில்லை. ''இசைவித்தென்னை உன்தாளிணைக் கீழ்இருத்துமம்மானே?'' என்ற பாசுரம் இடைவிடாது நெஞ்சில் ஊறிக்கிடக்கவேணும். ''செய்யதமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே'' என்று உபநிஷத்துக்களின் பொருள்களையும் அருளிச் செயல்கொண்டே தெளியக் கண்டருளியவரான தேசிகன் அருளிச் செயல்களுக்கு விருத்தமான வழியை எங்ஙனே தழுவுவர்?

''ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானுமவனே'' என்கிற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்தியை தேசிகன் பலகாலும்

சிந்தைசெய்தே ந்யாஸதசக ந்யாஸதிலகாதிகள் பணித்துப்போந்தாரென்று எளிதாக அறுதியிடலாம். ஸ்ரீ பாஷ்யகாரர் ஶரணாகதி கத்யத்தில் “ந ச பரஶேஷதைகஸ்வரூபஸ்ய ஸ்வரூபப்ரியம் ஜ்ஞாநிநம் ப்ரியா ஶாஸ்த்ரீயவத்யதிஷ்யதி” என்றருளிய திவ்ய ஸூக்தியே லோகதேசிகனுக்கும் நிகமாந்த தேசிகனுக்கும் வழிகாட்டியாய் நின்றது. மேற்குறித்த ஸ்ரீபாஷ்ய ஸூக்தியில் ‘ப்ரியா’ என்ற பதமொன்றுண்டே, அது ஸூசநீயம். ‘ஈஶ்வரலாபம் சேதநனுக்குப் பேறு’ என்று கொள்வது மேலெழுந்தபடியிலேயாம்; சேதநலாபமே ஈச்வரனுக்குப் பேறு என்கிற பரமார்த்தத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் அந்தச் சிறிய சொல்லிலே காட்டியருளினர். ஆக, எம்பெருமான் தன்னுடைய லாபத்திற்காகத் தான் சில அஜ்ஞாதயாத்ருச்சிகாதிஸாதந விசேஷங்களைக்கொண்டு ஸ்வீகரித்து மகிழ்ந்தருளுமவனாயிருக்க, ஸ்வரக்ஷ்யத்வதாராதிபூதத்தாலே பண்ணின க்ருஷிமயமானதொரு அத்யவஸாயந்தன்னிலே உபாயத்வஸ்தாபநம்பண்ண வெகு ஸம்ப்ரமம் கொள்வது எதற்காக?

நநு, உபாயமென்று எண்ணத்தகுந்ததான ப்ரபத்தியில் உபாயத்வ நிராஸம் பண்ணுவது எதற்காக? என்று பிறர் நம்மைக் கேட்கக்கூடும். இதற்குத் தினவடங்க விடையளிப்போம். எம்பெருமானை நிர்ஹேதுக க்ருபாளுவென்று உண்மை கூறிப் புகழ்வதிலே ஆழ்வார்கட்கும் ஆசார்யர்கட்கும் மிகுந்த குதூஹலமுண்டு. ஸ்ரீ தேசிகனும் இந்த குதூஹலத்தில் தலை நிற்பவர். இதை உபபாதிக்கின்றோம். திருவாய்மொழியில் * பொருமா நீள் படை என்னும் பதிகத்தின் ப்ரமேயத்தைப் பிள்ளான் ஸாதாரணமாக நிர்வஹித்தார். அதாவது—“இப்படி எம்பெருமான் தம்மோடே கலந்த கலவியில் தமக்குப் பிறந்த நிரவதிகமான ப்ரீதியாலே அக்கலவியைப் பேசுகிறார்” என்று அவதாரிகை இட்டருளினர். இப்பதிகத்தில் “ஓர் எண்தானுமின்றியே வந்து இயலுமாறு” என்ற சந்தையின் ஸ்வாரஸ்யத்தை நோக்கி நிர்ஹேதுகவிஷயீகாரபரமாகவே பெரியவாச்சான்பிள்ளையும் வடக்குத் திருவீதிப் பிள்ளையும் வியாக்கியான மிட்டருளினர்.

தாத்பர்யரத்நாவளியில் “ஸவ்யாஜோதாரஹாவாஸ” என்றருளிச் செய்தார். சரணாகதி தீபிகையிலும் “நிர்வ்யாஜ நிஸ்ஸீமதயாஸ ஸித்தி:” என்றும் “ஸ்வதவாத்ருதே ஸ்வாபேக்ஷஜநிய ஶேஷவாய ஶேஷவாயஶோஹ:” என்றும் அருளிச்செய்தார். எனினும்பனை சேதநன் செய்த தொன்றை ஸாதனமாகக் கூறினால் அவனுடைய ஸவ்யாஜோதாரஹாவம் பொருளற்றதாகும். எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபாளுத்வவாதமும் ப்ரபத்தி ஸாதநத்வவாதமும் தேஜஸ்திமிரங்கள் போலே ஸாமாநாதி கரண்யத்தை ஸஹிக்கமாட்டாமையாலே எம்பெருமானைப் புகழ்வதிலே முழு நோக்குடையவர்கள் இத்தலையில் செயல்களைச் சரக்கறுத்துத் தீர வேண்டிற்றாயிற்று. ஆகவே ப்ரபத்தியின் உபாயத்வ நிராஸம் மிக்க பெரும்புகழ் பெற்று நிற்கும். உபாயத்வ ஸ்தாபநத்திலே ஆக்ரஹமுடையாருடைய செயல் எம்பெருமானுக்குக் குறைகூறி நிற்பதிலே முடிந்து நிற்கும் என்று தெளியக்கடவது.

இனி, தேசிகனுடைய சரணாகதி தீபிகையிலுள்ள ஸ்ரீ ஸூக்தி ரஸங்களில் சிலவற்றை அநுபவிப்போம். அதில்— “ஸத்பஸநாதிவிஷயேஷு ஸதோ தயாளோ: ஸ்வேநைவ க்லுப்தவிதிஶேஷவிலக்ஷணா | ஸ்வல்பாத்யயே தநுப்ருதாம் ஸ்வயமேவ தேஹே ஸ்வாஹாவிகம் தவஸாஹாய்ய தயாம் க்ருணந்தி.” (14) என்கிற ச்லோகம் மிகவும் குறிக்கொள்ளத்தக்கது. இதற்கு மேலேயுள்ள “ஹர்த்தும் ப்ருவத்துரிதவா ஹமம்ந தராகீம் ததநுஸம்ஶ்ரய இதீவ விகல்ப்ய நத்ய | பங்கஜிதேக ஶேஷவாயதா ஸ்வயமேவ த்ராதாஸ்ரஜ்ஞ்வஸஸ ஹவிநா ஹவாஜ்ஞிஷ ||” (16) என்ற ச்லோகமும் ஸ்ரீ வசநபூஷண திவ்யசாஸ்த்ர ஸாரமென்று அறுதியிட்டிருப்பர் பெரியோர். பக்தி ப்ரபத்தி முதலிய வியாஜங்களை எம்பெருமான் தானே கல்பித்துக்கொண்டு ஸம்ஸாரிகளைக் காத்தருள்வதாக இதில் ஸ்பஷ்டமாக அருளிச் செய்யப்பட்டது. இங்ஙனே அருளிச் செய்வதெல்லாம் ஸதிவாத மென்று சொல்லப்பார்க்கில் இந்த அதிவாதம் லோகதேசிகாதிகளுக்கும் நிகமாந்த தேசிகனுக்கும் துல்யமேயென்றுகொண்டு ஸ்ரீவசநபூஷண தூஷணத்தில் அஞ்சிநிற்பது அழகியது. “ஸர்வாயதாய யதிவ்ரதயா:” என்றும் “சொல்லமலிப் சுருதியாம்” என்றும் சொல்லுகிற

படியே ஆசார்யர்களின் திருவாக்கில் நின்றும் வந்ததெல்லாம் ஶாஸ்த்ரார்த்தமாயிருக்க, தேஶிகதிவ்யஸூக்திகளையும அதிவாதமென்று கைவிடப்பார்க்குமவர்கள் பரமவிலக்ஷணரே.

ஆழ்வான் வரதராஜஸ்தவத்தில் " ஶரண வரண வாக்யம்... .... ஸாக்ஷிஹி தத்ர பூர்வம் ஸமயநஹ " என்றருளிச் செய்திருப்பதை யெடுத்துக் காட்டிச் செய்திருக்கும் ப்ரஸங்கமும் பயனற்றது. அந்தச்லோகத்திற்கு அடியேன் விபுலமாக எழுதியுள்ள வியாக்கியானம் பண்டே வெளிவந்திருப்பதால் அதிலே கண்டு தெளிக. ' எம்பெருமானே ! எம்பக்கலிலே ஏதேனுமொரு ஸாதனம் கண்டே அருள் செய்வதாக நிர்ப்பந்தமுண்டாகில் ஶரணம் என்கிற ஓர் உக்திமாத்திரம் அடியேன் பக்கலில் உள்ளதாகையால் இதனையே பெருத்த கைம்முதலாகக் கொள்ள ப்ராப்தியுண்டு, என்ற விதனால் ப்ரபத்திக்கு உபாயத்வம் எங்ஙனே தேறிற்றோ! அறியோம். "ஸக்ருத் தவ ஸமக்ஷ ப்ரஸாதாத்யதே ஶரண இதிவசோபி ஸே நோதியாஸ் " என்கிற அடுத்த ஸ்ரீஸூக்தியையும் சேர்த்து நோக்கிப்பொருள் கொள்ளவேண்டாவோ?

இந்த உபாயத்வ விசாரத்தில் பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து அடியேன் விஜ்ஞாபித்ததொரு ச்லோகமுண்டு;—" ரத்நம் யதாஹஸ்ஸ்வல்ப மூல்யம் க்ரமமூல்யம் ஸமா ஸாதயேஷ தத்ரத்நம் வணிஜோ வஶம்வதயே ப்ரபத்தி மூல்யம் பஹு | ஸந்தோஷதஶ்ச ஸார்வபௌம வஶம் தாம், ப்ரபத்தி ஸ்வயம் ஸ்வீக்ருதாம் நிதர்ஶநதாமேவேதி, தத்ரயம் ந்யாய: ப்ரவர்த்தாவலி " என்பதாம். இதனை விவரிப்போம். கடலிலே வலைவீசி மத்ஸ்யம் பிடித்து ஜீவிப்பானொரு செம்படவன் ஒருநாள் பெருவிலையனதொரு ரத்னம் கடலிலே கிடைக்கப் பெற்றான். அதனுடைய மதிப்பை அவன் அறியமாட்டாதவனாகையாலே " மாமதியந்திளைக்குங் கொடிமாளிகை சூழ்தெருவில் செழுமுத்துவெண்ணெற் கெனச்சென்று, முன்றில்வளைக்கை நுளைப்பாவையர்மாறு நாங்கூர் " என்ற கணக்கிலே, அந்த ரத்நத்தைக் கொண்டுபோய் ஒரு வ்யாபாரியிடத்திலே ஸ்வல்பவிலை கூறி விற்றுவிட்டான். அந்த வ்யாபாரி ரத்நத்தின் மதிப்பை நன்குணர்ந்தவனாகையாலும் வாணிஜ்யஜீவியாகையாலும் அவன் அதைக்கொண்டுபோய் ஒரு ஸார்வபௌமனிடத்திலே க்ரமமாக அதற்குள்ள விலைகூறி ஆயிரம்வராஹனுக்கு விற்றான்.

பிறகு அந்த ஸார்வபௌமன் அந்த ரத்நத்தை விற்பனைசெய்ய நினையாதே அதனைப் பெரியதொரு ஹாரத்திலே இணைத்து ஸ்வயம் போகார்ஹமாக அமைத்துக்கொண்டான். ஆக, ஒரு ரத்நத்திற்கே மூன்று படிகள் உண்டாயின. 1. ஸ்வல்ப விலைக்கு மாறுதல், 2. க்ரமமான விலைக்கு மாறுதல், 3. விலைக்கு ஆட்படுத்தாமல் ஸ்வயம் போக்யமாகக் கொள்ளப்படுதல்—என மூன்று வகைகள் ஒன்றுக்கே கூடினாப்போலே ப்ரபத்திக்கு மிங்ஙனே மூன்று படிகள் கூடும். (1) ரத்நத்தின் மதிப்பை அறியமாட்டாத ஶீவரன் போலே ப்ரபத்தியின் சீர்மையை அறியமாட்டாத க்ஷுத்ரர் ப்ரபத்தியைக் கொண்டு ஐஶ்வர்ய கைவல்யாதி க்ஷுத்ரப்ரயோஜநங்களைக் கொள்வர். (2) ரத்னத்தைக் குறைந்த விலைக்குக்கொடாதே தகுந்த விலைக்கே கொடுத்த வ்யாபாரியைப் போன்ற அதிகாரிகள் ப்ரபத்தியை மோக்ஷஸாதநமாக அபிமானித்து, க்ஷுத்ர பலன்களைக் கொள்ளாதே மோக்ஷபலனையே கொள்வார்கள். (3 ரத்நத்தை ஒன்றுக்கும் ஸாதநமாக்காதே ஸ்வயம்போக்யமாகக்கொள்ளும் ஸார்வபௌமனைப் போன்ற விலக்ஷணாதிகாரிகள் ப்ரபத்தியை ஒன்றுக்கும் ஸாதநமாகக் கோலாதே அதை ஸ்வயம் புருஷார்த்தமாகக் கொண்டு வர்த்திப்பர்கள். ஸார்வபௌமஸ்தானத்தை விரும்பாதே வ்யாபாரி ஸ்தாநத்தை விரும்பி ப்ரபத்தியை ஸாதநமாகக் கொள்வார் அங்ஙனமே கொள்க. அதனை நாம் விலக்குவோமல்லோம்.

தோட்டம் சமைத்து மாம்பழம் பயிர் செய்வார்களில் அப்பழங்களை அரைகுறை விலைக்கும் அதிக விலைக்கும் விற்பாருமுண்டு; விற்காதே ஸ்வயம்போக்யமாகக் கொள்ளுவாருமுண்டு. ஒரு மாம்பழந்தானே ஒருத்தனுக்கு உபாயமாயும் ஒருத்தனுக்கு உபேயமாயும் ஆகா நின்றது. உபாயமாகக் கொள்ளுமவன் அதமனாகவும், உபேயமாகக் கொள்ளுமவன் உத்தமனாகவும் ப்ரஸித்தனும். அதுபோலவே, ஆத்மாவாகிற தோட்டத்தில் ஏதேனுமொரு நன்மை விளைந்தால் " எம்பெருமானருளாலும் ஆசார்யகடாக்ஷத்தாலும் நமக்கு இங்ஙனே ஒரு நன்மை விளைந்ததே!' என்று உள் குழைந்திருக்கவேண்டுமத்தனையல்லது அதை உபாயமாகக் கொள்வது தன் நிலைமைக்குப் பொருந்ாதென்பதே ஆசார்யர்களின் திருவுள்ளம்.

ஸ்ரீவசந பூஷணத்தில் பக்தி ப்ரபத்திகளை தூஷித்துவிட்டு ஆசார்யாபிமாநத்தையே உத்தாரகமாகச் சொல்லியிருப்பது ஶாஸ்த்ர விருத்தம் என்று அய்யாக்ருஷ்ணதாதாசாரியர் எழுதியுள்ளார். "ஸ்வாபிமாநத்தாலே ஈஶ்வராபிமாநத்தைக் குலைத்துக்கொண்ட இவனுக்கு ஆசார்யாபிமாநமொழிய கதியில்லையென்று பிள்ளை பலகாலுமருளிச் செய்யக் கேட்டிருக்கையாயிருக்கு"மென்று தொடங்கியுள்ள ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்திகளை நம் தேசிகனும் போர ஆதரித்தே ந்யாஸதிலகத்தில் "அந்யாநர்ஹ ஶரண்ய ஶரண ..." "உத்ராய ந்ஜய..............." என்கிற ஶ்லோகரத்நங்களையருளிச்செய்தார். அவற்றையும் இவர் தூஷித்துத் தீரவேண்டும். 'உத்தாரம் நிஜ ஶிஷ்யம் ஸ்வ ஶிகார ஸ்வகாரம்கஷீ" என்றதும் ந்யாஸதிலகத்திலே. ஶரணாகதி தீபிகையில் "ஶக்தி ஶ்ருவத்தி" என்ற ஶ்லோகத்தில் "தந்நிஷ்டஸம் ஶ்ரய" என்றதும் 'விகல்ப்ஜாநம்' என்றதும் நோக்கத்தக்கவை. விகல்பமென்றோ யன்றி ஸமுச்சயமென்றோ இல்லை. 'தந்நிஷ்டஸம்ஶ்ரய இதி' என்னாமல் 'இதீவ' என்றது அதற்கு மேலும் ஒருபடி போகையிலே திருவுள்ளம் சென்றிருப்பதை நன்கு காட்டவில்லையா? இவையெல்லாம் ஒருபுறமிருக்க "த்வய்யுக்தஸ்நவி விஜஹதோ ஸ்வக்ருத்வதாயநக்ஷம் ஸ்வேஷ்வஷ்ட்ரவாரவஸ்ஶா ஶ்ஶரயோ ஜ ஶ்ஶஷஸா." (ந்யாஸதிலகே) என்கிற ஸ்ரீஸூக்தியை இடைவிடாது சிந்தை செய்யில் ஸ்ரீவசநபூஷணத்தில் தேசிகனுக்குள்ள ஸுவமாஹநஹாரம் அறியவெளிதாம். இந்த ஶ்லோகரத்நத்தின் விசேஷார்த்தங்களை அதன் வியாக்கியாநத்திலே விரியவுரைத்தோம். எம்பெருமானும் உபாயமல்லனென்று விட்டொழியுமவர்கள் என்று இங்கு அருளிச்செய்யுமழகு ஆராயத்தக்கது. ஸ்தோத்ர ரத்நத்திலும் வரதராஜஸ் தவத்திலும் முடிந்த ஶ்லோகங்களில் வெளியிட்டதான 'ஆசார்யாபிமாநமே உத்தாரகம்' என்கிற அர்த்தத்தை ஸ்ரீதேசிகன் பலவிடங்களில் பாங்காகப் பேசியுள்ளார். ஸந்த்ரு விஷ்ஶ ||

எம்பெருமானார் ஸஹஸ்ரநாம உபந்யஸித்தருளும்போது கேட்டிருந்த பிள்ளையுறங்காவில்லிதாஸர் "மெய்யன்பனான விபீஷணன் பட்டபாடே அதுவானால், பொய்யே கைம்மை சொல்லித் திரியும் நம்போல்வார்க்கு என்னகதி" என்று கதறிக்கிடக்க, அப்போது உடையவர் "உனக்குநானுண்டு, எனக்குப் பெரிய

"இந்திரா"

பல வருஷங்கள் உழைக்கக் கூடியது.

இன்று இணையற்று விளங்குவது.



'இந்திரா'

கடியாரங்கள் வெகுநாள் உழைக்கக் கூடியது. சரியான மணி காட்டும். 8 நாளைக்கு ஒரு முறை சாவிகொடுக்கக் கூடியது. பெண்டுலம் மூவமெண்ட், எனமெல் டயல், மணி, ½ மணி இனிமையான தொனியில் அடிக்க கூடியது.

10 ஞ உத்திரவாதம்

8" டயல் ரூ. 10-0-0
10" டயல் ரூ 14-0-0
12" டயல் ரூ. 18-0-0

பாக்கிங் அண்டு பார்சல் செலவு வேறு. ஆர்டர் செய்பவர்கள் ரூ. 5 முன்னதாக அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

ஜலால் அண்டு சன்ஸ்,

கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்.

ஹெட் ஆபீஸ் :— 46, ரட்டன் பஜார், சென்னை.
பிராஞ்சு ஆபீஸ் :— 190, B. மௌண்ட்ரோட், சென்னை.
12, 42-1, ஆபிட்ரோட், ஹைதராபாத் (டெக்கான்.)

Note Our
"STEAMER"
TRADE MARK
World's Best
By Every Test
The Indian Chemical Diamond Works
96, Mint Street,
MADRAS


"கப்பல்" மார்க்கு
ரங்கோன் வைரங்கள்
கடினம், பூரிப்பு ஒளி, குணங்களில், மிகச் சிறந்தவை.
சீமைக் கமலச் சிறப்பை சிக்கனச் செலவில் அடையலாம்
ஒருமுறை விஜயஞ் செய்யுங்கள்
ஸம்ஸுதீன் அன் இஸ்மாயில்
தி இண்டியன் கெமிக்கல் டைமன் ஒர்க்ஸ்.
96, சௌகார் பேட்டை, சென்னை.

பாரிசவாயுவுக்கு பயப்படவேண்டாம்!
க்ஷீரபலா
(101 தடவை பாகம் செய்தது.)
பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி. எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. இதை எங்களுடைய "அயவீரஸிந்தூர"த்துடன் கலந்து உட்கொண்டால் இன்னும் அமோகமான பலன் அதிசீக்கிரத்தில் கிடைக்கும்.
க்ஷீர பலா:—அவுன்ஸ் 1-க்கு 3-8-0. ½-அவுன்ஸ் 1-12-0.
அயவீரம்:—ஒருவாரத்திற்கு போதுமான மருந்து 1-0-0.
மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்
107, பிராட்வே, சென்னை

"நம்பியுண்டு" என்று பணித்தருளினர். மற்றும்பல ஐதிஹ்யங்களையும் தேசிகனே தமது ரஹஸ்யங்களில் அருளியுள்ளார்.

"ஈஶ்வர ஸ்வாதந்திரியத்தாலே ப்ரபத்தி நழுவிற்று" என்று ஸ்ரீவசநபூஷணத்திலருளிச்செய்தது ஆழ்வார்களுடைய ப்ரபத்தியையும் தூஷிக்கிறதாகையாலே லோகாசார்யர் விஶ்ரம்ஸகர்" என்று லிங்கஸாரஸ்யவேஷிகள் எழுதியிருப்பதைப் பற்றிச் சில பேசுவோம். நிரங்குஶஸ்வதந்த்ரனை எம்பெருமானைப் பற்றியிருந்து 'இவன் என்செய்வனோ'? * என்று மாற்றமுளவிற்படியே அஞ்சிக் கிடப்பதிற்காட்டிலும் ஶிஷ்யோஜ்ஜீவநைகதத்பரனை ஆசார்யனுடைய அபிமாநத்திலே யொதுங்கி மார்பிலே கை வைத்து உறங்கவமையும்" என்கிற பரமார்த்தம் மதுரகவிபோல்வாருடைய அநுஷ்டாநத்தாலே ஸித்தம். தேசிகனும் "அன்பர்க்கே யவதரிக்கும் ஆயன்நிற்க அருமறைகள் தமிழ்செய்தான் தாளே கொண்டு, துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டும் தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே" என்றருளிச் செய்தார். எம்பெருமானிருக்கவும் அவனையுபேக்ஷித்து [அநாதரித்து] ஆழ்வார் திருவடிகளைப் பணிந்தபின் மதுரகவிகள் துன்பற்றதாகக் கூறி, அன்னவருடைய நிஷ்டையே நல்லோர்க்கு நிஷ்டையாகக் கடவது என்று திடமாகக்கூறி முடித்த தேசிகனையும் இவர் விஶ்ரம்ஸகரென்று வசை கூறிமுடிக்கபடியே யாம். அந்தோ! நஹிநிந்தாந்யாயத்தில் இவர்க்கு வ்யுத்பத்தி மாத்ரமுமில்லை போலும். "வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" இத்யாதிகளுக்கு முரணாக "த்ரைகுண்ய விஷயா வேதா:" என்று பகவத்கீதையிலே வேதநிந்தை பண்ணிக்கிடப்பது பிசகு - என்று தூஷிக்குமவர்கட்கு இவர் தோழரே?

"கைங்கர்யத்திலே ஸ்வார்த்தபரார்த்தவிபாகமும் ஶாஸ்த்ரமூலமல்லாதது" என்று எழுதியுள்ளதைச் சிறிது விமர்ஶிப்போம். ஸ்வார்த்த கைங்கர்யமாவது என்ன? பரார்த்த கைங்கர்யமாவது என்ன? என்பது இவர்க்கும் தெரியாது, இவர் வகுப்பினர்க்கும் தெரியாது. ஆத்மஸ்வரூபத்தை ஶாஸ்த்ரங்கள் நிஷ்கர்ஷிப்பது ஒருபடியாயும், ஶாஸ்த்ரஸாரமான திருமந்திரம் நிஷ்கர்ஷிப்பது ஒருபடியாயுமிருக்கும். ஆசார்ய ஹ்ருதயத்தில் "ஶேஷத்வபோக்த்ருத்வங்கள் போலன்றே பாரதந்த்ர்யபோக்யதைகள். ஜ்ஞாநவத்வாதிகளின் மேலே யிறே! ஜ்ஞாநதுஷ்டி

களுக்கு உதயம். முளைத்தெழுந்த ஸம்யக்ஜ்ஞாநாயாஸ்த்வரூபம் விதியிற்காணும் ப்ராப்யப்ராப்திதசைகளைப் பகல் விளக்கும் மின்மினியுமாக்கும்" இத்யாதி சூர்ணைகளினால் பரமகம்பீரமாக நிரூபிக்கப்பட்டுள்ள ரஹஸ்ய ரஹஸ்யார்த்த நிஷ்கர்ஷங்களை லிங்கஸாரஸ்ய வேதிகள் உணர ப்ரஸக்தியில்லை. பட்டர் அஷ்டஸ்லோகியில் "மந்த்ரப்ரஹ்மணி மத்யமேந நமஸா" என்கிற ச்லோகத்தில் நமஸ்ஸை முன்னும் பின்னும் அந்வயித்து ஶிக்ஷித்துக் கொடுக்கிற அர்த்தத்தை வெகு அழகாக நிரூபித்தருளியிருக்கிறார் "பஸ்சாதீக்ஷிதேந நமஸா கம்யம் ஶிக்ஷிதம்" என்றருளிச் செய்துளர். இந்த அர்த்த விசேஷத்தை இங்கு விவரிக்க விரும்புகின்றிலோம். "அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் | க்ருதக்ருத்யஸ்ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ." என்கிற ஸ்ரீ ராமாயண ஶ்லோகங்கொண்டு ஸாமாந்யரும் தெளியலாம். க்ருதக்ருத்யத்வமும் விஜ்வரத்வமும் ப்ரமோதமும் ஸ்வாமியான பெருமாளுக்கேயல்லது ஸ்வம்மான விபீஷணனுக்கு இல்லையே. இந்த இன்சுவையைக் கண்டுணர்வாரார்? முக்திதசையில் அஹமந்நம் என்று முந்துறப் பேசி, பின்பே அஹமந்நாத: அஹமந்நாத: என்கிறது. ஆத்மாவுக்கு சேதநத்வேந போக்த்ருத்வமிருந்தாலும், பாரதந்த்ர்யத்தையும் போக்யத்தையும் ஸ்வரூபவ்யாப்த வேஷமாகத் திருமந்திரத்தினால் கண்டறிந்தவனுடைய போக்த்ருத்வமாகில் அது, தன்னுடைய ரஸத்துக்கு உடலன்றிக்கே சேஷியினுடைய ரஸத்துக்கே உடலாயிருக்கும். 'ஆநந்தம் அவன் ப்ரீதியைத் தளிரெழுப்ப' என்ற நம்முதலிகளின் முதுமொழியின்படியே இவனுடைய போக்த்ருத்வம் சேஷியானவனுடைய ப்ரீதிக்கு வர்த்தகமாயிருக்குமத்தனை. ஆனதுபற்றியே 'அஹமந்நம்' என்று ஸ்வபோக்யத்தை முன்னிட்டு சேஷியை உகப்பிக்க விழுந்தவன் 'அஹமந்நாத:' என்று ஸ்வபோக்த்ருத்வத்தையும் புரஸ்கரிக்கிறது. இங்ஙனல்லாதபோது எம்பெருமான் ஒருமணைக் கட்டையோடே அநுபவித்தபடியாகுமத்தனையல்லது ஒரு சேதநனை அநுபவித்ததாகாதே. இவ்வர்த்தம் மிகவும் உட்புகுந்து உணர வேண்டுமாதலால் ப்ரேக்ஷகர்க்கு நிலமன்றென விடுப்போம். "படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே" என்ற பெருமாள் திருமொழியில் "படியாய்க்

கிடந்து' என்பதனால் அசேதநவ்ருத்தியும், 'உன்பவளவாய் காண்பேனே" என்பதனால் சேதநவ்ருத்தியும் பிரார்த்திக்கப்பட்டன. இதில் சேதநவ்ருத்தி ப்ரார்த்தனையின் கருத்து என்னவென்பதைக் கண்டறியப் பிறந்தாரல்லரிவர். இத்தலையில் விநியோகங்கொண்ட எம்பெருமானுக்குண்டாகும் உகப்பைக் கண்டு உகப்பது தவிர வேறு பயனில்லை சேதநனுடைய ஜ்ஞாத்ருத்வத்திற்கு என்பதே ஸத்ஸம்ப்ரதாய ஸாரார்த்தம். இதனை ஆளவந்தார் "கதாஹம் ஐகாந்திக நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி" என்பதனால் ஸ்பஷ்டமாகவே காட்டியருளினர். ப்ரஹர்ஷயிஷ்யாமி என்ற ணிஜந்த ப்ரயோகம் நோக்குக. இங்கு வியாக்கியானத்தில்— "தன்னுடைய அநுவ்ருத்தியால் ஈச்வரனுக்குப் பிறக்கும் ஹர்ஷமேயிறே! சேதநனுக்கு ப்ராப்யம்" என்று பெரியவாச்சான் பிள்ளை அருளியதை தேசிகன் தமது ஸ்தோத்ர பாஷ்யத்தில் "[ப்ரஹர்ஷயிஷ்யாமி] த்வதாஸஹேதவ்யே த்வத்ப்ரஹர்ஷணமேவ ப்ரயோஜநமிதிபாவ:. ஸ்வஸ்ய ஸ்வாமிந ஸ்வாம்யநுகூல்யஹேதுத்வ ப்ரஹர்ஷித கைங்கர்ய ப்ரயோஜநதா ஸ்ருதி." என்று விஶதீகரித்தருளினர். "க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி" "என்றும் மகிழ்வேனே" என்று வருமிடங்களில் இந்த நிர்ணயத்திற்கு அநுகுணமாக அர்த்த நிர்வாஹமே ஆசார்யர்கள் செய்து போருவது. ஶாஸ்த்ரஶ்ரவண ஸேவாவிமுகராய் ஒன்றையும் குனிந்து கேளாதே ப்ரத்யக்ஷதேஶிகத்வேஷியான இவர்க்கு நாமுரைப்பதெல்லாம் ஊமையரோடு செவிடர் வார்த்தையாம்.

ஸ்ரீவசநபூஷணாதி ரஹஸ்யங்களில் உள்ள ஒவ்வொரு அர்த்தமும் ஸ்ரீ தேசிக திவ்ய ஸூக்திகளில் ஆங்காங்கு வெகு அழகாக எடுத்தாளப்பட்டு ஒளிர்கின்றதென்னுமிடத்தை உபயக்ரந்தங்களையும் ஸதாசார்ய பரம்பரையிலே கேட்டுத் தெளிந்த மஹான்கள் நன்குணர்ந்து மகிழ்வார்கள். "ப்ரபத்தி அபராத கோடியிலேயாகும்" என்று பிள்ளை லோகாசாரியர் எழுதிவிட்டாரே! என்று வசைகூறுமிவர், ஸ்ரீ தேசிகனும் இங்ஙனே தான் பணித்துப் போந்தார் என்பதை அறியமாட்டிற்றிலர். "த்வதங்கீகாரவிஹதி ஸ்ப்ருஹயா ஸமாயந்து" என்று ஶரணாகதி தீபிகையிலே பணித்ததற்குப் பொருள் யாதென்று விமர்சிப்பது. இவை பன்னியுரைக்குங்கால் பாரதமாம். முன்னோர் மொழிந்த முறை தப்

பாத தேசிகன் ஸ்ரீ லோக தேசிக ஸூக்திகளையே தஞ்சமாகக் கொண்டவரென்பது ஸுவிதமாகும்.

இனி இந்த லிங்கஸாரஸ்ய வெஷியின் ஞான மிருக்கும்படியைப் பற்றிச் சிறிது மூதலிப்போம். ஆடி மாதத்தில் வெளிவந்த வேதாந்த தீபிகையில் இவர் எழுதியிருக்கும் அத்திவரதன் வைபவத்தில் (முதல் பக்கத்தில் 16-வது வரியில்) தேவப் பெருமாளை "ஏழைமலை நாயகனார்" என்று வெளியிட்டுள்ளார். இதற்கு என்ன பொருள் என்று இவரைச் சிலர் கேட்டதற்கு, திருவேங்கடமுடையான் மிக்க செல்வம் படைத்தவராகையாலே அவர் செல்வமலை நாயகனார் என்று புகழ்பெற்றார்; நம்பேருளாளன் அங்ஙனன்றிக்கே ஏழையாயிருப்பதால் 'ஏழை மலை நாயகனார்' என்று நம் ஆசார்யர்கள் பேசிப் போந்தார்கள். தேசிகனும் ஸ்வ ப்ரபந்தத்தில் இங்ஙனே அருளிச்செய்தது கொண்டு நான் எழுதினேன் என்று இவர் விடை கூறி, கூரத்தாழ்வான்கூட வரதராஜ ஸ்தவத்தில் "ஸமஸ்ததரித்ர" என்று நம் தேவப் பெருமாளை ஒப்பற்ற தரித்ரப் பெருமாளாகவே பேசுகிறார், நாம் என்ன பண்ணுவோம். என்று முடித்தார். தேசிக ப்ரபந்தத்தில் 'வேழமலை' என்றுள்ளதே யன்றி ஏழைமலையென்றில்லை. தமிழில் வேழமென்று யானைக்குப் பெயராதலால் ஹஸ்திகிரி நாம பர்யாயமாக வேழமலை யென்றார் தேசிகன். ஒன்று கிடக்கவொன்று ஓதினவிவர் வேழமலையை ஏழைமலை யென்று க்ரஹித்தும், ஸமஸ்த தரித்ர மென்றதை ஸமஸ்ததரித்ரமென்று கொண்டும் இப்படிப்பட்ட தம்முடைய ஸாஹஸங்களை வேதாந்த தீபிகையிலும் பிரசுரப் படுத்தி நாடு நகரமும் அபஹஸிக்க நின்றார்.

இவரெழுதிய அந்த அத்திவரதன் வைபவத்தில் மற்றொரு ஆச்சரியமும் காண்மின். 'தன்னடிச் சோதிக்கு எழுந்தருளுவது' என்று ஒரு ஸம்ப்ரதாய பரிபாஷைச் சொல் ப்ரஸித்தமே. "க்ருத்யாவதாரணம் க்ருத: ஸ்வம் ஸ்தானம் ஸமாருருஹே" என்றாற் போலே எம்பெருமான் திருவவதார க்ருத்யங்களைத் தலைக் கட்டிக் கொண்டு திரும்புவதைப் பேசுமிடங்களில் "தன்னடிச் சோதிக் கெழுந்தருளினான்' என்று ஆசார்யர்கள் அருளிச்செய்வதும் ப்ரஸித்தம். தன் என்பது 'எம்பெருமான்றன்னுடைய' என்றபடியே யாதலால், ஸ்ரீ வைஷ்ணவர்கள் பரமபதிப்பதைக் குறிக்க வேண்டுமிடங்களில் இச்சொல்லை உபயோகிப்பதுமில்லை. உபயோகிக்க ஔசித்யந்தானுமில்லை. இப்படியிருக்க இவர், அந்த அத்திவரதன் வைபவத்தில் (மூன்றாவது பக்கத்தில்) 'பெரியோர்கள் தன்னடிச் சோதியை அலங்கரித்தார்கள்' என்றெழுதிவைத்தார்' இக்காலத்து அநபிஜாதர்கள் பேசும் ஸம்ப்ரதாய பரிபாஷையே நினைவுக்கு வாரா நின்றது.

இப்படி சிறு விஷயம் முதற்கொண்டு பெரிய விஷயமீறாக ஒவ்வொன்றிலும் விபரீதவுணர்ச்சியே தலையெடுத்து நிற்குமிவருடைய உக்திகளைத் தாங்கி ஸாத்விகர்களை வருந்தச் செய்யும் நிலைமை தீபிகைக்கு நேர்ந்ததுபற்றி மிக வருந்துகிறோம். இத்துயர் நீங்கி 'தழை நல்லவின்பம் தலைப்பெய் தெங்கும் தழைக்கவே' என்கிறபடியே உலகம் இன்பமோங்கி விளங்கவேணும்.

ஸ்ரீ வசந பூஷணத்திற்கு மணவாள மாமுனிகள் இட்டருளின பரம கம்பீரமான வியாக்கியாந அவதாரிகையை அப்படியே களவாடித் தம் சுவடிக்கு அவதாரிகையாக அமைத்துக்கொண்டும், மற்றும் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியாந ஸ்ரீ ஸூக்திகளையே அப்படி யப்படியே நுழைத்திட்டு க்ரந்த பூரணம் செய்தும் இங்ஙனே தென்னாசார்ய திவ்ய ஸூக்திதஸ்கரராக விளங்கி நிற்குமிவர் வீணான வாதவிவாதங்களை இன்னமும் அஜ்ஞானவாயெயமாக ஆர்ஜிக்க முயல்வது வேண்டாவென்று இவர்க்கு ஹிதமுரைப்பாரில்லையே.

(தொடரும்.)

குறிப்பு:—புரட்டாசி மாதத்து வேதாந்த தீபிகையில் வெளிவந்துள்ள ஸம்ப்ரதாய பரிசுத்தி யுரையிற் காணும் விபரீதார்த்தங்களைப் பற்றின விமர்ஶம் அடுத்த பத்திரிகையில் வெளிவரும்.

வர்த்தமாநங்கள்

வானமாமலை கந்யாபுநர்வஸு

[ஸ்ரீ. உ. வே. தே. திருமலாசாரியார் வானமாமலை.]

இத் திருநன்னாள் ஸ்ரீ ரம்ய ஜாமாத்ரு யோகீந்த்ரவாதரேவாஸ்வரூபராய், ஆகையினாலேயே அவ்வழகிய மணவாள மாமுனிகளின் அமல வடியிணைகளை யாஶ்ரயித்த ஆரியர்கள் கோஷ்டியில் அக்ரகண்யராக அனைவராலும் போற்றப்பட்ட ஒன்றான வரமங்கை மாமுனிவன் உலகுய்ய வந்துதித்த ஸுதிநமாகும்.

இத்திரு நக்ஷத்திரத்தை முன்னிட்டு பத்துநாள் ஸ்ரீ வானமாமலை மடத்தில் திவ்ய ப்ரபந்த ஸேவை, விசேஷமான ததீயாராதநம், ராத்திரி டோலோத்ஸவம் ப்ரதிதிநம் அழகாக நடைபெறுவதுடன் உபய வேதாந்தோபந்யாஸங்களும் நடைபெற்று திருநக்ஷத்திரத் தன்று தெய்வ நாயகன் மங்கையுடன் மடத்திற்கெழுந்தருளி மாமுனிவனுடன் இனிது வீற்றிருந்து திருமஞ்சனம், திருவாராதநம், திருப் போனகம் முதலியன விசேஷமாகக் கண்டருளி, கோஷ்டிக்கு விநியோகமானதும் சன்னிதிக்கு எழுந்தருள்வர். மறுநாள் ஸ்ரீ ஸ்வாமி திருக்கையால் உபந்யாஸகர்களுக்கு விசேஷ ஸம்மாநமும் ப்ரதி ஸம்வத்ஸரமும் நடைபெறுவது வழக்கம். அவ்வாறே இவ்வாண்டிலும் விசேஷமாக நடைபெற்றது. மேலும் ஸ்ரீ ராமாநுஜ ஸம்ப்ரதாயாபிவ்ருத்தி என்ற வித்வத்ஸபையும் ஸ்ரீ ஸ்வாமியின் அக்ராஸநாதிபத்யத்தின் கீழ் நடைபேற்றது. தேறு ஞானத்தர் வேத வேள்வியரான ஸ்ரீ வரமங்கல நகருறை ஸ்ரீ வைஷ்ணவர்களோடு அநேக திவ்ய தேசங்களிலிருந்தும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் எழுந்தருளி ஷை ஸபையை அலங்கரித்தார்கள். ஸாமாந்ய ஶாஸ்த்ரங்களிலும், உபய வேதாந்தங்களிலும், செவிக்கினிய செஞ்சொற்களாலமைந்த உபந்யாஸ வாக்யார்த்தங்கள் செவ்வனே நடைபெற்று வித்வான்களுக்கு விசேஷ ஸம்பாவனையும், ஸ்ரீ ஸ்வாமிதிருக்கையினால் ப்ரஸாதிக்கப்பட்டது. ஷை கன்னிப் புனர்வஸு உத்ஸவம் திருவல்லிக்கேணி வானமாமலை மடத்திலும் நடைபெற்றது. வடகரை வானமாமலை மடத்தில் 10 நாள் உத்ஸவமும் ஷை திநத்தில் விசேஷ ததீயாராதநமும் நடைபெற்று சாற்றுமுறையும் நடந்தேறியது.

கன்னிப் பூராட்டாதி

இத்திருநன்னாள், ஸ்ரீ முதலியாண்டான் திருவம்ஶத்திலவதரித்தவராயும், மணவாள மாமுனிகளின் அஷ்டதிக்கஜாசார்யர்களில் ப்ரதாநமானவராயுமிருக்கும் ஒன்றான கோயில் கந்தாடை வரத நாராயண (அண்ணன்) ஸ்வாமி அவதரித்ததால் புநிதமாயது.

இத்திரு நக்ஷத்திரத்தை உத்தேசித்து ஸ்ரீரங்கம் முதலான திவ்ய தேஶங்களிலிருக்கும் திருமாளிகைகளில் உத்ஸவம் விசேஷமாக நடைபெறுவது இயல்பாயிருந்தாலும் ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு சமீபத்திலிருக்கின்ற வடகரை என்கிற கிராமத்திலிருக்கும் திருமாளிகையில் ஷை உத்ஸவம் நடைபெற்றது குறிக்கொள்ளத்தக்கது.

ஷை திருமாளிகையில் பத்து தினங்களிலும் ஆழ்வார்களருளிச்செய்த அமுதிலுமினிய திவ்ய ப்ரபந்தங்கள் நாலாயிரமும் கேட்பார்

செவிகளினிதுகக்குமாறு மிகவும் அழகாக சேவிக்கப்பட்டன. ஒவ்வொரு தினங்களிலும் தளிகை முதலான சிறப்புகள் விசேஷமாக நடைபெற்றன. இவ்வாறு ஒன்பது திநங்களிலும் இரண்டு வேளையாக நடைபெற்று கடைசி தினம் (திரு நக்ஷத்திரத்தன்று) விசேஷமாக

வர்த்தமான கோயில் கந்தாடை அண்ணன் ஸ்வாமி

ததீயாராதநம் நடைபெற்று ராத்திரி டோலோத்ஸவமும் நடைபெற்றது. பக்கத்து கிராமங்களிலிருந்து விசேஷமாக ஸ்ரீ வைஷ்ணவர்கள் எழுந்தருளி ஷை கோஷ்டியை அலங்கரித்தார்கள். அந்த கோஷ்டியை ஸேவித்தவர்கள் இந்தமாதிரியான ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியை பெரிய திவ்ய தேஶங்களில்கூட காணவரிதென்று கொண்டாடினார்கள்.

அப்பு. ஸ்ரீ. ஆ. நாராயணன்.

பஞ்சாங்கம்—நவம்பர்மீ

	ஆங்கில தேதி	தமிழ் தேதி	வாரம்	திதி	நட்சத்திரம்	யோகம்	கரணம்
				நா.வி.	நா.வி.	நா.வி.	நா.வி.
நவம்பர்மீ	1	௧௬	திங்	திர 4-17	அஸ் 15-10	விஷ் 36-12	வணி 4-17
	2	௧௭	செவ்	சது 6-30	சித் 18-58	பிரீ 35-31	சகு 6-30
	3	௧௮	புதன்	அ ● 9-51	சுவா 23-48	ஆயு 35-38	நாக 9-51
	4	௧௯	வியா	பிர 14-9	விசா 29-31	சௌ 36-26	பவ 14-9
	5	௨0	வெள்	துதி 19-3	அனு 35-42	சோ 37-32	கௌ 19-3
	6	௨௧	சனி	திரு 24-15	கேட 42-5	அதி 38-48	கர 24-15
	7	௨௨	ஞா	சது 26-19	மூல 48-17	சுக 39-55	வணி 1-52
	8	௨௩	திங்	பஞ் 33-54	பூரா 59-57	திரு 40-36	பவ 2-47
	9	௨௪	செவ்	சஷ் 37-53	உத் 58-48	சூல 40-37	கௌ 5-53
	10	௨௫	புதன்	சப் 40-36	சிர 10-0	சண் 39-52	கர 9-14
	11	௨௬	வியா	அஷ் 42-7	சிர 2-26	விர் 38-10	பத் 11-21
	12	௨௭	வெள்	நவ 42-14	அவி 4-54	துரு 35-25	பால 12-10
	13	௨௮	சனி	தச 41-7	சத 6-1	வியா 31-43	தை 11-40
	14	௨௯	ஞா	ஏகா 38-53	பூர 6-0	அர் 27-7	வணி 10-0
	15	௩0	திங்	துவா 35-36	உத் 4-57	வஜ 21-14	பவ 7-14
	16	௧	செவ்	திர 31-26	ரேவ 2-52	ஸித் 15-31	கௌ 3-31
	17	௨	புதன்	சது 26-33	பர 56-28	வியா 8-46	வணி 26-33
	18	௩	வியா	○ 21-4	இ ✻ 52-39	பரி 52-25	பவ 21-4
கார்த்திகைமீ	19	௪	வெள்	பிர 15-25	ரோ 48-37	சிவ 46-5	கௌ 15-25
	20	௫	சனி	துதி 9-36	மிரு 44-30	ஸித் 38-17	கர 9-36
	21	௬	ஞா	சது 54-24	திரு 40-35	ஸித் 30-36	பத் 3-44
	22	௭	திங்	பஞ் 52-59	புன 37-0	சுப 23-9	கௌ 23-41
	23	௮	செவ்	சஷ் 48-33	பூச 34-4	சுப 16-12	கர 20-46
	24	௯	புதன்	சப் 44-55	ஆயி 31-52	பிரா 9-47	பத் 16-44
	25	௧0	வியா	அஷ் 42-16	மக 30-36	வை 55-7	பால 13-35
	26	௧௧	வெள்	நவ 40-40	பூர 30-22	விஷ் 55-10	தை 11-28
	27	௧௨	சனி	தச 40-23	உத் 31-22	பிரீ 52-14	வணி 10-31
	28	௧௩	ஞா	ஏகா 41-24	அஸ் 33-38	ஆயு 50-17	பவ 10-52
	29	௧௪	திங்	துவா 43-41	சித் 37-5	சௌ 49-13	கௌ 12-28
	30	௧௫	செவ்	திர 47-8	சுவா 41-40	சோ 49-2	கர 15-24

குறிப்புகள்:—1௳ தீபாவளி. 2௳ அமாவாஸை. 7௳ மணவாள மாமுநிகள். 8௳ ஸேனை முதலியார். 10௳ பொய்கையாழ்வார், பிள்ளை லோகாசாரியார். 11௳ பூதத்தாழ்வார். 12௳ பேயாழ்வார். 14௳ உத்தாந ஏகாதஸி. (கைஸிக ஏகாதஸி) 18௳ திருக்கார்த்திகை—திருமங்கை மன்னன், நம்பிள்ளை. 19௳ திருப்பாணாழ்வார். 28௳ ஏகாதஸி—

You have



VALUE -
VARIETY &
CHOICE -

நவீன
நாகரீக
நகைகள்

சவரன் தங்கத்தில்
கட்டியவை
உத்தரவாதமானவை

முதல்தரமான பச்சை, கெம்பு, புஷ்பராகம், முத்துமணிகள் உயர்ந்த எக்ஸ்ட்ரா ரெங்கோன் கமலம் அவைகளில் செய்த நகைகளும் கிடைக்கும்.

ஒரு முறை வாங்கினால் உண்மை விளங்கும்.

Fashion demands at:

JHUNTARAM DURGADASS,

98-A, Sowcarpet, MADRAS.

ஜுந்தாராம் துர்காதாஸ்,

98, சௌகார்பேட்டை :: சென்னை.

பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின் இரண்டு
ஔஷத ரத்னங்கள்

ஜீ வா ம் ரு த ம்

(தேகாரோக்யத்திற்கும்
பல விருத்திக்கும்)

ரத்தமிழந்து, ஜீவனற்று, பலஹீனத்துடன் வாழ்க்கையை வெறுக்கும் வாலிபர்களுக்கு இவ்வௌஷதம் ஓர் வரத்தைப் போன்றதே. இதை உபயோகிக்க ஆரம்பிக்கும் பொழுதே அளவற்ற சுக உணர்ச்சியையூட்டி, மிகுந்த ரத்த புஷ்டியை உண்டாக்கி, புத்துயிரைக் கொடுத்து, வாழ்க்கைக்கே இன்பத்தை விளைவிக்கின்றது. அளவற்ற தேகபலம் குறைவற்ற ஆரோக்கியம் முதலியவற்றை மேன்மேலும் செழிக்கச் செய்கின்றது.

விலை பெரிய புட்டி ரூ. 3-4-0
சிறியது 1-12-0

பா ல பா ஸ் க ர

(குழந்தை ஈரல் குலைக்கட்டி
வியாதிகளுக்கு அற்புத நிவாரணி.)

குழந்தைகளின் ஈரல் (Liver) குலை (Spleen) பெருக்கங்களை அதி விரைவில் கரைத்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கும் அரிய சஞ்சீவி. இதர மருந்துகளால் பயனற்றுப் போன விடங்களில் ஆச்சரியத்துடன் பலன் தந்துள்ளன. தவறுதலின்றி குணங் கொடுப்பதென்று பிரக்யாதியடைந்தது. ஆரம்ப நிலைமைக் கென்றும், முதிர்ந்த நிலைமைக் கென்றும் இருதிறத்திலுள்ளது.

ஆரம்ப நிலைமை மருந்து 1 மாதம் 4-0-0
முதிர்ந்த நிலைமை 8-0-0

விபரங்களுக்கு எழுதவும்.

தயாரிப்பவர்கள் :— **ஆயுர்வேதாஸ்ரமம்**
தபால் பெட்டி 287.
151, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

Edited & Published by V.Ramanujachariar, 24, Chandrappa Mudali St. & Printed by K. Sadagopachari, at The Liberty Press, 7, Sunkurama Chetty St, Madras.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ராமாநுஜ

ஸித்தாந்த வைஜயந்தீ

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசந பத்ரிகை

தொகுதி 2	ஈச்வரஸு ஐப்பசிமீ 1937ஸு அக்டோபர் - நவம்பர்மீ	பகுதி 12

பத்ராதிபர் :
வடகரை ராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

✻

வருஷச் சந்தா ரூ 1—12—0] [தனிப்ரதி விலை ரூ. 0—3—0

விளம்பர விகிதம்	ஒரு பக்கம்	அரை பக்கம்	கால் பக்கம்
	ரூ. 5—0—0	ரூ. 3—0—0	ரூ. 2—0—0

விஷய ஸூசிகை

விஷயங்கள் | பக்கம்.

1. ஐப்பசி மாதம் 281
—பத்திராதிபர்

2. ஐப்பசியில் திருமூலம் 283
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. கி. ஸ்ரீநிவாஸாசாரியார், திருவாங்கூர்

3. திருவிருத்தமும் திவ்விய தேசங்களும் 287
—C. நரஸிம்ஹாசாரியார், அட்வகேட், திருவல்லிக்கேணி

4. பெருந் தொகை 293

5. பஞ்சாங்கம் 294

6. ஸ்ரீ மணவாள மாமுனிகள், பிள்ளை லோகாசாரியார் விஷயமான ஸ்துதிகள் .... 1—24
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்

4 5 6 7 8 9 10
ரங்கூன் வைரங்கள்
கல் 1க்கு
0-2-6 0-3-3
பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O. ✻ சென்னை

ரங்கூன் வைரங்கள் நகைகள்
கேட்லாக் இனாம்
பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O.
சென்னை

L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது —
மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.
பெருங்காயம்.
எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:
பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோதூ & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக் கூடும். அக்காலத்தில் அம்ருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய். மதராஸ் கல்கத்தா

சலோனுடவர் பிராண்ட்

போர்ட்லாண்ட் சிமெண்ட்

காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர்வேலைகளுக்கும் ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்

சோல் ஏஜெண்ட்

M. குப்புசாமி நாய்க்கர்

83, செம்புதாஸ் தெரு,

மதராஸ், ஜி. டி.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

இரண்டாவது தொகுதி விஷய ஸூசிகை

1. பத்ராதிபர்

		பக்கம்
1.	கார்த்திகையிற் கார்த்திகை நாள்	1
2.	ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்	8
3.	மார்கழித் திங்கள்	35
4.	திருவத்யயந உத்ஸவம்	42
5.	தைமாதத்தின் பெருமை	59
6.	எம்பார் வைபவம்	61
7.	புருஷகார வைபவத்தின் தொடர்ச்சி ...	91
8.	மாசி மாதத்தின் மஹிமை	99
9.	பங்குனி மாதத்தின் பெருமை	115
10.	சித்திரை மாதத்தின் சிறப்பு	139
11.	வைகாசி மாதத்தின் பெருமை	161
12.	சீர்திருத்தக்காரர்களும் பண்டிதர்களும் ...	175
13.	ஆனி மாதத்தின் பெருமை	177
14.	ஒரு ஆகாசவாணி	196
15.	அத்திவரதப் பெருமாளின் ஸேவை	199
16.	ஆடி மாதத்தின் பெருமை	201
17.	ஆவணி மாதம்	225
18.	ஸ்ரீ காஞ்சீ வேத வேதாந்த வைஜயந்தீ பாடசாலை ...	240
19.	புரட்டாசி மாதம்	250
20.	ஐப்பசி மாதம்	281

2. ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார் பெருமாள் கோவில்

1.	ஸ்ரீமத் வேதாந்த தேசிகன்	12-108
2.	தை மாதத்தின் சிறப்பு	66
3.	அருளிச்செயல் விசேஷார்த்தங்கள் ...	76, 185, 205
4.	தர்மவ்யாத சரிதம்	94
5.	மாசி மிருக சீர்ஷம்	101
6.	ஆலயம் தொழுவது சாலவும் நன்று	111
7.	வித்வான்களுக்கு ஓர் விண்ணப்பம் (ஸஹஸ்ரநாம பாஷ்ய விஷயமான ஸந்தேகம்) ...	113
8.	பங்குனி உத்திரம்	117
9.	சீரோரும் சித்திரையிற் சித்திரை நாள் ...	141

10. வைகாசி யநுடம் ... பக்கம்
11. ஓர் சந்தேஹம் 162
12. ஸ்ரீ கிருஷ்ணாவதார கதா ரஹஸ்யம் 168
13. ஸத் ஸம்ப்ரதாய பரிசுத்தி 226
14. ஸ்ரீமத் வேதாந்த தேசிக குணாநுபவம் 241, 257
... 250
3. A. V. கோபாலாசாரியார் அட்வகேட், திருச்சி.
1. ஸ்ரீ வசந பூஷணத்தில் ஓர் ஸ்ரீ ஸூக்தி ஸ்வாரஸ்யாநுபவம் 20
4. பந்தல் குடி பாரத்வாஜ மாடபூஷி ரெ. திருமலை அய்யங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.
1. கம்பரும் திரு மந்திரமும் 24
2. வைஜயந்தியின் புத்தாண்டு 26
3. சனகன் பெற்ற வன்னம் 128
4. துன்பற்ற மதுரகவி 145
5. திருமலை நல்லான் T. ராமகிருஷ்ணய்யங்கார் ஆழ்வார் திருநகரி.
1. பராங்குஶ பரகால யதிவராதிகள் 27
6. C. P. ராஜகோபாலாசாரியர்.
1. நல்லறிவு 30
7. V. அனந்தாசாரியர், ஸம்ஸ்க்ருத பண்டிட் பச்சையப்பன் காலேஜ்.
1. ஏகாதசி மஹிமை 38
8. திருமழிசை கோ. க. அப்பனய்யன் ராமாநுஜாசாரியார்.
1. பகவந்நாமோச்சாரண ப்ரபாவம் 46
2. திருவாய் மொழியின் வ்யாக்யாதாக்களான மூன்று ஆசார்யர்களின் ஐக கண்ட்யம் 180
3. பூர்வாசார்ய வ்யாக்யாநங்களில் பக்தி விஶ்வாஸாவஶ்யகத்வம் 236
9. வடகரை ஸ்ரீ உ. வே. வெங்கட வரதாசாரியர்
1. ஸ்ரீ வசந பூஷண தத்வார்த்தம் 51
2. வைஜயந்தியின் அப்த பூர்த்தி 54
10. ஸ்ரீ உ. வே. தே. திருமலாசாரியர், வானமாமலை.
1. வானமாமலை திருவத்யயந உத்ஸவம் 82
,, எண்ணெய்க்காப்பு உத்ஸவமும் கனு உத்ஸவமும் 84

பக்கம்
2. மறந்தும் புறந்தொழாமை 130
3. வானமாமலை லக்ஷதீப மஹோத்ஸவம் ... 135
4. ,, கன்யாபுனர்வஸூ 277
11. ஸ்ரீ உ. வே. ப. ஸ்ரீ. லக்ஷ்மீ நரஸிம்ஹாசாரியார், சிரோமணி தேவனார் விளாகம்.
1. திருவிண்ணகர் 86
12. T. S. ஸ்ரீநிவாஸாசாரியர், சிரோமணி, ஹெட்மாஸ்டர் C. A. C. ஹைஸ்கூல்.
1. திருக்கண்ணபுர மாசி மகம் 98
13. வை. மு. ஸ்ரீ உ. வே. கோபாலக்ருஷ்ணமாசாரியார், திருவல்லிக்கேணி.
1. அருளிச் செயல்களில் பாட பேதங்களின் ஆராய்ச்சி 123
14. அ. தே. திருக்குருகூர், ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார்
1. திருப்புளி மான்மியம் 127
15. தி. ஈ. ஸ்ரீ உ. வே. சடகோபாசாரியர், அட்வகேட் திருப்பாப்புலியூர்.
1. ஓர் பத்ரிகை.'(ஸஹஸ்ரநாம பாஷ்ய விஷய ஸந்தேக ஸமாதாநம் 156
16. ஸ்ரீ உ. வே. C. நரசிம்ஹாசாரியர், அட்வகேட் திருவல்லிக்கேணி.
1. விளந்தை வேள் 184
2. திருவிருத்தமும் திவ்ய தேசங்களும் 239, 287
17. ஸ்ரீ உ. வே. சாமு சேஷய்யங்கார், ஸம்ஸ்க்ருத பண்டிட், C. A. C. ஹைஸ்கூல்.
1. ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்திஸம்ரக்ஷணியும் அத்யமே ஶ்லோகார்த்தமும் 193
18. ஆ. திருவேங்கடத்தய்யங்கார், திருநகரி
1. காணுருய்ப் பாயுங் கருத்துடையேன் 214
19. அப்பு ஸ்ரீ ஆ. நாராயணன், வடகரை.
1. கன்னிப் பூரட்டாதி கோயில் கந்தாடை அண்ணன் ...278, 279
20. P. B. ஸ்ரீ உ. வே. கி. ஸ்ரீநிவாசாசாரியர், திருநாங்கூர்
1. ஐப்பசியில் திருமூலம் 283

வர்த்தமாநங்கள்

		பக்கம்
1.	நமது சக்ரவர்த்தி	32
2.	திருவனந்தபுரம் ஆலயப்ரவேஶம்	32
3.	காலக்ஷேபங்கள்	33
4.	ஸ்ரீ வில்லிபுத்தூர் பெரியாழ்வார் ஸந்நிதி ஜீர்ணோத்தாரண கைங்கர்யம்	55
5.	வேதாந்த தீபிகை, ஸ்ரீ தேஶிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணி, செந்தமிழ், ஆரிய தர்மம், ஆர்யமத ஸம்வர்த்தநீ, திவ்யார்த்த தீபிகைகள்	56
6.	வகுளமாமலே	96
7.	தேவஸ்தாந பத்ரிகை	97
8.	உத்ஸவங்கள்	114
9.	திருவல்லிக்கேணி ஆனந்த விமான மஹா ஸம்ப்ரோக்ஷணம்	136
10.	பத்ரிகாபிமானிகளின் நன்கொடைகள்...	155, 256, 292
11.	திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம் ...	156, 173, 247
12.	ஸ்ரீ மன்னார் கோவில் மஹா ஸம்ரோக்ஷணையும் உத்ஸவங்களும்	159
13.	ஸ்ரீ வானமாமலை மடாதிபதி ஜீயர் ஸ்வாமிகளின் நவ திருப்பதி யாத்ரா விஜயம்	173
14.	ஸ்ரீ வைஷ்ணவம்	198
15.	திரு. கோ. க. ஸ்ரீநிவாஸாசார்ரியர் ஷஷ்டியப்த பூர்த்தி	199
16.	திருவாடிப்பூர மஹோத்ஸவம்	200
17.	ஸ்ரீ வானமாமலை. 26-வது பட்டம் சின்ன மதுரகவி ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி	219
18.	கோயில்களில் கொடித் தகராறு	220
19.	ஸ்ரீ உ. வே. தேசிக வரதாசாரியார்	200, 221
20.	திருவாடி ஸ்வாதி உத்ஸவம்	222
21.	ஹநுமான்	223
22.	செப்டம்பர் மாதப் பஞ்சாங்கம்	224
23.	ஸ்ரீ வானமாமலை 25-வது பட்டம் சின்னக்கலியன் ராமாநுஜஜீயர் ஸ்வாமி	244
24.	மாம்பலம், கோதண்ட ராமஸ்வாமி பவித்ரோத்சவம்	245
25.	ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, மாம்பலம் ...	197-246
26.	ஸ்ரீ காஞ்சி ஸ்ரீயதோக்தகாரி திருப்பவித்ரோத்ஸவம்	247
27.	அக்டோபர் பஞ்சாங்கம்	248
28.	நவம்பர்மாதப் பஞ்சாங்கம்	280
29.	பெருந்தொகை & சாஸனத் தமிழ்க்கவி சரிதம் ...	293
30.	டிசம்பர் மாதப் பஞ்சாங்கம்	294

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை.

தொகுதி 2.	பத்ராதிபர் வடகரை. ராமாநுஜாசாரியார்.	பகுதி 12.

ஸ்ரீரஸ்து.
ஶ்ரியꞏகாந்தாய நமꞏ.
ஸ்ரீமதே ராமாநுஜாய நமꞏ.

தஸ்மை ராமாநுஜார்யாய நமꞏ பரமயோகிநே |
யஶ்ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||
வேதவேதாந்த வேதாங்க ஸத்ஸூத்ரார்த்தப்ரகாஶிநீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

ஐப்பசி மாதம்

[பத்ராதிபர்]

இம்மாதம் வ்யூஹத்தில் பதினொன்றாவதான பத்மநாபனுடைய அம்ஶமாயிருக்கும். ஆதலின் இம்மாதத்தில் வரும் ஏகாதஶியன்று உபவஸித்து த்வாதஶியில் பத்மநாபனைப் பரிவுடன் அர்ச்சித்துப் பாரணை பண்ணுமவன் ஆயிரம் ஆவை அளித்தவன் அடையும் பலனை அடைவான்.

த்வாதஶ்யாமாஶ்வயுங்மாஸே பத்மநாபமுபோஷ்ய மாம்
அர்ச்சயேத் யꞏ ஸமாப்நோதி கோஸஹஸ்ரபலம் ந்ருப

பாரதம் ஆஶ்வமேதிக பர்வம் 114-வது அத்யாயம் 27-வது ஶ்லோகம்.

மேலும் இந்த ஐப்பசி மாதம் உலகுக்கோருயிரான பிள்ளை லோகாசார்யருடையவும் ஜகதாசார்யரான மணவாள மாமுனிகளுடையவும், முதலாழ்வார்களென்று போற்றப்படும் பொய்கை பூதம் பேயாழ்வார்களுடையவும் திருவவதாரங்களினால் புநிதமா

யது. இவர்களுடைய மஹோத்ஸவங்கள் ஸகல திவ்ய தேசங்க ளிலும் வெகு சிறப்பாக நடப்பனவாதலால் பாக்யசாலிகள் ஆங்காங்கு அவ்வுத்ஸவங்களை கண்ணாரக் கண்டநுபவித்துக் களிப் புறுவார்கள்.

ஸ்ரீ மணவாள மாமுனிகள்

உலகெலாம் போற்றும் பெருமைவாய்ந்த மணவாள மாமுனி களுடையவும், பிள்ளை லோகாசார்யருடையவும் ஒப்புயர்வற்ற பெருமைகளை ஸ்ரீ வைஷ்ணவ உலகம் நித்ய மநுஸந்தித்துய்ய வேணுமென்கிற விசாலமான நோக்கத்துடன் ஸ்ரீ காஞ்சி. ப்ரதி வாதிபயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்யர் அமுதிலு மாற்ற வினிதாக மிக வழகிய ஆர்யாவ்ருத்தத்திலமைத்தநுக்ரஹித்த இரண்டு ஸ்துதிகள் சுருக்கமான உரையுடன் இந்த ஸஞ்சிகையில் வெளி வருகின்றது. பக்தர்கள் கடாக்ஷித்தருளியும் சக்தர்கள் மனப்பாடம் பண்ணியும் களிக்கக் கடவர்கள்.

ஐப்பசியில் திருமூலம்

[ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. கி. ஸ்ரீநிவாஸாசாரியர், திருநாங்கூர்]

தஸ்யாயாத்தஸ்யைதஸ்யை வாணீம் ஸ்ரீகந்தாஸகாவஸ்யா |
ஸ்ரீசைலேசஸம்ஜ்ஞம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||

எந்தை திருவாய் மொழிப் பிள்ளையின்னருளால் "தந்தை நற்றாய் தாரம் தநயர் பெருஞ் செல்வம் என்தனக்கு நீயே எதிரா சா" என்னுமுறவுகளை யுணர்ந்து எம்பெருமானார் திருவடிகளே சரணமென்று நாவாரவநுஸந்தித்துக்கொண்டும் "க்ருத்வா பௌர்வாஹ்நிகீ: க்ரியா: யதீந்த்ர சரண த்வந்த்வ ப்ரவணேநைவ சேதஸா என்கிறபடியே இராமாநுசன் திருவடிகளை ஸ்மரித்துக் கொண்டுமே ஸகலாநுஷ்டாநங்களையும் செய்தருளினமை பற்றி யதீந்த்ரப்ரவணர் என்று ப்ரஸித்திபெற்ற மணவாள மாமுனிகளின் அவதாரத் திருநாளில் அவரது பெருமைகளைச் சிறிது வரைந்தநு பவிக்க விரும்புகின்றேன். இவ்விஷயத்தில் அதிகரிக்க அடியேன் ஒருபடியாலும் அர்ஹனல்லேனாயினும் "யதிவரநாஹியேய உசிதீயம் க்ருதிர்த: வாரீக்ஷ்யதே நகிஞ்சந |" என்கிற ஸ்ரீ ஸூக்தியை நினைத்தவாறே விஷயகௌரவமே யமை யும். வக்த்ருவைலக்ஷண்யம் அகிஞ்சித்கரம்" என்று தேறி "சிந் தித்தரங்கரைச் சிந்தை பயங்கெடச் சென்னிதன்னால், வந்தித்து நிச்சலும் வாயார வாழ்த்து மெய் மாமறையோர், புந்திக்குண் மேவும் வரயோகி தம்மைப் புகைந்து சிலர் நிந்திக்கினுமே விடார் இது காணவர் நீர்மை நெஞ்சே" என்கிறபடியே அஹங்கார மமகா ரங்களற்றுப் பரம ஸாத்விகர்களான அரங்கன் மெய்யடியார்களின் சிந்தனைக் கினியரான மணவாளமாமுனிகளின் நீர்மையையும் நினை த்து இவர் விஷயமான அடியேனுடைய சொல்லை தேனைந்துமின் சுவைச்சொல்லாகக் கொள்வார்களன்றி ஈனந்தரும் சொல்லென இகழமாட்டார்களென்று நம்புகிறேன்.

மந்நியோமாத் ஸூதபுர்யாம் அஹீநாமீஸ்வர: கலௌ | ஸ்ரீ ராமாநுஜ ரூபேண ஜநிஷ்யதி ஸதாம் முதே || புநரப்யாதிசே ஷஸ்து மந்நியோமாந்மஹீதலே | ஸவிஷ்யதி ஸ்ரீ நகர்யாம் யதீந்த்ர ப்ரவணாத்மக:||" என்றும் ஆதியிலே அரவரசையழைத்த

ரங்கர் அவனியிலே யிருநூறாண்டிருநீரென்ன, பாதியிலே உடைவராய் வந்து தோன்றிப் பரமபத நாடியவர் போவேனென்ன, நீதியாய் முன்போல நிற்க நாடி நினைவைதனை நிறைவேற்றி வாருமென்ன, சாதாரணமெனு மாவருடந்தன்னில் தனித்துலா மூல நாள்வந்தார்தாமே'' என்றும்சொல்லுகிறபடியேஇவர்ஆதிசேஷாம்ஶராய் "ஶேஷம் ஶாந்தி ஸ்வபாவஸக்தி விஶேஷநாயா: கரணாக பூர்வோஹிதா ஸ்ரீஸ்வாமிதஸ்ய | ஆசார்ய நம்ஸ்ஸ ஸௌஹ்ருதஸ்ய ஜந்ம ஶேஷம் விஹாதி ஸததம் விதாதும் சவிஷ்ணு:.'' என்கிறபடியே மதிதவழ்மணிமாடமதிளரங்கேசனார் மாறனுரை கேட்க வருவதற்குக் காரணமாய் உலக மேன்மைக்கும் காரணமாயுள்ள மூல நக்ஷத்ரத்திலவதரித்து நாளடைவில் உபநயநாதி ஸம்ஸ்கார ஸம்ஸ்க்ருதராய், ஒரு கால் சொன்னதை மற்றொரு கால் சொல்ல வேண்டாதபடி ஸூக்ஷ்ம புத்தியாய், நான்மறையாறங்கம் முதலிய பதினெண் கலைகளாலும் பரிபூர்ணராய், 'ஸாயாந்நிஸி ஸௌஹார்த ஸ்ரீஜநோத்ஸவ விஸர்வஹ்' "ஸர்வாணி நிமியே'' என்கிறபடியே கர்ம மடியாகவன்றிக்கே ஸ்வேச்சையாகப் பரிக்ரஹித்த க்ஷீரஸாகரம் போன்று வெண்மையான திருமேனியை உடையவராய், பதினாறு கலைகளோடும் உள்ளில் களங்கத்தோடும் கூடின பூர்ண சந்த்ரனைத் திரஸ்கரித்து எழுந்தருளியிருந்தார். இப்படி ஞானானுஷ்டானங்களால் ஸகலருக்கும் வாய்க்கின்பராய் வளர்ந்தருளுமிவர் க்ருஹஸ்தாச்ரமத்தையும் ஸ்வீகரித்தருளி இனிதாக இல்லறம் நடத்தி, 'எம்மையனிராமானுசன்" என்னும் திருக்குமாரரைப் பெற்று, 'இந்த வரங்கத்தினிதிருநீ யென்றரங்கர் எந்தை எதிராசர்க் கீந்தவரம், சிந்தை செய்யில் நம்மதன்றோ நெஞ்சமே, நற்றாதை சொம்புதல்வர் தம்மதன்றோ தாயமுறைதான்' என்கிறபடியே ஏழாட்காலும் பழிப்பிலாத தொண்டக் குலத்திலுதித்த ராமானுஜன் திருவடிகளான ப்ரபந்நர்க்கு பரமப்ராப்தமான கோயில் வாஸத்தை விரும்பியடைந்து திருவரங்கனை யடி பணிந்துவர, அதற்கு விரோதமாகவுள்ள க்ருஹஸ்தாஶ்ரமத்தைவிட்டு "ஸ்வதர்ம ஸர்வதர்மாணாம் த்யக்த்வா: ஸந்ந்யஸேத் ப்ரதிகூலாந்வா:|'' "ஸர்வ ஸங்க பரித்யாகம் ப்ராவிஶதாஶ்ரமம் ॥'' என்கிறபடியே திருவரங்கனின் கைங்கர்ய ஹாநியாலுண்டான துக்கமற அணியரங்கனடியார் தங்கள் இன்பமிகுபெருங்குழுவு தொண்டு செய்ய,

தனக்கு ஸப்ரஹ்மசாரியான சடகோபஜீயரிடத்திலிருந்து துரீய நிலை பெற்று உலகையுய்யக் கொண்டார்.

பிறகு புருஷார்த்தாந்தரங்களில் பற்றற்றவரான தாம் உபாயாந்தரங்களில் பற்றிலார் பற்ற நின்ற திருவரங்கனை 'ஶ்ரீரங்கராஜ யாபாதாய தாஸ்ய பூம ஶாயினே | ஶ்ரீரங்கம் ஸம்ப்ராஜமாந்ய ஸாந்நித்ய க்ருதவேதஸே ||'' என்கிறபடியே மங்களாஶாஸநம் செய்து கொண்டு, அவராலனுக்ரஹிக்கப்பட்ட பல்லவராயன் மடத்தில் எழுந்தருளியிருந்து மத்யான காலத்தில் ஸன்னிதியிலிருந்துவரும் பகவத்ப்ரஸாதத்தையமுதுசெய்துகொண்டு, "ஆசார்ய ஜாதநேவோராரேஹா: ஆகாரேணவ தாத்ருஶ: | ஶ்ரீமாந் ராமாநுஜஸ்யாய த்விதீய ஸம்ஸ்ருதி: ஸ்வஜா: |'' என்கிறபடியே எல்லாரும்இவரது ஞானபக்த்யாதிகளால் "ஸ்ரீ ராமானுஜாபராவதாரரிவர்'' என்று புகழும்படி ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை மேன்மேலும் வளர்த்திக்கொண்டு திருவரங்கப் பெரு நகரிலேயே எழுந்தருளியிருந்தார்.

இவரால் "ஸ்ரீ சைலநாதார்யர்'' என்று திருநாமமிடப்பெற்ற மண்டபத்தில் இவர், க்ருஷ்ணாஜிநாவேஷ்டிதமாய் சித்ரம் செய்யப்பட்ட திருமலை யாழ்வாரில் (செம்மரத்தாலான மணையில்) வாடாக் குறிஞ்சி போன்று கோமளமான திருமேனியோடும், சிவந்து பரிமளம் மிக்குப் புதிதான சீதக் கமலத்தை நீரேறவோட்டு மினிமைதரும் பாதக் கமலங்களோடும், திருமருங்கில் துவராடையுடை யழகோடும், அழகாற்றில் திகழ் சுழிபோன்ற வுந்திச் சுழியோடும், பெருத்து விசாலமான திரு மார்போடும், அதிலே திகழும்வெண்புரி நூல் துலஸீநலிநாக்ஷமாலைகளோடும், சங்காழி யிலங்குபுயமூலத்தோடும்,அந்தந்த ஸ்தானங்களில் ஸலக்ஷணமாக விளங்கும் த்வாதசோர்த்வ புண்ட்ரங்களோடும், முந்தை மறைத்தமிழுரைக்கும் முத்திரைக்கையோடும், கார்போலும் செங்கையுறை முக்கோலோடும், ஒருநாளும் மறக்கவொண்ணு ஒளி முறுவலும், கருணை குடிகொண்டிருக்கும் கண்ணிணையும், த்வயாநுஸந்தானத்தாலெப்பொழுதும் ஸ்புரிக்குமதரமும்,அன்பினால் மதுரமாயு முதாரமாயும் அனைத்தாரியன் கலைப்பொருளை யாய்ந்துரைக்கும் திருநாவும், நிறைந்த முகாம்போஜத்தோடும், த்வயார்த்தாநுஸந்தாந ஜநிதபுலகாங்கிதகாத்ரத்தோடும் கூடி கண்டவர்கள் அகம் மகிழ வீற்றிருந்து, தம் திருவடித் தாமரை நிழலில் வஸிக்

கும், வணங்கின திருமுடியையுடைய செந்தமிழ் வேதியர் சிந்தை தெளியும்படி, சீருலகாரியர் செய்தருள் நற்கலைகளையும், குருகாதி பன்கலைகளையும் உபந்யஸித்துக்கொண்டு அதுவே பொழுது போக்காக எழுந்தருளி யிருந்தார். இவரருளிச்செய்த க்ரந்தங்கள், 1. தத்வத்ரய வ்யாக்யானம், 2. ரஹஸ்யத்ரய வ்யாக்யானம், 3. ஸ்ரீ வசன பூஷண வ்யாக்யானம், 4. ஆசார்ய ஹ்ருதய வ்யாக்யானம், 5. ஞானசார ப்ரமேயசார வ்யாக்யானம், 6. பெரியாழ்வார் திருமொழி வ்யாக்யானம், 7. ராமானுஜ நூற்றந்தாதி வ்யாக்யானம், 8. ஈட்டு ப்ரமாணத்திரட்டு, 9. தத்வத்ரய ப்ரமாணத்திரட்டு, 10. ஸ்ரீவசனபூஷண ப்ரமாணத்திரட்டு, 11. உபதேசரத்தின மாலை, 12. திருவாய்மொழி நூற்றந்தாதி, 13. ஸ்ரீ ஆர்த்தி, 14. யதிராஜவிம்சதி, 15. திருவாராதன க்ரமம், 16. பகவத் கீதை வியாக்கியானம். மற்றுமனேகம்.

இவரது வ்யாக்யான சைலியானது. "ஸஹஸ்ரஶாக கௌஷ ஸமாகம தத்த்வயாநு | வாக்யஸங்கதி வாக்யார்த்த தாத்பர்யாணி யதாஸமர்த்தம் || வ்யாகரணவ்யுத்பத்தி வைஷ்ணவ்யஷ்டம் வதந்தி ந: ஸதஸத | ஸூக்ஷ்மேக்ஷிகயாதேவ ஸமயந்து கிஞ்சித்வ்யயம் | ஸர்வத்ர ஸம்ப்ரதாய ஸம்ப்ரதாயேந ஸமேவா நயமார்த்தஸம் | ஸம்பத்திஸ்வ்ருஷ்டீ த்ருஷ்டாந்த ஸமர்த்யை: வாக்யார்த்தா: | தேஶிகாநாம் நிபந்தனம் ஸம்யக்ஷணம் தாம் | ஸ்வாயவஸ்தாதயோஸ ஸ்வஸ்வாமிவம் ஸம்ப்ரதாய ஸம் ||" என்கிறபடியே, தெருவில் திரிசிறு நோன்பியர்களின் புலையறமாகிநின்ற இதர சமயங்களைக் கற்று ஸ்வஸ்ரூபாதிகளை யறியாதவர்களும், மந்தமதிகளும், எளிதில் ஸ்வஸ்வரூபாதிகளை யறிந்து கொள்ளும்படி எளிய நடையோடும் கம்பீர தாத்பர்யங்களோடும் ப்ராமாணிக வழியோடும்கூடி யினிமையா யிருக்கும். ஆனது பற்றியே மஹநீயர்களனைவரும் இவரை "விசதவாக்சிகாமணி" என்று போற்றினார்கள். இத்தாலிறே! ஸர்வஜ்ஞனை அரங்க நகரப்பனும், செல்வமிகு பெரிய திருமண்டபத்திற் செழுந் திருவாய்மொழிப் பொருளைச் செப்புமென்று இவரை நியமிக்க, இவரும் அதுமுதலாக அருளுடைய சடகோபருரைத்த வேதமதை தெருளுடைய வ்யாக்யைகளைந்துடனே கூட்டி யமைத்துக்கொண்டு, அரங்கருக்குப் பொருளுரைக்கும்போது, திருவரங்கப்பெருமாளும்,

"என்தனைநீ யிங்குவைத்தது ஏதுக்கென மாலு மென்தனக்குமெந்தமர்க்குமின்பமதாநன்றுகவி பாடவென" என்கிறபடியே நாம். ஆழ்வாருக்கு அந்தர்யாமியாய் இருந்து நமக்கும் நம்மடியார்களுக்கும் இன்பம் மிகும்படி பாடுவித்தது இன்றே சபலமாயிற்றென்று மகிழ்ந்து, அம்மகிழ்ச்சிக்கு ஸூசகமான புன் சிரிப்பும் பாவனையும் ஸகலரும் காணும்படி திருச்செவி சாத்தி யருளி, "ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் | யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||" என்கிற ச்லோகத்தை தனியனென்று பேர் சாத்தி காலக்ஷேபகோஷ்டியின் முன்னிலையில் தன்னினிய திருப்பவளத்தாலே வெளியிட்டு, தான் கூறிய ஸ்ரீசைலமந்த்ரத்தை ஆறிரண்டு புறம் சூழ மரங்கம் முதல் நூற்றெட்டுத் திவ்ய தேசத்திலும் கொண்டாடி யுரைக்கவேணுமென்று நியமித்து, இவரது அப்ரதிம வைபவத்தை ப்ரகாசிப்பித்தருளினன். இப்படி இவர் பகவத் விஷய காலக்ஷேபம் செய்து வரும் நாளில், வேதம்போன்று பரத்வத்தில் பரத்வத்தைப் பேசின "உயர்வறவுயர்நலம்" என்னும் திருவாய்மொழிபோலவும், இதிஹாஸ புராணாதிகள் போன்று அவதாரங்களில் பரத்வத்தைப் பேசின "திண்ணன் வீடு" என்னும் திருவாய்மொழி போலவுமன்றிக்கே, சேதனர்களை ஸம்போதனமிட்டு, பின்னானார் வணங்கும் சோதியாய் எழுந்தருளி யிருக்கும் அர்ச்சாவதாரத்தில் பரத்வத்தைப் பேசின "ஒன்றும் தேவும்" என்னும் திருவாய்மொழியின் ப்ரவேசத்தை "ஸ்ரீ பாஷ்யம்" "தத்வத்ரயம்" முதலிய க்ரந்தங்களோடு பரக்க வுபந்யஸித்துப் பரத்வ நிர்ணயம் செய்யும் ப்ரகாரத்தை, இவர் திருவடிகளில் ஆச்ரயிக்கவந்த ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் கேட்டு, "இவர் திருவடிகளில் ஆச்ரயித்தன்றி நாமுஜ்ஜீவிக்க விரகில்லை" என்று துணிந்து இவர் திருவடிகளில் ஆச்ரயித்து உஜ்ஜீவித்தார்.

திருவிருத்தமும் திவ்யதேசங்களும்

[ஆவணி மாதத்தின் 240-ம் பக்கத் தொடர்ச்சி]

(1) பட்டர் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கிற காலத்து இராமாநந்ததாஸர் என்கிற ஓர் ஸ்ரீ வைஷ்ணவர் தனக்குத் திருவிருத்தம் ஸாதிக்கவேணும் என்று ப்ரார்த்தித்தார்.

அதற்கு பட்டர் "அது என்னால் ஆகாது. நான் நம்பெருமாளைப் பிரிந்த சோகத்தில் கிடக்கிறேன்" என்று சொல்லிவிட்டு நஞ்சீயரை அருளிச் செய்யும்படி நியமித்தார். ஜீயரும் அருளிச் செய்துகொண்டு போகும்போது "யாதானும் ஓர் ஆக்கையில் புக்கு" என்கிற பாசுரம் வந்தவாறே திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்தில் ஆச்ரயித்த வளவன் பல்லவதரையர் என்பார் ஒருவர் கண்ணும் கண்ணீருமாய் புளகித காத்ரரானார். அங்குள்ளாரெல்லாரும் என்னவென்று அவரைக் கேட்க "எனக்கு ஒன்றும் தெரியாது. எம்பெருமான் ஸந்நிதியில் நாள்தோறும் இப்பாசுரத்தை விண்ணப்பம் செய் என்று நியமித்தார்" என்றாராம். பந்தமும் பந்த மறுப்பதோர் மருந்துங்காட்டும் பாசுரமிது என்று அங்குள்ளாரெல்லாரும் ஐந்து ஆறு நாழிகைப்போது இதையே நம்பி ஆதரித்த பாட்டு என்று அநுஸந்தித்துப் போந்தார்கள். இந்த ஐதிஹ்யத்தை ஒட்டியே பல திருமாளிகைகளில் பகவதாராதனத்தில் இப்பாசுரத்தை தினந்தோறும் ஸேவிக்கிறார்கள்.

இப்பாசுரத்தால் ஜீவாத்மா மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து நோவுபடுவதைக்கண்டு எம்பெருமான் வயிறு பிசைத்துத் தன் பரமக்ருபையாலே சேதநனுக்குத் தாயாய் தந்தையாய் தெய்வமாய் நின்று மோக்ஷப்ரதாநம் பண்ணுகிறான் என்கிறார். பசுவுங் குட்டியும் குஞ்சுங் குழந்தையுமாய் அளாய்துளாய் அநுபவிக்கும் அநுபவம் அல்பாஸ்திரம் என்பதை இப்பிரபந்தத்தில் விளக்குகிறார். கழுவில் ஏறுபவன் தண்ணீர் குடித்து தாஹசமனம் பண்ணினதால் வந்த சுகம் என்ன? உடனே மாளப் போகிறோம் என்கிற நினைவு வந்தவாறே தாகசாந்தியால் வந்த சுகமும் துக்கஹேதுவாய் முடியும். வெய்யிலிலே அடிபட்டவன் ஆடுகிற பாம்பின் நிழலிலே ஒதுங்கி அது அள்ளிக்கொள்ளும் என்று அறியாதே ஹ்ருஷ்டனாவதில் பலன் என்ன? அதுபோல் ஸம்ஸாரசுகம். அதில் ஆசைப்படுபவனுக்கு பொய்நின்ற ஞானமான அவித்யையும், அவித்யையின் காரணமாய் பொல்லா வொழுக்கான அநாசாரமும், அதின் பயனாய் அழுக்குடம்பும் உண்டாகின்றன. ஆகையால் அவற்றை நீக்கித்தரவேணும் என்று ஆழ்வார் பிரார்த்திக்கிறார். இப்படி பிரார்த்திப்பதற்குக் காரணம் அவ்வெம்பெருமான் இவரை விசேஷ கடாக்ஷம் பண்ணியருளினான். அராஜகமான தேசத்தில் ஆனையெடுத்தவன் ராஜாவாகுமாப்போல் இவ

P. KOTHANDARAM PILLAI
SON OF LATE
P. S. PONNUSAWMY PILLAI,
HIGH CLASS CABINET MAKER AND UPHOLSTERER,
Established in 1854.
Ponnusawmy Pillai's Buildings
39 & 44, Esplanade West :: (Rattan Bazaar) :: P. T., MADRAS

அசல் பவுனில் கட்டின ரங்கோன் வைர நகைகளும் சுத்தமான வெள்ளிப் பாத்திரங்களும் காரண்டியுடன் கொடுக்கும் ஷாப்பு.



இதுதான்
ராதாகிருஷ்ண ஜூவெல்லரி எம்போரியம்,
10, கோவிந்தப்ப நாயக்கன் தெருவு, சென்னை.

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷியூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்.,
சுத்த சுதேசி லைப் ஆபீஸ்
குறைந்த சந்தா :: மிகுந்த போனஸ்
: மதராஸ் பிரான்சு :
107, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.

இணையற்ற இரத்தினம்

எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

தேகபலம், ஞாபகசக்தி, தாது புஷ்டி இவைகளைக் கெடுத்துத் தேகத்தை வஜ்ர சரீரமாக்குவதில் இணையற்ற இரத்தினம் போன்றன; சென்ற 56 வருஷங்களாகப் பூவுலகெங்கும் புகழ்பெற்று உலாவி வருகின்றன. ஒருதரம் வாங்கி உபயோகித்தால் குண மகத்துவத்தை யறிவீர்கள்.

32 மாத்திரைக ளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.

இனும்! இனும்!! இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி என்னும் புஸ்தகத்தைக் கேட்போருக்கு, அப்புத்தகம் இனாமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

சேஷ அண்டு கோ.,

வெண்ணெய், நெய் & பல சரக்கு வியாபாரிகள்

		ரூ.	அ.	பை.
ஸ்பெஷல் வெண்ணெய் 1 வீசை	...	1	7	0
வெண்ணெ காச்சின நெய் ,,	...	2	2	0
சுத்தமான நல்லெண்ணெய் ,,	...	0	8	9

❋

இதர சரக்குகள் மற்ற இடங்களைக் காட்டிலும் அதிக மலிவாகக் கொடுக்கப்படும்.

9/8, ஆதியப்பநாயக்கன் தெரு, மதராஸ்.

ரும் மயர்வற மதிநலம் அருளப்பெற்றார். பெற்றதும் பிறர்க்காகவே என்று எண்ணி "யாமுறாமை" என்று நாட்டாருக்காக ப்ரபத்தி பண்ணுகிறார். நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் புசியுமாப்போல் அதுவே தமக்கும் பரபக்தி, பரஞான, பரம பக்தி தசைகளை உண்டாக்கியது. பகவத்கடாக்ஷத்தால் பிருந்தாவனத்தில் நெருஞ்சியும் "சாண், அரைப்புல்லாய்" பசுகு பசுகு என்று அறுக்க அறுக்கத் தொலையாதே கிடந்தாப்போல்" இவருக்கும் பக்தி வெள்ளம் பெருகி "வாய்கரை மிடைந்து மொழிபட்டு" திருவிருத்தமாய்த் தலைக்கட்டியது.

(2) இத்திருவிருத்தத்தில் ஆழ்வார் நாயகிபாவம் அடைந்து தன்னை ஒரு நாயகியாகவும் எம்பெருமானை நாயகனாகவும் அநுகரித்துத் தோழி, தாய், செவிலி, பாங்கன், நாயகன், நாயகி முதலிய பல பேர்கள் பேசும் பாசுரங்களால் பேசுகிறார். எம்பெருமானை பரமாத்மாவுக்கும் அஸ்மதாதிகளான ஜீவாத்மாவுக்கும் உள்ள ஸம்பந்தத்துக்கு ஓர் உபமானம் சொல்லவேண்டுமானால் அது நாயக நாயகி பாவம் தவிர மற்ற எந்த உதாரணமும் சிறக்காது.

"தெய்வம் தொழாள் கொழுநன் தொழுது எழுவாள்
பெய் எனப் பெய்யும் மழை" என்கிறாப்போல்

அநந்யார்ஹசேஷத்வம், அநந்யசரணத்வம், அநந்யபோக்யத்வம் என்கிற இம்மூன்று குணங்களும் ஒரு பதிவிரதாசிரோமணியான நாயகியிடத்திலே தான் அமைந்துள்ளன. பிதாபுத்ர ஸம்பந்தம், ப்ராதாக்கள்ஸம்பந்தம் முதலிய வேறு எவ்விதமான தேஹ ஸம்பந்தமும் முற்றுவமையாகாது. ஸம்ச்லேஷம் என்பது ப்ரத்யக்ஷஸமாநாகாரமான மானஸ ஸாக்ஷாத்காரம். அந்த மானஸ ஸாக்ஷாத்காரத்துக்கு வரும் கலக்கமே விச்லேஷம். ஒரு வஸ்துவில் ஆசை அதிக்ரமித்து ப்ரேமம் மிகுந்தால் "ஆடவர் பெண்மை அவாவு தோளினாய்" என்றாப்போல் ஆண் பெண்ணாக மாற வேண்டும் என்கிற அபிநிவேசம் பிறக்கும். இது ஒரு ப்ரஜ்ஞாவஸ்தை. எம்பெருமான் விச்வபதியாகையாலே அவனை லோக பர்த்தாவாகவும் அவனுக்கு ஜீவாத்மாக்கள் பார்யைகளாகவும் அநுசரிக்கத் தட்டில்லை. தத்வத்தில் அவன் சரீரியாகவும் நாம் சரீரமாகவும், அநுபவத்தில் அவன் பர்த்தாவாகவும் நாம் பார்யைகளாகவும் அநுபவிக்கிறோம். இதுதான் விசிஷ்டாத்வைத ஸித்

தாந்தம். அப்படி அநுபவிக்குமிடத்து பார்யைக்கு பர்த்தாவினுடைய ஸம்பந்தத்தை உணர்த்துபவள் தோழி. அவனைச் சேரும் உபாயம் சொல்லுபவள் தாய். சேரவேணும் என்கிற பத்ற்றம் நாயகிக்கு உண்டாகும். "ஸம்பந்த உபாய பலன்களில் உணர்த்தி துணிவு பதற்றமாகிற ப்ரஜ்ஞாவஸ்தைகளுக்கு தோழி, தாயார், மகள் என்று பெயர்" இவை யெல்லாம் நிஷ்க்ருஷ்டவேஷ விஷயமாகையாலே கேவலம் காமுகன் வார்த்தையாகாது. இக்காமம் கண்ணனுக்கேயாம்.

(3) அன்றியும் தமிழ் இலக்கணங்களில்பொருள் அதிகாரங்கள் முற்றும் ஸ்திரீபுமான்கள் கூடும் கூட்டத்தையே குறிக்கும். தலைமகனும் தலைமகளும் தமியராய் ஓர் பூஞ்சோலையில் எதிர்ப்பட்டு தம்முணர்வினரன்றி வேட்கை மிகவினால் கூடிப் பிரிவார்கள். பிரிந்த ஆற்றாமையில் இருவரும் படாத துன்பங்கள் படுவர்கள். அப்போது தோழி, தாயார் முதலாயினோர் அவர்களை ஆச்வஸிப்பிப்பார்கள். பிறகு இருவரும் அறத்தொடுநின்று தந்தையர், ஊரார், உறவினர் அறிய சாஸ்த்ரோக்தமான மணம் புரிவார்கள். இவற்றின் லக்ஷணங்கள் எல்லாம் மற்றோரிடத்தில் விவரிக்கப்படும். ஆகவே ஆழ்வாரும் தமிழ் இலக்கணத்துக்குப் பொருந்த இப்ப்ரபந்தத்தை நாயக நாயகி பாவத்தில் அமைத்துப் பேரின்பத்தில் மூட்டுகிறார். ஸம்ச்லேஷ விச்லேஷங்களில் உண்டாகும் இன்ப துன்பங்களைத் தமிழர்கள் பல வழிகளால் பாடுவர்கள். அவ்வழிகளுக்குத் "துறைகள்" என்று பெயர். திருவிருத்தத்தில் அனேகமாய் முதல் இரண்டடிகளால் தமிழ் இலக்கணத் துறைகள் காட்டி மூன்று நான்காம் பாதங்களிலே அத் துறைகளையே பகவத் பரமாக்கும் ஆச்சரியம் அறியத்தக்கது. "பாலைய் தமிழ்" என்கிறப்போல் ஆழ்வாருக்கு பக்தியைப் பெருக்க ஸமஸ்க்ருத பாஷையைவிட தமிழ் பாஷையே இனியது என்று எம்பெருமான் உகந்தார் போலும். நம்பியும் ஆண்டானும் ஒருநாள் நம்பெருமாளை சேவிக்கப் போனபோது நம்பி ஸ்வ கோஷ்டியை விட்டுப் பிரிந்து இடைச்சிகள் இருக்கும் இடத்தில் நின்றும் ஸேவித்தார். ஆண்டான் நம்பியைப் பார்த்து அவர்கள் சொல்லும் வார்த்தைகள்தான் என்ன? என்று கேட்க நம்பியும் "பால் உண்பீர், பழம் உண்பீர், பொன்னாலே பூணுநூல் இடுவீர், நூறு பிராயம் புகுவீர், அழுத்த இரட்டை உடுப்பீர்" என்று சொல்லுகிறார்கள் என்றார். அதற்கு நீர் என்ன சொன்னீர் என்று மறுபடியும் நம்பியை ஆண்டான் கேட்க "ஜய விஜயீபவ" என்றேன் என்றார். ஆண்டானும் "கெடுவீர் அங்கே போயும் உமக்கு முரட்டு ஸம்ஸ்க்ருதம் விடவில்லையே. வாரும் நாம் நாம்தான். அவர்கள் அவர்கள்தான். அவர்கள் பக்தி பாரவச்யம் நம்மால் ஆகாது. பகவத்ஸாந்நித்யம் கொச்சைத் தமிழில் கூடி விளையாடும் என்றார்.

4. ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்கள் நூற்றெட்டாயினும் அவற்றுள் கோயில், திருமலை, பெருமாள் கோயில் என்கிற மூன்று திருப்பதிகளே முக்யமானவை. திரு விருத்தத்தில் ஆறு பாசுரங்களால் திருவேங்கடத்தையும், ஒரு பாசுரத்தால் திருவரங்கத்தையும், மற்றொன்றால் பெருமாள் கோவிலையுமே மங்களா சாஸனம் செய்துள்ளார். அம்மூன்று திருப்பதிகளையும் அமைத்துள்ள துறைகள் அறியற்பாலன. அன்பினாலும், குணத்தாலும், உருவினாலும், திருவினாலும் ஒத்துள்ள ஒரு ஸ்திரீ புமான்கள் ஒருவரை யொருவர் பிரியும் போதும், பிரிந்த பின்னும் படும் துன்பங்கள் வாசாமகோசரம். "எங்ஙனே தரிக்கேன் உன்னைவிட்டு" என்னும்படியான துர்தசை வந்துசேரும். மறுபடியும் முன்போல கூடினார்களாகில் பிரிந்த துக்கம் நீங்கி இன்புறுவார்கள். ஆகையால் பிரிதல், இரங்கல், சேர்தல் என மூன்றுவகையான அவஸ்தாவிசேஷங்கள் இவர்களுக்குண்டு. இவற்றுள் பிரிதல் தசையில் திருவேங்கடத்தையும், இரங்கலில் திருவரங்கத்தையும், சேர்தலில் பெருமாள் கோவிலையும் அமைத்து வைத்திருக்கிறார்.

"காண்கின்றனகளும்" என்கிற பாசுரத்தில் நாயகனை திருவேங்கடமுடையான் த்ரவ்யார்ஜனமாக பிரியப் போகிறான் என்கிற நினைவினாலே ஆழ்வாராகிற நாயகி வருந்துகிறாள். இதையறிந்த நாயகன் நோவுபடுகிற நாயகியைப்பார்த்து "மதியுடன் படுத்தல்" என்கிற வழியாலே "மாயோன்" என்கிற பாசுரத்தால் ஆச்வஸிப்பிக்கப் பார்க்கிறான். அது காரியகரமாக வில்லை. அதன்மேல் நாயகன் அஸங்கத பாஷணம்பண்ண தோழி அவனைக் "கயலோ" என்கிற பாசுரத்தால் கள்ளர்க்கும் காமுகர்க்கும் முதற்பதந்தெரிந்து இரண்டாம்பதம் தெரியாதுகாண்! என்று பரிஹஸிக்கிறாள். இருவரும் பிரிந்தார்கள். விச்லேஷ விசனம்

அதிகமாயிற்று. அப்போது நாயகி "இசைமின்கள்" என்கிற பாசுரத்தாலே மேகத்தைத் தூது சொல்லும்படி வேண்டிக் கொள்கிறாள். அதுவும் பலியாமையாலே நோவுபட்டு வருந்துகிறாள். இதை யறிந்த தாயார் இது ஒரு தெய்வக்குற்றமாகவேணும் என்று தேவதாந்தரங்களுக்குப் பூசையிட்டு வெறியாட்டப் பார்க்கிறாள். "குரக்குவலித்த கை கூழ் துழாவுமோ" இதையறிந்த தோழி "உறுகின்ற" என்கிற பாசுரத்தால் இந்நோய் தேவதாந்தரமன்று; எம்பெருமானே இதற்குக்காரணம் என்று தெரிவித்து வெறி விலக்குகிறாள். இப்படி நாயகி ஒரு பக்கத்தில் வருந்தாநிற்கிறாள். நோவுபட்ட நாயகனும், பிரிவாற்றாமையால் துன்புற்றுத் தன் துக்கத்தை யெல்லாம் தன் ஸ்நேஹிதனை பாங்கனுக்கு "காவியும்" என்கிற பாசுரத்தாலே சொல்லி வருந்துகிறான். ஆகவே இவ்வாறு பாசுரங்களும் திருவேங்கட முடையான் விஷயமாய் பிரிந்தார் கொடுமை கூறும். திருவரங்கத்தில் பூர்ணமான விச்லேஷம் ப்ராப்தமாய் "எண்ணம் புகுந்து அடியேனொடும் இக்காலம் இருக்கின்றதே" என்று துடி-துடிக்கிறாள். பின்பு படாதெனவெல்லாம் பட்டுப் பாலைவனங் கடந்து ப்ராப்த காலம் உண்டாகி நாயகன் இருக்கும் நகரான வெஃகாவையும் தண்காவையும் காட்டக்கண்டு மனங்குளிர்ந்து "அது எப்பாலைக்கும் சேமத்ததே" என்று பிரிதல், இரங்கலில் பட்ட இன்னாமை யெல்லாம் நீங்கி, கச்சியில் இனியராகிறார் இவ்வாழ்வார். (தொடரும்.)

ஆரியர்காள் !

நக்ஷத்திர மாலிகை என்னும் ப்ரபந்தத்தை, பெரியோர்களாலநுக்ரஹிக்கப்பட்டு அச்சிடாமலிருந்த ஸமஸ்க்ருத பாஷா மயமான இரண்டு வ்யாக்யாநங்களோடு ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியாரநுக்ரஹித்த எளிய அழகிய தமிழுரையையும் சேர்த்து 1. பாரம் அச்சிட்டு திருவல்லிக்கேணி அட்வகேட் ஸ்ரீமான் C. நரஸிம்ஹாசாரியார் கடாக்ஷத்திற் கிலக்காக்கினேன். அதைக் கடாக்ஷித்த அம் மஹாநுபாவர் தம்முடைய ஸ்வாபாவிக நிர்ஹேதுக பரம க்ருபையினால் அந்த ஒரு பாரத்திற்கான செலவு ரூ. 12 ஐயும் நன்கொடையாக உபகரித்தார். இவ்வாறு அம் மஹாநுபாவர் செய்த பெரு நல்லுதவிக்கு என் தலையல்லால் வேறு கைம்மாறுளதோ?

பெருந்தொகை

1. இது பண்டைக் காலத்துத் தமிழின் இனிமையையும், அத்தமிழை ஆதரித்துப் போந்த புலவர் பெரு மக்களின் பெருமையையும், அவர்களைப் பெரிதும் பாராட்டி ஆதரித்து வந்த அரசர்களின் சரித்திர ஆராய்ச்சியையும் அறிவியா நிற்கும்.

2. இதை அச்சிட்டவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தார்.

3. இதன் ஆசிரியர், தற்காலத்துத் தமிழறிஞர்களிற் தலைவராய் வீற்றிருக்கும் இராமநாதபுரம். ஸ்ரீமான். மு. இராகவையங்கார்.

4. இந்நூலில் பல சமயங்களிலுள்ள பல புலவர் பெருமக்கள் பாடிய அருமருந்தன்ன பல தனிப்பாசுரங்களொருங்கே தொகுக்கப்பட்டுள்ளன.

5. கடவுள் வாழ்த்துத் தொடங்கி "இறுதி வேண்டு கோளீறா"கவுள்ள பாசுரங்கள் 2214ல் "திருமால் சமயத்துப் பெரியோர்" என்று தலையங்கமிட்டு அச்சிட்ட 1805 முதல் 1871 முடிய உள்ள பாசுரத்தங்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள் சென்னிமேலேற்றுப் பெரிதும் பாராட்டற்பாலன.

6. இப்பாடல்களின் அரும் பெரும் பொருள்களையும் சரித்திர பாகங்களையும் விளக்கிக் காட்டா நின்ற விசேடக் குறிப்பும், விஷய ஸூசிகையும் படிப்போர்க்குப் பேருதவியா யிருப்பதுடன் ஆசிரியரின் அப்ரதிம பாண்டித்யத்தின் பெருமையையும் விளக்கா நிற்கின்றன. கிம்பஹுநா :—

7. தமிழுலகிலிதுகாறும் வெளிவந்திருக்கும் தமிழிலக்கிய நூல்களில் இதுபோன்ற மற்றொரு நூல் எங்கும் காணக்கிடையாதென்றே அறுதியிடலாகும்.

8. இது அழகிய பத்ரங்களால் டிம்மிஸைஸில் சுமார் 800 பக்கங்களைக் கொண்டதாய் பார்ப்போர் கண்ணையும் நெஞ்சையும் கவரும்படியான அழகிய அட்டைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

சாஸநத் தமிழ்க்கவி சரிதம்

இதுவும் பெருந்தொகை போன்ற ஓரரிய நூலே.

இதில் பண்டைக்காலத்து அரசர் பெருமக்களின் சாஸநங்களில் காணப்படும் வாக்யங்களும், பாக்களும், ஆசிரியரால் அழகிய தமிழ் நடையில் வரையப்பட்ட உரையுடன் கூடி விளங்கா நிற்கின்றன.

இதன் விலை 1-4-0. முன்னையதின் விலை 5-0-0.

9. வேண்டுமவர் அடியிற்கண்ட விலாசத்திற்கு மணியார்டர் மூலம் பாதிக்கிரயத்தை முன் பணமாக அனுப்பி தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் மீதிப்பணத்திற்கு வி. பி. மூலம் புத்தகமனுப்பப்படும்.

இங்ஙனம் பத்திராதிபர்,
பத்ராதிபர் S. R. S. வைஜயந்தி ஆபீஸ்,
24. சந்திரப்ப முதலி தெரு, G. T. மதராஸ்.

பஞ்சாங்கம்—டிசம்பர்மீ

இங்கிலீஷ்	தமிழ்	வாரம்	திதி	நட்சத்திரம்	யோகம்	கரணம்
			நா.வி.	நா.வி.	நா.வி.	நா.வி.
டிசம்பர்மீ 1	௧௬	புதன்	சது 51-27	விசா 47-7	அதி 49-30	பத் 19-17
2	௧௭	வியா	அ ● 56-28	அனு 53-14	சுக 50-30	சது 24-12
3	௧௮	வெள்	பிர 60-0	கேட் 59-41	திரு 51-45	கிம் 29-9
4	௧௯	சனி	பிர 1-50	மூல 60-0	சூல 52-54	பவ 1-50
5	௨0	ஞா	துதி 6-52	மூல 5-52	கண் 53-41	கௌ 6-52
6	௨௧	திங்	திரு 11-31	பூரா 11-41	விர் 53-57	கர 11-31
7	௨௨	செவ்	சது 15-17	உத் 16-39	துரு 53-25	பத் 51-17
8	௨௩	புதன்	பஞ் 17-18	சிர 20-34	வியா 52-3	பால 17-5
9	௨௪	வியா	சஷ் 19-23	அவி 23-16	ஹர் 49-35	தை 19-23
10	௨௫	வெள்	சப் 19-33	சத 24-46	வஜ் 46-10	வணி 19-33
11	௨௬	சனி	அஷ் 18-26	பூர 25-4	சித் 41-50	பவ 18-26
12	௨௭	ஞா	நவ 16-12	உத் 24-14	வியா 36-36	கௌ 16-12
13	௨௮	திங்	தச 12-49	ரேவ 27-19	வரி 30-31	கர 12-49
14	௨௯	செவ்	ஏகா 8-36	அசு 19-38	பரி 23-54	பத் 8-36
15	மார்கழிமீ ௧	புதன்	துவா 3-45	பர 16-21	சிவ 16-45	பால 3-45
16	௨	வியா	சது 52-36	கி ❋ 12-36	ஸித் 9-15	கர 23-37
17	௩	வெள்	◯ 46-46	ரோ 8-32	ஸாத் 1-28	பத் 19-41
18	௪	சனி	பிர 41-1	மிரு 4-25	சுப் 45-54	பால 13-53
19	௫	ஞா	துதி 35-35	புன 56-24	பிரா 38-25	தை 8-18
20	௬	திங்	திரு 30-33	பூச 53-41	ம 31-16	வணி 3-4
21	௭	செவ்	சது 26-11	ஆயி 51-21	வை 24-39	பால 26-11
22	௮	புதன்	பஞ் 22-40	மக 49-50	விஷ் 18-41	தை 22-40
23	௯	வியா	சஷ் 20-1	பூர 49-20	பிரீ 13-24	வணி 20-1
24	௧0	வெள்	சப் 1[illegible]-36	உத் 50-2	ஆயு 9-5	பவ 18-39
25	௧௧	சனி	அஷ் 18-28	அஸ் 51-57	சௌ 5-42	கௌ 18-28
26	௧௨	ஞா	நவ 19-37	சித் 55-11	சோ 3-18	கர 19-37
27	௧௩	திங்	தச 22-3	சுவா 59-27	அதி 1-59	பத் 22-3
28	௧௪	செவ்	ஏகா 25-36	விசா 60-0	சுக 1-28	பால 25-36
29	௧௫	புதன்	துவா 30-6	விசா 4-53	திரு 1-50	தை 30-9
30	௧௬	வியா	திர 35-10	அனு 10-53	சூல 2-59	கர 2-88
31	௧௭	வெள்	சது 40-53	கேட் 17-16	கண் 3-51	பத் 8-1

கோயில் உத்ஸவங்கள் :—3௳ திருநெடுந்தாண்டகம். 4௳ திருவத்யயந உத்ஸவம். 13௳ நாச்சியார் திருக்கோலம். 14௳ திருவாசல், திருவாய்மொழித் திருநாள். 18௳ பெரிய திருவடி. 23௳ திருவாய்மொழி சாற்றுமுறை. 2௳ அமாவாஸ்யை. 7௳ திருச்சானூர் அலமேலுமங்கை தீர்த்த உத்ஸவம். 14௳ ஏகாதசி. 15௳ மார்கழி மாதப் பிறப்பு. 17௳ பௌர்ணிமை. 28௳ ஏகாதசி.

பூஜைக்கு உசிதமான
:: ரிகார்டுகள் ::

ஸ்ரீரங்கம் K. ராகவ பட்டரால்

சொல்லப்பட்ட

ஸஹஸ்ர நாம அர்ச்சனை

(C. A. 1108 — 1110)

ஒவ்வொருவரும் அவசியம் தினந்தோறும் கேட்கவேண்டிய ஸெட்.

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்

மதராஸ்.

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி

(லிமிடெட்)

தலைமை ஆபீஸ் : மதராஸ். ஸ்தாபிதம் : 1906

டிரஸ்டி : மதராஸ் அபீஷ்யல் டிரஸ்டி.

பாலிஸிதாரர்களின் நன்மையையே கோரி பணி செய்யப்படுகிறது.

க்ளெய்ம்கள் தாமதமின்றி தீர்க்கப் படுகின்றன. நல்ல சேமிப்பு, திறமை யான நிர்வாகம், லாபகரமான பாலிஸி நிபந்தனைகள், குறைந்த ப்ரீமியம், நிறைந்த போனஸ், இவை

யுனைடெட் இந்தியாவை

ஒரு சிறந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி யாக்குகின்றன.

பூரா விவரங்களுக்கும் தலைமை ஆபீஸ் :

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,

செம்புதாஸ் தெரு, மதருஸூக்கும்

அல்லது

கீழ்க்கண்ட இடங்களிலுள்ள ஆபீஸுகளுக்காவது எழுதவும்

ஆஸான்ஸல்	டாக்கா	லாகூர்	ராஜமகேந்திர புரம்
பெங்களூர்	டில்லி	பாட்னா	ரங்கூன்
பெஜவாடா	கௌஹத்தி	மதுரை	ஷில்லாங்
பம்பாய்	கூட்டி	மங்களூர்	தஞ்சாவூர்
கல்கத்தா	ஹௌரா	நாகப்பூர்	திருவனந்தபு ரம்
கள்ளிக்கோட்	சிட்டகாங்	ஹைதராபாத்	உடுப்பி
சித்தூர்	ஜல்பெய்குரி		

॥ श्रीरस्तु ॥

॥ श्रीमते रामानुजाय नमः ॥

॥ श्रीमद्वरवरमुनये नमः ॥

श्रीकाञ्ची प्रतिवादिभयङ्कर अण्णङ्गराचार्यप्रणीतं

श्रीमद्वरवरमुनिवैभवस्तोत्रम् ॥

ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்

இயற்றிய

ஸ்ரீவரவரமுநிவைபவஸ்தோத்ரம்.

(பொழிப்புரையுடன் கூடியது.)

....

श्रीशैलेशेतिमन्त्रस्थवर्णानुक्रमशोभितम् ।

आचार्यसार्वभौमस्य स्तोत्रं हृद्यं निगद्यते ॥

ஸ்ரீசைலேசேதிமந்த்ரஸ்தவர்ணாநுக்ரமசோபிதம் ।

ஆசார்யஸார்வபௌமஸ்ய ஸ்தோத்ரம் ஹ்ருத்யம் நிகத்யதே ॥

"ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம், யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்." என்கிற தனியனிலுள்ள ஒவ்வொரு அக்ஷரத்தையும் அடைவே ஒவ்வொருச்லோகத்தின் முதலெழுத்தாகக்கொண்டது இந்தஸ்தோத்ரம்.

श्रीमद्वरवरमुनये गुणगणनिधये सदा नतिं कलये ।
यत्सूक्तिकल्पलतिका कांक्षितमखिलार्थमनुपदं दिशति ॥ १ ॥

ஶ்ரீமத்வரவரமுநயே குணகணநிதயே ஸதா நதிம் கலயே ।
யத்ஸூக்திகல்பலதிகா காங்க்ஷிதமகிலார்தமநுபதம் திஶதி ॥

கற்பகக்கொடிபோல் விரும்பிய பொருளனைத்தையும் பதந்தோறும் அளிக்கவல்ல ஸ்ரீஸூக்திகளையருளிச்செய்தவரும் ஸமஸ்த திருக்கல்யாணகுணங்களுக்கும் கொள்கலமுமான மணவாளமாமுனிகளை எப்போதும் வணங்குவன். (1)

शैल इव सूक्तिसरितां छायातरुरिव भवार्तिखिन्नानाम् ।
रविरिव दुरध्वतमसां वरवरमुनिवर्य भुवि भवान् विबभौ ॥ २ ॥

ஶைல இவ ஸூக்திஸரிதாம் சாயாதருரிவ பவார்திகின்னாநாம் । ரவிரிவ துரத்வதமஸாம் வரவரமுநிவர்ய! புவி பவாந் விபபௌ ॥ ௨ ॥

மணவாளமாமுனிகளே! தேவரீர், ஸ்ரீஸூக்திகளாகிற புண்ணியநதிகளுக்கு மலைபோல் உத்பத்திஸ்தானமாயும், ஸம்ஸாரதாபங்களினால் வருந்தினவர்களுக்கு நிழல்தரும் வ்ருக்ஷம்போன்றவராயும், தீயநெறியாகிற இருளைத்தொலைப்பதில் இரவிபோன்றவராயும் விளங்கினீர்.

लेशोऽपि यस्य सूक्तेः मनसि ध्यातोऽत्र मुदमुदञ्चयति ।
सोऽयं वरवरयोगी सूते भक्तिं स्वकीयपदपद्मे ॥ ३ ॥

லேஶோऽபி யஸ்ய ஸூக்தே: மநஸி த்யாதோऽத்ர முதமுதஞ்சயதி । ஸோऽயம் வரவரயோகீ ஸூதே பக்திம் ஸ்வகீயபதபத்மே ॥ ௩ ॥

தமது ஸ்ரீஸூக்திகளில் ஸ்வல்பபாகத்தைச் சிந்தனைசெய்தாலும் ஆனந்தம் பொங்கிவளரும்படியாக அவற்றைத் திருவாய்மலர்ந்தருளிய மணவாளமாமுனிகள் தமது திருவடித்தாமரைகளில் பக்தியை விளைத்தருளாநின்றார். (3).

शमयति दुरितमशेषं जनयति परमं प्रबोधमिह यस्य ।
सूक्तिततिरेष मम हृदि जागर्ति सदैव वरवरो योगी ॥ ४ ॥

ஶமயதி துரிதமஶேஷம் ஜநயதி பரமம் ப்ரபோதமிஹ யஸ்ய । ஸூக்திததிரேஷ மம ஹ்ருதி ஜாகர்தி ஸதைவ வரவரோ யோகீ ॥ ௪ ॥

தீவினைகளனைத்தையும் தொலைத்து நல்லறிவை நல்குகின்ற திவ்யஸூக்திகளைத் திருவாய்மலர்ந்தருளின மணவாளமாமுனிகள் எப்போதும் எனது உள்ளத்திலே விளங்காநின்றார். (4)

दयया निर्हेतुकया हरिरिह संरक्षतीति यत्सूक्तिः ।
विशदयति मुनिवरोऽसौ विलसति निर्हेतुकरुणया हृदि मे ॥ ५ ॥

தயயா நிர்ஹேதுகயா ஹரிரிஹ ஸம்ரக்ஷதீதி யத்ஸூக்தி: । விஶதயதி முநிவரோऽஸௌ விலஸதி நிர்ஹேதுகருணயா ஹ்ருதி மே ॥ ௫ ॥

எம்பெருமான் தனது நிர்ஹேதுககருணையினாலே நம்மைக் காத்தருள்கின்றானென்னுமிடத்தை விளங்கக்காட்டும் ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்தருளின மணவாளமாமுனிகள் என்னுள்ளத்தில் நிர்ஹேதுககருணையோடு எழுந்தருளியுள்ளார். (5)

यातु सकलोऽपि कालो वरवरयोगीन्द्रविवृतसकलार्थे ।
श्रीवचनभूषणाख्ये दिव्ये शास्त्रेऽस्य दासदासस्य ॥ ६ ॥

யாது ஸகலோऽபி காலோ வரவரயோகீந்த்ரவிவ்ருதஸகலார்தே । ஶ்ரீவசநபூஷணாக்யே திவ்யே ஶாஸ்த்ரேऽஸ்ய தாஸதாஸஸ்ய ॥ ௬ ॥

மணவாளமாமுனிகளின் வியாக்கியானங்கொண்டே ஸகலார்த்தங்களையும் அறியக்கூடியதாகவுள்ள ஸ்ரீவசநபூஷணமென்னும் திவ்ய ஶாஸ்த்ரத்தின் அநுபவத்திலேயே அடியேனுடைய வாழ்நாளெல்லாம் செல்லவேணும். (6)

पातु वरयोगिवर्यो यो हि रहस्यत्रयार्थमनवद्यम् ।
पावनफणितिभिरद्भुतसन्दर्भाभिः प्रसादयामास ॥ ७ ॥

𑌪𑌾𑌤𑍁 𑌵𑌰𑌯𑍋𑌗𑌿𑌵𑌰𑍍𑌯𑍋 𑌯𑍋 𑌹𑌿 𑌰𑌹𑌸𑍍𑌯𑌤𑍍𑌰𑌯𑌾
𑌰𑍍𑌥𑌮𑌨𑌵𑌦𑍍𑌯𑌮𑍍 । 𑌪𑌾𑌵𑌨𑌫𑌣𑌿𑌤𑌿𑌭𑌿𑌰𑌦𑍍𑌭𑍁𑌤𑌸𑌨𑍍𑌦𑌰𑍍𑌭𑌾𑌭𑌿𑌃
𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑌾𑌮𑌾𑌸 ॥ ௭ ॥

ரஹஸ்யத்ரயார்த்த விவரணமாகப் பிள்ளையுலகாசிரியர் பணித்தருளின முமுக்ஷுப்படியை மிகவழகிய புனிதமான திவ்யஸூக்திகளினால் ஸத்ஸம்ப்ரதாயப்படியே வியாக்கியானித்தருளின மணவாளமாமுனிகள் நம்மைக்காத்தருள்க. (7)

त्रय्यन्तार्थमशेषं ललितसरण्यैव बोधयन् योऽस्मान् ।
तत्त्वत्रयस्य विवृतिं वरवरयोगी चकार स गुरुर्नः ॥ ८ ॥

𑌤𑍍𑌰𑌯𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌮𑌶𑍇𑌷𑌂 𑌲𑌲𑌿𑌤𑌸𑌰𑌣𑍍𑌯𑍈𑌵 𑌬𑍋𑌧
𑌯𑌨𑍍 𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌾𑌨𑍍 । 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌯 𑌵𑌿𑌵𑍃𑌤𑌿𑌂 𑌵𑌰𑌵𑌰𑌯𑍋
𑌗𑍀 𑌚𑌕𑌾𑌰 𑌸 𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌨𑌃 ॥ ௮ ॥

பிள்ளையுலகாசிரியர் பணித்தருளிய தத்வத்ரயமென்னும் ரஹஸ்யக்ரந்தத்தை வியாக்கியானித்தருளும் முகத்தால் ஸகல வேதாந்த ஸாரப் பொருள்களையும் எளியநடையில் உபகரித்தருளின மணவாள மாமுனிகளே நமக்கு அகவிருளை அகற்றவல்ல பேராசிரியர்.

धीरिह जगति मदीया तास्ता वाचो निषेव्य विरमन्ती ।
वरवरमुनीन्द्रफणितिषु दिव्यास्वनुभूतिमविरतां धत्ते ॥ ९ ॥

𑌧𑍀𑌰𑌿𑌹 𑌜𑌗𑌤𑌿 𑌮𑌦𑍀𑌯𑌾 𑌤𑌾𑌸𑍍𑌤𑌾 𑌵𑌾𑌚𑍋 𑌨𑌿𑌷𑍇𑌵𑍍𑌯
𑌵𑌿𑌰𑌮𑌨𑍍𑌤𑍀 । 𑌵𑌰𑌵𑌰𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌫𑌣𑌿𑌤𑌿𑌷𑍁 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌸𑍍𑌵𑌨𑍁
𑌭𑍂𑌤𑌿𑌮𑌵𑌿𑌰𑌤𑌾𑌂 𑌧𑌤𑍍𑌤𑍇 ॥ ௯ ॥

இவ்வுலகில் அவதரித்துள்ள பலபலவாக்குக்களை அநுபவித்து ஓய்வு அடைகின்ற எனது புத்தியானது மணவாளமாமுனிகளின் திவ்யஸூக்திகளின் அநுபவத்திலிருந்து மாத்திரம் ஒருபோதும் ஓய்-

வடைகின்றதில்லை. “எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழி தொறும் அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே.” என்னுமா போலே நித்யாபூர்வமானவை மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளென்கை.

भवभयभेषजमतुलं विभाति यत्प्रोक्तविवृतिविशदार्थम् ।
आचार्यहृदयशास्त्रं स जयतु सौम्योपयन्तृयोगीन्द्रः ॥ १० ॥

𑌭𑌵𑌭𑌯𑌭𑍇𑌷𑌜𑌮𑌤𑍁𑌲𑌂 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌿𑌵𑍃𑌤𑌿
𑌵𑌿𑌶𑌦𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 । 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌹𑍃𑌦𑌯𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸 𑌜𑌯𑌤𑍁
𑌸𑍌𑌮𑍍𑌯𑍋𑌪𑌯𑌨𑍍𑌤𑍃𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 ॥ ௧௦ ॥

அழகியமணவாளப்பெருமாள் நாயனாருளிச்செய்ததும் பிறவியென்னும் நோய்க்கு மருந்துமான ஆசார்யஹ்ருதய மஹாஶாஸ்த்ரத்தின் ஸகலார்த்தங்களையும் விசதமாகக் காட்டவல்ல வியாக்கியானத்தைத் திருவாய்மலர்ந்தருளிய மணவாளமாமுனிகள் வாழ்க. (10)

भक्त्या कथयत सततं वरवरमुनिवक्त्रदिव्यकमलसुधाम् ।
उपदेशरत्नमालां ययैव शोभेत भुवि सतां हृदयम् ॥ ११ ॥

𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌕𑌥𑌯𑌤 𑌸𑌤𑌤𑌂 𑌵𑌰𑌵𑌰𑌮𑍁𑌨𑌿𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌦𑌿𑌵𑍍𑌯𑌕𑌮𑌲
𑌸𑍁𑌧𑌾𑌮𑍍 । 𑌉𑌪𑌦𑍇𑌶𑌰𑌤𑍍𑌨𑌮𑌾𑌲𑌾𑌂 𑌯𑌥𑍈𑌵 𑌶𑍋𑌭𑍇𑌤
𑌭𑍁𑌵𑌿 𑌸𑌤𑌾𑌂 𑌹𑍃𑌦𑌯𑌮𑍍 ॥ ௧௧ ॥

மணவாளமாமுனிகளின் முகாரவிந்தத்தின் மகரந்தம் போன்றதும் ஸத்துக்களின் ஹ்ருதயத்திற்கு ஶோபாவஹமுமான உபதேசரத்தினமாலையென்னும் திவ்யப்ரபந்தத்தை அன்புடன் ஓதுமின்.

दिशतु मयि दिव्यदृष्टिं द्रमिडोपनिषन्महार्थसारं यः ।
शतकेन दिव्यवचसां प्रोचे कान्तोपयन्तृमुनिवर्यः ॥ १२ ॥

𑌦𑌿𑌶𑌤𑍁 𑌮𑌯𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌦𑍍𑌰𑌮𑌿𑌡𑍋𑌪𑌨𑌿𑌷𑌨𑍍𑌮𑌹𑌾𑌰𑍍𑌥
𑌸𑌾𑌰𑌂 𑌯𑌃 । 𑌶𑌤𑌕𑍇𑌨 𑌦𑌿𑌵𑍍𑌯𑌵𑌚𑌸𑌾𑌂 𑌪𑍍𑌰𑍋𑌚𑍇 𑌕𑌾
𑌨𑍍𑌤𑍋𑌪𑌯𑌨𑍍𑌤𑍃𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑍍𑌯𑌃 ॥ ௧௨ ॥

திருவாய்மொழியின் உட்பொருள்களைத் திருவாய்மொழி நூற்றந்தாதியென்னும் திவ்யப்ரபந்தமூலமாக வெளியிட்டருளின மணவாளமாமுனிகள் அடியேனுக்கு திவ்யசக்ஷுஸ்ஸை அருளவேணும்.

गुरुभिरिह बहुभिरमिता गिरः प्रसूता लसन्ति, विलसन्तु ।
सुन्दरजामातृमुनेस्सूक्तिषु माधुर्यमप्रतिद्वन्द्वम् ॥ १३ ॥

𑌗𑍁𑌰𑍁𑌭𑌿𑌰𑌿𑌹 𑌬𑌹𑍁𑌭𑌿𑌰𑌮𑌿𑌤𑌾 𑌗𑌿𑌰𑌃 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾
𑌲𑌸𑌨𑍍𑌤𑌿, 𑌵𑌿𑌲𑌸𑌨𑍍𑌤𑍁 । 𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌜𑌾𑌮𑌾𑌤𑍃𑌮𑍁𑌨𑍇𑌸𑍍𑌸𑍂𑌕𑍍𑌤𑌿
𑌷𑍁 𑌮𑌾𑌧𑍁𑌰𑍍𑌯𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑍍 ॥ ௧௩ ॥

இவ்வுலகில் பல பல ஆசிரியர்களால் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீஸூக்திகள் அளவுகடந்தவையுண்டெனினும் மணவாளமாமுனிகளின் திவ்யஸூக்திகளிலுள்ள இனிமை இணையற்றதேயாம். (13)

गुणलवदरिद्रमेनं दासं वरयोगिगुरुवरः स्वगिराम् ।
अर्थमनर्घमगाधं परया कृपया प्रबोधयत्वखिलम् ॥ १४ ॥

𑌗𑍁𑌣𑌲𑌵𑌦𑌰𑌿𑌦𑍍𑌰𑌮𑍇𑌨𑌂 𑌦𑌾𑌸𑌂 𑌵𑌰𑌯𑍋𑌗𑌿𑌗𑍁𑌰𑍁𑌵𑌰𑌃
𑌸𑍍𑌵𑌗𑌿𑌰𑌾𑌮𑍍 । 𑌅𑌰𑍍𑌥𑌮𑌨𑌰𑍍𑌘𑌮𑌗𑌾𑌧𑌂 𑌪𑌰𑌯𑌾 𑌕𑍃𑌪𑌯𑌾
𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌯𑌤𑍍𑌵𑌖𑌿𑌲𑌮𑍍 ॥ ௧௪ ॥

ஒருயோக்யதையும் சிறிதுமில்லாத அடியேனுக்கும் மணவாளமாமுனிகளின் திவ்யஸூக்திகளின் ஆழ்பொருள்களெல்லாம் நன்கு தெரியும்படி அந்தமாமுனிகளின் திருவருளே வாய்க்கவேணும். (14)

अर्णवगभीरतामपि अहह ! परिच्छेत्तुमीशते कतिचित् ।
वरयोगिसूक्तिसागरगभीरभावस्तु गोचरो न नृणाम् ॥ १५ ॥

𑌅𑌰𑍍𑌣𑌵𑌗𑌭𑍀𑌰𑌤𑌾𑌮𑌪𑍍𑌯𑌹𑌹 ! 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌤𑍍𑌤𑍁𑌮𑍀𑌶𑌤𑍇
𑌕𑌤𑌿𑌚𑌿𑌤𑍍 । 𑌵𑌰𑌯𑍋𑌗𑌿𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌗𑌰𑌗𑌭𑍀𑌰𑌭𑌾𑌵𑌸𑍍𑌤𑍁
𑌗𑍋𑌚𑌰𑍋 𑌨 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 ॥ ௧௫ ॥

“அப்ரமேயோ மஹோததி:” என்னப்பட்ட கடலின் காம்பீர்யத்தையும் அளவிடவல்லார் சிலருண்டு; மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்திக் கடலின்காம்பீர்யம் மாத்திரம் ஒருவர்க்கும் நிலமன்று.

वंशे सुमहति जननं विवेकपुष्टिं शमादिगुणपूर्तिम् ।
वरयोगिदिव्यसूक्तिष्वद्वेषफलं प्रचक्षते प्राज्ञाः ॥ १६ ॥

𑌵𑌂𑌶𑍇 𑌸𑍁𑌮𑌹𑌤𑌿 𑌜𑌨𑌨𑌂 𑌵𑌿𑌵𑍇𑌕𑌪𑍁𑌷𑍍𑌟𑌿𑌂 𑌶𑌮𑌾𑌦𑌿𑌗𑍁
𑌣𑌪𑍂𑌰𑍍𑌤𑌿𑌮𑍍 । 𑌵𑌰𑌯𑍋𑌗𑌿𑌦𑌿𑌵𑍍𑌯𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌷𑍍𑌵𑌦𑍍𑌵𑍇𑌷𑌫𑌲𑌂
𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌃 ॥ ௧௬ ॥

மணவாளமாமுனிகளின் திவ்யஸூக்திகளில் பக்திவிசேஷம் இல்லாவிடினும் அத்வேஷமாவது இருந்திருக்குமாகில் அதன்பயனாக மாசில்குடிப்பிறப்பும் நல்லுணர்வின்மிகுதியும் சமதமாதி குணபூர்த்தியும் விளையுமென்று மஹான்கள் கூறுகின்றார்கள். (16)

यतिपतिपुनरवतारो वरवरमुनिरेष इति विनिश्चेतुम् ।
उपपत्तयो हि जाग्रति भूयस्यस्तास्सदा हृदा कलये ॥ १७ ॥

𑌯𑌤𑌿𑌪𑌤𑌿𑌪𑍁𑌨𑌰𑌵𑌤𑌾𑌰𑍋 𑌵𑌰𑌵𑌰𑌮𑍁𑌨𑌿𑌰𑍇𑌷 𑌇𑌤𑌿
𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑍇𑌤𑍁𑌮𑍍 । 𑌉𑌪𑌪𑌤𑍍𑌤𑌯𑍋 𑌹𑌿 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌿 𑌭𑍂𑌯𑌸𑍍𑌯
𑌸𑍍𑌤𑌾𑌸𑍍𑌸𑌦𑌾 𑌹𑍃𑌦𑌾 𑌕𑌲𑌯𑍇 ॥ ௧௭ ॥

மணவாளமாமுனிகள் எம்பெருமானாருடைய அபராவதாரமேயென்று அறுதியிடுவதற்குப் பலபலசான்றுகள் உள்ளனவாதலால் அவற்றையே எப்போதும் சிந்தைசெய்வேனாக. (17)

तीर्त्वा भवाम्बुराशिं यदि दिवमासादयेयमपि तत्र ।
कान्तोपयन्तृमुनिवरदिव्योक्तिसुधैव भुक्तिरस्तु मम ॥ १८ ॥

𑌤𑍀𑌰𑍍𑌤𑍍𑌵𑌾 𑌭𑌵𑌾𑌮𑍍𑌬𑍁𑌰𑌾𑌶𑌿𑌂 𑌯𑌦𑌿 𑌦𑌿𑌵𑌮𑌾𑌸𑌾𑌦𑌯𑍇𑌯𑌮𑌪𑌿
𑌤𑌤𑍍𑌰 । 𑌕𑌾𑌨𑍍𑌤𑍋𑌪𑌯𑌨𑍍𑌤𑍃𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑌦𑌿𑌵𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌿𑌸𑍁𑌧𑍈𑌵
𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑌮 ॥ ௧௮ ॥

பிறவிக்கடலைக்கடந்து ஒருகால் விண்ணுலகம் சென்று சேரப்பெறுவேனாயினும் அங்கும் மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்தியமுதமே அடியேனுக்கு உணவாகவேணும். (18)

द्रवति दृषदप्यहो यत्प्रकथितयतिराजविंशतिश्रवणात् ।
शमदममुखगुणशेवधिरेष मुनिः पातु वरवरो जगतीम् ॥ १९ ॥

த்ரவதி த்ருஷதப்யஹோ யத்ப்ரகதிதயதிராஜவிம்ஶதி
ஶ்ரவணாத் । ஶமதமமுககுணஶேவதிரேஷ முநி:
பாது வரவரோ ஜகதீம் ॥ ௧௯ ॥

கேட்டளவிலே கல்லும் உருகும்படியான நடையில் அமைந்த யதிராஜவிம்ஶதியை அருளிச்செய்தவரும் ஶமதமாதிஸத்குணநிதியுமான மணவாளமாமுனிகள் உலகைக் காத்தருளவேணும். (19)

प्रथयति यदुदितभगवद्गीताव्याख्यानमद्भुतं भावम् ।
कथयतु मम मुखमनिशं तस्यैव मुनेः पटूनि नामानि ॥ २० ॥

ப்ரதயதி யதுதிதபகவத்கீதாவ்யாக்யாநமத்புதம் பா
வம் । கதயது மம முகமநிஶம் தஸ்யைவ முநே:
படூநி நாமாநி ॥ ௨௦ ॥

பகவத்கீதையின் அற்புதமான தாற்பரியத்தை விளங்கக்காட்டவல்ல ஸம்ஸ்க்ருத வியாக்கியானத்தை யருளிச்செய்த மணவாளமாமுனிகளின் சிறந்த திருநாமங்களையே என்வாய் உரைத்திடுக. (20)

वरदाधिराजमङ्गलमभिरामवरो मुनीश्वरो ह्यम् ।
यः प्रोवाच सदा मे वक्त्रं तस्यैव मङ्गलं ब्रूताम् ॥ २१ ॥

வரதாதிராஜமங்களமபிராமவரோ முநீஶ்வரோ ஹ்ய
ம் । ய: ப்ரோவாச ஸதா மே வக்த்ரம் தஸ்யைவ மங்களம்
ப்ரூதாம் ॥ ௨௧ ॥

பேரருளாளன் விஷயமாகப் பரமபோக்யமான மங்களாசாஸனஸ்துதியை அருளிச்செய்த மணவாளமாமுனிகளுக்கே என்வாக்கு அனவரதம் பல்லாண்டு பாடக்கடவது.

"இந்திரா"

பல வருஷங்கள் உழைக்கக் கூடியது.

இன்று இணையற்று விளங்குவது.



'இந்திரா'

கடியாரங்கள் வெகு நாள் உழைக்கக் கூடியது. சரியான மணி காட்டும். 8 நாளைக்கு ஒரு முறை சாவி கொடுக்கக் கூடியது. பெண்டுலம் மூவ்மெண்ட், எனமெல் டயல், மணி, ½ மணி இனிமையான தொனியில் அடிக்க கூடியது.

10 வருஷ உத்திரவாதம்

8" டயல் ரூ. 10-0-0
10" டயல் ரூ 14-0-0
12" டயல் ரூ. 18-0-0

பாக்கிங் அண்டு பார்சல் செலவு வேறு. ஆர்டர் செய்பவர்கள் ரூ. 5 முன்னதாக அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

ஜலால் அண்டு சன்ஸ்,

கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்.

ஹெட் ஆபீஸ் :— 46, ரட்டன் பஜார், சென்னை.
பிராஞ்சு ஆபீஸ் :— 190, B. மௌண்ட்ரோட், சென்னை.
12, 42-1, ஆபிட்ரோட், ஹைதராபாத் (டெக்கான்.)

Note Our
"STEAMER"
TRADE MARK

World's Best — By Every Test

The Indian Chemical Diamond - Works -

96, Mint Street,
- MADRAS -

சீமைக் கமலச் சிறப்பை சிக்கனச் செலவில் அடையலாம்

"கப்பல்" மார்க்கு ரங்கோன் வைரங்கள் கடினம், பூரிப்பு ஒளி, குணங் களில் மிகச் சிறந்தவை.

ஒருமுறை விஜயஞ் செய்யுங்கள்

ஸம்ஸதீன் அன் இஸ்மாயில்
தி இண்டியன் கெமிக்கல் டைமன் ஒர்க்ஸ்.
96, சௌகார் பேட்டை, சென்னை.

பாரிசவாயுவுக்கு பயப்பட வேண்டாம்!

க்ஷீரபலா

(101 தடவை பாகம் செய்தது)

பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி. எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. இதை எங்களுடைய "அயவீரஸிந்தூர"த்துடன் கலந்து உட்கொண்டால் இன்னும் அமோகமான பலன் அதிசீக்கிரத்தில் கிடைக்கும்.

க்ஷீர பலா:—அவுன்ஸ் 1-க்கு 3-8-0. ½-அவுன்ஸ் 1-12-0.
அயவீரம்:—ஒருவாரத்திற்கு போதுமான மருந்து 1-0-0.

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்
107, பிராட்வே, சென்னை

**प्रवणं हृदय सदा भव वरवरमुनिवर्यविवृतिमहितायाम् ।
यतिपतिशुभगुणवर्णनविचक्षणायां प्रपन्नगायत्र्याम् ॥ २२ ॥**

ப்ரவணம் ஹ்ருதய ஸதா பவ வரவரமுநிவர்யவிவ்ருதிமஹிதாயாம் । யதிபதிசுபகுணவர்ணநவிசக்ஷணாயாம் ப்ரபந்நகாயத்ர்யாம் ॥ ௨௨ ॥

எம்பெருமானாருடைய திருக்குணங்களை அழகாகப் பேசவல்லதும் மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்தினால் சிறப்புற்றோங்குவதுமான இராமானுச நூற்றந்தாதியில் நெஞ்சே! எப்போதும் ஊற்றமுற்றிருப்பாயாக. (22)

**वञ्चयितुमपि यदीच्छथ जगतीं वरयोगिभक्तिभावनया ।
वञ्चयत, काममेषा पुनाति सत्यं छलात्मिकाऽपि सती ॥ २३ ॥**

வஞ்சயிதுமபி யதீச்சத ஜகதீம் வரயோகிபக்திபாவநயா । வஞ்சயத, காமமேஷா புநாதி ஸத்யம் சலாத்மிகாऽபி ஸதீ ॥ ௨௩ ॥

கபடபக்தியினால் உலகை வஞ்சிக்கநினைத்தாலும் அந்தக் கபடபக்தியையும் மணவாளமாமுனிகள் விஷயமாகவே கொள்வது நலம். ஏனென்னில், மாமுனிகள் திறத்தில் பக்திபாவனை செய்யினும் ஆத்மா புனிதமாகுங்காணும். "பொய்யேகைப் பைசொல்லி" இத்யாதி. (23)

**देयाद्वरवरयोगी गोदाजनकीयदिव्यसूक्तिततेः ।
स्वात्मकृतविशदविवृतौ सुगाढमवगाढमन्तरात्मानम् ॥ २४ ॥**

தேயாத்வரவரயோகீ கோதாஜநகீயதிவ்யஸூக்திததே: । ஸ்வாத்மக்ருதவிசதவிவ்ருதௌ ஸுகாடமவகாடமந்தராத்மாநம் ॥ ௨௪ ॥

மணவாளமாமுனிகள் பெரியாழ்வார் திருமொழிக்குத் தாமருளிச்செய்த இனிய வியாக்கியானத்தில் மிகவும் ஆழ்ந்து அவகாஹிக்கவல்ல உள்ளத்தை எனக்கு அருள்புரியவேணும். (24)

रमयति मम मतिमविरतमाचार्यवरस्य वरवरस्य मुनेः ।
सकलप्रमाणसंग्रहसमाह्वयं तत्प्रसिद्धकृतिरलम् ॥ २५ ॥

𑌰𑌮𑌯𑌤𑌿 𑌮𑌮 𑌮𑌤𑌿𑌮𑌵𑌿𑌰𑌤𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑌸𑍍𑌯 𑌵𑌰𑌵𑌰𑌸𑍍𑌯
𑌮𑍁𑌨𑍇𑌃 । 𑌸𑌕𑌲𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌸𑌮𑌾𑌹𑍍𑌵𑌯𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰
𑌸𑌿𑌦𑍍𑌧𑌕𑍃𑌤𑌿𑌰𑌲𑌮𑍍 ॥ ௨௫ ॥

ஆசார்ய ஸார்வபௌமரான மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸகலப்ரமாண ஸங்க்ரஹமென்னும் திவ்யக்ரந்தம் என்னுள்ளத்தை எப்போதும் உகப்பிக்கின்றது. (25)

य इह वरयोगिवर्यः प्रणिनायार्तिप्रबन्धमार्तिभरात् ।
अपनुदतु सोयमार्तीरखिला अपि नित्यमधिवसन् जगतीम् ॥ २६ ॥

𑌯 𑌇𑌹 𑌵𑌰𑌯𑍋𑌗𑌿𑌵𑌰𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌣𑌿𑌨𑌾𑌯𑌾𑌰𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧
𑌮𑌾𑌰𑍍𑌤𑌿𑌭𑌰𑌾𑌤𑍍 । 𑌅𑌪𑌨𑍁𑌦𑌤𑍁 𑌸𑍋𑌯𑌮𑌾𑌰𑍍𑌤𑍀𑌰𑌖𑌿𑌲𑌾
𑌅𑌪𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌧𑌿𑌵𑌸𑌨𑍍 𑌜𑌗𑌤𑍀𑌮𑍍 ॥ ௨௬ ॥

இந்நிலத்தில் அடிக்கொதிப்பால் ஆர்த்திப்பிரபந்தமருளிச்செய்தருளின மணவாளமாமுனிகள் 'இன்னமொரு நூற்றாண்டிரும்' என்ற வாழ்த்துப்படியே இவ்வுலகில் எந்நாளுமெழுந்தருளியிருந்துகொண்டு நமது ஆர்த்திகளைத்தீர்த்தருளவேணும். (26)

जाया जननी जनकस्सोदर इति तेषु तेषु यः प्रेमा ।
इह भवति सोयमखिलः श्रीमद्वरयोगिचरणयोर्मेऽस्तु ॥ २७ ॥

𑌜𑌾𑌯𑌾 𑌜𑌨𑌨𑍀 𑌜𑌨𑌕𑌸𑍍𑌸𑍋𑌦𑌰 𑌇𑌤𑌿 𑌤𑍇𑌷𑍁 𑌤𑍇𑌷𑍁
𑌯𑌃 𑌪𑍍𑌰𑍇𑌮𑌾 । 𑌇𑌹 𑌭𑌵𑌤𑌿 𑌸𑍋𑌯𑌮𑌖𑌿𑌲𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑌰𑌯𑍋𑌗𑌿
𑌚𑌰𑌣𑌯𑍋𑌰𑍍𑌮𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 ॥ ௨௭ ॥

தாரமென்றும் தாயென்றும் தந்தையென்றும் ஸஹோதரனென்றும் பலரிடத்துப் பாலிபாயக்கூடிய அன்பு முழுவதும் அடியேனுக்கு மணவாளமாமுனிகளின் திருவடிகளிலேயே பதியக்கடவது. ஸகலவித பந்துக்களும் மாமுனிகளேயென்கை. (27)

माधव मुकुन्द मुरहर मधुसूदन केशवेति नामोक्तीः ।
मुक्त्वा कथयतु सततं वरवरमुनिनाम मामकं वदनम् ॥ २८ ॥

𑌮𑌾𑌧𑌵 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦 𑌮𑍁𑌰𑌹𑌰 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨 𑌕𑍇𑌶𑌵𑍇𑌤𑌿
𑌨𑌾𑌮𑍋𑌕𑍍𑌤𑍀𑌃 । 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌥𑌯𑌤𑍁 𑌸𑌤𑌤𑌂 𑌵𑌰𑌵𑌰𑌮𑍁𑌨𑌿𑌨𑌾𑌮
𑌮𑌾𑌮𑌕𑌂 𑌵𑌦𑌨𑌮𑍍 ॥ ௨௮ ॥

எனதுவாய், மாதவ! முகுந்த! முராரே! மதுஸூதந! கேசவ! என்கிற திருநாமஸங்கீர்த்தனங்களை விட்டிட்டு எப்போதும் மணவாளமாமுனிகளின் திருநாமங்களையே கூறப்பெறவேணும். (28)

तरलमपि मानसं मे सुन्दरजामातृयतिपतेः पदयोः ।
सुदृढमवगाढमास्ते गुरुवरकरुणामहो कथं कथये ॥ २९ ॥

𑌤𑌰𑌲𑌮𑌪𑌿 𑌮𑌾𑌨𑌸𑌂 𑌮𑍇 𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌜𑌾𑌮𑌾𑌤𑍃𑌯𑌤𑌿𑌪𑌤𑍇𑌃
𑌪𑌦𑌯𑍋𑌃 । 𑌸𑍁𑌦𑍃𑌢𑌮𑌵𑌗𑌾𑌢𑌮𑌾𑌸𑍍𑌤𑍇 𑌗𑍁𑌰𑍁𑌵𑌰𑌕𑌰𑍁
𑌣𑌾𑌮𑌹𑍋 𑌕𑌥𑌂 𑌕𑌥𑌯𑍇 ॥ ௨௯ ॥

எனதுநெஞ்சு நின்றவாறில்லாது அலைபாய்வதேயாகிலும் மணவாளமாமுனிகளின் திருவடிகளில்மாத்திரம் ஒருபடிப்பட ஆழ்ந்த அன்பையுடைத்தாயிருக்கின்றது. இங்ஙனே அருள்புரிந்த அந்த மாமுனிகளின் திருவருளை எங்ஙனே புகழ்வேன்? (29)

रंगी स्वयमिह यस्मिन् अन्तेवासी भवन् कृतार्थोभूत् ।
स खलु वरयोगिवर्यः कथमिह वर्ण्येत मादृशां वचसा ॥ ३० ॥

𑌰𑌂𑌗𑍀 𑌸𑍍𑌵𑌯𑌮𑌿𑌹 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌅𑌨𑍍𑌤𑍇𑌵𑌾𑌸𑍀 𑌭𑌵𑌨𑍍 𑌕𑍃𑌤𑌾
𑌰𑍍𑌥𑍋𑌭𑍂𑌤𑍍 । 𑌸 𑌖𑌲𑍁 𑌵𑌰𑌯𑍋𑌗𑌿𑌵𑌰𑍍𑌯𑌃 𑌕𑌥𑌮𑌿𑌹
𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑍇𑌤 𑌮𑌾𑌦𑍃𑌶𑌾𑌂 𑌵𑌚𑌸𑌾 ॥ ௩௦ ॥

ஸ்ரீரங்கநாதனையும் தம்பக்கலிலே சிஷ்யனாகக்கொண்ட மணவாளமாமுனிகளின் மஹிமை என்போன்ற சிறியோர்களின் இளைய புன்கவிதைகளால் வருணித்துத் தலைக்கட்டக்கூடியதோ? (30)

मुहुरिह वरवरमुनिवरसूक्तिसुधास्वादमुदितहृद्रङ्गी ।
दिव्यं यमाह मन्त्रं स सर्वमन्त्रान् विजित्य भुवि भाति ॥ १३ ॥

[illegible] ॥ ௩௧ ॥

மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்தியமுதத்தைப் பருகிப் பருகிக் களித்த ஸ்ரீரங்கநாதன் சோதிவாய்திறந்து பணித்த * ஸ்ரீசைலேசத்தனியன் உலகிலுள்ள ஸகல மந்த்ரங்களையும் வென்று வீறு பெற்று விளங்குகின்றது. (31)

निखिलाप्यर्चामूर्तिः नित्यं यन्मन्त्रनिशमनात्तुष्टिम् ।
भजते, वरवरमुनिवरदैवतमन्त्रोऽयमस्तु मे जप्यः ॥ ३२ ॥

[illegible] ॥ ௩௨ ॥

ஆங்காங்குக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களனைவரும் மணவாளமாமுனிகளையே தேவதையாகக்கொண்ட எந்த ஸ்ரீசைலமந்த்ரத்தையே நாடோறும் திருச்செவிசாத்தித் திருவுள்ளம் பூரிக்கின்றனரோ அந்த மந்த்ரத்தையே நான் எப்போதும் ஜபிக்கக்கடவேன். (32

महतां शुभकुलजनुषा महनीयाचार्यकरुणया च तथा ।
श्रीवैष्णवाङ्घ्रिदासो वरवरयोगिस्तुतिं व्यजिज्ञपत ॥

[illegible] ॥ ௩௩ ॥

ஸ்ரீவைஷ்ணவதாஸனனவடியேன் பெரியோர்களின் நற்குலத்திற் பிறந்ததனாலும் போசிரியர் திருவருளுக்கு இலக்காகப் பெற்றதனாலும் இந்தஸ்தோத்ரத்தை விண்ணப்பஞ்செய்யலானேன்......*

ஸ்ரீவரவரமுனிவைபவஸ்தோத்ரம் முற்றிற்று.

॥ श्रीमते रामानुजाय नमः ॥

॥ श्रीमल्लोकगुरवे नमः ॥

॥ श्रीमद्वरवरमुनये नमः ॥

श्रीकाञ्ची प्रतिवादिभयङ्कर अण्णङ्गराचार्यप्रणीता

॥ श्रीलोकाचार्यस्तुतिः ॥

ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்

இயற்றிய

ஸ்ரீலோகாசார்யஸ்துதி.

(பொழிப்புரையுடன் கூடியது.)

....

लोकाचार्यायेति प्रसिद्धपद्यस्थवर्णबृन्दस्य ।
क्रमतो लोकगुरूत्तमनुतिरियमाविर्भवत्यहो ललिता ॥

[illegible] ॥

"லோகாசார்யாயகுரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே, ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம:." என்று ஸுப்ரஸித்தமான தனியனிலுள்ள ஒவ்வொரு அக்ஷரத்தையும் அடைவே ஒவ்வொரு ச்லோகத்தின் முதலெழுத்தாகக்கொண்ட இந்தஸ்தோத்ரம் பிள்ளையுலகாசிரியர் விஷயமாகக் கூறப்படுகின்றது.

लोके यद्यपि गुरवो बहवस्समवातरंस्तथाप्यत्र ।
श्रीमल्लोकगुरूत्तमसमो गुरुः कोपि नैव संजज्ञे ॥ १ ॥

லோகே யத்யபி குரவோ பஹவஸ்ஸமவாதரம்ஸ்ததாப்யத்ர । ஸ்ரீமல்லோககுரூத்தமஸமோ குரு: கோபி நைவ ஸஞ்ஜஜ்ஞே ॥ க ॥

இவ்வுலகில் பலபல ஆசாரியர்கள் திருவவதரித்திருந்தபோதிலும் பிள்ளையுலகாசிரியர்க்கு ஒப்பான குரவர் ஒருவரும் அவதரித்ததில்லையென்பது திண்ணம். (1)

काचाय नीचनृपतीन् तुष्टूषन्तः कवीश्वरा भोभोः ।
कुरुत जगद्गुरुविषयं स्तुतिशतमनिशं समुज्जिजीविषवः ॥ २ ॥

காசாய நீசந்ருபதீந் துஷ்டூஷந்த: கவீச்வரா போபோ: । குருத ஜகத்குருவிஷயம் ஸ்துதிசதமநிசம் ஸமுஜ்ஜிஜீவிஷவ: ॥ உ ॥

காசுக்காக க்ஷுத்ர ப்ரபுக்களைத் துதிக்க விரும்புகின்ற கவிகாள்! நீங்கள் உய்யவேண்டில் * அன்னபுகழ் முடும்பையண்ணலுலகாசிரியர் விஷயமான துதிகளையே எப்போதும் இயற்றுமின். (2)

चारित्रमतिपवित्रं विद्या हृद्या मतिश्शुभा यस्य ।
तस्य जगद्गुरुसूरेस्सूक्तिभिरुर्वी विभाति ननु गुर्वी ॥ ३ ॥

சாரித்ரமதிபவித்ரம் வித்யா ஹ்ருத்யா மதிச்சுபா யஸ்ய । தஸ்ய ஜகத்குருஸூரேஸ்ஸூக்திபிருர்வீ விபாதி நநு குர்வீ ॥ ௩ ॥

பரமபுனிதமான சரித்திரத்தையும் சிறந்த கல்வியையும் தூய மதியையுங்கொண்ட உலகாசிரியருடைய திவ்யஸூக்திகளாலன்றோ இப்பூமண்டலம் பெருமைபெற்று விளங்குகின்றது. (3)

यापयत कालमखिलं लोकाचार्यस्य दिव्यसूक्तीनाम् ।
अनुसन्धानकुतूहलभरेण भो भव्यशेमुषीभरिताः ॥ ४ ॥

யாபயத காலமகிலம் லோகாசார்யஸ்ய திவ்யஸூக்தீநாம் । அநுஸந்தாநகுதூஹலபரேண போ பவ்யசேமுஷீபரிதா: ॥ ௪ ॥

நன்மதிவாய்ந்த நல்லோர்களே! பிள்ளையுலகாசிரியரின் திவ்யஸூக்திகளை யநுஸந்திப்பதிலுள்ள குதூஹலங்கொண்டே நீங்கள் நாள் கடலைக் கழிமின். (4)

यतिपतिदर्शनमद्भुतं अभिवर्धयितुं यदुक्तिरत्नानि ।
प्रादुर्बभूवुरमृतप्रायाणि तमेव लोकगुरुमीडे ॥ ५ ॥

யதிபதிதர்சநமத்புதம் அபிவர்த்தயிதும் யதுக்திரத்நாநி । ப்ராதுர்பபூவுரம்ருதப்ராயாணி தமேவ லோககுருமீடே ॥ ௫ ॥

எம்பெருமானார் தரிசனத்தை அழகாக வளர்த்தருள்வதற்காகவே அமுதினுமாற்றவினிய திவ்யஸூக்திகளைத் திருவாய் மலர்ந்தருளின பிள்ளையுலகாசிரியரைப் போற்றுகின்றேன். (5)

गुरुरिति नाम यथार्थं वोढुं शक्नोति लोकगुरुरेकः ।
यः स्वीयदिव्यसूक्त्या ध्वान्तं रुन्धेस्म गाढमिह जगति ॥ ६ ॥

குருரிதி நாம யதார்த்தம் வோடும் சக்நோதி லோககுருரேக: । ய: ஸ்வீயதிவ்யஸூக்த்யா த்வாந்தம் ருந்தேஸ்ம காடமிஹ ஜகதி ॥ ௬ ॥

இவ்வுலகின்கண் மலிந்திருந்த அகவிருளைப் பிள்ளையுலகாசிரியர் ஒருவர்தாமே தமது திவ்யஸூக்திகளினால் தொலைத்தருளினபடியால், குரு என்னுந்திருநாமத்தை உள்ளபடி வஹிப்பதற்கு அவரொருவரே உரியவர். (6)

रत्नाकरेपि जलधौ हेयानि भवन्ति हन्त सुबहूनि ।
लोकगुरुसूक्तिरत्नाकरे तु नैवास्ति हेयमीषदपि ॥ ७ ॥

ரத்நாகரேபி ஜலதௌ ஹேயாநி பவந்தி ஹந்த ஸுபஹூநி । லோககுருஸூக்திரத்நாகரே து நைவாஸ்தி ஹேயமீஷதபி ॥ ௭ ॥

ரத்நாகரமென்று பேர்பெற்றிராநின்ற கடலிலும் பலபொருள்கள் ஹேயங்களாயிருக்கின்றன; உலகாசிரியரின் ஸ்ரீஸூக்திஸாகரத்திலோவென்னில் அங்ஙனே ஹேயமானபொருள் ஒன்றின்றியே ஸகலமும் உபாதேயதமம். (7)

वेदान्तयुग्मसिन्धुं निर्मथ्य समुद्धृतां सुधां सुभगाम् ।
भाग्याधिकैकभोग्यां योऽदात्तं लोकगुरुवरं नौमि ॥ ८ ॥

வேதாந்தயுக்மஸிந்தும் நிர்மத்ய ஸமுத்த்ருதாம் ஸுதாம் ஸுபகாம் । பாக்யாதிகைகபோக்யாம் யோதாத்தம் லோககுருவரம் நௌமி ॥ ௮ ॥

உபயவேதாந்தக்கடலைக் கடைந்து எடுக்கப்பட்டதும் மஹாபாக்யசாலிகளுக்கே போக்யமுமான சிறந்த அமுதத்தை அளித்தருளின உலகாசிரியரைப் போற்றுகின்றேன். (8)

कृपया निरुपाधिकया रस्यरहस्यार्थमखिलमनवद्यम् ।
श्रीवचनभूषणाद्यैः ख्यापितवन्तं जगद्गुरुं स्तौमि ॥ ९ ॥

க்ருபயா நிருபாதிகயா ரஸ்யரஹஸ்யார்த்தமகிலமநவத்யம் । ஸ்ரீவசநபூஷணாத்யை: க்யாபிதவந்தம் ஜகத்குரும் ஸ்தௌமி ॥ ௯ ॥

நிர்ஹேதுகக்ருபைகொண்டு ஸ்ரீவசநபூஷணம் முதலிய திவ்யக்ரந்தங்கள் மூலமாக அரியபெரிய ரஹஸ்யார்த்த தத்துவத்தைச் சிறப்புற வெளியிட்டருளின உலகாசிரியரைத் துதிக்கின்றேன். (9)

कृष्णगुरुपुत्ररत्नं कृष्णगुणाम्भोधिपारदृश्वानम् ।
सर्वज्ञसार्वभौमं सततं ध्यायामि भुवनगुरुवर्यम् ॥ १० ॥

க்ருஷ்ணகுருபுத்ரரத்நம் க்ருஷ்ணகுணாம்போதிபாரத்ருஶ்வாநம் । ஸர்வஜ்ஞஸார்வபௌமம் ஸததம் த்யாயாமி புவநகுருவர்யம் ॥ ௧௦ ॥

வடக்குத்திருவீதிப்பிள்ளையின் திருக்குமாரரும், எம்பெருமானுடைய குணக்கடலைக் கரைகண்டவரும் ஸர்வஜ்ஞருமான பிள்ளையுலகாசிரியரை எப்போதும் சிந்தைசெய்கின்றேன். (10)

पावनफणितिभिरखिलान् शास्त्रार्थगणान् प्रकाश्य लोकार्यः ।
पावयतिस्म धरित्रीं यो हि स एको विराजतां हृदि मे ॥ ११ ॥

பாவநபணிதிபிரகிலாந் ஶாஸ்த்ரார்த்தகணாந் ப்ரகாஶ்ய லோகார்ய: । பாவயதிஸ்ம தரித்ரீம் யோ ஹி ஸ ஏகோ விராஜதாம் ஹ்ருதி மே ॥ ௧௧ ॥

தூயதிருவாக்குக்களினால் ஸகலசாஸ்த்ரார்த்தங்களையும் வெளியிட்டருளி இந்நிலவுலகைப் புனிதமாக்கின பிள்ளைலோகாசார்யரொருவரே எனது உள்ளத்தில் விளங்கியருளவேணும். (11)

दमयति यदीयसूक्तिः दुरध्वनिष्ठागरिष्ठजनदर्पम् ।
स भुवनगुरुवर एव हि वैष्णवजनतावतंस्यपदपद्मः ॥ १२ ॥

தமயதி யதீயஸூக்தி: துரத்வநிஷ்டாகரிஷ்டஜநதர்பம் । ஸ புவநகுருவர ஏவ ஹி வைஷ்ணவஜநதாவதம்ஸ்யபதபத்ம: ॥ ௧௨ ॥

அபஸம்ப்ரதாயங்களில் ஊன்றிக்கொண்டிருக்கின்ற ஜனங்களின் செருக்கையடக்கவல்ல திவ்யஸூக்திகளைத் திருவாய்மலர்ந்தருளின பிள்ளைலோகாசாரியருடைய திருவடிகளே ஸ்ரீவைஷ்ணவவுலகின் சென்னிக்கு மலர்ந்த பூவாகத்தகுவன. (12)

स्यन्दनगजहयपत्तिप्रमुखमहैश्वर्यमखिलमवधीर्य ।
भुवनगुरुसूक्तिरसिकश्रीवैष्णवसद्मशोधनं करवै ॥ १३ ॥

ஸ்யந்தநகஜஹயபத்திப்ரமுகமஹைஶ்வர்யமகிலமவ
தீர்ய । புவநகுருஸூக்திரஸிக ஸ்ரீவைஷ்ணவஸத்
மஶோதநம் கரவை ॥ ௧௩ ॥

ரதகஜதுரகபதாதிகள் முதலியவற்றை யாளுகையாகிற பெருஞ் செல்வம் கிடைப்பதாயிருந்தாலும் அதனை உதறித்தள்ளிவிட்டு, பிள்ளையுலகாசிரியரின் ஸ்ரீஸூக்திகளில் சுவையறியும் ஸ்ரீவைஷ்ணவர்களின் திருமாளிகைகளில் தொண்டுசெய்து வாழ்வேனாக. (13)

सूनृतमिदमवधेयं सूक्तीर्यदि लोकदेशिकः कृपया ।
नादास्यदथ धरित्री ध्रुवमभविष्यत्तमोमयी सुतराम् ॥ १४ ॥

ஸூந்ருதமிதமவதேயம் ஸூக்தீர்யதி லோகதேஶிக:
க்ருபயா । நாதாஸ்யதத தரித்ரீ த்ருவமபவிஷ்யத்தமோ
மயீ ஸுதராம் ॥ ௧௪ ॥

இந்த வுண்மையுரையைக் குறிக்கொள்மின்; உலகாசிரியர் பேரருள்கொண்டு ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்திராவிடில் இவ்வுலகம் இருள் தருமாஞாலமாகவே யிருந்திருக்கும். (14)

नन्दथुमनुपधिमिह ये लिप्सन्ते ते जगद्गुरोस्सूक्तीः ।
सततमुपभुज्य नन्दन्त्वन्यैः किमधन्यजन्मवाग्विसरैः ॥ १५ ॥

நந்தயுமநுபதிமிஹ யே லிப்ஸந்தே தே ஜகத்குரோ
ஸ்ஸூக்தீ: । ஸததமுபபுஜ்ய நந்தந்த்வந்யை: கிமதந்யஜ
ந்மவாக்விஸரை: ॥ ௧௫ ॥

இவ்வுலகில் உண்மையான ஆனந்தத்தைப் பெறவிரும்புமவர்கள் உலகாசிரியரின் அருளிச்செயல்களையே இடைவீடின்றி யநுபவித்து ஆநந்திக்கப் பெறவேணும்; மற்றையோருடைய வாக்குக்களினால் இன்பமுண்டாவதரிது. (15)

वेद यदि कोपि धन्यो लोकाचार्यस्य सूक्तिमेकां वा ।
तस्य पदाब्जसकाशे बद्धाञ्जलिता सदैव मे भविता ॥ १६ ॥

வேத யதி கோபி தந்யோ லோகாசார்யஸ்ய ஸூக்
திமேகாம் வா । தஸ்ய பதாப்ஜஸகாஶே பத்தாஞ்ஜலிதா
ஸதைவ மே பவிதா ॥ ௧௬ ॥

பிள்ளையுலகாசிரியருடைய திவ்யஸூக்திகளில் ஒன்றையாவது நன்கறிந்த மஹாநுபாவர் ஒருவர் இருப்பரேல் அவருடைய திருவடிவாரத்தில் எப்போதும் கைகூப்பிக்கொண்டு நிற்றலே எனக்குற்றது.

संयमिनृपतिसद्ध्वनि सौभाग्यवशेन समुदितैस्सुजनैः ।
भुवनगुरुसूक्तिरसिकैर्यदि न हि भूयेत भूभरस्त इमे ॥ १७ ॥

ஸம்யமிந்ருபதிஸத்த்வநி ஸௌபாக்யவஶேந ஸமுதி
தைஸ்ஸுஜநை: । புவநகுருஸூக்திரஸிகைர்ய
தி ந ஹி பூயேத பூபரஸ்த இமே ॥ ௧௭ ॥

மஹத்தான பாக்யவசத்தினால் எம்பெருமானார் தரிசனத்தில் உதிக்கப்பெற்ற ஸத்துக்கள் பிள்ளைலோகாசார்யருடைய திவ்யஸூக்திகளில் சுவையறியப் பெறுதொழியில் அவர்கள் மண்ணின்பாரமே யாவர். (17)

साधुमसाधुमिहार्थं संमृश्य विवेक्तुमस्ति धीर्येषाम् ।
ते खलु लोकगुरूत्तमसूक्तिसुधापानभाग्यभाजस्स्युः ॥ १८ ॥

ஸாதுமஸாதுமிஹார்த்தம் ஸம்ம்ருஶ்ய விவேக்துமஸ்தி
தீர்யேஷாம் । தே கலு லோககுரூத்தமஸூக்தி
ஸுதாபாநபாக்யபாஜஸ்ஸ்யு: ॥ ௧௮ ॥

“இவையன்றே நல்ல இவையன்றேதீய” என்று நல்லதுதீதுகளைப் பகுத்துணரவல்ல ஆற்றல் பெற்றவர்கள் தாம் உலகாசிரியருடைய ஸ்ரீஸூக்தியமுதத்தைப் பருகுவதற்கீடான பாக்கியம் பெற்றவர்களாவர். (18)

रसिका ये खलु भगवद्गुणगणविद्यासु विश्रुतास्तेषाम् ।
श्रीमल्लोकगुरूत्तमफणितिरसास्वादलुब्धता शरणम् ॥ १९ ॥

ரஸிகா யெ கலு பகவத்குணகணவித்யாஸு வி
ஶ்ருதாஸ்தெஷாம் । ஶ்ரீமல்லோககுரூத்தமபணிதிரஸா
ஸ்வாதலுப்ததா ஶரணம் ॥ ௧௯ ॥

பகவத்குணவித்யைகளில் சுவையறிந்தவர்களாகப் புகழ்பெற்றிருக்குமவர்கள் பிள்ளையுலகாசிரியர் தம் திவ்யஸூக்திகளில் ரஸிகர்களாக இருந்து தீரவேவேண்டும். (19)

भोजनमथ च स्वापः स्वच्छन्दविहार इत्यदःकृत्यैः ।
क्षपयन्ति कालमखिलं हाहा लोकार्यसूक्तिरसविमुखाः ॥ २० ॥

போஜநமத ச ஸ்வாப: ஸ்வச்சந்தவிஹார இத்யத:க்ரு
த்யை: । க்ஷபயந்தி காலமகிலம் ஹாஹா லோகார்ய
ஸூக்திரஸவிமுகா: ॥ ௨௦ ॥

உலகாரியரின் ஸ்ரீஸூக்திரஸமறியப் பெருதவர்கள் அந்தோ! உண்பது உறங்குவது பட்டிமேய்ந்து திரிவது என்றிப்படிப்பட்ட செயல்களினால் போதைப்போக்குகின்றனர்!. (20)

गिरिगह्वरेषु सुचिरं तप्तं घोरं तपस्तु तैस्सत्यम् ।
ये लोकदेशिकीयास्सूक्तीरनुसंदधत्यहो सततम् ॥ २१ ॥

கிரிகஹ்வரெஷு ஸுசிரம் தப்தம் கொரம் தபஸ்து
தைஸ்ஸத்யம் । யெ லோகதெஶிகீயாஸ்ஸூக்தீரநுஸந்த
தத்யஹோ ஸததம் ॥ ௨௧ ॥

பிள்ளையலகாசிரியர் தம் திவ்யஸூக்திகளை இடைவிடாது அநுஸந்திக்கும் மஹான்கள் திண்ணமாக மலைமுழைஞ்சுகளில் கோரமா தவம் செய்தேயிருப்பார்கள். (21)

संत्यज्य सर्ववाचो ये खलु धन्या जगद्गुरुप्रोक्तम् ।
श्रीवचनभूषणाख्यं शास्त्रं ध्यायन्ति तद्गृहे श्वा स्याम् ॥ २२ ॥

ஸந்த்யஜ்ய ஸர்வவாசொ யெ கலு தந்யா ஜகத்கு
ருப்ரொக்தம் । ஶ்ரீவசநபூஷணாக்யம் ஶாஸ்த்ரம் த்யா
யந்தி தத்க்ருஹெ ஶ்வா ஸ்யாம் ॥ ௨௨ ॥

மற்றைய வாக்குகளையெல்லாம் உபேக்ஷித்து, உலகாசிரியர் திருவாய்மலர்ந்தருளிய ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ரத்தையே சிந்தை செய்யும் மஹான்களின் திருமாளிகையில் நாயாயிருந்து உழைக்கக் கடவேன். (22)

दयया परया गुरवः पूर्वे भरिता अपि प्रशस्तार्थान् ।
अहह निगूहितवन्तः प्राचिख्यिपदेष लोकगुरुरेव ॥ २३ ॥

தயயா பரயா குரவ: பூர்வெ பரிதா அபி
ப்ரஶஸ்தார்தாந் । அஹஹ! நிகூஹிதவந்த: ப்ராசி
க்யிபதெஷ லோககுருரெவ ॥ ௨௩ ॥

பூருவாசாரியர்களும் பேரருள் பொலிந்தவர்களே யாகிலும் அரும்பெரும் பொருள்களை அவர்கள் மறைத்துப்போந்தார்கள்; இவ்வுலகாசிரியர் தாமே அவற்றை வெளியிட்டருளினர். (23)

नष्टमिदं जगदखिलं ध्रुवमभविष्यद्विशुद्धधीविरहात् ।
सर्वज्ञचक्रवर्ती लोकार्यश्चेन्नचाविरभविष्यत् ॥ २४ ॥

நஷ்டமிதம் ஜகதகிலம் த்ருவமபவிஷ்யத்விஶுத்ததீவிர
ஹாத் । ஸர்வஜ்ஞசக்ரவர்தீ லோகார்யஶ்செந்நசாவிர
பவிஷ்யத் ॥ ௨௪ ॥

ஸர்வஜ்ஞர்களில் தலைவரான பிள்ளையுலகாசிரியர் திருவவதரித்திராவிடில் உலகமெல்லாம் தூயநன்மதிபெருது நசித்தொழிந்தேவிடக்குமென்பது திண்ணம். (24)

**जीवितुमिच्छथ यदि भोः स्वैरं गृह्णीत भारतादिकथाः ।
उज्जीवितुं यदीच्छथ लोकार्यकथैकनिष्ठयोल्लसत ॥ २५ ॥**

ஜீவிதுமிச்சத யதி போ: ஸ்வைரம் க்ருஹ்ணீத பாரதாதிகதா: । உஜ்ஜீவிதும் யதீச்சத லோகார்யகதைகநிஷ்டயோல்லஸத ॥ ௨௫ ॥

வயிறுவளர்க்க விருப்பமுடையவர்கள் மஹாபாரதாதிக்ரந்தங்களைக்கொண்டு போதுபோக்கலாம்; உஜ்ஜீவிக்க விருப்பமுடையவர்கள் உலகாசிரியர் தம் சரிதைகளில் ஊற்றமுற்றிருந்து வாழ்வது நன்று.

**वरवरमुनिराड्यदि भुवि कृपया नावातरिष्यदिह सत्यम् ।
भगवन् जगद्गुरो! तव विफलं ह्यभविष्यदतुलमवतरणम् ॥ २६ ॥**

வரவரமுநிராட்யதி புவி க்ருபயா நாவாதரிஷ்யதிஹ ஸத்யம் । பகவந் ஜகத்குரோ தவ விபலம் ஹ்யபவிஷ்யதது லமவதரணம் ॥ ௨௬ ॥

பிள்ளையுலகாசிரியரே! மணவாளமாமுனிகள் இவ்வுலகில் அவதரித்தருளாதிருப்பரேல் தேவரீருடைய திருவவதாரம் பயனற்றதாகவே ஆயிருக்கும். (26)

**जीवितमिह मम भगवान् संकल्पयतां दयानिधिस्सुचिरम् ।
यदि लोकदेशिकीया सूक्तितति र्मे सदा भवेद्भुक्तिः ॥ २७ ॥**

ஜீவிதமிஹ மம பகவாந் ஸங்கல்பயதாம் தயாநிதிஸ்ஸுசிரம் । யதி லோகதேசிகீயா ஸூக்திததிர்மே ஸதா பவேத்புக்தி: ॥ ௨௭ ॥

உலகாசிரியர் தம் திவ்யஸூக்திகளே அடியேனுக்கு ஓவாத வண்ணக வாய்க்கப்பெறுமாகில் எனது ஆயுளை எம்பெருமான் எவ்வளவும் நெடுகச்செய்தருளலாம். (27)

**वाचि जगद्गुरुफणितिषु काश्चिद्यदि नाम जागृयुर्विदुषाम् ।
सत्यं शपे धरित्रीं द्रवयितुमेते भजन्ति पटिमानम् ॥ २८ ॥**

வாசி ஜகத்குருபணிதிஷு காச்சித்யதி நாம ஜாக்ருயுர்விதுஷாம் । ஸத்யம் சபே தரித்ரீம் த்ரவயிதுமேதே பஜந்தி படிமாநம் ॥ ௨௮ ॥

உலகாசிரியரின் திவ்யஸூக்திகளில் சிலவற்றையாகிலும் முகஸ்தமாக்கித் தரித்துவைத்துக்கொள்ளவல்ல புலவர்கள் இந்நிலவுலகை நீர்ப்பண்டமாக உருக்கவல்லவராவர்கள் என்பதை ஆணையிட்டுரைக்கின்றேன். (28)

**तनुधनवाङ्मनसाद्यैस्सततं कैङ्कर्यमद्भुतं करवै ।
करिगिरिपतिपुनरवतारायितलोकार्यसूक्तिरसिकानाम् ॥ २९ ॥**

தநுதநவாங்மநஸாத்யைஸ்ஸததம் கைங்கர்யமத்புதம் கரவை । கரிகிரிபதிபுநரவதாராயிதலோகார்யஸூக்திரஸிகாநாம் ॥ ௨௯ ॥

தென்னத்தியூருடைய திருவவதாரமான உலகாசிரியரின் திவ்யஸூக்திகளில் ஊற்ற முற்றிருக்கும் மஹான்களுக்கு உடலாலும் பொருளாலும் வாயாலும் மனத்தாலும் நித்யகைங்கர்யம் செய்யப்பெறுவேனாக. (29)

**वेदस्मृतीतिहासेष्वन्येष्वपि कालयापनं हित्वा ।
लोकार्यकृतिभिरखिलं कालं क्षिपता मनर्गलं श्रेयः ॥ ३० ॥**

வேதஸ்ம்ருதீதிஹாஸேஷ்வந்யேஷ்வபி காலயாபநம் ஹித்வா । லோகார்யக்ருதிபிரகிலம் காலம் க்ஷிபதா மநர்களம் ச்ரேய: ॥ ௩௰ ॥

ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸங்களிலும் மற்றுமுள்ளவற்றிலும் போதுபோக்குவதைவிட்டிட்டு உலகாசிரியருடைய திவ்யஸூக்திகளைக் கொண்டே நித்யகாலக்ஷேபம் செய்பவர்கட்கு இடையூறற்ற நன்மையுண்டாம். (30)

नमत जगद्गुरुभक्तान् वदत तदीयास्सुधामुचो वाचः ।
चरत तदुक्तसरण्या भजत श्रेयांसि सपदि भूयांसि ॥ ३१ ॥

நமத ஜகத்குருபக்தாந் வதத ததீயாஸ்ஸுதாமுசோ வாச: । சரத ததுக்தஸரண்யா பஜத ஶ்ரேயாம்ஸி ஸபதி பூயாம்ஸி ॥ ௩௧ ॥

உலகாசிரியர்தம் அடியார்களை வணங்குமின்; அவருடைய அமுதமொழிகளையே உரைத்திடுமின்; அவர் காட்டியருளின வழியே செல்லுமின்; இங்ஙனமிருந்து பலவகை நன்மைகளையும் பெறுமின்.

मस्तकमस्तु मदीयं निस्तुलजगदार्यपादपद्मधरम् ।
वक्त्रमपि विलसतान्मे तदीयदिव्योक्तिकीर्तनैकरतम् ॥ ३२ ॥

மஸ்தகமஸ்து மதீயம் நிஸ்துலஜகதார்யபாதபத்மதரம் । வக்த்ரமபி விலஸதாந்மே ததீயதிவ்யோக்திகீர்த்தநைகரதம் ॥

என்சென்னியானது ஒப்பற்ற உலகாசிரியருடைய திருவடித் தாமரைகளையே தாங்கிநிற்க: எனதுவாக்கு அவர் தம்முடைய திவ்ய ஸூக்திகளை யுரைப்பதிலேயே ஊன்றியிருக்கக் கடவது. (32)

इत्थं वादिभयङ्करवंशीयाण्णङ्गरार्यसंग्रथिता ।
लोकाचार्यस्तुतिरियमनिशं जागर्तु भक्तरसनायाम् ॥

இத்தம் வாதிபயங்கரவம்ஶீயாண்ணங்கரார்யஸம்க்ரதிதா । லோகாசார்யஸ்துதிரியமநிஶம் ஜாகர்த்து பக்தரஸநாயாம் ॥

இங்ஙனே ஸ்ரீவைஷ்ணவதாஸன் விஜ்ஞாபித்த இந்த ஸ்ரீலோகாசார்யஸ்துதி பக்தர்களின் நாவில் என்றும் விளங்குக.

ஸ்ரீகாஞ்சீ. ப்ர. அண்ணங்கராசாரியர்

இயற்றிய

ஸ்ரீலோகாசார்யஸ்துதி முற்றிற்று.

GEETHACHARYA PRESS, WASHERMENPET, MADRAS.

ஓம்

ஸ்ரீராமஜெயம்

உண்மையும், ஆச்சர்யமும், உள்ள ஜோதிட பலன்

1938-ம் வருடத்திய மாதவாரியான பலமும் குணநிசயமும்

இங்கிலீஷிலும், தமிழிலும் உள்ளது

அதிர்ஷ்டத்தின் சக்கரம்

அல்லது

1938-ம் வருடத்திய நன்மை தீமைகளின்

விபர பலன்கள்

மேல் சொல்லிய பலாபலன் வேண்டுவோர் தங்கள் பிறந்த வருஷம், மாதம், தேதி, நக்ஷத்திரம், இவைகளை அணா 0-7-0 தபால் ஸ்டாம்பு மூலம் அனுப்பினால் பலாபலன் மறுதபாலில் அனுப்பப்படும்.

1938-ம் வருட பலனுக்கு சார்ஜ் அணா 0--7--0.

இனாம்! முற்றிலும் இனாம்!!

ஸ்ரீமத் காயத்ரீ உபாசனையினால் ஆரூட கேள்விகளுக்கு பதில் பரிகாரத்துடன் எழுதப்படும்

தங்களுக்கு எதிர் காலத்தில் நடக்கவேண்டிய பலாபலன்களை விபரமாய் தெரிய, 9-கேள்விகள், கடிதம் எழுதும் நேரத்துடன், பூஜை சிலவிற்கும், தபால் சிலவிற்குமாக அணா 0-7-0 தபால் ஸ்டாம்புமூலம் அனுப்பினால், மறுதபாலில் ஸ்ரீகாயத்ரீ தேவியின் அனுக்ரஹத்தால் பதில் எழுதி அனுப்பப்படும்.

விலாசம்.—

பிரம்மஸ்ரீ Prof. R. சுவாமிநாதய்யர்,

ஜோதிஷர்

நெ. 7, பிலிப்ஸ் தெரு ஜி. டி. மதருஸ்.

பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின் இரண்டு
ஔஷத ரத்னங்கள்

ஜீ வா ம் ரு த ம்

(தேகாரோக்யத்திற்கும்
பல விருத்திக்கும்)

ரத்தமிழந்து, ஜீவனற்று, பலஹீனத்துடன் வாழ்க்கையை வெறுக்கும் வாலிபர்களுக்கு இவ்வௌஷதம் ஓர் வரத்தைப் போன்றதே. இதை உபயோகிக்க ஆரம்பிக்கும் பொழுதே அளவற்ற சுக உணர்ச்சியையூட்டி, மிகுந்த ரத்த புஷ்டியை உண்டாக்கி, புத்துயிரைக் கொடுத்து, வாழ்க்கைக்கே இன்பத்தை விளைவிக்கின்றது. அளவற்ற தேகபலம் குறைவற்ற ஆரோக்கியம் முதலியவற்றை மேன்மேலும் செழிக்கச் செய்கின்றது.

விலை பெரிய புட்டி ரூ. 3-4-0
சிறியது 1-12-0

பா ல பா ஸ் க ர

(குழந்தை ஈரல் குலைக்கட்டி
வியாதிகளுக்கு அற்புத நிவாரணி.)

குழந்தைகளின் ஈரல் (Liver) குலை (Spleen) பெருக்கங்களை அதி விரைவில் கரைத்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கும் அரிய சஞ்சீவி. இதர மருந்துகளால் பயனற்றுப் போன விடங்களில் ஆச்சரியத்துடன் பலன் தந்துள்ளன. தவறுதலின்றி குணங் கொடுப்பதென்று பிரக்யாதியடைந்தது. ஆரம்ப நிலைமைக் கென்றும், முதிர்ந்த நிலைமைக் கென்றும் இருதிறத்திலுள்ளது.

ஆரம்ப நிலைமை மருந்து 1 மாதம் 4-0-0
முதிர்ந்த நிலைமை 8-0-0

விபரங்களுக்கு எழுதவும்.

தயாரிப்பவர்கள் :— **ஆயுர்வேதாஸ்ரமம்**
தபால் பெட்டி 287.
151, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

Edited & Published by V. Ramanujachariar, 24, Chandrappa Mudali St., ... by K. Sadagopachari, at The Liberty Press, 7, Sunkurama Chetty St...

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரா மா நு ஜ

ஸி த் தா ந் த வை ஜ ய ந் தி

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசந பத்ரிகை

தொகுதி 3	ஈச்வர ஸு கார்த்திகை மீ 1937 ஸு டிசம்பர் மீ	பகுதி 1

பத்ராதிபர் :
வடகரை ராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

✻

வருஷச் சந்தா ரூ 1—12—0] [தனிப்ரதி விலை ரூ. 0—3—0

விளம்பர விகிதம்	ஒரு பக்கம்	அரை பக்கம்	கால் பக்கம்
	ரூ. 5—0—0	ரூ. 3—0—0	ரூ. 2—0—0

விஷய ஸூசிகை

விஷயங்கள்	பக்கம்
1. கார்த்திகை மாதம் .... —பத்திராதிபர்	1
2. வெஃகா .... —C. நரஸிம்ஹாசாரியார், அட்வகேட், திருவல்லிக்கேணி	3
3. வர்த்தமானங்கள்	7-34
4. ரக்ஷா விமர்சிக்ஷா .... —ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்	9
5. பஞ்சாங்கம்	32
6. வர்ணாஸ்ரம தர்ம ரக்ஷாப்ரஸஸ்தி:	32

ரங்கூன்
வைரங்கள்
கல் 1க்கு
0-2-6 0-3-3
பி. கோபாலசுவாமி
நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O. ✻ சென்னை

ரங்கூன்
வைரங்கள்
நகைகள்
கேட்லாக் இனாம்
பி. கோபாலசுவாமி
நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O.
சென்னை

L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது

மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.
பெருங்காயம்.
எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய
வியாபாரிகள்:
பம்பாய், சென்னை,
கும்பகோணம்.

லால்ஜீ கோதூ & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக் கூடும். அக்காலத்தில் அம்ருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய். மதராஸ் கல்கத்தா

சலோனுடவர் பிராண்ட்

போர்ட்லாண்ட் சிமெண்ட்

காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர்வேலைகளுக்கும் ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்

சோல் ஏஜெண்ட்

M. குப்புசாமி நாய்க்கர்

83, செம்புதாஸ் தெரு,

மதராஸ், ஜி. டி.

Note Our

"STEAMER"

TRADE MARK

World's Best — *By Every Test*

The Indian Chemical Diamond - Works -

96, Mint Street,
- MADRAS -

"கப்பல்" மார்க்கு
ரங்கோன் வைரங்கள்
கடினம், பூரிப்பு ஒளி, குணங்களில் மிகச் சிறந்தவை.

சீமைக் கமலச் சிறப்பை சிக்கனச் செலவில் அடையலாம்

ஒருமுறை விஜயஞ் செய்யுங்கள்

ஸம்ஸதீன் அன் இஸ்மாயில்
தி இண்டியன் கெமிக்கல் டைமன் ஓர்க்ஸ்.
96, சௌகார் பேட்டை, சென்னை.

பாரிசவாயுவுக்கு பயப்படவேண்டாம்!

க்ஷீரபலா

(101 தடவை பாகம் செய்தது)

பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி. எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. இதை எங்களுடைய "அயவீரலிந்தூர"த்துடன் கலந்து உட்கொண்டால் இன்னும் அமோகமான பலன் அதிசீக்கிரத்தில் கிடைக்கும்.

க்ஷீர பலா:—அவுன்ஸ் 1-க்கு 3-8-0. ½-அவுன்ஸ் 1-12-0.
அயவீரம்:—ஒருவாரத்திற்கு போதுமான மருந்து 1-0-0.

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்

107, பிராட்வே, சென்னை

இணையற்ற இரத்தினம்

எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

தேகபலம், ஞாபகசக்தி, தாது புஷ்டி இவைகளைச் செடுத்துத் தேகத்தை வஜ்ர சரீரமாக்குவதில் இணையற்ற இரத்தினம் போன்றன; சென்ற 56 வருஷங்களாகப் பூவுலகெங்கும் புகழ்பெற்று உலாவி வருகின்றன. ஒருதரம் வாங்கி உபயோகித்தால் குண மகத்துவத்தை யறிவீர்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.

இனும்! இனும்!! இன்ப வாழ்க்கையிலடைந்த சச்தி என்னும் புஸ்தகத்தைக் கேட்போருக்கு, அப்புத்தகம் இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

சேஷு அண்டு கோ.,

வெண்ணெய், நெய் & பல சரக்கு வியாபாரிகள்

		ரூ.	அ.	பை.
ஸ்பெஷல் வெண்ணெய் 1 வீசை	...	1	7	0
வெண்ணை காச்சின நெய் ,,	...	2	2	0
சுத்தமான நல்லெண்ணெய் ,,	...	0	8	9

இதர சரக்குகள் மற்ற இடங்களைக் காட்டிலும் அதிக மலிவாகக் கொடுக்கப்படும்.

9/8, ஆதியப்பநாயக்கன் தெரு, மதராஸ்.

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶ பத்ரிகை.

தொகுதி 3.	பத்ராதிபர் வடகரை. ராமாநுஜாசாரியார்.	பகுதி 1.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑍇 ।
𑌯𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌵𑌰𑌮𑌶𑍀𑌶𑌮𑌤𑍍 ॥
𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌸𑍂𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌬𑍃𑌂𑌹𑌿𑌣𑍀 ।
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀 𑌵𑌿𑌜𑍃𑌮𑍍𑌭𑌤𑌾𑌮𑍍 ॥

கார்த்திகை மாதம்

த்வாதஶ்யாம் கார்த்திகே மாஸே மாம் தாமோதர ஸம்ஜ்ஞகம்
உபோஷ்ய பூஜயேத் யஸ்து ஸர்வக்ரதுபலம் ந்ருப

என்கிற ஆஶ்வமேதிக பர்வ 114-வது அத்யாயம் 28-வது ஶ்லோகத்திற் சொல்லியபடி இந்தக் கார்த்திகை மாதம் தாமோதரனுடைய அம்ஶமாயிருக்கும்.

ஆதலின் இக்கார்த்திகையில் வரும் ஏகாதஶியன்று உபவஸித்து த்வாதஶியன்று யாவனொருவன் தாமோதரனை யதாஶக்தி பூஜித்து பாரணை பண்ணுகிறானோ அவன் ஸமஸ்தமான யாகங்களையும் செய்தவனடையும் பலனை அடைவான்.

இன்னமும் இம்மாதம், ஆத்மாக்களின் அகவிருளை அகற்றி பகவத்விஷயஜ்ஞாநமாகிற ப்ரகாஶத்தை அளித்துலோகதிவாகரன் என்று கொண்டாடப்பெற்ற திருமங்கை மன்னன் அவதாரத்தாலும், அரங்கனடியிணையில் அத்யந்தம் ஆதரத்தையுடையராய் திருக்கமல பாதம் தொடங்கி திருவரங்கன் திருமேனியை கண்ணாரக் கண்டநுபவித்து அவ்வநுபவ பரிவாஹரூபமாக அமலனாதிபிரான் என்னும் ப்ரபந்தத்தைப் பாடி யுபகரித்த பாணாழ்வாரவ

தாரத்தாலும், துன்னு புகழ்க்கந்தாடைத் தோழப்பர் தம் உகப்பால் உலகாரியன் என்று கொண்டாடப்பெற்ற நம் பிள்ளை அவதாரத்தாலும் போற்றற்குரியது. இவ்வளவு பெருமை வாய்ந்த இக்கார்த்திகையே நமது வைஜயந்தி அவதரித்த மாதமாகும்.

சென்ற ஐப்பசி மாதத்தோடு வைஜயந்திக்கு இரண்டு ஆண்டுகள் நிறைந்து, இக்கார்த்திகை மூன்றாவது ஆண்டின் ஆரம்பமாகும்.

திருமங்கையாழ்வார்

இவ்வாறே பல்லாண்டு பல்லாண்டு வயதூதாம் அஹிவயதூதாமென்கிறபடி மேன்மேலும் அபிவ்ருத்தியடையும்படி ஆஸ்திகாக்ரேஸரர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் வைஜயந்தியை ஆதரிக்க வேண்டுமென்று அடிபணிந்து வேண்டிக் கொள்கிறேன்.

தற்காலம் கடிதங்களின் விலையுயர்ந்து போனதோடு கிடைப்பதும் அரிதாய் விட்டபடியால் இம்மாதம் தொடங்கி எப்போதும்

கிடைக்கக் கூடிய (மெக்கானிக்க்ளேஸ்) என்கிற கடிதத்தில் அச்சிட நேர்ந்தது.

இம்மாதிரியான அனேக ஶ்ரமங்களுண்டாயிருக்கிறபடியால் வைஜயந்தி சந்தாதார்கள் தாங்கள் அநுக்ரஹிக்கவேண்டிய சந்தாவை அனுப்புவதுடன் தங்களாலியன்றவரை புதிய சந்தாக்களையும் சேர்த்து உபகரித்தால் ‘காலத்தினாற் செய் நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது’ என்கிறபடி பெரு நல்லுதவியாகும்.

வெ∴கா

ஸ்ரீமான் C. நரஸிம்ஹாசாரியார் அட்வகேட், திருவல்லிக்கேணி

(1) மணிமேகலை என்னும் தெய்வப் பெண் ‘நிர்வாணம்’ என்கிற மோக்ஷம் அடைந்த கச்சிமாநகரில் ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்கள் அனேகம் உண்டு. அவற்றுள் முக்கியமானவை அத்தியூரும், வெஃகாவும், தண்காவுமாம். தண்கா என்னும் ப்ரதேசம், இப்போது விளக்கொளி எம்பெருமான் கோயில் கொண்டிருக்கும் இடம் ஆகும். ஸ்ரீநிகமாந்த மகாதேசிகன் அவதார ஸ்தலமும் இதுவே.

(2) காஞ்சீபுரத்தின் கீழ் பாகத்திற்கு அத்தியூர் எனப் பெயர். ‘ஹஸ்திகிரி’ என்னும் வடமொழியில் ‘ஹஸ்தி’ என்னும் பதம் அத்தி’ என்று தமிழில் ஆயது. ப்ராசீனமான சங்க நூல்களில் ஆரிடப் போலிக்கு உதாரணமாக,

‘ஏரி இரண்டும் சிறகா எயில் வயிறு
காருடைய பீலி கடிகாவா - சீருடைய
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு’

என்கிற பாட்டு ஒன்று உண்டு.

இதன் பொருள் கச்சி நகர் ஒரு மயில் போல் இருக்கிறது. இரண்டு ஏரியும் மயிலின்சிறகுகள். அதின் சோலைகள் மயில் தோகைகள். அதின் வாய் அத்தியூர் என்பதாம். பூதத்தாழ்வார் பிரபந்தத்தில் ‘உலகேத்துமாழியான் அத்தியூரான்’ என்று அவ்வூர் நாதனை மங்களாசாஸனம் செய்துள்ளார். ‘தென் அத்தியூரன் கழலிணை’ என்கிற இராமாநுஜ நூற்றந்தாதிப் பாசுரத்தால் ‘அத்

தியூரன்' என்பது எம்பெருமானார் அடிபணிந்த தேவாதிராஜன் என்கிற பேரருளாளன் என்பதும், சங்க நூல்களாலும் ஆழ்வார்களாலும்போற்றப்பட்ட ப்ராசீனமான திவ்ய தேசம் அத்தியூர் என்பதும் ஸுஸ்பஷ்டமாயிருக்கச் சில பண்டிதர்கள் "அத்தியூரன்' என்பது பேரருளாளன் ஸந்நிதி மலையடிவாரத்திலுள்ள அழகு சிங்கர் என்று சொல்வது இராமாநுஜ நூற்றந்தாதிக்கும் பதார்த்தத்துக்கும் ஆசாரியர்கள் திருவுள்ளத்துக்கும் நேர் விரோதம் என்பதை அடியேன் முன்னமே சொல்லியிருக்கிறேன்.

(3) நிற்க, வெஃகா என்னும் ஸ்தலம் எது என்பதை நிஷ்கர்ஷிக்கவேணும். அது இப்போதுள்ள யதோக்தகாரி ஸந்நிதி ப்ரதேசம் மாத்திரமா? அல்லது தேவப்பெருமாள் ஸந்நிதியும் சேர்ந்ததா? என்பது தான் ஆராயத் தக்கது.

இவ்விசாரத்திற்குப் பிரபலமான ப்ரமாணம் அப்பதத்தின் பொருள் என்ன என்பது தான். அநேக பண்டிதர்கள் 'வெகஸேது' என்னும் வடமொழிச் சொல் 'வேகவணை' என்றும் வேகவணை என்பது வெஃகணை' என்றாகி, மறுபடியும் 'வெஃகணை' என்பது வெஃகா என மாறியது என்பர்கள். இந்த அபிப்ராயம் தமிழ் லெக்ஸிகன் என்னும் அகராதியிலும் ஏறிவிட்டது.

'வெஹா' என்னும் வடமொழிச் சொல் 'வேகம்' என்று தமிழ்ச் சொல்லாக வழங்கிவிட்டது. ஆகையால் வேகவணை என்கிற இரண்டு தமிழ்ச் சொற்கள் சந்தியில் எப்படி 'வெஃகணை' என்று மாறியது என்பதற்கும் 'வெஃகணை' ஏன் 'வெஃகா' என உருவழிந்து மாறியது என்பதற்கும் அடியேனுக்கு ஸ்ருவிதமான சூத்திரமாவது, ப்ரமாணமாவது அகப்படவில்லை. 'வெஃகணை' என்னும் தொடர் மொழியில் 'அணை' என்னும் பதம் எப்படி 'ஆ' என்று மாறக்கூடும்.

ஆனால் 'வெம்மை+கா' என்பது 'வெங்கா' என்னும் 'வெஃகா' என்னும் மாறலாம் (கா-சோலை) அதாவது வெம்மையான அல்லது உஷ்ணமான ப்ரதேசம் என்று பொருள் படும். 'தண்கா' என்னும் பதம் தண்மையான அல்லது குளிர்ச்சியான ஸ்தலம் என்று பொருள் படுமாப்போல் 'வெஃகா' என்பது உஷ்ணமான ஸ்தலம் என்று பொருள் கொள்வது பொருத்தம். மேலும் அவ்வூர் ஸ்தல புராணப்படி ப்ரஹ்மா யாகம் செய்வதற்காக அனேக யாக குண்டங்கள் மூட்டி அக்நியை வளர்த்த இடம்

வெம்மையான ஸதலம் என்றுசொல்வது ஸஹஜம். அந்த யாக குண்டங்கள் வெகுதூரம் பரவி யிருந்திருக்கவேண்டும். இப்போதுள்ள "யாகசாலை மண்டபம்" என்கிற ஸ்தானமும் யாகசாலையில் சேர்ந்திருக்க வேணும். ஆகையால் "வெஃகா" என்னும் பதத்தின் அர்த்தம் வெம்மையான பூமி அல்லது யாக பூமி என்று கொண்டால் தேவப்பெருமாள் ஸந்நிதியும் யதோக்தகாரி ஸந்நிதியும் வெஃகா. இந்த க்ரமத்தில் அணை வெஃகணை என மாறியது.

(4) ஆனால் தேவப்பெருமாள் நின்ற திருக்கோலம். யதோக்தகாரி சயநத்திருக்கோலம். முதலாழ்வார்களில் ஒருவர் வெஃகாவில் கிடந்த திருக்கோலத்தை மங்களாசாஸநம் செய்துள்ளார். திருமழிசையாழ்வாரும் திருமங்கை யாழ்வாரும் "வெஃகணைக் கிடந்தது" என்றும் "வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே" என்றும் சயனத்திருக்கோலத்தில் ஈடுபட்டார்கள். நம்மாழ்வார் "விண்ணோர் தொழும் கண்ணன் வெஃகாவுது" என்று பொதுவாகச் சொன்னபோதிலும் "கால் நிலம் தோய்ந்து விண்ணோர்தொழும்" என்றதினால் தேவப்பெருமாளையே அப்பாசுரம் ஸூசிப்பிக்கிறது. இந்த விசாரத்துக்கு ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் வெகு அழகான ஸமர்த்தநம் பண்ணியிருக்கிறார்.

ஏக꞉ ஸ ஏவ வேகவத்யா꞉ மத்யே ஹஸ்திகிரௌ ... |
உபாயபலபாவேந ஸ்வயம் வ்யக்த꞉ பரம் மஹ꞉ ||

அதாவது ஒரே எம்பெருமான் வேகவதி மத்யத்தில் உபாயமாகவும் பலமாகவும் ஸேவை ஸாதிக்கிறான் என்பதாம். உபாயம் யதோக்தகாரி, பலம் தேவப்பெருமாள். அத்யாபி யதோக்தகாரியை பெரிய பெருமாள் என்று நிர்வஹிக்கிறார்கள்.

"வெஃகா" என்னும் ஸ்தலத்திலிருந்து இப்போதுள்ள தேவப்பெருமாள் ஸந்நிதியை நீக்கினால் சில பாதகங்கள் ஏற்படுகின்றன. எங்ஙனே யென்னில் :—

(i) முதலாழ்வார்கள் மூவரும் ஸம காலத்தினராய் ஒன்றாகப் பல திவ்ய தேச யாத்ரைகள்செய்து திருக்கோவலூர் இடைகழியில்கூடி எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்துப் பிரபந்தம் பாடினார்கள் என்பது ப்ரஸித்தம். அப்படியிருக்கப் பொய்கையாழ்வாரும் பேயாழ்வாரும் "வெஃகா" என்கிற ப்ரயோகம் செய்ய அப்பதமே இல்லாமல் பூதத்தாழ்வார் "அத்தியூரான்" என மங்களாசாஸநம்

செய்தார். இருவருக்கு யதோக்தகாரி ப்ரஸன்னமாய் மற்றொருவருக்கு அவர் ப்ரஸன்னமாகாமல் "அத்தியூரான்" ஸேவை ஸாதித்தார் என்று கொள்ளவேண்டும். இது ரஸமல்ல. ஆகையால் வெஃகாவில் அத்தியூரும் சேர்ந்தது என்று கொள்வதுநலம்.

(ii) "கச்சி வெஃகாவில் கிடந்து இருந்து நின்றதுவும் அங்கு" என்னும் பாசுரத்தில் "வெஃகாவில்" என்றும் "அங்கு" என்றும் உள்ள ப்ரயோகங்களினால் வெஃகா என்னும் திவ்ய தேசத்திலேயே மூன்று (கிடந்து, இருந்து, நின்ற) திருக்கோலங்கள் காணவேணும். யதோக்தகாரி ஸந்நிதியை தேவப்பெருமாள் ஸந்நிதியிலிருந்து பிரித்தால் மூன்று கோலங்கள் இல்லை. சேர்த்தால் உண்டு. ஆகையால் வெஃகா என்னும் ஸ்தலம் இப்போதுள்ள தேவப்பெருமாள் ஸந்நிதியும் அடங்கியது என்றே சொல்லவேண்டும்.

எம்பெருமானார் ஸம காலத்தரான கருடவாஹந பண்டிதர் தம்முடைய திவ்ய சரிதையில் யதோக்தகாரி ஸந்நிதியைத் தனியாகக் குறிக்கவில்லை என்பதும் புண்யகோடி விமானச் சாயையில் உள்ள ஒரு பொய்கையில் (குளம்) ஆழ்வார் அவதரித்தார் என்பதும் அறியத்தக்கது. யதோக்தகாரி என்பது கணிகண்ணன் சொன்ன வண்ணஞ்செய்த பெருமாளாகையால் வந்த காரணப்பெயர். அக்காரணப் பெயர் வருமுன் உள்ள இயற்கையா[ன] திருநாமம் என்ன? வ்யக்தி பேதமில்லாமல் தேவப்பெருமாளோ[டு] ஒன்றாகையாலே (ஏகம்) வேறு திருநாமம் இல்லை. ஆகையால் வெஃகா என்னும் ஸ்தலம் தேவப்பெருமாள் ஸந்நிதி முதல் யதோக்தகாரி ஸந்நிதி வரையில் பரவி இருந்தது என்றே கொள்ளவேண்டும். அந்த ஸ்தலத்தில் ஒருவரே இருவராய் ஸேவை ஸாதிக்கிறார்.

7. நம்மாழ்வாரும் திருமங்கை மன்னனும் வெஃகாவையும் தண்காவையும் சேர்த்து மங்களாசாஸனம் செய்தார்கள்.

"வெஃகாவுது அம்பூந் தேனிளஞ்சோலை அப்பாலது" என்னும் நம்மாழ்வார் பாசுரத்தில் "நகர் காட்டுதல்" என்னும் இலக்கணத்துறையில் "அம்பூந் தேனிளஞ்சோலை" என்றும் ஹிமோபவநம் என்றும் சொல்லப்பட்ட தண்காவை வெஃகாவுக்கு அப்பாலது என்று எல்லையாகக் காட்டுகிறார், திருமங்கையாழ்வார்.

"விளக்கொளியை மரதகத்தை திருத்தண்காவில் வெஃகாவில் திருமாலைப்பாடக்கேட்டு" என்னுமிடத்தில் தண்காவில்

விளக்கொளி எம்பெருமான் என்று சேர்த்துப் பாசுரமிட்டார். இப்பாசுரத்துக்கு இப்போது அச்சிட்டுள்ள பெரியவர்ச்சான் பிள்ளை வ்யாக்யாநத்தில ஏதோ பிழை நேர்ந்திருக்கிறது. பதக்ரமமாக "விளக்கொளியை தண்காவிலும் "மரதகத்தை வெங்காவிலும்" என்று அந்வயித்துப் பொருள் கொள்ளாமல் "தண்காவில் மரகதம்" என்றும் "வெஃகாவில் திருமாலை" என்றும் ஸமிதை பாதி ஸாவித்ரி பாதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. மரகதவெம்பெருமான் சயனத்திருக்கோலம் என்கிற வ்யாக்யாநத்தைப் பார்த்து ஓர் அரும்பதக்காரர் ஒரு காலத்தில் விளக்கொளியெம்பெருமான் சயநத் திருக்கோலமா யிருந்து பின்னால் நின்ற திருக்கோலமாய் விட்டார் என்பர். இவை யனைத்தும் விபரீதம்.

இவ்விஷயங்களை யெல்லாம் வித்வான்கள் விமர்ஶித்து ஸித்தாந்தப் படுத்தினால் அடியேன்போல்வார்களுக்கு மஹோபகாரமாய் நிற்கும்.

வர்த்தமானங்கள்

